இலத்தீன் அமெரிக்க

# புனிதர்களும் புரட்சிகளும்



கலாநிதி சுவாமி ஜெ.இ. ஜெயசீலன்





# புனிதர்களும் புரட்சிகளும்
## (லத்தீன் அமெரிக்க)


கலாநிதி

சுவாமி ஜெ.இ. ஜெயசீலன்.



வெளியீடு

புலோமினா அச்சகம்,

49, 6–ம் குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம்.

2007

**அச்சேற்ற அனுமதி**
அதி.வண. கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
**யாழ் மறைமாவட்டம்.**

*29 ஆனி 2007*
*ஆயர் இல்லம்,*
*யாழ்ப்பாணம்.*

---


| | |
|---|---|
| நூலின் பெயர் | : புனிதர்களும் புரட்சிகளும் (லத்தீன் அமெரிக்கா) |
| ஆசிரியர் | : கலாநிதி சுவாமி ஜெ.இ. ஜெயசீலன் |
| வெளியீடு | : வளன் ஆச்சிரமம் 49, 6ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். |
| பதிப்புரிமை | : கலாநிதி சுவாமி ஜெ.இ. ஜெயசீலன் |
| முதற்பதிப்பு | : ஆனி 29. 2007 |
| பக்கங்கள் | : X + 145 = 155 |
| அச்சுப்பதிப்பு | : புலோமினா அச்சகம். |
| விலை | : 150/= |

ISBN: 978-955-50109-1-7

## உட்புகுமுன்.....

தேவதாயின் குரலில் வெளிவந்த லத்தீன் அமெரிக்க கிறிஸ்தவர்களின் சோகம் கலந்த மகிழ்ச்சியான வரலாறு இது. பல வருடங்களின் பின் இவற்றைத் தொகுத்து சீர்பார்த்து நூலாக வெளிக்கொணர உதவியவர்கள், ஆரம்பம் முதல் ஊக்குவித்து முகவுரை வழங்கியவர் லூவேயின் சமூகவியல் முதுநிலைப்பட்டதாரி கிருபானந்தன் அடிகள். கணனியில் போட்டு வடித்தெடுத்தவர் றெக்ஸ் சவுந்தரா அடிகள் (முதுநிலைப்பட்டதாரி, ரோம்), செல்வி யஸ்மின் யூலியெற் அலெஸ் (முதுநிலைப்பட்டதாரி, மதுரை)

ஏழு அத்தியாயங்கள் சுருக்கமாக கொலம்பஸ் ஸ்பானிய குவாடலுப்பே தாயின் பாதார விந்தத்தை பணிந்து வேண்டி தொடங்கிய வரலாற்று கடல் பிரயாணம் அவன் வந்தடைந்த புதிய கண்டத்தின் வரலாற்றினை மாற்றிய கதை. அது மெக்சிக்கோவின் சான்டொன் யுவானுடன் சுவையாக ஆரம்பித்து வண. பிதா. புறோவின் வீர இரத்த மரணத்தில் முடிகிறது. அத்தியாயம் 4 அமெரின்டியர்களின் மக்கள் சனத்தொகை குறைவடைய ஆபிரிக்க நாட்டு அடிமை வியாபாரத்தினூடாக வந்து குவிந்த நீக்கிரோக்கிளின் அப்போஸ்தலர் பீற்றர் கிளாவருடன் பிரகாசிக்கிறது. அத்தியாயம் 3 அரசியல் நிலைகளும் புனிதர்களின் வாழ்வும் கலந்து தோன்றுகின்றது. இந்த 150 பக்கங்களைக் கொண்ட சிறிய நூல் ஓர் துன்ப இன்பவியல் கலந்த லத்தீன் அமெரிக்க வரலாற்று நாடகம்.

6ம் அதிகாரத்தில் நவீனத்துவ கால சிலுவைகளைச் சுமந்து ஓர் புதிய விடுதலைக்கு வித்திடும் இறையியலாக அவதாரமாகிறது. இவற்றை முன்னெடுக்கும் கியூபா, எல்சல்வடோர், நிக்கராகுவாவின் வரலாறுகள் இன்னும் ஆழமாக கற்கப்பட வேண்டியவை. இவை ஒரு தொடர்கதை என்பது இன்று பொலிவியாவின், வெனிசுலாமுதலிய நாடுகளின் புதிய கூட்டுறவும், உலகச் சந்தை அமெரிக்க பண முதலாளித்துவ ஒடுக்கு முறைக்கு எதிரான முனைப்புக்கு ஒரு நல்ல வழிகோலல். நுகர்வு கலாச்சார முறியடிப்பிற்கு ஒரு ஊக்குவிப்பு, உலகளாவிய அமெரிக்க நுகர்வு கலாச்சாரத்திற்கு ஒரு மாற்று வழியும் சவாலுமாகும். இதை ஏழாம் அத்தியாயத்தில் சுருக்கமாக ஆராய்கின்றோம்.

முன் அட்டைப்படத்தில் இருப்பது உலகப் பிரபல்லிய பிரேசிலின் ஓவியர் சல்வேடோர் டலியின் புதிய சிருஷ்டிப்பும், தாய் புதிய ஏவாள் குவாடலுப்பே மாதா. பின் அட்டைப்படம் அதே ஓவியரின் இறுதி இரவுப் போசனம்.

*- கலாநிதி. வணபிதா. ஜெயசீலன்*

# ஆசி உரை

**Allince Francaise de Jaffna**
83, Palaly Road, Kantharmadam, Jaffna.
Phone : 021. 2228093
Email: alliancejaffna@yahoo.com

It is a great pleasure for me to recommend the reading of Father Jayaceelan's latest book on **Saints and Revolution in Latin America**.

I can only praise his scholarly as well as sensitive attempt to put foward to the Tamil reader the American problematics related to colonialism and spirituality. I greatly appreciate such a transcontinental effort for a more direct understanding between countries of the "South", effort which helps going far beyond the victimization which afflicted them and their people under that irreparably shameful plan that was western colonialism.

Besides the always friendly and intellectual companionship that I happen to share in Jaffna with Father Jayaceelan, I feel each time eager to read any new writing of him and get for myself a new angle of understanding.

I wish this book will find its due readership.

**Dr. Gerard Robuchon**
**Alliance Francaise de Jaffna.**

யாழ். பிரஞ்சு நட்புறவுக் கழகம்,
83, பலாலி வீதி
யாழ்ப்பாணம்.

ஜெயசீலன் அடிகளாரின் கடைசியாக வெளிவந்துள்ள ''புனிதர்களும் புரட்சிகளும்'' என்ற நூலை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

கொலனித்துவத்திற்கும் ஆன்மீகத்திற்கும் இடையேயுள்ள சாவால்கள் நிறைந்த லத்தீன் அமெரிக்க வரலாற்று ஈடுபாடுகளை தமிழ் வாசகர்களுக்கு அளித்ததில் அவரின் ஆய்வுத் திறனையும் நுண் உணர்வு அணுகு முறைகளையும் நான் புகழ வேண்டும்.

கண்டம் கடந்த இவ் ஆய்வு நூல் 'தென் கோளம்' சார் நாடுகளைப் பற்றிய நேரடி அறிவு விளக்கம், அக்கோளம் சார் மானிடத்தைப் பாதித்த மேற்கத்தைய காலனித்துவம் கொண்டு வந்த நிவர்த்தி செய்ய முடியாத வெட்கத்திற்குரிய, பெரும் துயர்களையும் இவற்றைக் கடந்து நின்று உள் நோக்க உதவும் செயற்பாடாக இது இருப்பதால் இதை வரவேற்று நிற்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் ஜெயசீலன் அடிகளுடன் ஏற்பட்டுள்ள நட்புறவிலும் கருத்துப் பரிமாற்றங்களிலும் ஈடுபடும் நான், ஒவ்வொரு முறையும் அவர் எழுதும் நூல்களில் காணப்படும் புதிய அணுகு முறைகளையும் அவை தரும் புதிய கோணங்களையும் ஆவலாகப் படிக்கின்றேன்.

இந்நூல் எந்த நோக்கைக் கொண்டுள்ளதோ அந்த நோக்கை அடையக் கூடியவர்களைச் சென்றடைய வேண்டுமென ஆசிக்கின்றேன்.

*- கலாநிதி ஜெறாட் றொபிசோம் -*

(கலாநிதி ஜெறாட் தமிழ், சிங்கள அறிவும் பிரஞ்சு ஆங்கில மொழிப் பாண்டித்தியமும் பெற்ற மெரிழியல் அறிஞர். இவர் கலனிப் பல்கலைக்கழகத்திலும், யாழ். பல்கலைக் கழகத்திலும் பிரஞ்சு மொழி விரிவுரையாளர்)

# முன்னுரை

உலகத்திருச்சபைக்கு இறையியல் ரீதியில் விடுதலை இறையிய லையும் மேய்ப்புப் பணிரீதியில் அடித்தள கிறிஸ்தவ சமூகத்தையும் முன்வைத்தது. நிக்குராக்குவா புரட்சியில் திருச்சபையினரின் பங்களிப்பு புதிய அத்தியாயத்தை எழுதியது.

கடற்பாதை திறக்கப்பட்டு ஐரோப்பியரின் வருகையையும் அவர்களோடு இணைந்து வந்த கிறிஸ்தவ மறைப்பணியாளர்களும் இலத்தீன் அமெரிக்கமண்ணில் காலடி பதித்த 500 ஆண்டுகால வரலாற்று நிகழ்வை 1992இல் நினைவு கூர்ந்தனர். நினைவுகூர்தல் என்ற தன்மையில் 1492 இல் நடைபெற்றவை தம்மிலேயே முக்கியமான வைதான். ஆனால் 1992இல் இன்று எமக்கு ஒரு படிப்பினை உள்ளது என்று எல்சல்வடோர் இறையியலாளரான இயேசு சபைச் சேர்ந்த அருள்திரு யொன் செபரீனோ குறிப்பிடுகின்றார். வர்த்தகக் காலணித் துவம், நிதியில் காலனித்துவம் என்ற பல கட்டங்களான முதலாலித்துவத் தின் கூர்பின் அடிப்படையின் வரலாற்று பரிமாணத்தை நற்செய்திப்பணி இலத்தீன் அமெரிக்க மண்ணில் இணைந்துகொண்டதின் மீள்பார்வை இது.

எகிப்து, சுமேரிய, பபிலோனிய, மொகஞ்சோ கரப்பா, சீன, இலக்கிய, இந்திய பிராமண சோழ, அனுராதபுர நாகரிகங்கள் முகிழ்ந்ததும் மறைந்ததும் வரலாறு. நாடுகளை கைப்பற்றல், பிடுங்கிப்பறித்தல், தொழிநுட்ப மேலாதிக்கத்தைப் பேணல் என்ற மூன்று அம்சங்களும் ஐரோப்பிய காலனித்துவத்தைப்பற்றிய பார்வையில் உள்ளது. நாடுகளைப் பிடித்தல் சூறையாடல் போன்றவற்றை நாகரிகமாக்கி இதனைச் சாதனையாகப் போற்றுவதுதான் வரலாறு. 20ஆம் நூற்றாண்டின் இறுதி 500 ஆண்டுகளில் மிதப்புப் பெற்ற மேலாதிக்கத்தை பேணி அதை தக்கவைத்தே பார்க்க வேண்டும்.

சபையும் வர்த்தகக்காலணித்துவமும் தென்னமரிக்க திருச்சபை

வர்த்தகக் காலனித்துவம் உற்பத்திமுறையை முதலாளித்துவ பொருண்மியத்துக்கு இட்டுச்செல்லும் முதல் திரட்சிக்கு வழிவகுத்தது. சிலுவைப்போரின்போது மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும், கடற்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா நாடுகளிலிருந்தும் சூறையாடப்பட்ட தங்கம்,

வெள்ளி, மற்றைய உலோகங்களும் நாட்டுச் செல்வங்களும் மேற்கத்தைய நாடுகளின் முதல் திரட்சிக்கு வழிகோலின. விஞ்ஞானப் புரட்சியினால் நீராவி இயந்திரத்தின் கண்டுபிடிப்பும் இரும்புப்பாதை அமைத்ததினால் ஏற்பட்ட தொழில் புரட்சியும் முதலாளித்துவத்தின் புதிய எழுச்சிக்குக் கட்டியம் கூறின. தொழிற்சாலை என்ற பொருண்மிய அமைப்பின் உருவாக்கமும் தொழில் பகுப்பு முறையும் உற்பத்தி முதலாளித்துவத்தை உருவாக்கின. உற்பத்தியை பெருக்க கச்சாப் பொருட்களும் முடிவுப்பொருட்களின் சந்தைக்கும் ஏற்றதாக அரசியல் சமூக பண்பாட்டு அமைப்புகளை காலனித்துவம் உள்வாங்கியது. இதனால் நுகர்வு முறைகள் மாற்றமடைந்தது. மேற்கத்தைய காலணித்துவம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றி வரிவிதிப்பை நெறிப்படுத்தியது. சுயபொருளாதாரத்தை அழிவுக்குள்ளாக்கி தோட்டத் துறைசார் பொருண்மியத்தை உருவாக்கியது. தோட்டத்துறைக்கான வங்கியமைப்பு, காப்புறுதி, இரும்புப்பாதை, துறைமுகங்கள் போன்றவற்றை விருத்தியாக்கின. அரச இயந்திரத்துக்கும், தோட்டத் துறைக்கும் தேவையான பணியாளர்களை உருவாக்கும் மேற்கத்தைய கல்வியமைப்புப் புகுத்தப்பட்டது. பல்லினப் பயிர்செய்கைக்குப் பதிலாக ஓரின பயிர்முறையுள்ளதும் தொழில் முனைப்பு அதிகமுள்ளதுமான தோட்டத்துறையை அறிமுகப்படுத்தினர். இத்தோட்டத் துறைகளுக்கு தேவையான பயிர்களை இடமாற்றம் செய்தனர். போல் வளலி இவ்வாறு கூறுகின்றார். நடைமுறையிலிருந்த பயிர்ச்செய்கை முறை அழிக்கப்பட்டு ஐரோப்பிய தொழிலின் தேவைக்கேற்ப பாரிய தனியொரு பயிர்கள் கொண்ட பெருந்தோட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நடைமுறையை இலகுவாக்க உலகளாவிய ரீதியில் பயிர்கள் இடம்மாற்றம் செய்யப்பட்டன. சோளம் கம்பு போன்றவைகள் தென்னமிரிக்காவிலிருந்து உலகம் முழுவதும் பரவின. கொக்கோ மெக்ஸிக்கோவில் எடுக்கப்பட்டு மேற்கு ஆபிரிக்காவில் நடப்பட்டது. அமேசனிலிருந்து இறப்பர் எடுக்கப்பட்டு கிழக்காசியாவுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. வங்களாத்திலிருந்து சீனி கரீபியனுக்கும் தென் அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதிக்குச் சென்றது. மத்தியகிழக் கிலிருந்து கோப்பி லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா முழுவதும் நடப்பட்டது. சீனாவிலிருந்து தேயிலை இந்தியா, இலங்கை, கிழக்கு ஆபிரிக்காவுக்கு சென்றது. இத்தோட்டங்களில் வேலை செய்ய ஆபிரிக்காவிலிருந்தும் இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் புலப்பெயர்ச்சிக்கு உள்ளானார்கள். அடிமை வியாபாரம் வர்த்தக முதலாளித்துவத்தின் போது உச்சக்கட்டத்திலிருந் ததை அவதானிக்கலாம்.

பெருந்தோட்டத்துறைக்கு தேவையான உழைப்பைப்பெற இந்தியா, சீனாவிலிருந்து மக்களின் பெரும் இடப்பெயர்ச்சியை காலனித்துவ அரசுக்கள் ஏற்படுத்தின. ஏறத்தாழ 3 கோடி மக்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர். இதனால் உள்ளூர் மக்களின் குடிசனத் தொகையிலும் மற்றைய சமூக அரசியல் பொருண்மியத்துறைகளில் பல தாக்கங்களை உருவாக்கியது.

தனது வர்த்தக நலனுக்காக அமரிஇந்தியர்கள் எதிர்ப்புக்கு சட்ட வரையறைகளாலும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக கிளம்பிய குரலில் ஆயர் பார்த்தலேமே டீ காசா குரலின் இறைவாக்குப்பார்வை காணவேண்டும். சலமன்கா பல்கலைக்கழகத்தின் சட்ட பேராசிரியரின் அடிமைகளில் இயேசுவின் முகத்தைக் கண்ட புனித பீற்றர் கிளாவர். ஐபீரிய அரசுகள் வீழ்ச்சியடைந்தும் இறைதன்மையற்ற போக்கும், நற்செய்திக்கும் பணியாளருக்கும் எதிரிடையான தன்மையால் ஞான அதிகார கொள்கை என்ற பட்றுவாடோ ஒப்பந்தத்தை நீக்கி விசுவாசப் பரம்பல் முறையை அறிமுகப்படுத்தியது. இம்மாற்றத்தின் வரலாற்று ரீதியான தடையை நற்செய்திப்பணி எதிர்கொண்டது. தாயக அரசுக்களின் அதிகார வலுவற்ற நிலை குடியேற்ற நாடுகளை விடுதலைக்கு இட்டுச்சென்றது. ஐரோப்பியாவில் வீசிய அரசியல்தன் மையின் விசுவாசத்தின் எதிர்போக்கும் குருக்கள் எதிர்ப்புவாதமும், மெக்சிக்கோவில் வேதகலாபனையாக வெடித்தது.

உற்பத்தி காலணித்துவம் தென்னமரிக்க திருச்சபையும்

தென்னமரிக்கா வடஅமெரிக்காவை தலைமையகமாக கொண்ட பன்னாட்டு நிறுவனங்கள் கொல்லைப்புறங்களாக மாற்றப்பட்டது. தமக்கு சார்பான அரசியல்வாதிகளின் தலமையை தக்கவைக்க முயன்றது. இந்தபோக்கின் அதிர்ச்சி அலைகளாக மத்திய அமெரிக்க மண்ணில் நடந்த கியூபப்புரட்சி. இந்த அலைகள் மற்ற நாடுகளுக்கும் பரவ சேகுவராவின் முன்னெடுப்பு பதில் தாக்கத்தை உருவாக்கியது. புரட்சிக்குப்பின் ஐக்கிய அமெரிக்காவில் நெருக்குதலிருந்து கியூபாவை காப்பாற்ற போல்சிக்வித்தை வரிந்துகட்டிய பின்னணியில் திருச்சபை உறவைப் பார்க்கவேண்டும். பனிப்போர் உச்சக்கட்டத்தில் திருத்தந்தை 23ஆம் யோவானின் அவனியில் அமைதி என்ற சுற்றுமடல் திருப்புமுனையாக அமைந்தது.

அபிவிருத்தியயுகம் தோல்விகண்டவுடன் விடுதலை சிந்தனை மிதப்புப்பெறுவதைக் காணலாம். பெரு நாட்டு இறையியலாளர் குத்தாவே குத்தியரஸ் விடுதலை இறையியல் சிந்தனைக்கு தனது நூலால் அடித்தளம் இட்டார். அருட்திரு சன் யொண் செபரீனொ, செக்குண்டோ, லெனார்டோ பொவ் அவரது சகோதரன் குளொடியஸ் பொவ் செக்குண்டோ கலிலி இவர்களின் எழுத்துக்களும் எர்னஸ்டோ காரினடிலின் கவிதைகளும் விடுதலை இறையியலுக்கு வித்திட்டன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஐரோப்பிய திருச்சபை என்ற எண்ணக்கருவிலிருந்து விடுபட்டு உலகத்திருச்சபையாக தன்னை விளங்கிக்கொண்டது. 2ஆம் வத்திக்கான் சங்கப்படிப்பினைகள் தென்னமரிக்க திருச்சபையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. நேஸ்ரே பாஸின்நாட்குறிப்புக்கள் கமிலோ ரோரஸின் பொலிவிய தென்னமரிக்க திருச்சபையில் தாக்கத்தை ஏற்படுத்தியது. விடுதலை இறையியல் முதலாளித்துவ போக்குக்கெதிராக மக்களை திருப்பிவிடும் என்ற காரணத்தால் சான்ர பே (Sante Fe) கோட்பாடு என்னும் சி.ஐ.ஏ. யுக்தியை வெளியிட்டது. இதன் பின்னணியில் அடிப்படைவாத பிரசங்கிகளை அனுப்பத்தொடங்கியது. இதனை மெடலின் நகரில் கூடிய தென்னமிரிக்க ஆயர் பேரவை விமர்சன கண்ணோட்டத்தில் தென்னமரிக்க திருச்சபையின் வரலாற்றை பார்த்தது. முன்னைய நற்செய்திப் பணியாளர்கள் திரிந்தின் பொது சங்கத்துபின் உருவான திருச்சபையை நாட்டினர். ‘தங்கியிருத்தல்’ கொள்கையை முன்வைத்து ஏற்றதாழ்வான உலக வர்த்தகப் போக்கை சுட்டிக்காட்டியது. இது அமைப்புரீதியாக பாவம் எனக்கூறியது. தேசிய பாதுகாப்பு கோட்பாடு மக்களின் மனித உரிமையைப் பறித்தது உயிரை அழிவுக்குள்ளாக்கியது மட்டுமல்ல அரசபயங்கரவாதத்தை யதார்த்தப்படுத்தியது.

இப் பின்னணியில் ஆயர் கெல்டா கமறாவின் பணி தென்னமரிக்க திருச்சபையின் பணியிலும் பங்களிப்பிலும் தனியிடத்தை வகிக்கின்றது. இன்றைய உலகில் திருச்சபை என்னும் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் சமூக மறைக்கோட்பாட்டு மடலுக்கு ஆதாரசுருதியாக திகழ்ந்து ஏழைகளின் திருச்சபை என்பதை வலியுறுத்தினார். எல்சல்வடோர் பேராயர் ஒஸ்கார்றேமேரோ இரத்த சாட்சி தென்னமரிக்க திருச்சபையின் விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தியது. கடந்த போரினால் காணாமற்போன தமது கணவர், பிள்ளைகளுக்கான அன்னையின்

போராட்டம் குறிப்பிடத்தக்க அறப்போராட்டமாகும். திருச்சபையின் பணிபுதிய பரிமாணத்தை எடுத்தது.

### நிதியியல் காலனித்துவம் தென்னமரிக்க திருச்சபையும்

உலக நாணய நிதியம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் மீது தொடுக்கும் கடன் சுமையின் கொள்கை பாரிய காடொழிப்புக்கு காரணம் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். உலகக் கடன்பளு மக்கள் தலையில்மட்டுமில்லை மீளளிப்பதற்காக இயற்றை காடுகளான அமேசன் வகைதொகையற்ற முறையில் அழிவுக்குள்ளாக்கப்படுவதைக் காணலாம். இவற்றைவிட கடன்பளுவிலிருந்து விடுபடும் அதீத பேராசையான நோக்கோடு திட்டமிடப்படும் பாரிய திட்டங்களுக்கு அழிக்கப்படும் மழைக்காடுகளும் தோல்வி காணுவதுமட்டுமல்ல எதிர்பார்த்த விளைவுகள் உருவாக்குவதோடு பாரிய சூழலியற் பிரச்சினைகளையும் உருவாக்கின்றது. அபரீதமான விளைச்சலை நோக்கமாகக் கொண்டு கட்டுமட்டற்ற உரப்பாவினை மண்ணின் வளத்தை குறைக்கிறது. வனந்தரமாகும் போக்கு அதிகரித்துள்ளது. சூழல் பிரச்சினை மற்றும் ஓசோன் படலத்தில் உருவாகும் ஓட்டை, மற்றும் காலநிலையில் எல்-நிநோ விளைவுகள் என கூக்குரலெழுப்பும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அங்கு தனது திட்டமிடல் மையம் கொண்ட பல பல்தேசிய கம்பனிக்கள் மூன்றாம் உலகநாடுகளில் பலத்த காடழிப்பில் ஈடுபட்டுள்ளமை அதிகம் கவலையான விடயமாகும்.

இன்று ஆர்ஜன்ரினா விழுந்துவிட்டது. 1980 இறுதிப்பகுதியில் ஆர்ஜன்ரீனா கருதினால் ஆர்ன்ஸ்யுபிலி ஆண்டில் கடன் மதிப்பு வழங்கப்படவேண்டும் என கூறப்பட்ட எதிர்வுதான். எமக்கு தெரிந்தமட்டில் 1983இல் மெக்ஸிக்கோ, பிரேசில், வெனிசியுலா, ஆர்ஜன்ரீனா ஆகிய நாடுகளுக்கான வெளிநாட்டு கடன் 300,000 கோடியில் 12,000 கோடி வட்டியாக செலுத்த வேண்டும். 1984 ஆரம்பத்தில் மெக்ஸிக்கோ 12,000 கோடியை வருடாந்த வட்டியாகக் கொடுக்க வேண்டும்.

அருளலையின் தென்னமரிக்க மண்ணில் மோதிய வரலாற்றையும், வரலாறு வெற்றிபெற்றவர்களின் சாதனையைப் பாடும் முயற்சி எனும் சிந்தனைப்போக்கின் மத்தியில் ஓரங்கட்டப்பட்டவர்களினதும் புறக்கணிக்கப்பட்டவர்களின் பார்வையில் இலத்தீன் அமெரிக்க திருச்சபையின் வரலாற்று அலைகளை இந்நூலில் திரும்பிப் பார்க்கிறோம்.

- வணபிதா. கிருபானந்தன் -

# பொருளடக்கம்


பக்கம்

| | | |
|---|---|---|
| | உட்புகுமுன்............................................................ | i |
| | ஆசி உரை............................................................ | ii |
| | முன்னுரை............................................................ | iii |
| | அறிமுகம்............................................................ | 01 |
| இயல் 1 - | லத்தீன் அமெரிக்காவில் கிறிஸ்தவ உதயம் .............. | 05 |
| இயல் 2 - | நீக்கிரோ அடிமைகளும் பண்ணைகளும்.................... | 29 |
| இயல் 3 - | அமெரிக்க காலனித்துவ கிறிஸ்தவம் 1808 - 1870..... | 46 |
| இயல் 4 - | நாஸ்தீகமும் திருச்சபையும்................................. | 57 |
| இயல் 5 - | லத்தீன் அமெரிக்க சோசலிசம் 1930 - 1960............ | 80 |
| இயல் 6 - | சில நாடுகளின் வரலாறு..................................... | 91 |
| இயல் 7 - | இன்றைய லத்தீன் அமெரிக்கா............................ | 139 |
| | செபம்............................................................ | 140 |
| | பின் உரை............................................................ | 142 |
| | அடிக்குறிப்புகள்............................................................ | 143 |

# அறிமுகம்

அமெரிக்கக் கண்டத்தின் தெற்குப் பகுதியையும் அதை வட அமெரிக்காவுடன் தொடுக்கும் மத்திய அமெரிக்காவையுமே லத்தீன் அமெரிக்காவாகக் கொள்ளப்படுகின்றது. இது ஆர்ஜன்டீனா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, இக்குவடோர், கஜானா, பராகுவே, பேரூ, சுரினீம், உருகுவே, வெனிசுவெலா, பிரஞ்சு கஜனா ஆகிய பதின் மூன்று சுதந்திர நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

வடக்கே கரீபியன் கடலையும், கிழக்கே அத்திலாந்திக் சமுத்திரத்தையும் மேற்கே பசிபிக் சமுத்திரத்தையும் உள்ளடக்கும் முக்கோண வடிவமுள்ள இப்பாரிய நிலப்பரப்பில், 15000 மைல் நீளமுள்ள கடற்கரையும், 20000 அடிக்குமேல் உயரமுள்ள 50 அண்டியன் மலைச் சிகரங்களும் உள்ளன. உலகில் மிக பெரிய அமேசன் நதியுடன் பரானா, ஒரின்ணோக்கோ ஆகிய நதிகளும் உள்ளன. ஆர்ஜென் ரீனாவிலும் உருகுவேயிலும் பெரும்பான்மையனராக ஐரோப்பியர் களும், பேரு, பொலிவியா, இக்குவடோர் ஆகிய நாடுகளில் பெரும்பான்மையினராக அமெரிண்டியக் குடிகளும், ஏனைய நாடுகளில், நீக்ரோக்களும், கலப்பு இன மக்களும் வாழ்கின்றனர். [1]

வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் ஓர் குறுகிய பாலமாக மத்திய அமெரிக்கா உள்ளது. மெக்சிக்கோவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள இப்பகுதி பெலிஸ், கொஸ்ராற்றிக்கா, எல்சல்வடோர், குவாட்டமல்லா, கொன்டுருஸ், நிக்கராகுவா, பனாமா ஆகிய ஏழு தனித் தனி நாடுகளாக உள்ளது. பண்டைய மாயா இன மக்கள் வாழ்ந்த இந் நாடுகளில் இன்று இந்தியர், ஐரோப்பியர், ஆபிரிக்கர் மற்றும் கலப்பு இன மக்கள் வாழ்கின்றனர். பெலிஸ்ஸில் ஆங்கில மொழியும் ஏனைய நாடுகளில் ஸ்பானிய மொழியும் பேசப்பட்டு வருகின்றன. மொத்த சனத் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் விவசாயிகளாவர். [2]

மூன்றாம் மண்டல நாடுகளினுடைய திருச்சபை வரலாற்றின் 500 வருட நிகழ்வுகளை பல ஆசிய, தென் அமெரிக்க சபைகள் கொண்டாடும் இவ் வேளையில், சிலுவைப்பாடுகள் நிறைந்த அவற்றின் வரலாற்றினை, பரிசுத்த ஆவியின் ஞானத்துடன் நிதானமாக அணுகுவது நன்று. போர்த்துக்கல், ஸ்பானியசாம்ராச்சிய எழுச்சியின் தளபதிகள், அரசர்களுடன் மறைபரப்பும் நோக்குடன் பாப்பிறை 3ம் இனொசெந்த் செய்து கொண்ட *பட்றுவாடோ (Padroado)* ஒப்பந்த வரையறைக்குள் ஏற்பட்ட மதப்பரவலாக்கத்தின் எழுச்சியலையாகவே, பல விமரிசனங்கள் இன்றும், அன்றும் எழுந்துள்ளன.

அவ்வல்லரசுகளின் ஆதிக்க வேகமும், பொருளாசையும், படைப்பலமும் எம் திருச்சபை வரலாற்றில் ஏற்படுத்திய கறைகளையும், நீங்காத வடுக்களையும் நாம் சுமக்க வேண்டியுள்ளது. இருந்தும் இவற்றின் மத்தியில் இறை ஆவியின் வல்லமை, புல்லையும் பலமுள்ள கருவியாக்கி செயலாற்றும் கிறீஸ்தவ சமூகங்களை ஆயுதமாகக் கொண்ட யேசுவின் சீடத்துவத்தையும், தாழ்மையுடன் ஊழியம் செய்யும் ஓர் சிறு மந்தையையும் 3ம் மண்டல மண்ணில் வித்திட்டு உருவாக்கியுள்ளது.

லத்தீன் அமெரிக்க மக்களின் வரலாற்றினை ஐந்து கட்டங்களாகப் பிரித்து நோக்கலாம்:

### முதலாம் கட்டம் 1487-1800

1487இல் கொலம்பஸ் லத்தீன் அமெரிக்க கரையில் கால்வைத்து ஸ்பானிய அரசுக்கொடியை நாட்டிய காலம் தொட்டு, அவன் பின்வந்த கப்பற் தளபதிகள், போர் வீரர்கள், அரச நிர்வாகிகள், மறைபரப்பு போதகர்கள் அப் பரந்த கண்டத்தின் ஓர் முனை தொட்டு மறுமுனை மட்டும், தோற்கடிக்கப்பட்ட அஸ்ரெக், இன்கா, மாயா சம்ராச்சியங் களையும், அம்மக்களையும் ஸ்பானிய அரச நிர்வாகத்திற்குள் கொண்டுவர, மறு பக்கத்தில் மிசனரிக் குருக்கள் பெருந்திரளான மக்களைக் கிறிஸ்துவின் ஆளுகைக்குக் கீழ் கொண்டுவந்தனர். இதே வரலாறே சமகாலத்தில் பிரே சிலில் போர்த்துக்கேய ஆட்சி யின் கீழும் நடைபெற்றது.

### இரண்டாம் கட்டம் 1808 - 1890

இஸ்பானிய, போர்த்துக்கேய ஆட்சியாளருக்கு எதிராக தேசிய விடுதலை இயக்கங்கள் தோன்றின. இவ் விடுதலை இயக்கங்களில் பல குருக்கள் மிக முக்கிய பங்காற்றினர். இது வெளிநாட்டவரும் வெளிநாட்டுக் குருக்களும் வெளியேறக் காரணமாக அமைந்தது. இதனால் குருக்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.



***3ஆம் கட்டம் 1890 - 1930***

கைத்தொழில் வளர தொழிலாளர்வர்க்கம் உருவாகி, மார்க்சிய சிந்தனைகள் உட்புகுந்து, தொழிற்சங்கங்கள் தோன்றின. மெக்ஸிக்கோவில் வேத கலாபனையும் புறோஅடிகள் ஏற்படுத்திய மறுமலர்ச்சியும் ஏற்பட்டன.

***4ஆம் கட்டம் 1930 - 1980***

கியூபா, வெனிசுலா, குவாட், கொலம்பியா, பேரு, பிரேசில் எல்சால்வடோஸ், நிக்கரருவாமுதலிய நாடுகளில் லத்தீன் அமெரிக்க சோசலிசம் தோற்றம் பெறுகின்றது.

***5ஆம் கட்டம் 1990 - 2000 (சமகால மாற்றங்கள்)***


United States
Mexico
மெக்சிக்கோ
GULF OF MEXICO
ATLANTIC OCEAN
Bahamas
Dominican Republic
Cuba
Jamaica
Haiti
Puerto Rico
Antigua and Barbuda
Belize
St. Cristopher and Nevis
Honduras
Dominica
St. Lucia
Barbados
Guatemala
El Salvador
Nicaragua
Grenada
St. Vincent and the Grenadines
Costa Rica
Trinidad and Tobago
Venezuela
Guyana
Suriname
French Guiana (Fr.)
Panama
Colombia
கொலம்பியா
Ecuador
Brazil
பிரேசில்
Peru
பெரு
PACIFIC OCEAN
Bolivia
பொலிவியா
Paraguay
பராகுவே
Chile
சிலி
Argentina
Uruguay
உருகுவே
N
W
E
S

# லத்தீன் அமெரிக்காவில் கிறிஸ்தவ உதயம்

அமெரிக்கக் கண்டத்தை கண்டுபிடித்தது யார்? என்ற வினாவை வகுப்பறையில் ஆசிரியர் எழுப்புவாராயின் மாணவர்கள், கிறிஸ்தோபர் கொலம்பஸ் என விடை பகர்ந்தால் அது சரியான விடையெனக் கூறப்படும். இக் கேள்வியும் அதன் விடையும் பிழையானவையே. அதன் கருத்தாக்கமும் தவறானது என்பது கண்கூடு. அமெரிக்காவுக்குக் கடற்பாதை திறக்குமுன்பே மக்கள் அங்கிருந்தார்கள். அவர்களின் உடலமைப்பு இந்தியர்கள்போல் காணப்பட்டதால் செவ்விந்தியர் என அழைக்கப்பட்டனர். தற்போது அவர்கள் அமரி இந்தியர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

இக் கருத்தாக்கம் எமது சிந்தனையில் ஊடுருவி போலியான எண்ணக் கருத்துகளை உருவாக்குகிறது. புதிய உலகம் நோக்கி மக்கள் படையெடுத்தனர். ஆரம்பத்தில் போர்த்துக்கல், ஸ்பானிய நாட்டினரும் பின்னர் டச்சு மக்களும், ஆங்கிலோ சாக்ஸ்ன் இனக்குழுவைச் சேர்ந்த இங்கிலாந்து நாட்டவரும், ஸ்கொட்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி நாட்டினரும் சென்றனர். ஐரோப்பிய கண்டத்திலேற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப காலனித்துவ நாடுகளிலும் ஏற்ற இறக்கங்கள் உருவாயின.

ஸ்பானியர் தென் அமெரிக்காவினுள் நுழைந்தபோது மெக்சிக்கோவை ஆண்ட அஸ்ரெக், மற்றும் பேருவை ஆண்ட இன்கா ஆகிய இரு பெரிய சாம்ராச்சியங்கள் அங்கே இருந்தன. இவ்விரு இனத்தவர்களும் தம் சாம்ராச்சியங்களின் கொடுமுடியை அடைந்திருந்தனர். 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே மெக்சிக்கோவை ஆண்ட அவர்களின் முன்னோராகிய ரொல்ரெக்ஸ் (Toltec) 13ஆம் நூற்றாண்டில் வடக்கிலிருந்து வந்திறங்கி தம் தலைநகரைக் கட்டத் தொடங்கினார். 14ஆம் நூற்றாண்டின் முடிவில் இது நிறைவு பெற்று ரெனோசிற்லான் (Tenochtitean) என வழங்கப் பட்டது. 15ஆம் நூற்றாண்டில் முதலாம் மொன்ரெசூமாலின் (Montezuma) ஆட்சி முன்னைய மாயா சாம்ராச்சியத்தின் எல்லைகளை ஊடுருவத் தொடங்கிற்று.

அவர்களின் குருக்கள், பிரபுக்கள், ஆளுநர்கள் 10,0000 பேருக்குத் தேவையான உணவு, உடை, உலோக மட்பாண்டங்களையும் கொடுத்து அவர்களின் ஏனைய தேவைகளையும் நிறைவு செய்யுமாறு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். மக்கள் மறுத்த போது பெருந்தண்டனைக் குள்ளாக்கினர். உற்சிலோபோச்ரில் (Huitzilopochtli) என்ற அஸ்ரெக்கியரின் தலைத் தெய்வத்திற்கு நரபலி கொடுக்கத் தேவையான மனித உயிர்களைப் பெறுவதற்காக அண்டை மக்களுடன் போர் தொடுக்கப்பட்டது. வருடமொன்றுக்கு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மனித நரபலி கொடுக்கப்பட்டது.

அஸ்ரக் குருக்கள் 32 சென்ரிமீற்றர் நீள, கழுகு வடிவில் ரத்தினங்கள் பதிக்கப்பட்ட கைபிடிகொண்ட கத்திகளைப் பாவித்து, சூரியனுக்கும் பூமிக்கும் பலியிட மனிதர்களின் நெஞ்சுகளைப் பிளந்து, துடித்துக்கொண்டிருந்த இதயங்களைப் பிடுங்கி எடுத்துப் பலிசெலுத் தினர். இரண்டு மில்லியன் விவசாயிகள் 20000 தொன் உணவுகளைக் கொடுக்கும் படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இதனாலேயே பல மக்கள் குழுவினருக்கு 1519இல் ஸ்பானிய தளபதி கேர்னன் கோட்டஸ் (Hernan Cortes) வந்திறங்கியது மகிழ்ச்சிக்குரியதாயிற்று. இவன் அஸ்ரெக் (Aztec)



சர்வாதி காரத்தினின்று விடுதலை தருபவனாக அவன் கருதப்பட்டான்.1509ஆம் ஆண்டில் அஸ்ரெக் (Aztec) மாமன்னர் 2ஆம் மொன்ரேசுமாவின் தங்கை இளவரசி பப்பன்ரிசின் நித்திரை மயக்கத்தில் ஒரு காட்சியைக் கண்டாள். ஒரு பிரகாசமுள்ள தேவதூதன் நெற்றியில் கறுத்தச் சிலுவையுடன் தோன்றி, அவளை கடற்கரைக்குக் கூட்டிவந்து, சமுத்திரத்தில் அவர்களது மண்ணை நோக்கி வந்து கொண்டிருந்த கப்பல்களைக் காட்டினார். அக் கப்பல்களில் விசித்திரமான வெள்ளைப் பாய்களும், அவற்றில் தேவ தூதனின் நெற்றியிலிருந்தது போன்ற கறுத்த சிலுவைகளும் காணப்பட்டன. அஸ்ரேக்கரின் கொடுங்கோலாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றும் மக்கள் உண்மை இறைவனின் அறிவைப் பெற்று விடுதலை அடைவர் என்றும் இக்காட்சி உணர்த்தியது.

1487இல் கொலம்பஸ் வருவதற்கு முன்பு, நான்கு நாள் விழாவில் 80 000 மனிதர்கள் இரத்தபலியிடப்பட்டனர். புதிய ஆலய அபிசேகம் 20000 பேர்களைப் பலிகொண்டு அவர்களது இரத்தக்கொலைக் கலாச்சாரத்தில் 15 விநாடிக்கு ஒரு மனித உயிரை பலிகொடுத்தனர். பல



நூற்றுக்கணக்கான இரத்தப்பலி கேட்கும் தேவதேவதைகளை, இரத்தம் வார்த்துத் தொழுதனர்.[3]

1519இல் ஸ்பானியர் மன்னனைத் தோற்கடித்து, நாடுகடத்தி, நரபலியை சட்டம் போட்டுத் தடுத்தனர். நரபலி நிறைந்த, மனித இரத்தம் ஆறாய் ஓடிய, துர்நாற்றம் வீசிய கோவில்களைத் தரைமட்டமாக்கினர். குற்றமற்ற இளம் பெண்கள், குழந்தைகள், நிரபராதிகளின் இரத்தத்தை பெருவாரியாகக் கேட்டு வாங்கிக் குடித்தவன் சாத்தான் லூசிபரும் அவனது சைனியங்களுமே என்பது ஸ்பானிய போர்வீரருக்கு விளங்கத் தொடங்கியது.

தன் அழிவின்முன் ரோமாபுரியின் நாகரிக உச்சநிலை போன்று, அஸ்ரெக் நாகரிகமும் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. மிசனரிகள், ஆலயங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள் சிலுவையின் அடையாளத்தைத் தாங்கி எழுப்பப்பட்டன. யூவான் சுமார்கா என்னும் துறவியை முதல் ஆயராக புதிய நாட்டிற்கு எற்படுத்தினர். இவர் மக்கள் மத்தியில் அச்சகங்கள், நெசவாலைகள், புதிய வகை உணவுப் பயிர்கள் ஆகியவற்றை அறிமுகப் படுத்தினார்.

இன்றைய மெக்சிக்கோவின் கிழக்குக் கடலோரமாக கிடந்த மேற்கிந்திய தீவுகளிலேயே யேசுக்கிறிஸ்துவின் செய்தி அறிவிப்பு 1511இல் ஆரம்பமாகியது. மெக்சிக்கோவில்1519 - 1521இல் நற்செய்தி முழக்கம் ஆரம்பித்தது. 1522இல் பிரான்சீஸ்கன் மிஷனரிகளும், பின் சாமிநாதர் டொமினிக்கன்ஸ் சபையினரும் பணியாற்றிய 16ஆம் நூற்றாண்டின் முடிவுக்கு முன்னரே அவர்கள் சுதேச மொழி பயின்று அம்மொழிக்கு இலக்கணம் எழுதி, சேவை புரிந்தனர். இக்கால கட்டத்தில் சேவை புரிந்த பிரான்சீஸ்கன் மிசனரிகள் மட்டும் 86 பேர். 1533 தொடக்கம் பணிபுரிந்த அகுஸ்தீனிய சபையினர் உட்பட, நூற்றாண்டின்டின் நடுப்பகுதியில் மூன்று சபைகளிலும் 200 பணியாளர்களுக்கு மேல் சேவையாற்றினர். இவர்கள் ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான மக்களை யேசு பக்கம் திருப்பினர். இவர்களில் சாமிநாத சபையினர் மண்ணின் மக்கள் பலரையும் தம் துறவற சபையில் இணைத்துக் கொண்டனர்.

1555இல் மெக்சிக்கோவில் முதல் தேசிய மேய்ப்புப் பணி மாநாடு இடம்பெற்றது. 1572இல் யேசு சபையினரும் வரத்தொடங்கினர். ஏறத்தாழ முந்நூறுக்கும் அதிகமான யேசு சபையினர் கல்விப்பணியில் கருத்தாக உழைத்தனர்.[4]

மெக்சிக்கோ யேசுவை முழுமனதாக ஏற்றுக்கொண்டதற்கு முழுமுதற் காரணம், எல்லா அப்போஸ்தலர்களினதும் மிசனரிகளினதும் இராக்கினியான தேவதாய் மரியாளே.

முதல் ஆயரான யூவான் சுமார்கா யேசுவின் நற்செய்தியை அறிவித்து, அவர் பக்கமாக மக்களை மனந்திருப்பி புனிதராக வாழ அழைத்தார். அவர்களோ தங்கள் பழமையின் கட்டுக்கள், தடைகளுக்குள் சிக்கி, மீளமுடியாது தவித்தனர். "எங்களுக்கு ஆன்மா இல்லை" என்று சொல்லி யேசுவை ஏற்க மறுத்தனர். இக் கட்டத்தில்தான் ஆயர், தேவதாயிடம் திரும்பி, உருக்கமாக செபித்தார்.

"அன்னையே! நீர்தான் இறங்கிவர வேண்டும்... என்னால் ஒன்றும் செய்ய இயலாது... உமது இணக்கத்தை எண்பிக்க ஒரு அடையாளத்தை ஸ்பானிய நாட்டில்எனக்குக் காட்டுவீராக... கஸ்ரில்வோவில் வளரும் ரோசாப் பூக்களை அனுப்புவீராக" என உருக்கமாகப் பிரார்த்தித்தார். மெக்சிக்கோவில் அக்காலத்தில் அவ்வகை ரோசாக்கள் கிடையாது.[5]

## மெக்சிக்கோவில் ஓர் ஏழைக்கு தேவதாயின் காட்சி

1525இல் இளவரசி பப்பன்ரிசின் கிறிஸ்தவள் ஆனாள். அவளே கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்த முதல் மெக்சிக்கோப் பெண். அவளுடன் யேசுவை ஏற்றுக்கொண்ட வேறொரு மெக்சிக்கோவின் ஏழைக்குடும்படும்பத்தைச் சேர்ந்த யுவான் டியாகோ (Juan Diageo), அவர் மனைவி மரியலூசியா, மாமன் யுவான் பேர்னடினோ என்போர். இவர்கள் திருப்பலியில் பங்குபற்ற பதினைந்து மைல்கள் நடந்து மதவத்தேலோக்கோவிலுள்ள பிரான்சீஸ்கன் மடத்துக் கோயிலுக்குச் சென்று திருப்பலி, தேவதிரவிய அனுமானங்களில் பங்குகொள்வர்.[6] 1529 இல் யுவான் டியாகோவின் மனைவி இறந்ததும், கோவிலில் இருந்து ஒன்பது மைல்களுக்கு அப்பால் இருந்த தன் மாமன் பேர்னடினோடு யுவான் டியாகோ தங்கி வாழ்ந்தான்.

1531 டிசம்பர் 9ஆம் திகதி, சனிக்கிழமை அமல உற்பவத்திருநாள் (அன்று 8ஆம் திகதிக்குப் பதில் 9ஆம் திகதிதான்) கொண்டாடப்பட்டது.

திருப்பலியில்பங்குபெற அதிகாலையிலேயே புறப்பட்டுப்போனான் யுவான் டியாகோ. அவனுக்கு வயது 57. தெப்பயாக் மலையை அவன் அணுகியபோது (அது முன்பு, மனித இரத்தம் சிந்தி, நரபலி எடுத்த கோவில்களைக் கொண்டிருந்தது) இனிமையான தெய்வீக பாடலின் ஓசை கேட்டு நின்று பார்த்தான். தொடர்ந்தும் கேட்டது. வெள்ளை மேகம் ஒன்றில் இருந்து பல வர்ண வானவில் போன்ற ஒளி வீசியது.

தேவகாணம் நின்றதும், ஒரு இனிய பெண்குரல், யுவனிற்றோ, யுவனிற்றோ,யுவான் டியாகோ என அழைத்தது. பயம் நீங்கியது 130 அடி உயரமுள்ள பிரமிட் கோவில் உச்சிக்கு விரைந்தான். அங்கே அவனுக்கு நேர் முன்பாக அழகான பெண்ணொருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவளது ஆடை சூரியனைப் போல் பிரகாசித்தது. அவள் 14வயது மதிக்கத்தக்க இளம் பெண். யுவான் டியாகோ அன்பும் அமைதியும் ஆட்கொண்டவனாக, அவள் முன் சென்று முழங்காலில் வீழ்ந்தான். "என் மகனே! யுவானிற்றோ எங்கே செல்கிறாய்?'' என்று அப் பெண் கேட்டாள். மதவத்தேலோக்கோவுக்கு, திருப்பலியில் பங்குகொள்ளச் செல்கிறேன்'' என்றான். அவள் புன்முறுவல் பூத்தாள். என் அருமை மகனே! நானே பூரண, நித்திய கன்னி மரியாள்; உண்மை இறைவனின் தாய்; அவரால் எல்லாம் வாழ்கின்றன; அவரே எல்லாவற்றிற்கும் ஆண்டவர்; வானத்திற்கும் பூமிக்கும் அதிபர். இவ்விடத்தில் எனக்கு ஓர் ஆலயம் கட்ட வேண்டுமென விரும்புகிறேன். இங்கு நான் மக்களுக்கு என் முழு அன்பையும், இரக்கத்தையும், உதவியையும், பாதுகாப்பையும் வழங்குவேன். நான் உன் இரக்கமுள்ள தாய்; இம்மண்ணில் ஒற்றுமையாக வாழும் எல்லோரினதும் தாய்; முழு மனுக்குலத்தினதும் தாய்; என்னை அன்பு செய்கிறவர்களின் தாய்; என்னைப் பார்த்து அழுகிறவர்களின், என்னில் நம்பிக்கை வைத்திருக்கின்றவர்களின் தாய். இங்கு நான் அவர்களின் துன்பங்களையும், அழுகைக் குரலையும் கேட்பேன். அவர்களது துயர்களை ஆற்றுவேன். தேவைகளைப் பூர்த்தி செய்வேன்.

"ஆகவே என் திட்டத்தை நிறைவு செய்ய மெக்சிக்கோ ஆயரிடம் சென்று, நீ கண்டதையும் கேட்டதையும் சொல். நான் சொன்னதைக் கரிசனையுடன் நிறைவேற்றுவாயாகில் உனக்கு நன்றியுடையவளாகவும் பரதிபலன் அளிப்பவளாகவும் இருப்பேன். நான் கூறியதை நிறைவேற்று" என்றாள். யுவான் வணக்கத்துடன் "பரிசுத்தமானவளே! நீர் கூறியபடி செய்வேன். என்னால் இயன்றவரை முயற்சிப்பேன்'' என விடையளித்தான். யுவான் ஆயர் இல்லம் சென்று நீண்ட நேரம் காத்து நின்று கடைசியாக ஆயரைச் சந்தித்தான். ஆயர் அவன் கூறியதை பொறுமையுடன் கேட்டார். அஞ்ஞான தேவதைக்கு கோவில் இருந்த இடத்தில், தேவதாய் ஏன் காட்சி கொடுக்க வேண்டும்? என்று எண்ணியவராய், நான் யோசித்துப் பார்க்கிறேன் என்று சொல்லி யுவானை அனுப்பி வைத்தார்.

வீடு திரும்பும்போது அதே இடத்தில் தேவதாய் யுவானுக்காகக் காத்து நின்றாள். அவளின் முன் முழந்தாளில் விழுந்த யுவான் பேசத் தொடங்கினான். "தாயே உமது கட்டளைப்படி ஆயர் இல்லத்துக்குச் சென்றேன். இந்த ஏழையை யாரும் கவனிக்கவில்லை. பெரும் சிரமப்பட்டே ஆயரைச் சந்தித்தேன். என்னை வரவேற்று எனது பேச்சுக்குச் செவி சாய்த்தார். ஆயினும் அவரது விடையிலிருந்து என் கதையை அவர் நம்பவில்லையென்பது நன்கு தெரிகிறது. மகனே நீ திரும்பவும் ஆறுதலாக வந்து என்னைச் சந்தி, நான் நீ சொன்னவற்றை சிந்தித்துப் பார்ப்பேன் என்றார். எனவே இவ்வலுவலை தகுதி வாய்ந்த வேறு ஒரு முக்கிய மனிதரிடம் ஒப்படைக்குமாறு பணிவுடன் விண்ணப்பிக்கிறேன். அப்போது உங்கள் விருப்பம் நிறைவேறும். நான் இந்த அலுவலுக்கு அருகதையற்ற ஒரு ஏழைக் கமக்காரன். என்னை மன்னியுங்கள்" என்றான்.

தேவதாய் புன்முறுவலுடன் "மகனே கேள்! எனது அலுவல்களை நிறைவேற்ற எனக்குப் பல ஏவலர்கள் உண்டு. ஆயினும் இவ்வலுவலுக்கு உன்னையே நான் தெரிந்துள்ளேன். இவ்வலுவலை உன் மூலமே நிறைவேற்ற விரும்புகிறேன். மீண்டும் நாளைக்கு நீ ஆயரிடம் செல். என் பெயரைச் சொல்லி, என் விருப்பத்தை அவருக்கு எடுத்துச் சொல். இங்கு தன் பெயரால் ஒரு கோயில் கட்டப்பட வேண்டுமென முப்பொழுதும் கன்னியான மரியாளே கேட்கிறாள் எனச் சொல்" என்றாள்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை; யுவான் ஆயரிடம் சென்றான். நீண்ட நேரம் காத்திருந்த பின் ஆயரைச் சந்தித்து, நடந்தவற்றைக் கூறினான். அதிர்ச்சியடைந்த ஆயர் அவனை வெளியேற்ற விரும்பினார். ஆயினும் அவன் கண்களில் சொரிந்த கண்ணீரைக் கண்டு மனமிரங்கி மீண்டும் விபரமாக அனைத்தையும் விசாரித்தார். ஆயருக்கு சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. எனினும் ஓர் அடையாளத்தையே அவர் எதிர் பார்த்தார்.

யுவானை அனுப்பிய ஆயர் அவனது நடவக்கைகளைக் கண்காணித்துக் கொள்வதற்காக சிலரை அவன் பின்னால் அனுப்பினார். யுவான் பின்னே சென்றவர்கள், யுவான் மலை மீது ஏறி மாயமாய் மறைந்தது கண்டு, ஒன்றுமே செய்ய முடியாது திரும்பிவிட்டனர். யுவான் மலையிலே தேவ தாயைச் சந்தித்து, ஆயருடன் நடந்த உரையாடல் அனைத்தையும் கூறியபோது, தேவதாய், மறுநாள் தம்மிடம் வருமாறும், ஓர் அடையாளம் தருவதாகவும் வாக்குப் பண்ணினாள்.

ஆயினும் மறுதினம் யுவானின் மாமனுக்கு நோய் கண்டு கடுமையாயிற்று. டிசம்பர் 12இல் மாமனாருக்கு நோயில் பூசுதல் சடங்கு நடத்த யுவான் ஒரு குருவைத் தேடிப் புறப்பட்டான். அந்த மலையைக் கடக்க வேண்டுமே என்ற எண்ணம் அவன் மனதை வாட்டியது. ஆகவே

ஒரு குன்றுப் பாதை ஊடாக விரைந்தான். எனினும் ஒரு மின்னல் வெட்டுப் போன்ற ஒளிப் பிழம்பு குறுக்கிட்டது. மனம் குழம்பிய நிலையில் நின்ற யுவான் தேவதாயைச் சந்தித்தான்.

"எங்கே போகிறாய் மகனே? என்ன நடந்தது?" என அன்போடு வினாவினாள் அன்னை மரியாள். "என் மாமன் கடுமையான நோயுற்றிருக்கிறார். மரணிக்கு முன் ஒரு குருவை அழைத்து வர அவசரமாகப் போகிறேன். இது முடிந்ததும் நாளை வந்து, உமது அலுவலை நிறைவேற்றுவேன்" என யுவான் பதிலளித்தான்.

"மகனே, என் போர்வைக்குள் அல்லவா நீ இருக்கிறாய் வாழ்வின் ஊற்று நான் அல்லவா? எனது அரவணைக்கும் கரங்களுக்குள் அல்லவா நீ இருக்கிறாய், உன் மாமனார் இறக்கமாட்டான்; அவரைக் குணப்படுத்துகிறேன். இம் மலை உச்சிக்குப்போ. ஆயர் கேட்ட அடையாளம் கிடைக்கும். கஸ்ரிலியன் ஊர் ரோசாப் பூக்களை அங்கே காண்பாய். கவனமாக அவற்றைப் பிடுங்கிக் கொண்டு வா" என அன்னை கூறினாள். மீண்டும் ஆயர் இல்லத்துக்குச் சென்ற யுவான், கஸ்ரிலியன் ஊர் ரோசாப் பூக்களைக் கொண்டு வந்ததாக கூறி, ஆயரைக் காண அனுமதி பெற்றார். "இன்று காலை தேவதாயைச் சந்தித்தேன், நீங்கள் கேட்ட அடையாளம் பற்றிக் கூறினேன். மலை மீது சென்று அங்கு காணும் மலர்களைப் பிடுங்கி வருமாறு அன்னை ஆணையிட்டாள். இக்காலத்தில் அங்கு மலர்கள் மலர்வதில்லை. ஆயினும் அவள் வார்த்தையில் நம்பிக்கை வைத்து மேலே சென்றேன். என்ன அதிசயம்! பனித்துளிகள் படர்ந்த அழகிய மலர்களைக் கண்டேன். என் கைகள் நிறையுமளவுக்கு அப் பூக்களைப் பறித்து அன்னையிடம் கொண்டு வந்தேன். அவள் தன் கரங்களால் அவற்றை ஒழுங்கு செய்து என் மேலாடையின் உட்பையில் தானே பக்குவமாக வைத்து என்னை அனுப்பினாள்" என்று கூறி மேலாடையை திறந்தான்.

அப்போது மேலாடையின் உட்புறப் பையிலிருந்து கஸ்ரிலியன் ரோசாப் பூக்கள் தரையில் விழுந்தன. ஆயரும் அவருடன் இருந்தவர்களும் வாயடைத்துப் போயினர். அத்துடன் வேறொரு அதிசயத்தையும் அவர்கள் கண்டனர். யுவான் டியாகோவின் மேலாடை கத்தாளை நாரினால் நெய்யப்பட்டது. அதன் உட்புறத்தில் தேவதாயின் உருவம் பதிந்திருந்தது. அந்த உருவம் நார்ப் பின்னலினூடாக பிரகாசிக்கத் தொடங்கியது. அங்கிருந்த அனைவரும் தேவதாய் தங்கள் முன் நிற்பது போன்ற பிரேமையை அடைந்தனர்.

"அமல உற்பவி தான்" என்று உரக்கக் கத்தினார் ஆயர். அங்கிருந்த அனைவரும் ஒருவர் பின் ஒருவராக முழந்தாளில் விழுந்து அன்னையின் உருவப் படத்துக்கு வணக்கம் செலுத்தினர். தேவதாயின் விருப்பப்படியே ஆலயம் எழுப்பப்பட்டது. அன்னையின் உருவம் பதிந்திருந்த யுவான் டியாகோவின் மேலாடைப் பகுதி எடுக்கப்பட்டு பெரிய கண்ணாடிப் பிறேமில் மாட்டப்பட்டு பிரதான பீடத்தின் மேலே வைக்கப்பட்டது. அது இன்றுவரை காட்சியளிக்கின்றது. தேவதாய் தன்னைமுப்பொழுதும் கன்னியான குவாடலுப்பேயின் பரித்த மரியாள் என்று அன்னை யுவானிடம் கூறிய செய்தி ஆயர் சுமுராகாவுக்கு அதிர்ச்சி தரும் ஒன்றாயிற்று.

ஏனெனில் 1326இல் ஸ்பெயினில் குவாடலுப்பே ஆற்றின் அருகே உள்ள குகை ஒன்றில் தேவதாயும் பாலனும் அடங்கிய திருச்சொரூபம் ஒன்று புதுமையாக கண்டெடுக்கப்பட்டது. அவ்விடத்திலே 11ஆம் அல்போன்சோ அரசன் துறவற மடம் ஒன்றைக் கட்டுவித்து பிரான்சீஸ்கன் துறவிகளிடம் ஒப்படைத்தான். இது ஸ்பெயினில் பிரபலம் பெற்ற ஓர் திருத்தலமாகும். இத் தலத்திற்குச் சென்று செபித்த பின்னரே புது உலகைக் கண்டுபிடித்த கிறிஸ்ரோபர் கொலம்பஸ் தமது கடல் யாத்திரையை ஆரம்பித்தார்.

தன் ஏழைக் குழந்தைகளின் கொலையைத் தடுத்து நிறுத்த தேவதாய் மெச்சிக்கோவின் குவாடலுப்பேயில் வந்து இறங்கினாள். அவளின் திருவுருவப் படத்தில் மங்கலானதொரு முடியும் அதிலிருந்து வீசும் தங்க நிறக் கதிர்களும் காட்சியளித்தன. அன்னையின் காலடியில் அஸ்ரெக் மனித இரத்தம் குடிக்கும் குவற்சால் கோட்டலா என்ற பாம்புத் தேவதை நசுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.[5]

1531 காட்சிகளுக்குப் பின்பே 9 மில்லியன் அஸ்ரெக்குகள் மனம்மாறி கிறிஸ்துவைத் தம் இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். யுவான் டியாகோ, ஆயர் சுமாரகா, தளபதி கோட்டஸ் ஆகியோர் ஒரு வருடத்துக்குள் மரித்து, யேசுவின் காலடிகளை அடைந்தனர்.

மெச்சிக்கோ நாட்டில இருந்து இங்குவந்து பணி புரிந்த திரிகோணமலை - மட்டுநகர் ஆயர் இக்னேசியஸ் கிளெனி (யேசுசபை) ஆண்டகை, தம் மறைமாவட்டத்திலும் ஒரு குவாட்டலுபே ஆலயத்தை (திருமலையில்) நிறுவினார் என்பதையும் இத்தருணத்தில் நினைவுகூரவேண்டும். போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் குவாடலுப்பே மாதா ஆலயம் கோப்பாயில் கட்டப்பட்டு 2596 கிறிஸ்தவர்களுடன் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.[6]

## பேருநாட்டினுள்

பதினாறாம் நூற்றாண்டின் முதல் 1/2 நூற்றாண்டிலேயே வெனிசுவெலா, கொலம்பியா, இன்கா சாம்பிராச்சியம் பரவியிருந்த பேரு நாட்டிற்குள் மிசனரிகள் யேசுவின் மீட்பளிக்கும் நற்செய்தியைக் கொண்டு சென்றனர். வெனிசுவெலாவுக்குள் புகுந்த 5ஆம் சாள்சின் துருப்புக்களால், அடிமை வியாபாரம் செய்தவர்களின் அட்டூழியங்களை எதிர்த்த பல மிசனரிகள் கொல்லப்பட்டு வேதசாட்சிகளாயினர். பல மடாலயங்கள் அழிக்கப்பட்டன. இதனால் அக்கால கட்டத்தில் மிசனரி அலுவல்கள் ஸ்தம்பித்துப்போயிருந்தன.

16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொலம்பியாவில் டொமினிக்கன் சபையினர் பணியாற்றி வெற்றி கண்டனர். இவர்களின் பின் பிரான்சீஸ்கன், அகுஸ்தீனியன் சபையினரும், மேற்றிராசனக் குருக்களும் அங்கு சென்று நற்செய்திப் பணி புரிந்த அதேவேளைஅருகிலிருந்த இக்குவடோரிலும் வெற்றிகரமாகப் பணி புரிந்தனர்.

1527இல் பிசாரோ என்ற ஸ்பானியாத் தளபதி பேருவைக் கைப்பற்றிய போது சூரியவழிபாட்னரான இன்கா இனத்தவரிடமிருந்து எதிர்ப்பு எழுந்தது. எதிர்ப்புகள் மத்தியில் டொமினிக்கன், பிரான்சீஸ்கன், அகுஸ்தீனியன், மெர்சடாரியன் சபையினர் நற்செய்திப் பணியைச் செய்து வந்தனர்.

1543இல் லீமா தலைநகர், ஒரு மறைமாவட்டம் ஆகியது. 1551இல் அங்கு ஒரு சர்வகலாசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இது தென்னமெரிக்காவின் முதற் கலாசாலை ஆகும். அங்கு அயராத பணிபுரிந்த புனித தூபியூஸ் என்னும் லீமாவின் பேராயரே (1581 - 1608) இவ்வான்மீக அறுவடைக்கு முழு முதற் காரணமானவர். பரந்த சுன் மறைமாவட்டத்தை 3 முறை தரிசித்து அதன் தேவைகளை கேட்டறிந்து 13 மேய்ப்புப் பணி மகா நாடுகளையும், 3 மறைமாவட்ட அமர்வுகளையும் நடாத்தினார்.

1548 தொட்டு சிலி நாடும் தொடர்ந்து பராகுவேயும் ஆர்ஜென்ரினாவும் யேசுவின் நற்செய்தியைப் பெற்றன. 16ஆம் நூற்றாண்டு முடிவிலும் 17ஆம் நூற்றாண்டிலும் யேசு சபையினர் இந் நாடுகளில் பணியாற்றினர். 1610இல் ஐந்து அதிமேற்றிராசனங்களும் (பேராலயங்கள்), 27 மறைமாவட்டங்களும், 400 துறவற மடங்களும்

உருவாக்கப்பட்ருந்தன. 1620இல் கொலம்பியா, பேரு, பராக்குவேயில் 600 உழியர்கள் பணி செய்தனர். சுதேசமொழி தெரியாத ஊழியர்களின் கீழிருந்த கிறிஸ்தவர்கள் ஆழமாக நற்செய்தியை அறிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அரசின் சட்டம் தென்னமரிக்க மக்களுக்கு பாதுகாப்பை அளித்திருந்தும், இராணுவத்தினதும், பண ஆசை பிடித்த நிர்வாகத்தினதும் கெடுபிடிகளிலிருந்து மக்களை மீட்க அரும்பாடுபட்டவர்களில் பிரபலியமானவர் பத்தலோமே டி லா காசாஸ் (Bartolome De Las Casas) என்னும் குருவானவர். ஸ்பானியா அரசுக்கு குருவானவர் சமர்ப்பித்த அதன் கெடுபிடிகள் பற்றி அறிக்கைள் சில இடங்களில் மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம். இருந்தும் ஸ்பானியர் பரவலாக தடையின்றி சுதேசிகளை மணமுடித்து புதிய ஒரு இனத்தையே உருவாக்கினர். [7]

### புனித லீமா ரோஸ் (1586 - 1617)



இவள் தென்னமரிக்காவிலுள்ள பெரு நாட்டில் 1586ஆம் ஆண்டில் பிறந்தாள். திருமுழுக்கின்போது இடப்பட்ட பெயர் இசபெல்லா. எனினும் அழகு மிகுந்த இச் சிறுமியின் முகம் ரோஜா மலரை ஒத்திருந்ததால் லீமாவின் ரோஜா என அழைக்கப்பட அதுவே பெயராகவும் வழங்கப்பட்டது.

சிறு வயதிலிருந்தே ரோஜா பக்தி முயற்சிகளில் பழக்கப்பட்டாள். ஒரு சிறிய சம்மனசு என்று அழைக்கப்படுமளவுக்குஅறநெறி வழிகளில் அதிக கவனம் செலுத்தினாள். பாவிகள் மனந்திரும்பும் வண்ணம் அடிக்கடி செபித்ததுடன் தவ முயற்சிகளில் ஈடுபட்டாள். அத்துடன் பரித்தியாகங்களைச் செய்து பாவக் கிரமங்களால் மனம் நொந்து வருந்தும் ஆண்டவர் இயேசுவுக்கு ஆறுதல் உண்டாக்கினாள்.

இளம் வயதிலேயே தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப் பணித்து புனித சீயன்னா கத்தரினாளை தன் முன்மாதிரிகையாகக் கொண்டு செப தவ வாழ்வை மேற்கொண்டாள். ஆண்டவர் இயேசு பட்ட பாடுகளைப் பற்றி அடிக்கடி சிந்தித்துக் கண்ணீர் விட்டதால் தனது உடல், உள வேதனைகளைச் சகிப்பது இவளுக்கு எளிதாயிற்று.

அழகு, சௌந்தரியம் மிகுந்த இவளை விவாகம் செய்யப் பல பணக்கார வாலிபர்கள் முன் வந்த போது தனது அர்ப்பணத்தில் உறுதியாக நிற்கவும், அதற்கு மாறாகத் தனது அழகைக் குறைக்கவும் முயற்சி செய்தாள். இதனால் தன் அழகிய நீண்ட தலைமயிரைக் கத்தரித்ததுடன் தவ முயற்சிகளால் உடலிழைக்கச் செய்தாள். இதே வேளை குடும்பத்தில் பணக் கஸ்டம் ஏற்பட்ட போது இரவு பகலாக தையல் வேலைசெய்து குடும்பத்தைக் காப்பாற் றினாள். கற்புக்கும், விசுவாசத்துக்கும் மாறான சோதனைகளை வீரத்துடன் எதிர்த்துப் போராடிப் பாவிகளின் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உத்தரிக் கும் ஆன்மாக்களை மோட்சம் சேர்க்கவும் தனது தவ முயற்சிகள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்தாள்.

ஆண்டவரின் சித்தத்துக்கு அடி பணிந்து எவ்வகைத் துன்ப துயரங்களையும் முறையிடாது, பொறுமையோடு ஏற்று நடந்த இந்தச் சம்மனசுக்கு இளவயதிலேயே, யேசுவின் சின்ன திரேசாளைப்போல் இறைவன் மோட்ச பாக்கியத்தை வழங்கினார்.[8]

## பராகுவேயின் நவீன குடியிருப்புக்கள்

பராகுவேயின் நவீன குடியிருப்புக் கிராமங்கள் யேசுசபையினரால் உருவாக் கப்பட்டவையே. நாடோடி மக்களைக் குடியேற்றங்களில் அமர்த்தி வாழப் பழக்கிய துடன் நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தி விவசாய வளர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தவும் செய்தனர். 150000 ஆட்களை உள்ள டக்கிய 30 குடியேற்றப் பகுதிகளை யேசு சபையினர் பொறுப்பேற்றுத் திறமையுடன் நிர்வகித்தனர்.

இதை விடப் பல பிரச்சனைகள் தென்னமரிக்காவில் தலைதூக்கின. தென் இந்தியர்கள் அடிமைகளாக விற்கப்படக்கூடாது எனச் சட்டம் இருந்ததினால் ஆபிரிக்க அடிமை வியாபாரம் ஆரம்பமாயிற்று. 17ஆம் நூற்றாண்டு தொட்டு இவ் அடிமை வியாபாரம் போர்த்துக்கேய வியாபாரிகளால் நடத்தப்பட்டது. இந்த அநீதிக்கெதிராகப் பல மிசனரிகள் அதி சீக்கிரமே குரல் கொடுக்கத் தொடங்கினர். அவர்களில் முன்னோடியாய் இருந்தவர் அலொன்சோ டி சான்டேவால் (Alonso De Sandoval) என்னும் குருவானவரே. இக் குருவின் சீடனே பீற்றர் கிலேவர்(Peter Claver). இவர் தனது 30 வருடப் பணியில் (1622 - 1650) இரவு பகலாக நீக்கிரோ அடிமை மக்களுக்காக அயராது உழைத்து 300000 நீக்கிரோக்களை யேசுவின் பாதத்தண்டை சேர்த்தார்.



புனித மாட்டீன் (லீமா) போரஸ்

1500இல் போர்த்துக்கேய தளபதி கபரால் (Cabral) பிறேசிலை கைப்பற்றினான். ஸ்பானியர் போன்று முழுமையாக அந் நிலப்பரப்பை அவனால் ஆட்சி செய்ய முடியவில்லை. அவர்களது சனத்தொகை 2 மில்லியன் மக்களே. இதனால் பிறேசிலின் கடற்கரை ஓரங்களை மட்டுமே கைப்பற்றி ஆண்டான். ஸ்பானியர் போன்று இவர்களும் சுதேசிகளுடன் கலப்பு மணம் புரிந்து ஓர் புதிய இனத்தையும் பெற்றெடுத்தனர். திருச்சபையின் வளர்ச்சி மெதுவாகவே நடைபெற்றது. 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஒரு மறைமாவட்டமே இருந்தது. ஏனைய இடங்களில் பணியாற்றிய சபைகளுடன் செருப்பு அணிந்த கார்மேல் சபையினரும் ஊழியம் புரிந்தனர். முதலில் வந்த சில பிரான்சிஸ்கன் மிசனரிகள் கொல்லப்பட்டதுடன் பின் 1570இல் 40 யேசு சபைக் குருக்கள் வரும் வழியில் கல்வினிஸ்த சபையினரால் கொல்லப்பட்டனர். போர்த்துக்கேயர் கீழைத்தேயங்களில் கவனம்

செலுத்தியதால் பிறேசிலை இரண்டாம் தரக் காலனித்துவ நாடாகவே கருதியதால் இப்பகுதியில் போதிய கவனம் செலுத்தவில்லை. முதல் வந்த ஆயருடன் தரங் குறைந்த குருக்களையே அனுப்பினர். 1652இல், இவர் தென்னமரிக்க சுதேசிகளால் கொல்லப்பட்டார். அவரது உடலை அந்த நரமாமிச பட்சணிகள் உண்டனர்.[9]

## என்கொமியன்டா (Encomienda)

காலனித்துவ இஸ்பானிய அமெரிக்காவிற்குள் வாழ்ந்த இந்தியர்களையும், அமெரிக்க குடியேற்றவாசிகளையும் ஓர் சட்ட வரையறைக்குள் கொண்டு வர இஸ்பானியர்கள் தம் முடியாட்சியில் உருவாக்கிய கொள்கையே "எக்கொமியன்டா"(Encomienda)" எனப் படுகிறது.

13ஆம் நூற்றாண்டில் இஸ்பானியாவை ஆக்கிரமித்து ஆட்சி செய்த முஸ்லிம்களிடமிருந்தும், அங்கு வாழ்ந்த யூதர்களிடமிருந்தும் வசூலிக்கப்பட்ட வரி முறைமையே இங்கும் இதற்கு அடிப்படையாக விளங்கியது. கட்டாய வேலைப் பழுவினால் எழும் முறைகேடுகளைத் தவிர்க்கும் வகையில் இச்சட்டம் ஆரம்பத்தில் எழுதப்பட்டதெனினும், நடைமுறையில் இச் சட்டம் மக்களை அடிமைப்படுத்துவதாக மாறிற்று.

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்ந்த ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையைக்கொண்ட அமர் இந்தியர்களை, ஸ்பானிய குடியரசு 1503 ஆம் ஆண்டு எழுதப்பட்ட சட்டத்தின் மூலம் ஓர் ஸ்பானிய அதிகாரி, இராணுவ வீரர், படைத்தளபதி ஆகியோரில் ஒருவருக்கு அல்லது வேறொருவருக்கு நன்கொடையாகக் கொடுத்திருந்தது.

இச்சலுகையைப் பெற்றுக்கொண்டவர் என்கொமண்டோரா (Encomenderos)பொறுப்பாளர் என அழைக்கப்பட்டார். இவ்வரச நன்கொடையைப் பெற்றவர்கள், இந்தியர்களிடமிருந்து தங்கமாகவோ, பொருளாகவோ வரியைப் பெற்று, கிறிஸ்தவ விசுவாசத்தில் வழிநடத்தும் கடமையும் பெற்றிருந்தார்கள். அத்தோடு அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பையும் வழங்கினார்கள். இச்சட்டத்தின்படி என்கொமா ணடோ ராக்களுக்கு அந்நிலத்தில் உரிமை இருக்கவில்லை.

ஆயின் நடைமுறையில் இந்தியர்களின் நிலங்களை அபகரித்து, அவர்கள்பால் கொண்டிருந்த கடமைகளை நிறைவேற்றாது விட்டதால் இம்முறையால் நேர்ந்த துர்ப்பிரயோகங்களை நிவர்த்தி செய்ய புதிய சட்டங்கள் (1512 - 1513) இயற்றப்பட்டன.

1542இல் இந்த புதிய சட்டங்களின் தொகுப்பு அறிமுகப் படுத்தப்பட்ட போதும், தென்னமெரிக்க அதிகாரிகளிடமிருந்து வந்த எதிர்ப்பினால் இது கைவிடப்பட்டது. இருந்தும் 1550இல் சீர்திருத்தம் பெற்ற வேறோர் சட்ட அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. முதலிலே என்கொமியண்டா, ஆரம்பகால குடியேற்றவாத காலங்களிலே தொடங்கப்பட்ட நிலச்சுரங்க பொருளாதார தேவைகளோடு பிணைக்கப்பட்டெழுந்தது. அமரிந்தியச் சனத்தொகை வீழ்ச்சியும், சுரங்கத் தொழில்கள் விவசாயத்துறைக்கு மாற்றப்பட்டமையும் முன்னைய சட்டத்தை வலுவிழக்கச் செய்து, படிப்படியாக நிலச் சுவாந்தர் (Hacienda) அமைப்பைப் பெற்றது.

இருந்தும் 18ஆம் நூற்றாண்டு முடிவு வரை என்கொமியன்டா அதிகார பூர்வமாக முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. சுதேச இந்தியரின் சனத்தொகை விழ்ச்சி, ஆபிரிக்க கறுப்பின மக்கள் அமெரிக்காவுக்கு அடிமைவேலை வாங்குவதற்குக் கொண்டு செல்லப்பட வழிவகுத்தது. அம் மண்ணின் ஆதிக் குடிகளான அமெரிக்க இந்தியர்களுக்கும் பின் ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்க தோட்டங்களில் தொழில் புரியக் கொண்டு செல்லப்பட்ட கறுப்பினர்த்தவர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளையும், மனித உரிமை மீறல்களையும் தவறெனச் சுட்டிக்காட்டி அவர்களுக்காக குரல் கொடுக்க எழுந்த கத்தோலிக்க நற்செய்தி அறிவிப்பாளர்களையும், அவர்கள் பின்னணியில் எழுந்த புனிதர்களையும் சுட்டிக் காட்டுவது இங்கு பொருத்தமாகும்.[10]

இவர்களுள் பத்தலேமியு டி லாகாஸ், யுவான் படில்லா, ஜோசே டி அக்கொஸ்ரா, பிரான்சீஸ்கோ டீ விக்ரோறியா என்போர் முக்கியமானவர்கள். பேரு நாட்டுப் புனிதை றோசா டி லீமாவும், பீற்றர் கிலோவாரும், மாட்டீன் டி போறாசும், புனிதர் வரிசையில் முக்கியமாக குறிப்பிடத் தக்கவர்கள்.

## பத்தலோமே டி லஸ் காஸஸ்

1474 ஆகஸ்டில் ஸ்பானிய நாட்டி லுள்ள செவிலில் பிறந்து, அமெரிக்காவுக்கு டொமினிக்கன் நற்செய்தியாளனாகச் சென்று, அம்மக்களின் வரலாற்றை எழுதி,



அமரிந்தியப் பெண்

ஐரோப்பியர் இந்தியர் மீது கையாண்ட அடக்குமுறைகளை வெளிக் கொணர்ந்து, இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சாவுமணி அடித்தவர் இவர். அவர் எழுதிய பல நூல்களுள் (Historia De Las Indias) இந்தியர்களின் வரலாறு என்ற நூல் 1825 இல் அச்சிடப்பட்டது. ஒரு சிறிய வர்த்தகரின் மகனான பத்தலோமியு டி லாஸ் காஸஸ் 1497ஆம் ஆண்டு கிறெனடாவுக்கு ஒரு போர்வீரனாகச் சென்றார். பின் செவில் தேவாலயத்தில் லத்தீன் மொழி பயின்றார்.

1502இல் மேற்கிந்திய மலைகளில் இருந்த இஸ்பானியோவா பகுதிக்கு நிக்கொலஸ் டி ஆன்டோ என்ற ஆளுனருடன் வந்து சேர்ந்தார். அவருடைய பல ஈடுபாடுகளின் நிமித்தம் அவருக்கு ஒரு என்கொமியன்டா அளிக்கப்பட்டது. அங்கிருந்த இந்தியருக்கு இயேசு பற்றிய நற்செய்தியை அறிவித்து ஓர் இல்லற மறைப்போதகராகப் பணியாற்றினார். 1512இல் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அவ்வாண்டிலே கியூபாவின் ஸ்பானிய இராணுவப் படையெடுப்பிலும் பங்குபற்றினார்.

தென் அமெரிக்க வாழ்வின் முதற் பன்னிரு வருடங்களில் அமெரிக்காவின் கரையோரப் பகுதிகளில் இராணுவப் படையெடுப்பில் பங்குபற்றியிருப்பினும் அவர் மண்ணின் மைந்தர்களின் இன்னல்களைக் கண்டும் கண்மூடி வாழ்ந்தவரல்லர். 1514ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15இல் அவராற்றிய ஒரு பிரபலமான மறையுரையில் தன்னிடமுள்ள இந்திய அடிமைகளைத், திரும்பவும் ஆளுனருக்கே கொடுத்து விடுவதாக அறிவித்தார். அமெரிக்கக் கரைகளில் இருந்து கொண்டே இந்தியரை பாதுகாக்க ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலிருந்த அரசுகளோடு வாதாடுவது பயனற்றதெனக் கண்டு 1555இல் ஸ்பானியாவுக்குத் திரும்பினார். அங்கு அரண்மனையில் இந்தியரின் உரிமைக்காக வாதிட்டார்.

அவருக்கு செவிசாய்த்து உதவ முன் வந்தோரில் ரொலடோவின் பேராயர் பிரான்சீஸ்கோ சென்னல் டெசிஸ்நேரோ என்பவர் ஒருவர். பின்னர் இவர் ஸ்பானிய நாட்டுக் ஆயராக விளங்கினார். இவரது உதவியுடன் "இந்தியர்களுக்கு ஒரு புனர் வாழ்வு" என்ற ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இவர் அரசினால் நிறுவப்பட்ட ஓர் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு 1516ஆம் ஆண்டு நவம்பரில் அமெரிக்கா செல்ல கப்பலேறினார்.

அடுத்த வருடமே இவர் மீண்டும் ஸ்பெயினுக்குச் சென்று இந்தியருக்கு ஏற்பட்ட சட்டரீதியான பிரச்சனைகளை ஆராய்ந்து கொண்டு விவசாயிகளை அற வழியிலமைந்த ஒரு குடியேற்றத் திட்டத்திலிணைக்க ஊக்குவித்தார்.

*1519* டிசம்பரில் மாசலோனாவில் கூடிய ஸ்பானிய பாராளமன்றத்தின் முன் இந்தியர்களுக்காக அவராற்றிய உரையில் பலரது மனங்கள் மாற்றம் அடைந்தன. 1ம் சாள்ஸ் மன்னர், பாராளுமன்றத்தில் பிரசன்னமாயிருந்தார். இவர் முன்வைத்த "சுதந்திர இந்திய நகர்கள்" என்ற திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுலாக்கப்பட்டது.

இவை ஸ்பானிய அமரிந்திய குழுக்களை ஒன்று சேர்த்து ஓர் புதிய கலாச்சாரத்தை அமெரிக்காவில் தோற்றுவிக்குமென எண்ணப்பட்டது. வெனிசுவெலாவின் வட பகுதியில் உள்ள *பாரியாக்* குடாவில் இப் புதிய கொலனியை உருவாக்க 1520ஆம் ஆண்டு டிசம்பரில் ஒரு சில விவசாயிகளுடன் புறப்பட்டார். சாண்டொமிங்கோவில் (Sandomingo) இருந்த என்கொமண்டோறோசின் (Encomenderos) எதிர்ப்புகள், போதியளவு விவசாயிகள் இல்லாமை, அமரிந்தியர்களின் தாக்குதல்கள் ஆகிய மூன்றும் சேர்ந்து 1522 ஆம் ஆண்டு கோவிற்கு இவர் திரும்பியதும் தன் அரசியல்சீர்திருத்த அலுவல்களைக் கைவிட்டு துறவற வாழ்வைத் தழுவி 1523ஆம் ஆண்டில் சாமிநாதர் சபையில் சேர்ந்து கொண்டார்.

வட சாண்டொமிங்கோவில் புவட்டோடே பிளாட்ட (Puer to de plata) என்ற துறவற மடத்தில் அவர் அதிபராக இருந்து நான்கு வருடத்தின் பின் கிஸ்ரோறியா அப்பலோஜெற்றிகா (Historia Apologetica) என்ற நூலை எழுதினார். இந்நூல் அவர் பின்பு எழுதிய "கிஸ்ரோறியா டெலாஸ் இந்தியாஸ்" என்ற பிரபலமான நூலிற்கு அறிமுகமாக இருந்தது. கிஸ்ரோறியா அவர் வேண்டுதலின்படி அவர் மரணம் வரைக்கும் பிரசுரிக்கப்படவில்லை. தான் தென்னமெரிக்காவில் கண்டதையும் கேட்டதையும் அவர் அந்நூலில் ஆவணப்படுத்தினார். அது ஒரு வெறும் சம்பவங்களின் தொகுப்பாக இல்லாது அச் சம்பவங்களின் தீர்க்கதரிசன விளக்கம் கொண்டதாகவும் இருந்தது. ஐரோப்பியர்கள் புதிதாகக் கண்டுபிடித்த நாடுகளின் காலனித்துவ மக்களுக்கு செய்த அநீதிகள், அடக்குமுறைகள், ஒடுக்குமுறைப் பாவங்கள் இவற்றினை வெளிக்கொணர்வதாக அமைந்தது.

இறைவனுடைய தண்டனைக்குப் பாத்திரவானாகி இஸ்பானிய நாட்டின் மீது வந்து விழப்போகும் தண்டனையை அவர்களுக்கு எடுத்துரைப்பதே இவரின் நோக்கமாக இருந்தது.

*1531, 1534, 1535* ஆகிய ஆண்டுகளில் மூன்று நீண்ட கடிதங்களை மற்றிடில் (Madrid) இருந்த இந்திய சங்கங்களுக்கு எழுதி தென்னிந்திய

மக்களை அடக்கியாண்ட பாவத்திற்குக் காரணமாக இருந்த ஆட்களையும் அமைப்புகளையும் குறிப்பாக என்கொமியெண்டா அமைப்பையும் சாடினார். தென்னமெரிக்காவில் பரவலாகப் பிரயாணம் செய்து அங்கு வாழ்ந்த சுதேசிகள் உரிமைக்காக வாதாடி இஸ்பானிய அதிகாரிகளோடு மோதியதின் விளைவே அவரின் அடுத்த நூலான 1537இல் எழுதப்பட்ட டியுனிக்கோமோடோ (Deunico modo) என்பதாகும். (உண்மைச் சமயத்திற்கு எல்லா மனிதரையும் ஈர்க்கும் ஒரேயொரு வழி.)

இதில் சமாதான வழியில் இந்தியர்களுக்கு நற்செய்தி அறிவிப்பது என்ற நடைமுறைக் கொள்கையைக் குறிப்படப்பட்டிருந்தது. போர் நடைபெற்றுக்கொண்டிருந்த ஒரு நாட்டில் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் இன்னும் கொண்டுவரப்படாத இராணுவமற்ற அமரிந்தியப் பகுதிகளான ருசுட்லான் இனிய குடாவினருகே இன்றைய கொஸ்தரிக்காவில் வேறு டொமினிக்கன் துறவிகளுடன் ஒரு புது வகையான நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆரம்பித்தார். இது தந்த வெற்றிகளைக் கண்டு 1539ஆம் ஆண்டு ஸ்பெயினுக்கு கப்பலேறி 1540 ஆம் ஆண்டு அங்கு வந்துசேர்ந்தார்.

5ஆம் சார்லசின் சந்திப்பை எதிர்நோக்கும் வேளையில், லாஸ் காசின் மனதில் மற்றோர் எண்ணம் தோன்றியது. 'இந்தியர்களின் அழிவு' பற்றிய அறிக்கையொன்றை தயாரித்தலே அது. 1545இல் எழுதப்பட்ட இவ்வறிக்கையில் வரலாற்று உண்மைகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்திலும் பார்க்க கூடிய முக்கியத்துவம் இறையியற் கருத்துகளுக்குத் தரப்பட்டிருந்தது. மிகப் பெருமளவில் கிறிஸ்தவர்கள் ஏன் கொல்லப்பட்டார்களென்பதற்கு, குறைந்த கால எல்லையில் பொன்னும் மணியும் அதிக அளவில் திரட்டி செல்வந்தராகும் அவர்களது அவாவே என விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

புதிய சட்ட விதிகள் சாள்ஸ் மன்னரால் அங்கீகரிக்கப்பட்டமை லாஸ் காசின் மிகப் பெரிய வெற்றியாகும். இவ் விதிகளுக்கிணங்க என்கொமியண்டா ஒரு பரம்பரைப் பணியாளர் அல்லர். அத்துடன் நிலச்சுவாந்தர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துள் தமது அடிமைகளை (இந்தியரை) விடுவிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இப் புதிய சட்ட விதிகள் சரிவர நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொறுப்பை லாஸ் காஸஸ், குவாட்டமாலாவின் சியாபாஸ் மறைமாவட்ட ஆயருக்கே அளித்தார். தொடர்ந்து 1544 யூலை மாதத்தில்

அவர் 44 தொமினிக துறவிகளுடன் அமெரிக்காவுக்குப் பயணமானார். 1545 ஜனவரியில் அங்கு போய்ச் சேர்ந்ததும் "ஸ்பானியர்களுக்கு பாவ மன்னிப்பு வழங்குவதற்கான விதிமுறைகளை" வெளியிட்டாார். என்கொமின்டாவில் இந்தியர்களை அடிமைகளாக வைத்திருந்தவர்களுக்கு பாவ மன்னிப்பு மறுக்கப்பட்டது. இவ்வித கடுமையான நிபந்தனைகள் ஸ்பானிய விசுவாசிகள் பலரின் எதிர்ப்புக்குள்ளாகியதுடன் (1545 தவ காலத்தில்) லாஸ் காஸ் ஆயர் பேரவையொன்றைக் கூட்டி இவ்வலுவலில் ஆயர்களது ஒத்துழைப்பையும் நாடினார் இவ்விதம் தமது உதவியாளர்களிடம் இந்தியரின் சமூக நல மேம்பாட்டுக்கான அலுவல்களை ஒப்படைத்த பின் 1547 இல் அவர் ஸ்பெயினுக்குச் சென்றார்.

அடுத்து லாஸ் காஸஸ் தமது வாழ்வின் மிக முக்கிய சாதனையொன்றில் அடியெடுத்தார். அரச அவையின் மிக முக்கிய ஆலோசகராகவும் அமரிந்திய நிர்வாக குழுவின் அங்கத்தவராகவும் பணியாற்றத் தொடங்கினார். அத்துடன் அரச அவையின் முக்கிய பிரமுகர்களான யுவான் கினி டி செபுல்வெடா போன்றோரின் துணையுடன் இந்தியர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளைக் கண்டித்தும் சாடியும் விண்ணப்பங்களை தொடர்ச்சியாக வெளியிட்டார்.

அமரிந்திய ஏழைக் குடிமக்களின் மனித உரிமைகள் மறுக்கப்படுவதற்கும், சமூக நலன்கள் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதற்கும் எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் முழு ஸ்பானியருக்கும் (குழந்தை முதல் வயோதிகர் வரை ஆண்கள் பெண்கள் அனைவருக்குமே) ஒரு சாபக்கேடாக அமையுமென்று இறையியல் நிபுணர்கள் அடங்கிய மேல்மட்ட அரசாணைக் குழுக்களின் முன் இடைவிடாது முழங்கினார். 1550 வரை அவரது இப்போராட்டம் நீடித்தது. இறுதியாக அமரிந்தியரின் உரிமைகள் ஸ்பானியரால் மதிக்கப்படத் தொடங்கின. சமூகத்தில் அவர்களும் ஓர் அங்கம் என்ற கொள்கை ஸ்திரப்படுத்தப்படும் வரை, உத்தியோக ரீதியாக மதிக்கப்படும்வரை லாஸ் காஸஸ் தமது பிரச்சாரப் பேராட்டத்தை நிறுத்தவில்லை. துண்டுப் பிரசுரங்களாக, விண்ணப்பங்களாக, சுற்றுநிருபங்களாக, சிறு நூல்களாக கையேடுகளாக உடலும் உளமும் சளைக்காது வெளியிட்டு தம் கொள்கைக்கு பகிரங்க ஆதரவைப் பெற்றுக்கொண்டேயிருந்தார்.

அமரிந்திய சமூகத்தின் அரச ஆணைக்குழுவின் அங்கத்தவராக தமது இறுதி நாட்கள் வரை அவர் அயராதுழைத்தார். இச் சமூகம் எதிர்நோக்கிய பல்வேறு பாரிய பிரச்சினைகளுக்கு நல்ல தீர்ப்புக் காணவல்ல ஆலோசனைகளை அரச சபையாருக்கு அவர் வழங்கிக்கொண்டே இருந்தார்.

*1562*இல் அவரது 'இந்திய வரலாறு' என்ற ஆய்வுநூல் வெளியிடப்பட்டு எல்லாச் சமூகத்தினரதும் பேராதரவைப் பெற்றது.

"ஸ்பெயினுக்கு எப்போதாவது பேரழிவு தோன்றினால் அது முன்னர் நாம் அமரிந்திய சமூகத்துக்குச் செய்த அநீதிகளுக்கான இறைவனின் தண்டனையே என்பதை ஒவ்வொரு ஸ்பானியனும் உணர வேண்டும்" என அவர் வற்புறுத்திக் கூறுனார்.

தமது 90ஆவது ஆண்டுகளில் அவர் மேலும் இரு நூல்களைப் பிரசுரித்தார். அமெரிக்க கண்டங்களில் ஸ்பானிய ஆதிக்கம் பற்றிய விபரமான ஆய்வு வெளியீடுகளே இவை. இரு ஆண்டுகளின் பின் நுயஸ்ரா செனோரா டி அரோகா டி மட்றிட் என்னுமிடத்திலுள்ள தோமினிக்க கன்னியர் மடத்தில் லாஸ் காஸ் பரம பிதாவிடம் தனது ஆவியை ஒப்படைத்தார்.

பெரு தேச இராசப் பிரதிநிதியான (வைஸ்ரோய்) பிரான்சீஸ்கோ டி ரொலடோவின் வேண்டுதலுக்கிணங்க லாஸ் காஸ் தம் வாழ்நாளில் வெளியிட்ட எல்லா நூல்களையும், வெளியிடாமல் கையெழுத்துப் பிரதியாயிருந்தவற்றையும் ஒருங்கு சேர்த்து அருங்காட்சியகத்தில் காப்பாற்றப்படல் வேண்டுமென ஸ்பானிய அரசர் உத்தரவு பிறப்பித்தார்.

இவர் வெளியிட்ட நூல்களில் ''இந்திய அழிவு'' மிக மிக முக்கியமானது. பல பதிப்புகளாக, பல இலட்சம் பிரதிகளாக அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் 'இந்திய அழிவு' விற்பனையாகியது. சைமன் பொலிவியர் ஸ்பெயினுக்கு எதிராக சுதந்திரப் போராட்டம் நடத்தவும், மெக்சிக்க சுதந்திரவாதிகளின் சுதந்திர உத்வேகத்தை தூண்டிவிடவும் இவரது நூல்கள், பிரசுரங்களே முக்கிய காரணிகளாயின.

லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், ஆபிரிக்க ஆசிய பிரதேசங்களிலும் 16ஆம் நூற்றாண்டுகளில் காலணித்துவ ஆட்சியின் கொடுமைகளால் நடந்தேறிய அடிமை ஆட்சியின் பயங்கர விளைவுகளைக் களைந்தெறியவும் ஒடுக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்ட ஏழைக் கறுப்பு நிறத்தவரின் பொருளாதார, அரசியல், சமூக நலன்களை மேம்படுத்தவும் தம் வாழ்நாள் முழுவதும் அயராது போராடிய முதலாவது ஐரோப்பியன் டிலாஸ் காஸ்தா எனின் அது மிகையாகாது.[11]

## பிரான்சீஸ்கொ டி விற்றோரியா

தம்முடைய அடிமை ஒழிப்பு போராட்டங்களுக்கும், புதிய உலகில் இந்தியரை அடக்கியாண்ட ஸ்பானிய காலனித்துவ போர் எதிர்ப்புகளிலும் பிரசித்தி பெற்ற மற்றொருவர் பிரான்சீஸ்கொடி விற்றோரியா ஆவர்.

இவர் அலாவாவின் பாஸ்கியூ மாகாணத்தில் பிறந்தவர். சாமிநாதர் சபையின் துறவியாகி உயர் கல்விக்காக பாரீஸ் நகரின் பிரபல பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டாரர். பட்டதாரியாகிய பின் அங்கேயே சில ஆண்டுகள் விரிவுரையாளராக பணியாற்றினார். 1523இல் ஸ்பெயினுக்குத் திரும்பி வல்லாடொலிட் பல்கலைக் கழகத்தில் விரிவு ரையாளராகப் பணியாற்றியதுடன் காலணித்துவத்தின் குணவியல் புகளும் தாக்கங்களும் பற்றிய ஆய்வையும் தொடங்கினார். 1526இல் சல்மைன்கா பல்கலைக்கழகத்தின் மாணவர், ஆசிரியர், விரிவுரையாளர் களால் ஏக மனதாக இறையியல் பீடத்தின் பெருந்தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

சல்மன்கா பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கம் மத்திய கால மறுமலர்ச்சிக்கு பட்டதாரி மாணவர்களைத் தயார் செய்வதே. இதற்காக அந்நிர்வாகம் இளம் மாணவர்களை புலமைப் பரிசில்களாலூக்குவித்தது. இங்கு விற்றோரியாவின் உரைகளும் வாதப் பிரதிவாதங்களும் பலத்த சர்ச்சைக்குள்ளாகின. பிரான்சுக்கும் ஸ்பெயினுக்குமிடையில் நடைபெற்ற யுத்தம் பற்றிய ஆய்வரங்கில் பொதுவான ஸ்பானிய அபிப்பிராயமாக 'பிரான்சிய மன்னர் அழிவுகளையோ துருக்கிய பயமுறுத்தல்களையோ முக்கியமாக கணிக்கத் தவறிவிட்டார்' என்பதை தம்மால் ஏற்றுக்கொள்ள இயலாதென வாதாடினார். மிக முக்கியமாக பிரான்சிய ஸ்பானிய குடும்பப் போரானது கிறிஸ்தவ அரசுகளின் அழிவுக்கு அடிகோலுமென எச்சரித்தார். இது சம்பந்தப்பட்ட இராசப் பிரதிநிதிகள், உயரதிகாரிகள், அமைச்சர்கள், ஆலோசனையாளர்கள், அரசவை அங்கத்தவர்கள், அவர்களது குறுகிய மனப்பான்மையையிட்டு பலமாக கண்டித்தார். தங்கள் பங்குகளில் நீண்ட காலமாக சர்வாதிகாரமாக ஆட்சியை நடத்திய குருகுலத்தையும் அவர் கண்டிக்கத் தவறவில்லை. சிறப்பாக பங்கின் ஏழை மக்களின் சமூக, பொருளாதார கல்வித் தரத்தை உயர்த்த உழைக்காத குருக்களும் அவரது கண்டிப்புக்கு உள்ளாகினர்.

புதிய உலகில் ஸ்பானிய ஆதிக்கத்தின் போக்கையிட்டு அவர் மிகுந்த ஐயுறவு கொண்டார். சிறப்பாக ஸ்பானிய ஆதிக்க அலுவல்களில் நீதி

குழிதோண்டிப் புதைக்கப்படுவது கண்டு கொதித்தெழுந்தார். ஒரு துறவி என்ற முறையில் எந்த உருவத்திலும் எந்த நேரத்திலும் போரினால் தீர்வு காண்பதை அவர் மனது ஏற்றுக்கொள்ள மறுத்தது. விசுவசியாதவர்களை அடக்கு முறையால் விசுவசிக்கச் செய்வது நீதிக்கு மாறானதென அவர் உறுதியான கருத்துக் கொண்டிருந்தார்.

அடக்கு முறையாலே அநீதமான வழிமுறைகளினாலோ தென்னமெரிக்க நாடுகளிகளில் கத்தோலிக்கம் பரப்பப்படுவதற்கு ஆதரவளிக்கக் கூடாதென வாதாடினார். நற்செய்தித் தூதுரைப்பாளர்கள் புதிய ஸ்பானிய காலனிகளுக்கு சென்று, மக்களோடு மக்களாகப் பழகி, ஏழை மக்களது துன்ப துயரங்களில் பங்குகொண்டு, அவர்கள் இடர்களைந்து, கல்வியறிவும், விசுவாச விளக்கமும் அளிப்பதே சிறந்த முறையாகும் என உரைத்தார்.

புறவினத்தாரும் மனிதர்களே. அவர்களது சொத்துக்களை வைத்திருக்க, உழைத்துப் பொருளீட்ட அவர்களுக்கும் முழு உரிமையும், சுதந்திரமும் உண்டு. அஞ்ஞானிகள் என அவர்களை ஓரங்கட்டுவது நீதிக்குப் புறம்பானது. அவர்கள் தங்கள் தலைவர்களை, தாங்களே தெரிந்தெடுத்தல் வேண்டும்.

தென் அமெரிக்காவின் முதல் மூன்று நூற்றாண்டுள்ள திருச்சபை வரலாறில் அமரிந்திய சுதேசிகளை பெருந்தோட்ட முதலாளிகள் பாவிக்க முயன்று, அவர்களை நலிவுறச் செய்தனர். ஐரோப்பாவிலிருந்து வந்த புதிய நோய்கள், மக்களிடையேயும் ஐரோப்பியரோடும் நடந்த யுத்தங்கள் - மக்கள் தொகையைக் குறைத்தன. இதற்கு சில விதிவிலக்குகளும் இருந்தன.

இச் சுதேச மக்கள் தொகை குன்றவே, கிழக்கு மேற்கு ஆபிரிக்காவிலிருந்து பல நீக்ரோக்கள் அடிமைகளாக இத்தோட் டங்களில் வேலை செய்வதற்குக் கப்பல் வழியாககொண்டு வரப் பட்டனர்.

கப்பல் வழியாக வட, தென் அமெரிக்காவுக்கு 1526-1810 இடையில் 10 மில்லியன் ஆபிரிக்க அடிமைகள் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் மத்தியில் சேவை புரிந்த அப்போஸ்தலர்கள் புனிதர்களான பீற்றர் கிலோவர், மாட்டீன் தேபோரஸ் முதலியோர்.

சலமன்கா சர்வகலாசாலையில் விற்றோரியோ, புனித தோமஸ் அக்குவைனாசின் சிந்தனைகளை ஆய்வு செய்யும் பணியில் ஆர்வம் ஊட்டினார்.

போர் பற்றிய அவரது கருத்துக்கள் பின்வருமாறு: சமகாலப் போர்களின் பயங்கரங்களை வரையறுக்கும் பாதுகாப்புக்காக அல்லது பெரியதொரு தீமையைத் தவிர்க்கவே போர் தொடங்கலாம். போர் தொடங்குமுன் பேச்சுவார்த்தைகள், சமரச முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். போரினால் விளையும் நன்மைகளைவிட தீமைகளே அதிகமெனக் காணுமிடத்து அரசர்களோ, தலைவர்களோ போரைத் தொடங்கக் கூடாது. நிரபராதிகள் கொல்லப்படாதிருக்க ஆயுதம் தரித்தோரிடமிருந்து பொதுமக்கள் இனம் காணப்பட வேண்டும். ஒருவர் தன் மனச்சாட்சிக்கிணங்க போர் புரிய மறுப்பாராயின் அவரைக் கட்டாயப்படுத்தக் கூடாது.

விற்றோரியாவை திரிதெந்தீன் பொதுச் சங்கத்துக்கு பிலிப் மன்னர் அழைத்தபோது, தான் ஆண்டவரின் வீட்டுக்குப் போகவேண்டியிருக்கும் என மறுத்துவிட்டார். அடுத்த வருடமே தமது 60ஆவது வயதில் யேசுபதம் படைந்தார்.[12]

## ஜோஸ் தே அக்கொஸ்ரா

இவர் ஸ்பெயின் நாட்டு மெடினா தெல்காம்ப்போ கிராமத்தில் 1539இல் பிறந்தார். புதிய உலகு எனப்படும் அமரிக்க நாடுகளுக்கு நற்செய்திப் பணியாற்றச் சென்ற அக்கொஸ்ரா இறையியல் கலாநிதியும் நூலாசிரியருமாவார். அமெரிக்க நாடுகளின் அறியாமையைப் போக்கி ஐரோப்பிய நாகரிகத்தையும் மறுமலர்ச்சியையும் அங்கு புகுத்திய நவீன கலாச்சாரச் சிற்பிகளில் அக்கொஸ்ரா முதல்வராக கருதப்படுகிறார்.

1570களில் நற்செய்தித் தூதுரைப்பாளனாக யேசுசபையில் இணைந்த இவர், 1571இல் பேரு நாட்டுக்கு அனுப்பப்பட்டார். அங்கு (1576-81) ஆறாண்டுகள் யேசுசபையின் மாகாணத் தலைவராக சிறப்புப் பணியாற்றிய பின் 1582இல் லீமா நகரில் இடம்பெற்ற மூன்றாவது இறையியல் மாநாட்டுக்குச் சென்று ஆலோசகராகப் பணி புரிந்தார். பின் சுதேச இந்திய மக்கள் பேசிய மொழிகளில் உபயோகிக்க, மறைக்கல்வி நூல்கள் வகுப்புவாரியாக எழுதி உதவினார்.

1587இல் ஸ்பெயினுக்குச் சென்று "இந்திய சுதேசிகளின் இயற்கை வரலாறு" என்ற சிறந்த நூலொன்றை எழுதி வெளியிட்டார். இந்நூலுக்கு கிடைத்த அமோக வரவேற்பைத் தொடர்ந்து "இந்திய சுதேசிகளின் நீதி, அறநெறி வரலாறு" என்ற ஆய்வு நூலை பிரசுரித்தார். இந்நூல்களில் தென்னமரிக்க ஆதிச் சுதேசிகளின் வாழ்வு நெறி, நடையுடை பாவனை பற்றிய விரிவான, தெளிவான ஆய்வறிக்கையும், யேசுசபையின் நற்செய்தித்

தூதரைப்பாளர்களின்இன்னல் மிகுந்த பணியின் விரிவான விளக்கமும் தென்னமரிக்க நாடுகளின் அரசியல் பிரச்சினைகளும் நன்கு ஆராயப்பட்டிருந்தன. மேலும் மெக்சிக்கோ பெரு நாடுகளின் புவியியல் ஆய்வும் அங்கு தமது பதினாறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதான மதிப்பீடுகளும் அக்கொஸ்ராவின் இவ் வெளியீடுகளில் விபரமாக கணிப்பிடப்பட்டிருந்தன. எனவே தென்னமரிக்க நாடுகளின் அரசியல், வரலாறு, பண்பாடு, சுதேச நிலமை, கல்வி, விஞ்ஞான புவியியல் நிலைகளின் ஆதிகால மதிப்பீடாக இந்நூல்கள் இன்றும் போற்றப்படுகின்றன.

அக்கொஸ்ரா, யேசுசபைப் பெருந் தலைவர் குளோடியா அக்குவிவாவுக்கெதிராக ஐந்தாவது யேசுசபை மாநாட்டில் குற்றஞ் சாட்டிய குழுவுக்கு தலைமை தாங்கினார். இக் குற்றச் சாட்டுக்கள் நிராகரிக்கப்படினும் அவர் (1522) சிறைவைக்கப்பட்டார்.

தமது நியாயமான கொள்கைகளை விளக்கி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 1594இல் விடுவிக்கப்பட்டார். உடனடியாக வல்லாடொலிற் பகுதியின் யேசுசபை சிரேஷ்டராகவும் 1598இல் சலமன்கா யேசுசபைக் கல்லூரியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டு, இப் பதவிகளில் 1600 பெப்ருவரி 15இல் இறைவனடி சேரும்வரை அயராதுழைத்தார்.

தென்னமரிக்க நாடுகளிடையே ''நற்செய்தித் தூதுரைப்பின் பலாபலன்கள்'' என்ற இவரது (1588) நூலும் ஐரோப்பிய நாடுகளில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற விரிவான ஆய்வுநூலாகும்.[13]

யுவான் படில்லா

இன்றைய ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் பிரதேசத்தில் அன்று நற்செய்தித் தூதுரைப்பாளராகச் சென்று இரத்த சாட்சியான முதல் ஸ்பானியர் இவர்.

1500இல் பிறந்த யுவான் படில்லா முதலில் இராணுவ வீரனாக பணியாற்றிய பின் பிரான்சீஸ்கன் சபையின் அந்தலூசிய பிரதேசமடத்தில் துறவறம் பூண்டார். 1528இல் மெக்சிக்கோவின் ஸ்பானிய பகுதிக்குச் சென்ற தேச ஆராய்ச்சியாளருடன் பயணம் செய்து வடமெக்சிக்கோவில்

உள்ள நியூவா காலிசியா பகுதிக்குச் சென்று நற்செய்திப்பணியில் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டார்.

1533இல் தென் மெக்சிக்கோவில் உள்ள ரெகுன்ராபிக் பகுதிக்கு ஸ்பானிய ஆட்சியாளர் கேர்னன் கோர்டெஸ் என்பவருடன் சென்று அங்கு நற்செய்திப் பணியின் முன்னேற்றம் பற்றி ஒரு சிறிய ஆய்வை நடத்தி அறிக்கையும் சமர்ப்பித்தார்.

சபொட்லான், ராம்சுவா, ருவான்ரிசிங்கோ பகுதிகளில் பிரான்சிஸ்கன் துறவறசபைகளை நிறுவி, அவற்றின் மடாதிபதியாகவும் பணியாற்றினார்.

1540-41 களில் ஸ்பானிய ஆய்வாளர், அரசப் பிரதிநிதியான பிரான்சிஸ்கோ வாஸ்குவைஸ் கொரநாடோவுடன் இன்றைய கன்சாஸ் பிரதேசத்தின் அன்றை செல்வமிக்க பகுதியான குயிவிராவுக்கு சென்றார். ஆயின் தாம் செல்வந்தேடும் முயற்சியில் தோல்வி கண்ட கொரநாடோவும் அவரது குழுவும் மெக்சிக்கோவுக்குத் திரும்பினர்.

ஆனால் யுவான் படில்லா அங்கு நற்செய்தித்தூதுரைப்பின் அவசியத்தை உணர்ந்து சில துறவிகளுடன் குயிவிராவுக்குச் சென்றார். அங்கு விச்சிற்றா இந்தியர்கள் மத்தியில் நற்செய்திப் பணியில் பல மாதங்கள் உழைத்தார். ஒரு நாள் குவாஸ்ரிப் கிராமத்துக்கு சில துறவிகளுடன் சென்ற போது மறைந்திருந்த கொரில்லாக்களினால் தாக்கப்பட்டு இரத்த சாட்சியானார்.[14]

# நீக்கிரோ அடிமைகளும் பண்ணைகளும்



16ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஸ்பானிய அரசுக்கும் ஒரு அமெரிக்க அடிமை வர்த்தக நிறுவனத்துக்குமிடையே பெருமளவில் வியாபார ஒப்பந்தங்களும் விற்பனவுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன. இந்த நிறுவனம் 'அசென்ரிஸ்ரா' என அழைக்கப்பட்டது. இந்த நிறுவனம் நீக்ரோ அடிமை வர்த்தக உரிமைக்காக ஸ்பானிய அரசுக்கு ஆண்டு தோறும் பெருமளவு பணத்தை அளித்து வந்தது.

முதலில் 1517இல் ஜெனிவாக் கம்பனியொன்று வருடந்தோறும் 1000 ஆண், பெண் நீக்ரோக்களை அமெரிக்க அடிமைச் சந்தைகளில் விற்பனைக்கு விட, எட்டு வருட ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. 1528இல் ஒரு ஜேர்மனிய நிறுவனம் ஆண்டு தோறும் 4000 அடிமைகளை வழங்க ஏற்பாடுகளைச் செய்தது. இந்த நிறுவனம் 20,000டுக்காற் நாணயங்களை வருடமொன்றுக்கு அரசுக்கு வழங்கியது. ஒரு அடிமையின் ஆகக் குறைந்த மதிப்பு 45டுக்காற், அவனது அல்லது அவளது தோற்றம், தேக சுகம், உடல் வாளிப்பு என்பவற்றக்கேற்ப மதிப்பீடு உயரும்.

18ஆம் நூற்றாண்டில் இந்த இலாபகரமான தொழிலில் ஸ்பானிய போர்த்துக்கேய, பிரான்சிய, பிரித்தானிய தனிப்பட்ட வியாபாரிகளும் கலந்து கொண்டனர். லட்சக்கணக்கில் லாபம் சம்பாதித்த இத் தொழிலில் போட்டியும் பொறாமையும், பூசல்களும் உருவாகிப் பல பிரச்சினைகளைக் கிளப்பியதால் அரச தலையீடும் அதிகமாகியது.

இவற்றில் மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தம் 1713இல் உற்ரிச் என்னுமிடத்தில் தென் பிரித்தானிய கடற் கம்பனியுடன் செய்யப்பட்டதாகும். இதன்படி ஸ்பானியா, அமெரிக்க அரசுக்கு வருடமொன்றுக்கு 4800 அடிமைகள் வீதம் 30 வருடங்களுக்கு கொடுக்கப்பட வேண்டியதாகும். அடிமைகளை ஏற்றியிறக்க விசேடகப்பல் வசதி செய்யப்படும். இந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டாலும் சரி, நிறுத்தப்பட்டாலும் சரி முதல் 4000 அடிமைகளுக்காக 34,000 பவுண்கள் செலுத்தப்பட வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தால் சில பிரச்சினைகள் தலை தூக்கியதால் இது முற்றாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஒன்று பிரித்தானிய தலையீடு, மற்றது 1739இல் நடைபெற்ற ஜென்கின்ஸ் யுத்தம். எனினும் 2 வருடங்களின் பின் பிரித்தானியா ஸ்பெயினிடமிருந்து ஒரு லட்சம் பவுண்களைப் பெற்றுக் கொண்டு தனது உரிமைகளை விட்டுக் கொடுத்தது.[15] 1680க்கும் 1750க்குமிடைப்பட்ட காலத்தில் 'அசியென்ரா' திட்டத்தின் கீழ் 450,000 ஆபிரிக்கர்கள் அடிமைகளாக அனுப்பப் பட்டனர் எனத் தெரிய வருகிறது.



## புனிதர் பீற்றர் கிளாவர் நீக்ரோ அடிமைகளுக்கு வாழ்வளித்த வள்ளல்

புனிதர் பீற்றர் கிளாவர் ஸ்பெயின் பிரதேசத்தில் வேர்து நகரில் 1581இல் பிறந்தார். 1602இல் யேசுசபையில் சேர்ந்து கிறிஸ்துவின் மேய்ப்புப்பணியில் பயிற்சி பெற்றார். 1616இல் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். பின் காட்டகேனா பகுதியில் பணி வாழ்வைத் தொடங் கினார். இங்குதான் அமெரிக்காவின் மிகப்பெரிய நீக்ரோ அடிமைகள் விற் பனை நிலையம் உண்டு. இந்த நிலையத் தில் நடாத்தப்பட்ட கறுப்பர்கள் அடிமை களாக விற்கப்படும் பரிதாபக் காட்சி கிளாவர் அடிகளின் மனத்தை உலுப்பிவிட்டது.

அரசியல் லாபம் கருதியும், பேரும், புகழும் பெறவும் ஏழைகளுக்காகவும் அகதிகளுக்காகவும் குரல் எழுப்புவோர் பலர். ஆயினும் அவர்களது சமூக பொருளாதார, ஆன்மீக நலன்களுக்காக

திட்டமிட்டு செயலாற்றி அந்த இலட்சியத்திற்காக தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்பவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் புனிதர் கிளாவரும் ஒருவர்.

ஸ்பெயின் நாட்டின் அரசனாக இரண்டாவது பிலிப்பும் திருச்சபைத் தலைவராக ஐந்தாவது சிக்ஸ்துஸ் பாப்பரசரும் ஆட்சி செய்தபோது 1581இல் பீற்றர் கிளாவர் ஸ்பெயின் தேசத்தில் வேர்து நகரத்தில் பிறந்தார். அவரது அன்னையார் ஆன் இரு பழம்பெரும் விவிலிய பெண்களின் பெயரைத் தரித்தவள் (சாமுவேல் இறைவாக்கினரின் அன்னை, தேவதாயின் அன்னை) தன் பெயர்கொண்ட இவ்விரு புனிதவதிகளுக்கும் நிகராக தூய்மையும், நல்லொழுக்கமும், அற நெறியும் நிரம்பியவளாக, தனது புதல்வன் பீற்றர் கிளாவரையும் அவ்விதமே வளர்த்தாள். தன் புதல்வன் இறைவனின் குருவாகப் பணி செய்து வாழவேண்டுமென்பதே அவளது தணியாத அவா.

குருத்துவப் பயிற்சியை ரறகோனாவில் பெற்ற பின் பீற்றர் கிளாவர் அடிகள் கிரோான் பல்கலைக்கழகத்துக்கும் பின் பால்மா சர்வகலாசாலைக்கும் இறையியல், மெய்யியல் துறைகளில் பாண்டித்தியம் பெற அனுப்பப்பட்டார். அவரது நுண்ணறிவையும், கலை, கல்வியில் காட்டிய அயராத ஊக்கத்தையும் நன்கு பயன்படுத்தி அவரை ஒரு உயர் கல்விமானாக உயர்த்துவதே அவரது மேலதிகாரிகளின் எண்ணமாயிருந்தது. பீற்றர் கிளாவரோ பின்தங்கிய நீக்ரோக்கள் மத்தியில் பணியாற்றுவதற்கே விரும்பினார்.[16]

தென் அமெரிக்காவில் உள்ள காட்டகெனா பிரதேசம் 1533இல் பீட்ரோ தே கெரதியா அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இது கரிபியன் கடலுக்கு அண்மையில் தென் அமெரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ளது.

பீற்றர் கிளாவர் அடிகள் காட்டகேனா சென்றபோது முதலில் முழந்தாளிட்டு அந்தப் பிரதேச மண்ணை முத்தமிட்டார். அப்பிரதேசம் வெப்பமிகுந்தது. தூசியால் மூடப்பட்டிருந்தது. பற்றைக் காடாயிருந்தது. அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் வெளியிலிருந்தே இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்தது. காய்கறி வகைகள் காய்ந்து உலர்ந்த நிலையிலேயே வந்து சேரும். தொற்றுநோய்க் கிருமிகள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் எராளமாக இருந்தன. இவ்வித சூழலில் தமது இலட்சியமான அன்பியற் செயல்களுக்கு அதிக வாய்ப்புக்கள் இருந்தமை கண்டு கிளாவர் அடிகள் மகிழ்ச்சியடைந்தார்.

அடிமை வர்த்தகத்தின் கேந்திர நிலையமாக காட்டகேனா விளங்கியது. அடிமை வர்த்தகர்கள் கினியா அல்லது கொங்கோவில் ஒரு அடிமைக்கு 4 கிரவுன் வீதம் வாங்கி சங்கிலிகளால் அடிமைகளைப் பிணைத்து காட்டகேனாவுக்கு கொண்டு வந்து ஒரு அடிமையை 200 கிரவுன் வீதம் விற்பர், ஆயினும் இது ஒரு பெரிய இலாபம் அல்ல. கினியாவிலிருந்து காட்டகேனாவுக்கு அடிமைகளை கொண்டு வரும் வரை செலவுகள் பல. அடிமைகளுக்கு ஒரு நாளைக்கு உணவளிக்கவே பல கிரவுன்கள் தேவை. காலநிலை மாறுபடுவதாலும், நோய்கள் காரணமாகவும் ஒவ்வொரு முறையும் ஏறத்தாழ 33% அடிமைகள் இறந்துவிடுவர்.

ஒவ்வொரு வருடமும் பத்தாயிரத்துக்குமதிகமான அடிமைகள் காட்டகேனா சந்தையில் விலைப்படுவர். இவர்களுள் கினியாவிலிருந்து கொண்டுவரப்படும் நீக்ரோ அடிமைகளுக்கே மதிப்பு அதிகம். அவர்கள் அசாதாரண உடற்பலமும், ஓர்மமும், மனத் துணிவும் உடையவர்கள். மிகக் கஷ்டமான வேலையையும் சுலபமாக, திறமையாக, களைப்பின்றி செய்து முடிக்க வல்லவர்கள்.

இந்த அடிமைகள் கிறிஸ்துவையும் அவர் திரு வேதத்தையும் அறிய, அனுசரிக்க ஆசைப்படுபவர்கள். ஏனெனில் கிறிஸ்தவம் ஜனநாயக உரிமைகளை மதிக்கிறது. ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் உதவுவதைத் தன் முக்கிய கொள்கையாகக் கடைப்பிடிக்கிறது. கலை, கல்விப் பயிற்சிகளால் பாமர மக்களை ஓரளவு நாகரீக நிலைக்கு கொண்டு வர முயற்சிக்கிறது.

இவ்வித நிலையில் பீற்றர் கிளாவர் அடிகள் தமது பணியை நீக்கிரோ மக்கள் மத்தியில் பணி செய்து அனுபவமிக்க அல்பொன்சா தே சாந்தோவல் அடிகளின் வழிகாட்டுகையுடன் தொடங்கினார். சாமான் கப்பலொன்று ஆபிரிக்காவிலிருந்து துறைமுகத்துக்கு வருகிறது என்ற செய்தி கிடைத்தவுடன் கிளாவர் அடிகளார் அகமும் முகமும் மலருவார். இச் செய்தியை முதலில் கொண்டுவரும் அதிகாரிகளுக்கு அவர் 'லஞ்சம்' வழங்குவார். அதாவது அந்த அதிகாரியின் கருத்துகளுக்காக திருப்பலி நிறைவேற்றுவதே அவர் கொடுக்கும் லஞ்சமாகும். ஆன்ம வாஞ்சையும், இறைப் பற்றும், அன்பியற் செயல்களும் நிறைந்த இந்த நல்ல குருவின் திருப்பலிகளுக்கு நல்ல செல்வாக்கும் மதிப்பும், இறை மக்களிடமிருந்து கிடைத்தது. காட்டகேனாவின் ஆளுநரே இந்த நல்ல செய்தியை கிளாவர் அடிகளுக்கு அறிவிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார்.[17]

தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் ஒரு கோணிப் பையைத் தோளில்போட்டுக் கொண்டு நகர வீதிகளில் சீமான்களின் வீடுகளெங்கும் சென்று தமது அன்பியற் செயல்களுக்காக உதவி கோருவார். உணவுப் பொருட்கள், உபயோகித்த உடைகள், மற்றும் அகதிகளுக்கான அத்தியாவசிய தேவைகள், முதலுதவி மருந்துகள் அல்லது இவற்றைக் கொள்வனவு செய்யப் பண உதவி அனைத்தும் கிடைக்கும். அத்தோடு சேர்த்துக் கேலி, கிண்டற் பேச்சுகளும், ஏச்சுகளும், கிடைக்கும். அவற்றைப் புன்முறுவலோடும், நன்றி வார்த்தைகளுடனும் பெற்றுக் கொள்வார்.

கப்பல் வந்து தரித்ததும் அதிகாரிகளிடம் கெஞ்சி மன்றாடி அனுமதி பெற்று, நீக்கிரோ அடிமைகள் அடைக்கப்பட்டிருக்கும் அடித்தளங் களுக்குச் செல்வார். அங்கு கொண்டுவரப்படும் அடிமைகள் வளர்ச்சியடையாத ஆபிரிக்க மொழிகளைப் பேசினர். எனவே சில மொழி பெயர்ப்பாளர்களுக்கும் 'லஞ்சம்' கொடுத்து அவர்களைத் தம்முடன் கொண்டு செல்வார். முதலில் அவரது கவனம் கடும் நோயால் வருந்துவோர், மரணப் படுக்கையில் அல்லலுறுவோர் பக்கமே செல்லும்.

மரணப் படுக்கையென்பதை எமதுவாசகர்கள் நன்கு விளங்க வேண்டும். ஆடு, மாடுகளை அடைக்கும் பட்டி போன்ற இடமே அடிமைகள் அடைக்கப்பட்டிருக்கும் கப்பலின் அடித்தளமாகும். நோயாளிகளுக்கென்றோ, அல்லது கப்பல் பயணத்தில் மரித்தவர்களின் பிரேதங்களுக்கென்றோ வெவ்வேறு இடம் கிடையாது. குப்பை மேடுகளில் கிடக்கும் குப்பை, கூளங்களாகவே அடிமைகள் கணிக்கப்படுவர்.

முதலில் நோயாளிகளையும் பின்னர் பசி தாகமுற்றோர், ஆடையற் றோர், அரை நிர்வாணிகள் அனைவரையும் கவனித்து அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து பரிதாபத்துக்குரிய அந்த நிர்ப்பாக்கியர் களின் முக மலர்வு கண்டு மகிழ்ந்து அவர்களை ஆறுதல் வார்த்தைகளாற் தேற்றுவார். நற்செய்தியைப் போதிப்பதிலும் பார்க்கச் சிறந்தது நற்செய்தியை அனுசரிப்பது என கிளாவர் அடிகள் நற்செய்தி நூலின் வரிகளை வாழ்ந்து காட்டினார். [18]

கிளாவர் அடிகளின் அடுத்த அன்பியற் செயல் மருத்துவ மனைத் தரிசனை ஆகும். நோயாளரின் கட்டில் வரிசையின் நடுவே அவர் நடந்து செல்லும் போது ஆதரவற்றவர்களும், கைவிடப்பட்டவர்களுமான

நீக்ரோ நோயாளர்கள் நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் அவரை வரவேற்பர். தங்கள் உடல், உளக் குறைகளைச் சொல்லி முட்டுத் தீர்ப்பர். ஒவ்வொரு நோயாளியுடனும் சில நிமிடங்களாவது உரையாடி, ஆறுதலளித்து அத்தியாவசிய தேவைகளைக் கூடுமானவரை நிறைவேற்றுவார். புண்களைக் கழுவி மருந்திடுவார். மரணப் படுக்கையிலுள்ளோருக்கு இறுதி அருட்சாதனங்களை வழங்குவார். ஏனையவரிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டு, நற்கருணை அளிப்பார்.

அடுத்து ஏழைகளின் குடிசைகளை தரிசிப்பார். அவர்களது வாழ்வு வளம் பெற, வழி வகைகள் செய்வார். தமது உணவு, உடை சம்பந்தமாக மிக ஒறுப்பனவற்றைக் கையாள்வார். நித்திரை செய்வதும் மிகச் சொற்பமணித் தியாலங்களே. அன்பியற் செயல்கள் காரணமாக நித்திரையையே மறந்த இரவுகளும் அதிகம்.

கப்பல்களில் மட்டுமல்ல காட்டகேனாவில் நீக்கிரோ அடிமை முகாம்களையும் சிறைச்சாலைகளையும் தரிசித்து அடிமைகள் கைதிகளின் உடல், உள, ஆன்ம தேவைகளைப் பூர்த்தி செய்வார்.[19]

இந்த அன்பியற் செயல்கள் கிளாவர் அடிகளின் பங்கு மக்களது மேய்ப்புப்பணி அலுவல்களுக்கு எந்தவிதத்திலும் இடைமாறாகவோ, தடையாகவோ இருக்கவில்லை. ஒரு பங்குக் குரு தன் இறைமக்களுக்கு ஆற்றவேண்டிய அத்தனை அலுவல்களையும் நிறைவாகச் செய்து கொண்டே மேற்கூறிய கப்பல் தரிசனை, அடிமை முகாம் தரிசனை முதலிய அன்பியற் செயல்களையும் குறையறாது கவனித்தார்.

அவர் மக்களால் எவ்வளவாக நேசிக்கப்பட்டாரெனில் ஒப்புரவு அருட்சாதனமாம் பாவசங்கீர்த்தனத்தை உதவிக்கு குருக்கள் வந்தாலும் அவரிடமே பெற விரும்பினார். இவ் விடயத்திலும் அவர் நீக்ரோ மக்களுக்கே முன்னுரிமை வழங்கினார். நீக்ரோ மக்களின் பாவசங்கீர்த்தனத் தட்டிகளுக்கு அருகிற் கூட ஸ்பானிய சீமான்களும் சீமாட்டிகளும் போக மாட்டார்கள். ஆயினும் கிளாவர் அடிகளார் அத்தட்டிகளிலேயே அமர்ந்து பாவசங்கீர்த்தனம் கேட்பார்.[20]

இது பற்றி ஸ்பானிய சீமான்கள் வட்டத்திலிருந்து பிரச்சனைகள் எழுந்தன. "நான் ஸ்பானிய சீமான்களின் பாவ அறிக்கையைக் கேட்க அருகதை அற்றவன். அவர்கள் சீமான், சீமாட்டிக்கான தட்டிகட்கே போய்ப் பாவ அறிக்கையிடுட்டும்" எனக் கிளாவர் அடிகள் உறுதியாக கூறிவிடுவார். எனினும் தங்கள் அருவருப்புக்களை ஒதுக்கிவிட்டு பல சீமாட்டிகள் கிளாவர் அடிகளிடம் பாவசங்கீர்த்தனம் பெறுவதற்காக

நீக்ரோ மக்களுக்கான பாவ சங்கீர்த்தனத் தட்டிகட்க்குப் போகத் தொடங்கினர். அங்கும் நீக்ரோக்களுக்கே அவர் முன்னுரிமை வழங்கினார்.

இறைவனின் பார்வையில் வெள்ளையனும் நீக்ரோவும் சமமே ஆயினும் கிளாவர் அடிகளின் பார்வையில் எந்த விடயத்திலும் நீக்ரோவுக்கே முதலிடம்.

அவரது அறையில் வரையப்பட்டிருந்த ஒரு ஓவியம் அவரது இலட்சியத்தை, தணியாத தாகத்தை விளக்குகிறது. ஒரு சிலுவை; அதில் தொங்கும் யேசுவின் திருக்காயங்களிலிருந்து வடியும் திரு இரத்தம் ஒரு பாத்திரத்தில் விழுகிறது; ஒரு குரு அத் திரு இரத்தத்தால் விசுவாசியான ஒரு நீக்கிரோவுக்கு ஞானஸ்தானம் வழங்குகிறார்.

தமது நாளாந்த அன்பியற் பணிகளை ஆரம்பிக்கு முன் கிளாவர் அடிகள் நற்கருணை நாதரின் முன் முழந்தாளிட்டு செபிப்பார். இதுவே அவரது அன்றைய பணிகள் அத்தனைக்கும் உந்து சக்தியாயும், ஊக்கியாகவுமிருந்தது.

ஒவ்வொருஉயிர்ப்பு ஞாயிறுக்கும் பின் அவர் காட்டகேனா விலிருந்து மிகத்தூரமான கிராமப்புறங்களுக்கு சென்று சில வாரங்கள் தங்கி இயேசுவின் நற்செய்தித் தூதுரைப்பார்.[21]

அன்புள்ளங் கொண்ட அடிகளுக்கு நீக்ரோ கறுப்பர்கள் மது அருந்தி ஆடும் அரை நிர்வாண ஆபாச நடனங்கள் அடியோடு பிடியாது. ஒரு கையில் சிலுவையும் மறு கையில் சவுக்குமாக கோபா வேசத்துடன் ஆபாச நடனங்கள் மத்தியில் குதிப்பார். சூரியனைக் கண்ட பனி போல பார்வையாளரும், ஆபாச நடனகாரரும் பயந்து தறி கெட்டு நாலா பக்கமும் ஓடித் தப்ப முயற்சிப்பர். தரித்து நின்றால் சவுக்கு அடிகளின் தங்கள் முதுகைப் பதம் பார்க்கும் என்பதை அவர்கள் நன்கறிவர். குடித்து, வெறித்துக், கூத்தாடுபவர்களுக்கு அவர் வழங்கும் தண்டனை நிலத்தில் குப்புற மண்டியிட்டு தரையை நாக்கால் பல தடவை நக்குதல் ஆகும்.

கிளாவர் அடிகளுக்குக், கப்பலில் வரும் அடிமைகளுக்கு அன்பியச் செயல்களில் ஈடுபட முடியாத நாட்களும் உண்டு. சிலவேளை, கப்பல்கள் வருவது ஒழுங்காக நடைபெறாது. அத்தருணங்களில் மருத்துவமனை, மறியற் கூடத்தரிசனைகளையும், சமூகப், பொருளாதார நலப் பணிகளிலும் ஈடுபடுவார்.

அப்பணிகளுடன் யேசு சபைக் கல்லூரியின் ஆன்மீகப் பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டார். "அடிமைகளின் அடிமையாகப் பணிபுரிய வந்த எனக்கு என் சகோதர உயர் கல்வி மாணவரிடம் என்ன வேலை?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். இருப்பினும் கீழ்ப்படிவு காரணமாக தனக்களிக்கப்பட்ட இவ்வுயரிய பணியை அதிகாரம் காட்டாது அமைதியாக, ஆத்திரத்துடன் ஊழியர்களை கண்டிக்காது அன்போடும், பண்போடும் அவர்களை நடத்தி வந்தார்.[22]

தம் கீழ் பயிற்சி பெற்ற குரு குல மாணவருக்கு அவர் நல்லதொரு தந்தையாக விளங்கினார். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு கிறிஸ்துவாக மாறி மேய்ப்புப் பணியைத் திறம்பட நடத்தவல்ல பயிற்சிகளை இலகுவாக ஆனால் விடாப்பிடியாக அவர்களுக்கு ஊட்டினார்.

போரினால் காயமடைந்த அல்லது ஊனமுற்ற ஆங்கில, டச்சுக் கைதிகள் மட்டிலும் அவரது அன்பியற் பணிகள் விரைந்தன. அவரது பணிகளால் கிறிஸ்துவையே அவரில் கண்ட இக் கைதிகள் கிறிஸ்துவத்தில் இணைந்ததில் ஆச்சரியமேதுமில்லை.

ஒரு முறை ஆங்கில போர்க்கைதிகள் அறுநூறு பேர் மத்தியில் பணிபுரிய அழைக்கப்பட்டார். அங்கு பெரிய விருந்தும், களியாட்டங்களும் இடம்பெற்றன. ஆங்கிலத் திருச்சபையின் பிரதம தியாக்கோன் ஒருவரும் அங்கு வந்திருந்தார். மது அருந்துதல், களியாட்ட விருந்துகளில் கலந்துகொள்ளுதல் என்பன தமக்கு விருப்பமில்லா விடினும் ஆங்கிலேயர் பலரை மனந்திருப்பும் எண்ணத்தோடு கிளாவர் அடிகளும் அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

ஆங்கில பிரதம தியாக்கோனிடமும், பிரதம இராணுவ தளபதிகளிடமும், மதுவை அருந்திக்கொண்டே வெகு சாதுரியமாக உரையாட ஆரம்பித்த கிளாவர் அடிகள், எட்டாவது கென்றி அரசன் கத்தோலிக்கத்தைத் தன் சொந்த இச்சைகளுக்காக மறுதலித்ததையும், ஆங்கில திருச்சபையை நிறுவிய பின் செய்த அருவருக்கத்தக்க செயல்களையும் நன்கு உணர வைத்தார். விருந்து முடிந்தபின் வீடு திரும்பும் போது ஆங்கில திருச்சபையின் பிரதம தியாக்கோன் அடிகளிடம் வந்து, "எனது மனைவி மக்களைத் தாபரிக்க வேறு வழியில்லாததாலும், மதம் மாறினால் ஆங்கில அரசால் மரண தண்டனை

அளிக்கப்படும் என்ற அச்சத்தாலும் தொடர்ந்து இச் சபையில் உயர் பதவி வகிக்கிறேன்; எனினும் நான் இறக்கு முன் கத்தோலிக்கத்தில் இணைவேன் என்பது உறுதி; எனக்காக செபியுங்கள்" என உருக்கமாகக் கூறினார்.

வாரங்கள் பல கழிந்தன. ஒரு நாள் சான்செபஸ்தியன் மருத்து வமனைக்குச் சென்ற கிளாவர் அடிகளார் அங்கு ஒரு கட்டிலில் உயிருடன் போராடிக்கொண்டிருந்த இந்த மனிதரைக் கண்டார். ஆங்கில திருச்சபையின் பிரதம தியாக்கோன் கிளாவர் அடிகளால் திருமுழுக்குப் பெற்றுக் கத்தோலிக்கனாக கண்களை மூடினார். ஏராளமான ஆங்கில போர்க் கைதிகள் இவரைப் பின்பற்றி கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து கிளாவர் அடிகளின் கரங்களால் திருமுழுக்குப் பெற்று மகிழ்ந்தனர்.

கிளாவர் அடிகளின் மருத்துவமனைப் பணிகள்: சான் செபஸ்தியன் பொது மருத்துவமனை, புனித லாசரஸ் குஸ்டரோக மனை ஆகிய இரு இடங்களிலும் நடைபெற்றன. அவரது சேவை நோயாளர்களால் எவ்வளவுக்கு விரும்பப்பட்டதெனில் சில வாரங்கள் வேறொரு பணிக்கு திருச்சபை மேலதிகாரிகளால் அவர் அனுப்பப்பட்டு மீண்டும் இம் மருத்துவமனைகளுக்கு அவர் திரும்பி வந்தபோது நோயாளர்கள் மகிழ்ச்சியின் எல்லையில் மாபெரும் வரவேற்பை அளித்தனராம்.

மருத்துவ மனைப் பணிகளுள் மிக மிக கஷ்டமானது குஸ்ட ரோகர்களுக்கு அவர் அளிக்கும் ஆறுதலும், சேவையும், அன்பான உபசரிப்பும் ஆகும். ஒரு முறை ஒரு ஸ்பானிய உயரதிகாரியிடம் உரையாடிவிட்டு அடிகளார் புறப்பட, எங்கே போகிறீர்கள்? என அன்போடு அவ்வதிகாரி கேட்டாராம் "புனித லாசறஸ் இல்லத்தில் உள்ள என் ஏழைச் சகோதரருடன் உரையாடி, உறவாடி வரப்போகிறேன்" என கிளாவர் அடிகள் அளித்த பதிலிலிருந்து அருவருக்கத்தக்க அந்த நோயாளர் மட்டில் அவர் கொண்டிருந்த பாசமும் நேசமும் பளிச்சிடுகிறதல்லவா?

"குஸ்டரோகிகள் கிளாவர் அடிகளின் காதலர்கள்" என அவரை நன்கறிந்த ஒரு கத்தோலிக்க சீமாட்டி அடிக்கடி கூறுவாள். அவர் லாசறஸ் மருத்துவ மனைக்குச் செல்லும் போதெல்லாம் தம்மால் சுமக்க முடிந்த அளவுக்கு சாக்குப் பைகளில் லினன்துணி, பஞ்சு, ஓடிக்கொலோன் போன்ற அவசிய முதலுதவி மருந்துகள், அவசிய சிகிச்சைச் சாதனங்கள், முதலியவற்றைத் தம் தோள்கள், கைகள், முதுகில் சுமக்க முடியாத அளவு கொண்டு செல்வார். வசதிகிடைக்கும் போது பாடகர்கள், நடிகர்களது ஆடல், பாடல், நடிப்புக்களால் குஸ்டரோகிகளை மகிழ்விப்பார். [23]

கிளாவர் அடிகளின் மனதைக் கவர்ந்த அடுத்த பெரும் பணி சிறைச்சாலைத் தரிசனையாகும். அதிலும் மரணதண்டனை பெற்ற மறியற்காரரை அடிக்கடி தரிசித்து அவர்களது உடலும் உள்ளமும் ஆண்டவர் யேசுவில் சென்று நிறைவடைய அவர்கள் மரண தண்டனையை மன நிறைவோடு ஏற்றுக்கொள்ள நல்லாயத்தம் செய்வார்.

தண்டனையை நிறைவேற்றும் அதிகாரிகளை கைக்குள் போட்டு அனுமதி பெற்று குற்றவாளியுடன் செபித்துக் கொண்டே தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்வார். குற்றவாளியின் கழுத்தில் தூக்குக் கயிறு போடப்பட்டதும் பிரியாவிடை கூறி, ஆதரவாக செபித்து, அவர்கள் மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளச் செய்வார்.

ஒரு முறை மரண தண்டனைக்காகக் குற்றவாளியை தூக்கு மேடைக்குக் கொண்டு சென்ற பின் அவனது கூடத்தில் காணப்பட்ட செபப் புத்தகத்தில் காணப்பட்ட அவனது இறுதி வார்த்தை: இவ்வுலகின் மிக மகிழ்ச்சிகரமான மனிதனின் வார்த்தை இது.

<u>ஆபாச ஆடையணிகள்</u>

பரிசுத்த வாரச் சடங்குகளின் மிக முக்கியமான நாளான பெரிய வெள்ளிக் கிழமையன்று, சடங்குகளின் போது பீடத்திலிருந்து விசுவாசிகளை அவதானித்த கிளாவர் அடிகளின் கண்ணிற் பட்ட ஒரு காட்சி அவரைச் சினங் கொள்ள வைத்தது. நடுத்தர வயதான ஒரு பெண்மணி மிக ஆபாசமான முறையில் மட்டுமல்ல தன் வயதுக் கேற்றதல்லாததுமான ஆடை அணிகளுடன் வந்திருந்தாள். அடிகளார் பீடத்திலிருந்து இறங்கிச் சென்று இளம் பெண்கள் அணிய வேண்டிய உடையை அவள் அணிந்திருப்பதையும் பெரிய வெள்ளியன்று நவ நாகரீக அலங்காரத்துடன் வந்திருப்பதையும் பகிரங்கமாகக் கண்டித்தார். அப் பெண்மணி பெரிய இடத்துப் பெண்ணானதால் ஆலயத்துள் சலசலப்பும் பரபரப்பும் உண்டாகியது. அங்கிருந்த யேசு சபை கல்லூரி அதிபர் சுவாமி, பகிரங்கமாக சீமாட்டியிடம் மன்னிப்புக் கோரி கிளாவர் அடிகளையும் கடிந்து கொண்டார். கிளாவர் அடிகளோ தமது கட்சியை எடுத்து வாதாடாமல் தம்மால் இடம்பெற்ற பிரச்சனைக்காக சீமாட்டியிடம் மன்னிப்புக் கோரியதுடன் அதிபர் சுவாமியின் முன் முழந்தாளிட்டு அவரது பாதங்களை முத்தமிட்டுத், தம்மைத் தண்டிக்குமாறு கோரினார். அங்கிருந்த அனைவரும் அடிகளின் பெருந்தன்மையை வியந்தனர். சீமாட்டியோ தனது குற்றத்தை உணர்ந்தவளாகத் தனது ஆடையணிகளைக் கிறிஸ்தவ மதிப்பீட்டுக் கிணங்க சீரமைக்க அன்றே உறுதி கொண்டாள்.[24]

## கிளாவரின் கைவண்ணம்

ஓர் அடிமை நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் கிடந்தான். நல்லெண்ணம் கொண்ட இன்னொரு அடிமை, கிளாவர் அடிகளிடம் ஓடினான். அடிகள் விரைந்து சென்றார். இறந்து கொண்டிருப்பவன் மூச்சுப் பேச்சின்றி மயக்க நிலையில் கிடந்தான். அவன் பக்கத்தில் முழந்தாளிட்டு குனிந்து 'நீ திருமுழுக்குப்பெற விரும்புகின்றாயா?' என்று வினாவினார். ''முழுமனதுடன் விரும்புகின்றேன்'' என அடிமை யிடமிருந்து பதில் வந்தது.

தண்ணீர் கொண்டு வரச்சொல்லி அவனை ஞானமுழுக்காட்டினார் அடிகளார். திடீரென பூரண சுகத்தோடு எழுந்தான் அடிமை. ஆன்ம குணத்துடன் உடற் சுகமும் பெற்ற அவ்வடிமை ஆண்டவருக்கு நன்றி கூறினான்.

அடிமைக்கு ஞான முழுக்காட்டிய பின் சாடியில் எஞ்சியிருந்த நீரை ஒரு பட்ட செடியின் மேற் கொட்டினார். என்ன அதிசயம்? அதுவும் தழைத்து செழித்து வளர்ந்து.

அடிகளாரால் ஆன்மீக வாழ்வு பெற்றுப் புதிய வானமும், புதிய வையகமும் கண்டோர் காட்டகேனாவில் ஏராளம், ஏராளம்!!

## "மோட்ச பாதையை நோக்கி..."

இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட நாளிலிருந்தே தவத்தின் அடையாளமாகக் கழுத்திலிருந்து கால்வரை நீண்ட மயிரங்கி ஒன்றைத் தரித்திருந்தார். அவரது நண்பர் ஒருவர் அவர் அறிவு மயங்கி விழுந்த வேளை அவருக்கு முதலுதவி அளித்த பின், "சுவாமி இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த ஏழைக் கழுதை இவ்வித பரித்தியாகங்களை சுமந்துகொண்டிருக்கும்" என வினவ, "இறக்கும்வரை" என கிளாவர் அடிகளிடமிருந்து பதில் கிடைத்தது.

1650 ஓய்வொழிச்சலின்றி அன்பியற் செயல்களில் ஈடுபட்டிருந்த அடிகள் ஓய்வெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 'பிளேக்' என்ற கொள்ளை நோய் வேகமாகப் பரவியது. நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அயராது பணியாற்றி விட்டு காட்டகேனாவுக்குத் திரும்பிய அடிகளுடன் கொள்ளை நோயும் கூடவே வந்தது.

அடிகளுடன் இப்பணியில் ஈடுபட்ட இளங் குருக்கள் பலரும் அநியாயமாக, சடுதியாக மரணமாயினர். ஆயினும் தன்னால் நேசிக்கப்

பட்ட இவ்வரிய பணியாளன் கொள்ளை நோயின் கொடுமைகளால் சில காலம் வாட்டிப், புடமிடுவது இறைவனின் சித்தம் போலும்.

தினசரி திருப்பலி ஒப்புக்கொடுக்கவோ, நீண்ட நேரம் பாவசங்கீர்த்தனம் கேட்கவோ அவரால் இயலாது போயிற்று. அடிகளின் பக்கத்தில் நின்று இரவு பகலாக அவரது தேவைகளைக் கவனிக்க, அவரை நல்லமுறையிற் பராமரிக்க ஒரு உதவியாளனை யேசு சபை நிர்வாகம் நியமித்தது. ஜேக்கப் என்ற இப் பராமரிப்பாளன் ஒரு தந்திரவாதி; கிளாவர் அடிகளை நன்கறிந்து விட்டான். அவர் தன்னைப் பற்றி மேலதிகாரிகளிடம் முறையிட மாட்டார். தன்னிடமும் அதிகமாய் வேலை வாங்கமாட்டார் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு அவரை மிகக் கேவலமாக நடத்தினான். கொடுமைகள் பல செய்தான். பல தடவைகள் அவருக்கென அனுப்பப்பட்ட விசேட, சுவையுள்ள உணவுகளைத் தானே விழுங்கிவிட்டு அவரைப் பட்டினி போட்டான். இவ்விதம் பல்வேறு அருவருக்கத்தக்க செயல்களால் அந்தப் புனிதரின் உடலையும், உள்ளத்தையும் வாட்டி வதைத்தான்.

கொள்ளை நோயின் கொடுமைகளால் வாட்டி வதைக்கப்பட்டோருக்கு அவரளித்த அன்புப் பணிகளை அவருக்களிக்க இப்போ யாருமில்லை. நான்கு வருடக் கொள்ளை நோயின் குரூரங்கள் அத்தனையையும் அவர் பொறுமையோடு சகித்துக்கொண்டமை பின்னர் மனம் மாறிய ஜேக்கப் மூலமே உலகறிந்தது.

***1654*** கிளாவருக்கு வயது ***73.*** அவர் செய்து வந்த பொறுப்புக் களையும், காட்டகேனா பங்கைக் கையேற்கவும் தியாகோ தே பரினா என்ற குரு வந்து சேர்ந்தார். தம்மால் முடிந்த வரை ஊர்ந்தும், அரைந்தும், தவழ்ந்தும் தியாகோ அடிகளின் அறைக்குச் சென்ற கிளாவர் அவரது பாதங்களை முத்தமிட்டுத் தன் பணி தொடர்ந்து நடைபெறுவதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார்.

கிளாவர் மரணப்படுக்கையில் இருக்கும் செய்தி காட்டுத் தீ போற் பரவியது. யேசு சபைக் கல்லூரியின் வாயிலில் காட்டகேனா மக்களின் கூட்டம் அலை மோதியது. அடிகளை இறுதி முறையாகத் தரிசிக்க, ஆசிபெற, அவரது ஒரு சில வார்த்தைகளையாவது கேட்க, வாழ்ந்து கொண்டிருந்த இப் புனிதரின் கைகளையோ, பாதங்களையோ முத்தமிட அம்மக்கள் விரும்பினர். காட்டகேனா நகரின் சுற்றுப்புறக் கிராமங் களிலுள்ளோருக்கும் இச்செய்தி பரவ அவர்களும் விரைந்து வந்தனர்.

அடிகளைத் தரிசிக்க வந்த மக்கள் அவரது நினைவாக வைத்திருப்பதற்காக அங்கிருந்த அப் புனிதர் கையாண்ட பொருட்களை தம்மிஷ்டம் போல் தூக்கிச் சென்றனர்.

1654 செப்ரம்பர் 8 அன்னை மரியாளின் பிறந்தநாள். அன்றுதான். அடிகளார் விண்ணகம் செல்ல உகந்த நாள் என்பது இந்த மரி பக்தனின் நீண்ட நாள் விருப்பம்.

அதிகாலை ஒரு மணிக்குச் சற்றுப் பின்னர் அன்னை மரியாளின் அரவணைப்பில் அடிமைகளை அன்பு செய்த, யேசுவின் அடிமை பீற்றர் கிளாவர் இறை பதமெய்தினார்.

1888இல் 13ஆம் சிங்கராய பாப்பரசர் இவரைப் புனிதராக அர்ச்சியசிஷ்டவர் வரிசையில் பிரகடனப்படுத்தியதுடன் நீக்ரோக்களின் அப்போஸ்தலர் எனவும் புகழ்ந்துரைத்தார்.[25]

## முடிவுரை

ஆன்மீகப் பணியாற்றிய புனிதர் பீற்றர் கிளாவரின் வரலாற்றுப் பின்னணி பல புரட்சிகள் நிறைந்தவை. இவ்வடிமைகள், பல நூறு தடவைகள் தமது வெள்ளைநிற எசமானர்களுக்கு எதிராக, அவர்கள் இழைத்த அநீதிகளுக்கு எதிராகக் கொதித்தெழுந்து புரட்சி செய்தனர். இவற்றுள் சிமோரோனஸ் புரட்சி குறிப்பிடத்தக்கது. தப்பியோடிய கறுப்பர்களே சிமோரோனஸ் என அழைக்கப்பட்டனர்.

நீக்குரோ அடிமைகளின் குடியரசாகிய பல்மாரஸ் குடியரசு (பிரேசில்) 1630 முதல் 1695 வரை நிலைத்திருந்தது. இவ்வகையான கறுப்பர் புரட்சிகள் பிரேசில் நாட்டில் 1888இல் அடிமைச் சட்டம் ஒழிக்கப்படும் வரை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி தென்னமெரிக்கத் தங்கம், வெள்ளிச் சூறையாடலிலும், இதைச் செயற்படுத்த அவர்கள் பாவித்த அடிமை அமைப்பின் ஊடாகவும் தான் முடிந்தது. வட அமெரிக்க பருத்தி, பஞ்சு பற்றி சொல்லப்படுவது போன்று, தென்னமெரிக்கத் தங்கம், வெள்ளி, கொக்கோ, சீனி பற்றியும் சொல்லப்படலாம்.

அடிமை முறை இன்றி பருத்தி உற்பத்தியோ அன்றேல் நவீன பருத்தித் தொழிற்சாலைகளோ இருந்திரா. எனவே அடிமை அமைப்பு நிலவிய காலணிகளே, உலக வியாபாரத்தை உருவாக்கின. இதுவே பாரிய எந்திர தொழில் நுட்ப அமைப்பை உருவாக்க உதவிற்று. (கார்ல்மாக்ஸ் 28-12-1846இல் போல் வசிலேவிச் அனன்கோவுக்கு எழுதிய மடல்)[26]

இவ்வரலாற்றின் 300 ஆண்டுகளின் இருண்ட வானில் தோன்றிய பிரகாசமான நட்சத்திரங்கள் - தேவ தாயின் காட்சிகளும், புனிதர்களின் பிரசன்னமும், பல பக்திமான்கள், புத்திஜீவிகள், நீதியின்மேல் பசிதாகமுள்ளோரின் மனித உரிமைகளுக்கான செயற்பாடுகளுமாகும்.

இத் தனியார் குழு அணுகு முறைகளில் முக்கியமானதொன்றைச் சொல்லியே ஆகவேண்டும். அது அமரிந்தியர்களைப் பாதுகாக்கப் பல துறவற சபையினரும் மேற்கொண்ட சுதேசிகளின் ஆன்ம, சரீர பாதுகாப்பு வலயங்களான (Reducionis) என்ற விவசாயப் பண்ணைகளாகும்.[26]

## விவசாயப் பண்ணைகள்:

தென்னமெரிக்கத் திருச்சபையின் தூதுரைப்புக் குழுக்கள் ரெடுசியோன்ஸ் (Reduccionis) என ஸ்பானிய மொழியிலும், 'ரெடுகோஸ்' என போர்த்துக்கேய மொழியிலும் அழைக்கப்பட்டன. இவை தன்னிறைவு கொண்ட தன்னாதிக்க நிர்வாகத்திலியங்கிய மதக் குழுக்கள் ஆகும். இவை திருச்சபைக்கும், கிறிஸ்தவ இராச்சிய காலனிகளுக்கும் இடையிலேற்பட்ட முரண்பாடுகளை ஒப்புரவாக்கும் இலட்சியத்தோடு இயங்கின. திருச்சபைக்கும் லத்தீன் அமெரிக்க சமூகத்துக்குமிடையே எழுந்த கருத்து வேறுபாடுகளையும் சீர்படுத்தின.

இவ் விவசாயப் பண்ணைகள் பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளிலேயே பராகுவே, பிறேசில், பெரு, பொலிவியா, எக்குவடோர், கொலம்பியா, வெனிசுவலா, மெக்சிக்கோ, வட கலிபோர்னியா என வழங்கும் இன்றைய பிரதேசங்களில் பரவிப் பலுகியிருந்தன. இப் பண்ணைகள் பிரான்சீஸ்கன், டோமினிக்கன், யேசு சபைத் துறவிகளின் சிறப்புடைய நிர்வாகத்தின் கீழ் இயங்கின. இத்தூதுரைக் குழுக்களின் கீழ் அமரிந்தியர்களின் பாதுகாப்பு உறுதியானதும், உண்மையானதுமாக விளங்கியது. தூதுரைப்பாளர் களுக்கும் (Missionaries) குடியேற்றவாசிகளுக் குமிடையே சில சமயங்களில் உண்டாகும் கருத்து வேற்றுமை துர்ப்பாக்கிய முடிவுகளையே கொண்டுவரும்.

பதினெட்டாம் நூற்றாண்டுகளின் நடுப்பகுதியில் யேசுசபையினரின் விவசாயப் பண்ணைகளில் மட்டும் எண்பதாயிரம் குரானிய சுதேசிகள் இருந்தார்களென கணக்கறிக்கைகள் கூறுகின்றன. இவை காலனித்துவ சுரண்டல்களுக்கு மிகமிக உதவியைத் தந்தன. விவசாயப் பண்ணை முறைகளுக்கும் என்கொழிந்து பரிபாலனத்துக்குமிடையே பலத்த வேறுபாடுகள் காணப்பட்டன.

விவசாயப் பண்ணையிலமைந்த அமரிந்தியர்கள் கிறிஸ்தவ கோட்பாடுகளைப் படித்தறிந்ததுடன் மட்டுமல்ல, பொருளாதார வாழ்வு, சிக்கனம் பேணுதல், அரசியலில் ஆழமான அறிவு, சமூக, நல ஈடுபாடு என்பவற்றிலும், போர் முறைகளிலும் நிரம்பிய அறிவாற்றலைக் கொண்டிருந்தனர். [27]

திருச்சபையின் சொத்துரிமை:

லத்தீன் அமெரிக்க சமூக வடிவமைப்பு முறைகளில் முதலாளித்துவ வர்த்தக நோக்கு தாண்டவமாடியதுடன் திருச்சபைச் சொத்துக்களின் உரிமைகளும் சிற்சில சமயங்களில் உதாசீனப்படுத்தப்பட்டன. இவ்வுரிமைச் சொத்துகள் கூட்டமைப்பு முறைக்கு உட்பட்டவையாக அல்லாமல் முதலாளித்துவ உரிமை பேணுபவையாகவும், அதே சமயம் தேசிய முன்னேற்றத்தைக் கொண்டு வருவதாகவும் அமைந்தது. சுதந்திர தன்னாதிக்க ஆட்சியமைப்புக்கான தோற்றுவாயையும் இது கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

சமூக ஆட்சியமைப்பில் தேசிய வடிவத்தில் தாராள மனப்பான்மையை இது கொண்டிராவிடினும் ஓரளவுக்கு அந் நிலைமைக்கு இட்டுச் செல்லும் வழியாக இது விளங்கியது.

யேசு சபையினர் வெளியேறுதல்:

லத்தீன் அமெரிக்க திருச்சபையின் காலனித்துவ கால வரலாற்றில் யேசு சபையாரின் வெளியேறுகை (1767) ஒரு முக்கியமான நிகழ்வு ஆகும். மேலே, நாம் விபரித்த பிரச்சனைகளுடன் இது நெருங்கிய தொடர்புடையது ஏறத்தாழ 2200 யேசு சபைத் துறவிகள் லத்தீன் அமெரிக்காவிலிருந்து வெளியேறினர். இது மத சம்பந்தமாகவும், அரசியல் நோக்கிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பதினெட்டாவது

நூற்றாண்டுகளில் அங்கு யேசு சபையின் அலுவலை(நற்செய்தித் தூதுரைப்பை) அளவிடும் அளவுகோலாகவும் அமைந்தது.

யேசு சபையினரின் வெளியேறுகை, ஐரோப்பாவிலுருவான நவீன எண்ணங்களின் பிரதிபலிப்பு அல்ல. ஆயினும் அக்காலத்தய ஐரோப்பிய காலனித்துவ பிற்போக்குகளை ஒதுக்க முனைந்த முன்னேற்ற நிகழ்வின் வெற்றியாகும். பொருளாதார, நற்செய்தித் தூதுரைப்பின் நோக்குகள் தேசிய பொதுமய மட்டத்தில் சில நலன்களை உருவாக்கக்கூடியதாய் அமைந்தன. எனினும் இவ் வெளியேற்றம் குழுக்களுக்கும், ஆளும் வர்க்கத்தினருக்கும் அருமருந்தாகவும், பெருமருந்தாகவும் அமைந்தது.[28]

## காலனித்துவம்

ஐரோப்பிய நாட்டினர் தங்களின் வர்த்தக நலனுக்காக நாடுகளைக் கைப்பற்றினர். இக்காலனித்துவ நலன்களோடு கிறிஸ்தவ மறைபரப்பும் பின்னிப் பிணைந்து காணப்பட்டது. ஆரம்பத்தில் கத்தோலிக்க திருச்சபை தன் மறைபரப்புப் பணிகளை "பட்றுவாடோ" ஒப்பந்தத்தின் படி ஸ்பானிய, போர்த்துக்கீச ஆட்சியின் விரிவாக்கத்தோடு தொடர்புபட்டு இருந்ததையும், அதனால் நற்செய்தியின் தனித்துவமும், பணித்தன்மையும் பாதிக்கப்பட்டதையும் இங்கு குறிப்பிடவேண்டும். "புறப்பக்கண்டா" என்ற சுயமான முறைக்கு மாறியபோது ஏற்பட்ட எதிர் மறை விளைவுகளையும் வரலாற்றுத் தாக்கத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். அரசியல் மாற்றங்கள் உருவானபோது நற்செய்திப் பணி பாதிக்கப்பட்டதையும் சுட்டிக் காட்ட வேண்டும். சிலுவையும் அரச முடியும் தங்கள் நலனுக்காக ஒன்று சேர்ந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர்.

## நாடு பிடிப்பு

நாடுகளைப் பிடிக்கின்ற அவாவினாலும், வர்த்தகப் போட்டியினாலும், அழிக்கப்பட்ட மக்களின் தொகைகளும், நாகரிகங்களும், இனக் குழுக்களும் அநேகம். அமெரிக்க நாடு பிடிப்பில் கொல்லப்பட்ட அமரிந்திய இனக்குழுக்கள் எத்தனை? எத்தனை? மெக்சிக்கோவில் அழிக்கப்பட்ட, உச்சக் கட்டத்திலிருந்த அம் மக்களின் நாகரிகம் மறக்கடிக்கப்படக் கூடியது அல்ல. அவுஸ்திரேலியாவில் தங்கள் மண்ணையும், இடங்களையும் இழந்த பழங்குடிமக்களின் வரலாறு சோகமானது.

## ஐபீரியா

ஐபீரிய பிரதேசம் எனக் குறிப்பிடப்படுகின்ற போர்த்துக்கல், ஸ்பானிய நாடுகளிலிருந்து வந்த பல தூதுரைப் பணியாளர்கள், அந்த அரசின் சிந்தனையையே பிரதிபலித்தனர். அதனால் அங்கு காணப்பட்ட பழங்குடியினர்கள் முன்னேற்றம் அடையாதவர்கள், சிலை வழிபாட்டுக்காரர்கள், காட்டுமிராண்டிகள், நாகரிகம் அடையாதவர்கள் என்ற கருத்துப்போக்குகள் இருந்தன.

## மக்கள் பண்பாடு

புனித பாவிலு கிரேக்கர்களுக்கு கிரேக்கனாகவும், யூதர்களுக்கு யூதனாகவும் இருந்தவர். ஆனால் மத்திய காலத்தில் திருச்சபையோ சுதேச மக்களுக்கான பண்பாட்டில் கிறிஸ்துவின் செய்தியைக் கொடுக்காத நிலை உருவானது. ஆக்கபூர்வமான சிந்தனைத் தெளிவும், பரீட்சார்த்த மனப்பாங்கும் தேவை. திரிதெந்தீன் பொதுச்சங்கம் கொடுத்த மாதிரி உருவான திருச்சபை தென்னமெரிக்காவிலும், மற்றைய நாடுகளிலும் நாட்டப்பட்டது. இக்கருத்தை பெனிவியர்நோ என்பவர் "புயாலாவுக்கான நீண்டபாதை" என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.[29]

# அமெரிக்கக் காலனித்துவக் கிறிஸ்தவம் 1808 - 1870

***1860களில் தென் அமெரிக்கத் திருச்சபையில் எழுந்த பிரச்சனைகளை விளங்கிக்கொள்வதற்கு, 1807 - 1870இல் எழுந்த பிரச்சனைகள் உதவும். அப் பிரச்சனை என்ன?***

தென் அமெரிக்கத் திருச்சபையின் ஆயர்கள் நாடு கடத்தப் பட்டதனால் விடுதலைப் போர்கள் பற்றி குருக்கள் மத்தியில் எழுந்த பிரிவுகளும், பின் வந்த தாராள கொள்கை அடிப்படையில் எழுந்த அரசியல்வாதமும், மத சார்பற்ற வகுப்புவாதம் ஏற்படுத்திய திருச்சபைக் கெதிரான வேதகலாபனைகளும், நிலச்சுவாந்த அமைப்புடன் கட்டுப்பட்டுக் கிடந்த திருச்சபை தேசியவாத நவீன அபிவிருத்திகளுக்கு ஈடு கொடுக்க முடியாமையினால் ஏற்பட்ட முரண்பாட்டுக்கு அடி பணிந்து விட்டுக் கொடுக்க வேண்டிய புதிய அரசியல் மாற்றங்களுக்கு ஏற்றவாறு தான் முன் அனுபவித்த சமூக அரசியல் செல்வாக்குகளை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதுமே.

ஆயினும் மேற்கூறப்பட்ட அம்சங்களில் சொற்ப உண்மை காணப்பட்டாலும், முழு உண்மையை அறிய அன்றைய பொருளாதார, அரசியல், சமய, கலாச்சார, வரலாற்றுப் பின்னணி ஆராயப்படல் வேண்டும்.

இங்கிலாந்து, பதினெட்டாம் நூற்றாண்டுடிலேயே ஸ்பானிய, போர்த்துக்கேய பொருளாதாரத்தை முறியடித்து, நவீன முதலாளித்துவ அமைப்பினுள் தனித்துவமான இடமொன்றைக் கைப்பற்றியது. ஸ்பெயின், போர்த்துக்கால் ஆகிய நாடுகள் முயற்சித்தும் ஈடுகொடுக்க முடியாது, இங்கிலாந்தில் தங்கிநிற்க வேண்டிய நிலை உருவானது. அதேவேளை லத்தீன் அமெரிக்க, கிரேயோல் முதலாளி வர்க்கத்தினர்

பெரும் பொருளாதார வளர்ச்சி கண்டனர். உள் நாட்டு மூல வளங்களை வெளிச் சந்தைப்படுத்தியதால் இலாபம், அதிகாரம், அபிலாசைகள் பெருகினாலும், அரசியற் பலம் ஸ்பெயின் போர்த்துக்காலிடமே இருந்தது.

இப் பொருளாதார, அரசியல் முரண்பாடு சுதேச முதலாளிகளுக்கும், ஸ்பானிய அரசுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தியது. முதலாளிகள் புதிய சந்தைகளைத் தேடினர். ஸ்பெயின் தன்னுடன் மாத்திரமே வியாபாரம் என்றது. இவ் வேளையில் நெப்போலியனின் ஸ்பெயின் மீதான படையெடுப்பு, ஸ்பானிய அரசின் பிடியைத் தளர்த்திப் 19ஆம் நூற்றாண்டு லத்தீன் அமெரிக்க புரட்சிக்கு வழிகோலியது. இது அடிப்படைச் சமூக மாற்றத்தை அல்ல, ஸ்பெயின் ஆட்சியிலிருந்து லத்தீன் அமெரிக்க முதலாளித்துவத்திற்கு அதிகார மாற்றத்தையே கொணரும்.

தென் அமெரிக்க அதிகார வர்க்கத்தில் மூன்று வகையினர் இருந்தனர்:

*1.* பிற்போக்குவாதக் குழுக்கள்: ஸ்பானியாவுடன் இணைந்து முதலாளித்துவம், திருச்சபைப் பழமைவாத சக்திகள், விவசாய நிலச் சுவாந்தப் பிரபுக்கள், திருச்சபை நிலபுலன்களை நிர்வகித்தோர் ஆகிய அனைவரும் அடிமை வேலைகளைப் பயன்படுத்தினர்.

*2.* தாராண்மை தங்குநிலை, தாராண்மை தேசியவாதக் குழுக்கள்: தாராள மனப் பக்குவம் கொண்ட ஆளும் வர்க்க கிரேயோல் முதலாளிகள் இருவகையினர். தாராள - தேசியவாதிகள், தாராள தங்கு நிலைவாதிகள். இவ் இரு பகுதியினரும் ஸ்பானியாவிடமிருந்து பொருளாதார அரசியல் விடுதலை விரும்பியோர். தாராள தேசியவாதிகள் ஸ்பானியாவிடமிருந்து விடுதலை பெற்று ஆங்கில முதலாளித்துவத்தின் தங்கும் ஓர் சமூக அமைப்பை விரும்பினர். மற்றையவர்கள் ஸ்பானியாவில் இருந்து விடுபட்டு சுயம்பான தேசிய சமூக அமைப்பு ஒன்றை உருவாக்க முனைந்தனர்.

இவ்விரு சாரார் இடையிலும் சில இணக்கங்கள் இருப்பினும், விடுதலைக்குப் பின் நீண்ட - இரத்த நிறை உள்நாட்டுப் போர் தொடரலாயிற்று.

மிதவாத தங்குநிலை அமைப்பு, விவசாய, வர்த்தக, நிலச் சுரங்க முதலாளித்துவ அமைப்புக்களையே உள்ளடக்கிற்று. இவ் விவசாயப் பண்ணைகளான உணவு உற்பத்தி, வெளிநாட்டுச் சந்தைகளை குறிக்கோளாக்கிற்று. சுதந்திர வர்த்தகர்கள் ஐரோப்பிய, ஆங்கிலேய வியாபாரிகளுடன் வர்த்தக உறவுகளைக் கொண்டு ஸ்பானிய சந்தைகளை நிராகரித்தது.

*3.* கிரயோல் தேசிய மிதவாதக் குழுக்கள்: விடுதலையின் பின் எழுந்த உள்நாட்டுப் போர்களில் தோல்வி கண்ட பகுதியைச் சார்ந்த இக்குழுவினர், தென் அமெரிக்க வரலாற்றில் இடம் பிடிக்கத் தவறினர். இவர்களுள் விதி விலக்காக பராகுவே நாட்டில் டாக்டர் யோசே கஸ்பார் பிரான்சியா, சொலானா லோப்பேஸ் (தந்தை, மகன்) என்போர் வெற்றியீட்டினர். *1865 - 1870* வரை இவர்களை எதிர்த்து வந்த மூன்று நாட்டுக் கூட்டுப் போரில் நசுக்கப்படும் வரை, முன்பு ஸ்பானிய வர்த்தக உறவுகளுடன் தொடர்பு கொண்டு பின் இப்பக்கம் திரும்பினர்.

தாராள சிறு பூர்சு வாசிகள்: பொருளாதாரத் துறையிலும் விட அரசியல், கலை, கலாச்சார, சிந்தனை துறைகளிலேயே நாட்டம் காட்டிய மருத்துவ நிபுணர், ஆசிரியர், சட்டத்தரணிகள், தொழில்நுட்ப வல்லுநர், வேறு தொழிலாளிகள் ஆகியோர் தேசிய தாராள முதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்தனர். *1848* ஐரோப்பிய புரட்சியின் பின் எழுந்த பிரான்சிய சோசலிஷ கருத்துக்களாலும் கொள்கைகளாலும் இவர்கள் பாதிக்கப்பட்டனர். *1870*க்குப் பின் மிதவாத கருத்து ஓய்ந்து போயிற்று.

இம் மூன்று ஆதிக்க நிறை சமூக தரப்பினின்று பெருவாரியான ஏழைப், பாட்டாளி மக்கள், அமரிந்தியர், நீக்கிரோக்கள், ஏழை வெள்ளையர்கள் ஆகியோர் விலக்கப்பட்டிருந்தனர்.

லத்தீன் அமெரிக்கப் புரட்சிக்கு ஆதரவாயிருந்த கருத்துக்கள் அந்நாட்டிற்கு அன்னியமானதும், வெளியே இருந்து வந்த அமெரிக்கப் புரட்சி, *1789* பிரான்சியப் புரட்சி, புரட்சிவாத தாராளக் கொள்கை முதலியவற்றில் இருந்து பிறந்தது. இதற்கும் கிரேயோல் முதலாளித்துவ பொருளாதார சமூக நோக்குகளோடு ஸ்பெயின் போர்த்துக்கல் எதிர்ப்புக்கும் நேரடித் தொடர்புகள் இருக்கவில்லை. ஐரோப்பாவில் இச் சிந்தனைவாத கருத்துக்கள் நிலச் சுவாந்தார்களுக்கு எதிராக தொழில் நுட்பம் கொண்ட முதலாளிகளால் பயன்படுத்தப்பட்டது. லத்தீன்

அமெரிக்காவில் நிலப் பிரபுக்கள், நிலச்சுரங்க கைத்தொழில் பூர்சுவாசிகளை ஸ்பானிய ஆதிக்கத்திற்கெதிராகப் பாவித்தனர்.

இவ் விடுதலைப் போர்களினால் நன்மை அடைந்தோர் 10 வீதத்தினரே. கிரேயோல் பூர்சுவாசிகள் 90 வீதத்தினர் மறக்கப்பட்டு மறைந்த ஏழைகள். எனவே 1824இல் சுதந்திரமடைந்த லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் ஆரம்பமாயிற்று. இது 1870இல் மட்டும் ஆங்கில முதலாளித்துவத்திடம் தங்கி நின்றோருக்கும், தேசிய நலன் கருதி சுதேச தன்னிறைவு, அபிவிருத்தி வேண்டி நின்றோருக்கும் (தேசிய முதலாளித்துவத்தினர்) இடையே ஏற்பட்ட மோதல்களாகும்.[30]

## திருச்சபையும் லத்தீன் அமெரிக்கப் புரட்சியும்

1816 தொட்டு 1820 வரை ஸ்பானிய அரசுக்கு சார்பாக தென் அமெரிக்க புரட்சிக்கு எதிராக திருச்சபை அதிகாரபீடம் இருந்தது. 1820இன் பின் 1823 வரை திருச்சபைக்கு எதிராக ஸ்பானிய ஆட்சி திரும்பிய பொழுது அவர்கள் லத்தீன் அமெரிக்க புரட்சிக்கு சார்பான நிலைப்பாட்டை எடுத்தனர். 1824-1833 வரை திரும்பவும் ஸ்பானிய அரசு பக்கமாகவும் பின் படிப்படியாக அந்நிலைப்பாட்டில் தளர்ச்சி ஏற்பட்டு 1831இல் பாப்பிறை 16ஆம் கிரகோரியார் பாப்பரசர், லத்தீன் அமெரிக்க நாடுகளின் சுதந்திரத்தை Solicitudo Ecclesia என்ற திருமடல் மூலம் வெளியிட்டார்.

ஆயர்களிலும் பார்க்க அதிகமாக லத்தீன் அமெரிக்க விடுதலைப் போரில் பங்களிப்பு ஆற்றியவர்கள் குருக்களே.

வெனிசுவெலா நாட்டின் மெரிடி பேராலயத்தின் ஆயர் லாசோதே லா வெகா அவர்கள் 1820ஆம் ஆண்டு மட்டும் ஸ்பானிய அரசன் 7ஆம் பேர்டினன்டுக்கு பிரமாணிக்கம் காட்டினார். மக்களை ஊக்குவித்தார். அதன் பின் தன் மனதை மாற்றி வீரர்களுக்கு ஆதரவு தந்தார். சைமன் பொலிவர் 1821 மே 20இல் இவர் பற்றி தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் ''நம் நாட்டுப் பற்றுள்ளோரை விட ஸ்பானிய தாராளவாதிகளை அதிகம் வெறுக்கிறார். ஏனெனில் திருச்சபையை அவர்கள் அழிக்கின்றனர். நாமோ பாதுகாக்கின்றோம்" எனக் கூறியுள்ளார்.

ஆயர் ஜோஸ் கியூரியோ காசிடோ (குயிற்றோ பேராயம் எக்குவடோர்) விடுதலை இயக்கத்தை ஆரம்பத்திலிருந்தே ஆதரித்தார். புரட்சிக் குழுக்களுக்கு பண உதவி வழங்கியதுடன் அவர்களை ஆதரிக்காத சில குழுக்களை பதவி நீக்கமும் செய்தார்.

மெக்சிக்கோவில் எல்லா ஆயர்களும் அரசர் பக்கமே நின்றனர். ஆர்ஜென்ரீனா, சிலி, பேரு, கொலம்பியா மத்திய அமெரிக்காவில் பெரும்பாலான ஆயர்கள் விடுதலை இயக்கத்தின் பக்கம் நிற்கவில்லை. இதனால் விடுதலை இயக்கங்கள் வெற்றி பெற்றதும், இவர்களிற் பலர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

ஆயினும் பெருவாரியான குருக்கள் விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டனர். குறிப்பாக ஆர்ஜென்ரீனா, எக்குவடோர், மெக்சிக்கோ, பிறேசில் முதலிய நாடுகளின் குருக்கள், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே புரட்சிகர சிந்தனைகளை வரவேற்றனர். இவர்களுக்கு எதிராக மெக்சிக்கோவில் குறிப்பாகப் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. குருக்கள் கூட்டங்கள், புரட்சிகரக் குழுக்களை ஏற்படுத்தினர். இவற்றுள் மெக்சிக்கோவில் குருக்கள் பொருளாதார, ...ட சீர்திருத்தங்களை உண்டாக்க அயராதுழைத்தனர். போர்த்துக்கல் எதிர்ப்பு என்ற குழுக்களில் அங்கத்தவராயிருந்தனர்.

விடுதலை கிடைத்த காலத்தில் குருக்கள் மிக முக்கிய பங்காற்றினர். நாட்டின் சட்ட அமைப்புக்களின் உருவாக்கத்திலும், சாசனங்களைத் தயாரிப்பதிலும், மக்கள் மத்தியில் விடுதலை இயக்கத்தைப் பரப்புவதிலும், நாட்டுக்காக பணம் வசூலிப்பதிலும், விடுதலை இராணுவத்தைப் பின்தொடர்ந்து உதவுவதிலும், சில சந்தர்ப்பங்களில் ஆயுதம் தாங்கி போராடுவதிலும் நல்ல பங்களிப்புச் செய்தனர்.

ஆர்ஜென்ரீனாவின் விடுதலை இயக்கம் (1810 மே) குருக்களின் ஆதரவைப் பெற்றருந்தது. அது மேல் மட்டத்தினரால் வழி நடாத்தப்பட்டாலும் மெக்சிக்கோவில் மக்கள் மயப்படுத்தப்பட்டதாக, ஜனரஞ்சக புரட்சி அம்சங்களைக் கொண்டு விளங்கியது. பங்குக் குருக்கள் மிகுவேல் கிடால்கோவும், யோசே மரியா மெரேலோஸ்சும் புரட்சி இயக்கத் தலைவர்களாக விளங்கினர். இவர்கள் குருக்களில் விதி விலக்கானவர்கள் அல்ல. மெக்சிக்கோவில் இருந்த 8000 குருக்களில் 6000 பேர் புரட்சிக்கு ஆதரவாயிருந்தனர். 1815ஆம் ஆண்டில் 100க்கும் அதிகமான குருக்கள் இதில் ஈடுபட்டதற்காக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மெக்சிக்கன் கிரோயோல் பூர்சு வாசிகள் தங்கள் இராணுவத்தைக் கொண்டு இவர்கள் புரட்சியை அடக்கினர். 1811இல் கிடல்கோவும், 1815இல் மொரேல்வோசும் முதலாளித்துவ ராணுவத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டு சுடப்பட்டனர்.

1824-1870 இடையே நாட்டுக்கு நாடு ஆண்டுகள் வித்தியாசப்படும். ஆங்கிலேயரில் தங்கி நின்ற சுதந்திர வர்த்தக பூர்சு வாசிகளுக்கும், உள்நாட்டு சந்தையைப் பாதுகாக்க நின்ற தேசிய பூர்சு வாசிகளுக்குமிடையே அதிகாரப் போராட்டமே நடைபெற்றது. பராகுவேயில் மாத்திரமே1811-1870 களினிடையில் பிரான்ஸியா அவர் பின் லோப்பஸ் வித்தியாசமான தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பினார். வெளிநாட்டு மூலதனமின்றிப் புகையிரதப் பாதைகளை அமைத்து, வெளிநாட்டு தொழில்நுட்பவியலாளர்களை வருவித்துத், தேசிய தொழில்களை உருவாக்கி ஸ்திரப்படுத்தினார். குவாரினி இந்தியர்களின் உதவிகளையும், வெள்நாட்டுப் பண முதலைகளையும் வெளியேற்றிவிட்டார்.

மெச்சத்தக்க இத் தேசிய (வெளிக் கடனற்ற) சுய அபிவிருத்தித் திட்டங்கள் 1865 - 1970 களில் அண்டைய நாடுகளின் படையெடுப்பினால் அழித்தொழிக்கப்பட்டன. பராகுவேயின் முன் மாதிரிகையை லத்தீன் அமெரிக்கா முழுவதும் பின்பற்றியிருந்தால் இன்றைய சூறையாடப்பட்ட ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டிராது.

தேசிய புரட்சிகளின் பின் வந்த புதிய அரசாங்கம் முன்னைய அரசுகள் திருச்சபையிடம் கொண்டிருந்த பற்றநாடோ (Patronato) முறைகளையே தொடர விரும்பின. சிறப்பாக ஆயர்களைத் தெரிவு செய்தல், பிரசங்கிக்க, பாவசங்கீர்தனம் கொடுக்க அதிகாரமளித்தல் ஆகிய இரு உரிமைகளையும் தமக்குள்ளே வைத்திருக்கவே விரும்பின. ஏனெனில் இவை இரண்டும் மக்கள் சிந்தனையை உருவாக்கவல்ல ஊடகங்களென அரசு கருதியது.

விடுதலைப் போர்களின் பின் திருச்சபை பெரும் குழப்ப நிலைக்குள் வந்தது. பல இடங்களில் ஆயர்கள் இல்லை; குருக்கள் பற்றாக்குறை; குருமாணவப் பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டமை அனைத்தும் ஒருங்கிணைந்து திருச்சபையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந் நிலைமையைச் சீர் செய்வதாயின் பின்வரும் மூன்று விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது:

1) திருச்சபை அமைப்புகளை திரும்ப கட்டி எழுப்புதல்.
2) திருச்சபையை உள்ளரங்கமாக புதுப்பித்தல் அல்லது சீர் திருத்தல்.
3) திருச்சபைக்கும் அரசுக்கும் இருக்கவேண்டிய உறவை திரும்ப நிர்ணயித்தல். [31]

இம் மூன்று தேவைகளும் தீர்வு பெற பாரிய இடையூறுகள் குறுக்கே கிடந்தன.

முதலில் ரோமாபுரியுடனான தொடர்புகள் சுமூகமாக இருக்க வில்லை. 1831இல் 16ஆம் கிரேகோரியஸ் பாப்பு காலத்தில் மெக்சிக்கோ, ஆர்ஜென்ரீனா, உருகுவே, பேரு முதலிய நாடுகளுடனான உறவு சீர்படுத் தப்பட்டது. 9ஆம் பத்தநாதர் (1846-1878) பாப்பு, தாராள போக்குள்ள அரசுகளுடன் நவீனத்துவ தப்பிதங்களுக்கு எதிராக எழுதிய சுற்றமடலின் பின் எழுந்த உறவு முறிவு, முழு லத்தீன் அமெரிக்காவையும் பாதித்தது. [30]

பிற்போக்குவாத நாடுகளான பொலிவியாவுடன் 1851லும், கவுதமாலா, கொஸ்தாறிக்காவுடன் 1852லும், கெயிற்றியுடன் 1860லும், கொண்டுரஸ், வெனிசுவெலா, எக்குவடோருடன் 1861லும், கொலம்பியாவுடன் 1882லும் மாத்திரமே வத்திக்கான் உறவு தொடர்ந்தது. இவற்றின் பிற்போக்கு வாதமும் நிலையற்றதாகவே தோன்றிற்று.

இரண்டாவதாக திருச்சபை விரும்பிய உட்சீர்திருத்தங்களைச் செய்யப் போதுமான தகமையுமும், பலமும் இல்லாததால், அரசுகள் உள்ளிட்டு எவ்வகையான சீர்திருத்தம், மாறுதல்கள் முதலியவற்றை அமுல் செய்யத் தடை விதித்தன அல்லது முழு அதிகாரத்துடன் உட்புகுந்தன.

உதாரணமாக ஆர்ஜென்ரீனாவில் பேர்னடினோறிவாடாவியா, ஒரு நல்ல பக்தி பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கர். திருச்சபையில் சீர்திருத்தத்தைப் பலாத்காரமாக உட்புகுத்தினார். திருச்சபை நீதி மன்றங்களையும், சட்டங்களையும் தடைசெய்தார். பேராலய (Cathedral) செனற் சபையை ஓர் மதச் சார்பற்ற, அரசியல் அமைப்பாக மாற்றினார். ஆயர்கள், குருக்களுக்கு வருடாந்தக் கருத்துரைகள், ஆன்மீகப் பயிற்சிகள் வழங்கவேண்டுமெனக் கட்டாயப்படுத்தினார். வருடாந்த வரவு செலவுத் திட்டம், குருக்களுக்கு அரச சம்பளம், நித்திய வாக்குத்தத்தம் என்பன தடை செய்யப்பட்டது. சந்நியாசத், துறவறக், குருத்துவ நுழைவு 25 வயதுக்குப் பின் என வரையறுத்தார். வேறு சில

துறவற சபைகளுக்கும் தடை விதித்தார். வழிபாட்டு, சமய சேவைக்குப் பயன்படாத திருச்சபைச் சொத்துக்களைப் பறி முதல் செய்யச் சட்டம் இயற்றினார். திருச்சபையில் ஒரு பகுதியினர் இவற்றை ஆதரித்தனர். மறு பகுதியினர் எதிர்த்தனர்.

இறுதியாக 300 வருடங்களாக ஸ்பானிய அரசின் கீழ் அதன் பக்க பலத்துடன் வாழ்ந்து, வளர்ந்த திருச்சபை திடீரெனத் தனித்து விடப்பட்ட மரமாகி அரச பலமின்றித் தானே தனித்தியங்குவது சரியா என நினைத்துப் பார்க்க முடியாதிருந்தது.

இருந்தும் புதிய அரசுடன், அதே தரமான உறவுகளைக் கொண்டிருப்பதா என்ற கேள்விக்கு அது தன்னைச் சீர்திருத்தி மாற்றி அமைத்தது. விசுவாசத்திற் புதுப்பித்துப், புதிய அரசுகளின் யதார்த்த நவீன நிலைப்பாட்டை உணர்வது அவசியமாக இருந்தது. இதற்கான அடிப்படைச் சிந்தனை, விசுவாசப் புரட்சி, புதிய சகாப்தத்துக்கான தூயஆவி தரும் ஆன்ம விடுதலை நிலை, வல்லமை ஆகியவற்றை எதிர்கொள்ள அதற்குத் துணிவும், தூரப் பார்வையும் அறவே இருக்கவில்லை. இதுவே அன்றைய திருச்சபையின் திரிசங்கு நிலையாயிற்று.

1870 களில் தான் முன்பு ஆரம்பித்த தாராள முதலாளித்துவக் கொள்கைகள், இங்கிலாந்தோடும், பின் ஐக்கிய அமெரிக்க நாட்டுடனும், அடிப்படை மூல வளங்களை வெளிச் சந்தைப்படுத்தும் புதிய தாராள முதலாளித்துவ சக்திகளின் சகாப்தம் ஆரம்பமாயிற்று. இப்புதிய காலனித்துவக் கால கட்டம், தேசிய பூர்சுவாசிகளுக்கும், தங்கி நின்ற பூர்சுவாசிகளுக்கும் இடையேயான முன்னைய சகாப்தத்தின் இழுபறியை முடிவுக்குக் கொணர்ந்து தங்கி நிற்கும் புராதன சக்தியை மேலோங்கச் செய்தது. இதனூடாக நவீன ஆதிக்க சக்திகளுக்கும், ஒரு முகப்பட்ட முதலாளித்துவத்திற்கும், லத்தீன் அமெரிக்க முதலாளித்துவத்திற்கும் நெருங்கிய உறவை ஏற்படுத்தி, இன்றைய பயங்கர சர்வதேச முதலாளித்துவ எழுச்சிக்கு வித்திட்டது எனலாம்.

தாராளப்போக்குவாதிகளினால் பாதிக்கப்பட்ட ஏழைகள், சூறையாடப்பட்டவர்கள், அமரிந்தியர்கள், மெஜடிகோஸ் முதலியோரின் பாரம்பரிய நிலங்கள் பறித்தெடுக்கப்பட்டன. அரசியற், கலாச்சார அடக்கி ஒடுக்கல், சில வேளைகளில் இனக் கொலைகள் முதலியனவற்றால் தாராளப் போக்குவாதிகள் தங்கள் சொந்த வியாபார,

விவசாயப் பண்ணைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து வெளிநாட்டுச் செலாவணி பெறப் பாவித்தனர். இதற்காகச் சுதந்திரம், முன்னேற்றம், அபிவிருத்தி என்ற முக மூடி சுலோகங்களை ஏழைகள், ஒடுக்கப்பட்டோருக்கு எதிராகப் பாவித்துப் பிற்போக்குவாதம், குருப்பார்ப்பனியம் முதலியவற்றிற்கு எதிராகப் போராடுகிறோம் என்று காட்ட முற்பட்டனர்.

திருச்சபை இச் சூழலிற் தன் சட்ட வரையறைக்குள்ள உரிமைகளுக்காகப் போராடுகிறோம் என்ற ஆர்வத்தில் தாம் பொது மக்களிடம் இருந்து எவ்வளவு அந்நியப்படுத்தப்படுகிறோம் என்பதை உணராத நிலையை அடைந்தனர்.

ஐரோப்பிய நிலைப்படுத்துகை வேறு, லத்தீன் அமெரிக்க, நிலைப்படுத்துகை வேறு. ஐரோப்பிய நிலைப்படுத்துகை முதலாளித்துவ, விஞ்ஞானப் புரட்சியின் பின் எழுந்த மெய்யியல் சிந்தனைகளைக் குறிப்பிட்டது. லத்தீன் அமெரிக்காவிலே இவ்வகைப் புரட்சியும், சிந்தனைகளும் ஏற்படவில்லை. மாறாக இவ் ஐரோப்பிய சிந்தனைவாதத்தை நிலைப்படுத்த அடக்கு முறையைக் கையாண்ட ஆளும் வர்க்கம், தன் சுய வருவாயையும், அரசியல் அதிகாரத்தையும் பெருக்க, தம் நவ காலனித்துவப் பிடியை அபிவிருத்தி, நவீனமயப்படுத்தல் என்ற போர்வைகளிற் பாவித்தனர்.

லத்தீன் அமெரிக்கா முன்னேற்றம் அடைந்த பெரும் முதலாளித்துவ அபிவிருத்தி நாடுகளுடன் கொண்ட வெளி வியாபார உறவுகளுக்கும் அதற்காக உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கம் கையாண்ட ஒடுக்குமுறைகளுக்கும் எவ்வித பொருளாதார கலாச்சார தொடர்புகளும் இருக்கவில்லை.

**இச் சிந்தனைப் பிரசாரத்துக்கு எதிராக எழுந்த குரல்கள் பல் வகைப்பட்டவை.**

*1) ஆட்சியாளர், நவ காலனித்துவ வாதிகளுக்கு எதிராக எழுந்த தேசியவாதிகள் - கியூபாவைச் சேர்ந்த யோசேமாட்டி 1853-1895*
*2) ஆங்கில சாக்சனிய ஆதிக்கத்தை எதிர்த்து அதன் ஸ்பானிய வேர் களின் அடிப்படையில் லத்தீன் அமெரிக்க கலாச்சாரத்தைக் காப் பாற்ற விளைந்த பழமைவாதிகள். இவர்களுள் வேறு சித்தாந்தங் களின் வரையறைகளுக்குள் செயற்பட்ட பிரேசிலின் றெயிமன் டோ பரியாஸ் பிறிற்றோ 1862 - 1917 உருகுவேயின் யோசி எம்ரி க்கியு றோடோ 1871 - 1917 முதலியோர்.*

*3) இவ்வெதிர்ப்பில் சர்வ கலாசாலைகளும் பங்கேற்றன. இதன் விளைவே*

*1918இல் ஆர்ஜென்ரீனாவிலும் 1919இல் பேருவிலும் சர்வ கலாசாலைகளை ஜனநாயக மயப்படுத்தி, மக்கள் அருகே கொண்டு வர எழுந்த முயற்சிகளாம். இக் கால கட்டத்திலேயே லத்தீன் அமெரிக்க இலக்கியங்கள் ஓர் முக்கிய கால கட்டத்துட் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இம் மாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர்கள்:*

*யூலியன் டி கசால் - கியூபா 1863 - 1916*
*மனுவல் கியூற்றரஸ் மஜேரா - மெக்சிக்கோ 1859 - 1895*
*யோசி அசன்சியன் சில்வா - கொலம்பியா 1865 - 1896*
*ரூபன் டாரிஸ் - நிக்கரக்குவா 1867 - 1916*
*அமாடோ நெரிக்சோ - மெக்சிக்கோ 1870 - 1919*
*கார்லோஸ் பேஜோவா வெலிஸ் - சிலி 1870 - 1908* [32]

## மக்கள் போராட்டங்கள்

*லத்தீன் அமெரிக்க வரலாற்று ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ளாத ஓர் பெரும் குறைபாடு 1870 - 1930 க்கு மிடையில் எழுந்த பொதுமக்கள் போராட்டங்களும், எதிர்ப்பு இயக்கங்களுமாம்.*

*சான்சீமோன், பவுரியர், புரோகுடொன் முதலியோரின் உத்தியோபியன் சோசலிச கருத்துக்கள் உள்ளடக்கிய இயக்கங்கள், 1838இல் புவனஸ் அயர்சில் மஸ்ரோபான் எச்சேவெரியாடு மே மாதம் ஒருங்கிணைப்பாயிற்று. சந்தியாகோ சிலியில் 1850இல் பிரான்சிஸ்கோ பில்பாவோவும் சந்தியாகோ ஆர்க்கோசும் தோற்றுவித்தது சமத்துவத்துக்கான சங்கம். இது போன்று வேறு சில, பிரேசில், உரகுவே, கொலம்பியா, மெக்சிக்கோவிலும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றிற்கு ஜனரஞ்சக தொடர்புகள் சொற்பமே.*

*19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் ஒருவருக்கொருவர் உதவும் அமைப்புக்கள் உருவாகின. இவற்றில் பக்குனின், குரேப்போட்கின் போன்ற அனாக்கிஸ்ருகளின் பாதிப்பு பெரிதும் ஏற்பட்டது. 1870இல் பாட்டாளிகளின் தோல்விக்குப் பின் ஐரோப்பாவை விட்டு வெளியேறிய பாரிஸ், ஜேர்மன் அகதிகள் சோசலிஸக் கருத்துக்களை இங்கு கொணர்ந்து புகுத்தினர்.*

மூன்றாவதாக *1890 - 1930* வரையில் கணிசமான தொகைத் தொழிலாளர் வர்க்கம் லத்தீன் அமெரிக்காவில், மெக்சிக்கோ, பிரேசில், ஆர்ஜென்ரீனா, சிலி, உருகுவே, கொலம்பியா நாடுகளில் உருவாயிற்று. லத்தீன் அமெரிக்க தொழிலாளர் இயக்கங்களுக்குள் மாக்சிய சிந்தனைகள் உட்புகலாயின. புனுவீ முதல் சர்வதேச பதிப்பு பிற்பட்டதே. மெக்சிக்கோவில் வெளிவந்த தொழிலாளர் இயக்க பிரசுரங்கள்:

The Socialist
The International
The commune
The son of Labour
Strike
International worker

*1872*இல் மெக்சிக்கோவின் தொழிலாளர் வட்டம் ஆரம்பிக்கப்பட்டு *1888*இல் Communist Manifesto ஸ்பானிய மொழியில் வெளிவந்தது. *1900-1910* இடையே புளோரன்ஸ் மகோன் சகோதரர்கள் நிலமும் விடுதலையும் என்ற சுலோகங்களுடன் ஆரம்பித்த ஆயுதப் போராட்டமும் குறிப்பிட வேண்டியதொன்றாகும். *1876 - 1924* காலகட்டத்தில் லத்தீன் அமெரிக்கத் தொழிலாளர் இயக்கத் தலைவர்களில் லூயிஸ் எமிலியோ றொக்காபரன் மிக முக்கியமானவர்.[33]

# நாஸ்திகமும் திருச்சபையும்

தென் அமெரிக்காவில் மதம் என்பது சமூகப் புரட்சி எதிர்ப்போடு சம்பந்தப்பட்டே நோக்கப்பட்டது. பிரேசிலில் 1897இல் அன்ரனியோ மசிபெல் தலைமையில் நடத்தப்பட்ட மகனுடோன் போர்டு, தெற்கு பிரேசிலில் அதன் பின் 1910 - 1916 வரை வோயாமரியா, யோசேமரியா டி அகுஸ்தீன்கே தலைமையில் நடந்த புரட்சிப் போராட்டங்கள் என்பன நல்ல உதாரணங்கள். லத்தீன் அமெரிக்காவில் மக்களின் மத உணர்வும், புரட்சிப் போராட்டங்களும் பல இடங்களிலும், பல வேளைகளிலும் பின்னிப் பிணைந்தே காணப்பட்டன. திருச்சபையின் ஸ்தாபன மட்டங்கள் ஆளும் அரசுடன் இருந்ததால், பொது மக்களின் மன உணர்வுகளும், பக்தியும் அவர்களை எதிர்த்த புரட்சி இயக்கங்களாக அடிக்கடி எழுந்தது. லத்தீன் அமெரிக்க மதம் நீதிப் புரட்சியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதா? அல்லது அதற்கான சிறப்பு ஊடகமாயிற்றா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

மெக்சிக்கோப் புரட்சி, பலப் புரட்சிக் குழுக்களின் போராட்டங்களின் தொகுப்பு முடிவே. பிரனர்சிஸ்கோ இன்டல்ஏச்சியோ, மடேரோ வெஸ்ரியானோ கரன்சா, சட்ட சீர்திருத்தவாதிகள், பஞ்சோவில்லா புரட்சி, எமிலியானோ சப்பாட்டா முதலியோரின் புரட்சிகளாகும்.

<u>புரோ அடிகளார்</u>

ஒபேரகன் போபிரியோ டயசை வீழ்த்திப், புரட்சி செய்து கலெஸ் என்ற கொடுங் கோலனை மெக்சிக்கோ ஜனாதிபதியாக வர உதவினர். கலஸ்சின் காலத்தில் மொக்சிக்கோவில் மூண்ட வேதகலாபனையில் பிரபல்லியமானவர் வண. புறோ.[34]

## யேசுவின் இரத்த சாட்சி - மைக்கல் புரோ

பசுபிக் சமுத்திர மட்டத்திலிருந்து பத்தாயிரம் அடிகள் உயர்ந்த அத்தலாந்திக் சமுத்திரத்தை மறுபக்க எல்லையாகக் கொண்ட சாகற்காஸ் மாநிலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் மைக்கல் புறோ. செல்வந்தரான தந்தை ஒரு கனிவளம் நிறைந்த சுரங்க நிர்வாகியும், உரிமையாளருமாவார். இளமைப் பருவம் இனிமையாகவே கழிந்தது. இறை பணிக்கே தன்னை அர்ப்பணித்தார். இறைவனின் குருவாகப் பயிற்சி பெற மிக்கோகன் மாநிலக் குருமடத்தில் இணைந்தார். 11 ஆகஸ்ட் 1911 இறைவனின் குருவானார்.

### தொழிலாளர்த் தோழன்

இறை பணி, மனித நேயம் என்பவற்றைச் சிந்தனையில் கொண்டும், தமது தந்தையின் சுரங்கங்களிற் பணியாற்றிய தொழிலாளர்களின் கீழ்த்தர அவல நிலைமைகளை எண்ணியும் சுரங்கத் தொழிலாளர் களிடையே தம் பணிகளைச் செய்தார். சுரங்கத் தொழிலாளர்களைப் பண்பாடற்றவர்களாகக் கருதித் திருச்சபை அவர்களை அதிகம் மதிக்காத காலம் அது. தொழிலாளிகளுக்கெனப் புகையிரதங்களிற் புறம்பான பயணிகள் பெட்டி ஒதுக்கப்பட்டிருக்கும் அதில் மத்திய, மேல்தர வகுப்பினர் பயணம் செய்வதில்லை.

ஒரு நாள் புறோ அடிகள் சுரங்கத் தொழிலாளிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த புகை வண்டிப் பெட்டியில் ஏறினார். தொழிலா ளர்கள் மிகுந்த ஆச்சரியமடைந்தனர். நடுத்தர வயதினன் ஒருவன் மரியாதையும் செய்தான். 'மொன்சியோர் லா கியூர்' (வணக்கத்துக் குரிய குருவே) நீங்கள் எங்கே வந்திருக்கின்றீர்கள் என்பதை அறிவீர்களா? என்று கேட்கக் குரு ஏன்? என்ன விடயம்? என்று மறுகேள்வி கேட்டார். நாங்கள் சோசலிஸ்டுகள் (பொதுவுடைமைவாதிகள்) என, புறோ அடிகள் நானும் ஒரு பொதுவுடைமை வாதிதான் எனப் பதிலளித்தார்.

இறை மகத்துவம் விளங்க இறைமக்கள் ஈடுபடும் புனித போரில் இறைவனே வெற்றியீட்டுவார். ரோம் கற்றக்கோம்பு சுரங்கங்களில் இறைவனின் சாட்சிகளாக விளங்கிய கத்தோலிக்கர்கள் வெற்றியீட்டியது போல மெக்சிக்கோவிலும் கத்தோலிக்கம் வெற்றி பெற்று சுதந்திரத்

தன்னாதிக்க மதிப்புப் பெறும் என ஆயர் மன்றிக்குவஸ் (குஜற்லா மறைமாவட்டம்) கத்தோலிக்கருக்கு வரைந்த திருமடலிற் குறிப்பிட்டார். இத் திருமடலால் சினங்கொண்ட ஆட்சியாளன் கலஸ் ஆயரை ஒரு பயங்கர குற்றவாளியாகக் கணித்து அவரைக் கைது செய்தான். பரிசுத்த பாப்பரசர் 11ஆம் பத்திநாதர் பெயரால் அவரது இராச்சிய பாரமந்திரியான கர்தினாலாண்டகை இத் தகாத செயலைப் பகிரங்கமாகக் கண்டித்தார்.

இக் காலட்டத்தில் மக்களை எழுச்சியுறச் செய்து அவர்களை எதிர்நோக்கும் பேராபத்துகளுக்கெதிராக விழிப்புணர்ச்சியுடன் விட்டுக் கொடுக்காது போராட உந்துசக்தியாகப் பணியாற்றும் பொறுப்பு புறோ அடிகளிடம் கொடுக்கப்பட்டது. இப் புனிதப் பணியில் ஈடுபடுவோர் முதலிற் தங்களை ஆன்மீக ரீதியில் ஆயத்தம் செய்து கொள்வதை அவர் வற்புறுத்தி செயற்படுத்தினார். பாலர் முதல் வயோதிபர் வரை இளைஞரும், யுவதிகளும் செபத்தாலும், தபத்தாலும், பரித்தியாக வாழ்வாலும் இந்த விசுவாசப் போரிலே ஈடுபட இடைவிடாது உதவினர்.

கத்தோலிக்கமே தன் சீர்திருத்தப் பணிகளுக்கும், புரட்சிகர மாறுதல்களுக்கும், சர்வாதிகார ஆட்சிக்கும் முட்டுக்கட்டையிடும் முதல்தர எதிரி என்பது ஆட்சியாளன் கலசின் அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே கத்தோலிக்கரை அடக்கி, ஒடுக்க அவர்களது பண பலத்தைப் - பொருளாதார வளர்ச்சியை முறியடிக்க, அவர்களது சிவிலுரிமைகளை அகற்றியும், ஏதாவது குற்றச்சாட்டுக்களால் பலம் வாய்ந்த கத்தோலிக்கர்களை நாடுகடத்தியும், சிறைவாசமளித்தும், ஆட்சிப் பீடத்திலிருந்தும், பிரதான பதவிகளிலுமிருந்தும் கத்தோலிக்க அதிகாரிகளைச் சிறிது சிறிதாக அகற்றியும் வந்தான்.

இவ்வித தண்டனைகள் கத்தோலிக்கருக்கு அளிக்கப்படுவதற்கு மூல காரணிகள் கத்தோலிக்கரேயென்றும், அவர்கள் இறைவனை மறந்து, அவரது கட்டளைகளைப் புறக்கணித்து, மனம் போன போக்கில் வாழ்ந்தது, தம் பாவக்கிரமங்களால் இறைவனை சினங்கொள்ளச் செய்து, ஆடம்பர வாழ்வுக்கும், அலகையின் சிற்றின்ப வேட்கைக்கும் அடி பணிந்தமையே என்றும் புறோ அடிகள் ஊர் ஊராக, வீடு வீடாகச், சென்று இடித்துரைத்தார். மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்; அனுசரியுங்கள் என்ற அவரது அழைப்பு மெச்சிக்கோக் கத்தோலிக்கரின் உள்ளங்களைத் தொட்டு செயற்பட வைத்தது.



கத்தோலிக்க இளைஞர்களிலிருந்து ஆர்வமும், நம்பிக்கையும், திறமையும், பொறுப்புமிக்கவர்களைத் தெரிந்து, நற்செய்திப் பிரசாரம் செய்யவும், திருமுழுக்கு, நற்கருணை கொடுக்கவும், மறைக்கல்வி அளிக்கவும், திருச் சடங்குகளைக் குருக்கள் நிறைவேற்றுவதற்கான எல்லா ஆயத்தங்களைச் செய்வும் வேண்டிய பயிற்சியைத் தாமே தனித்து நின்று வழங்கினார். விரைவில் இத் தொண்டர் குழு நூற்றைம்பது பேராகியது. புறோவின் இளைஞர் குழு ஆச்சரியமான - பயங்கரமான - உண்மையான மறைபரப்புப் பணியில் ஈடுபட்டது. அவர்களிற் பலர் பின்பு பல்வேறு சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டு இயேசுவின் இரத்த சாட்சிகளாயினர். இவர்கள் ஊட்டிய இறையியல், அரசியல், தத்துவ அறிவு மெக்சிக்கோ மக்களின் கத்தோலிக்க அறிவை ஆழமாகவும் திறமையாகவும் பிரமாணிக்கமாகவும் ஆக்கிக்கொள்ள உதவியது.[35]

புறோ அடிகளுக்கு செபம் செய்யவோ, தியானிக்கவோ நேரம் கிடைப்பது அரிதாயிற்று. இளைப்பாறவே நேரமில்லாதவருக்கு செப - தியானத்துக்கு நேரமெங்கே? ஆன்ம வேட்கையால் இறைப்பணியிற் பல பயங்கர - சோதனை - வேதனைகள் மத்தியில் இடைவிடாது பணிபுரிவதே செப, தப தியானமாயிற்று. இவ்வளவு சுமைகள் மத்தியில் இறைவன் என்னோடிருப்பதை - நல்லாலோசனை அளிப்பதை - உதவி தருவதைப் - பக்க பலமாக விளங்குவதை நான் நன்கு உணருகின்றேன். அவரது பிரசன்னமும், வழிகாட்டுகையும், ஆறுதலளிப்புமே நான் துணிவோடு இப்பணிகளில் ஈடுபடக் காரணிகளாயிற்று என்று அவர் சொல்லுவார்.

புறோ அடிகளின் மிகப் பெரிய எதிரி, தூங்க முடியாத தன்மை. இந் நோயினாற் பாதிப்படைவோர் இளைப்பாற வழியில்லையே என்று வேதனையடைவர். புறோ அடிகளுக்கு அவ்வித வேதனை கிடையாது. இரவிற் தூக்கமின்றித் தவிக்கும் நேரங்களில் எழுந்திருந்து கடிதமெழுத ஆரம்பித்து விடுவார். தாயாருக்கு, சகோதரருக்கு, மாகாணத் தலைவருக்கு (அடிக்கடி தனது பணிகளை விபரித்து), சகோதர குருக்கள்

மற்றும் நண்பர்களுக்கு அடிக்கடி எழுதுவார். அவரது பாரிய மறை பரப்புப் பணியையும், மெக்சிக்கோ திருச்சபையின் அக் காலத்திய வரலாற்றையும், அவர் மேல் அலகை ஆவேசத்துடன் நடத்திய தாக்குதல்களையும் எதிர்கால தலைமுறையினருக்கு எடுத்தோதும் வரலாற்று ஆவணங்களாக அவை விளங்குகின்றன.

அவரது அழகிய இளந் தோற்றமும், நடையுடை பாவனையும் புறோ அடிகளை ஆடம்பரப் பொழுது போக்குகளில் நாட்டமுடைய ஒரு நவநாகரிக இளைஞனாகவே காட்டிக் கொண்டிருந்தமையால், கத்தோலிக்க பணியில் முழு மூச்சாக இயங்கும், திருவருட்சாதனங்களை வழங்கும் ஒரு குருவாக மெக்சிக்கோப் பொலீசாரின் கண்களுக்குத் தென்படவில்லை. பல தடவைகளில் அவரைக் கையும், மெய்யுமாகப் பிடிக்க போலீசார் மோப்ப நாய்களுடன் காவலிருந்தும், அவர்களின் முன்பாக பகிரங்கமாக அவர் உலாவிய போதும் நற்கருணையைத் தம்முடன் கொண்டு செல்லும் ஒரு கத்தோலிக்க குரு என்பதை அவர்களால் உணரவோ, கண்டுபிடிக்கவோ முடியவில்லை.

மெக்சிக்கோக் கத்தோலிக்க மக்களின் விசுவாசமும், அர்ப்பணமும், அவர்களது பரித்தியாகம், பிரமாணிக்கம் நிறைந்த வாழ்வும், பரிதாபத்துக்குரிய இந்த மந்தையை வழி நடத்தும் மேய்ப்பர்களின் (குருக்கள், ஆயர்) வீரத்துவ, பொறுப்புணர்வு கொண்ட அன்பியற் செயல்களும் எம்மைப் பிரமிக்க வைக்கின்றன. கத்தோலிக்க வரலாற்றில் மெக்சிக்கோவின் வேத கலாபனை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் ஒரு நிகழ்வு எனத் திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் பகிரங்கமாக புகழாரம் சூட்டினார்.

மெக்சிக்கோக் கத்தோலிக்கர் நடாத்தியவை அனைத்தும் சாத்வீக - அகிம்சை வழிப் போராட்டமே. போராட்டங்களிலீடுபடும் அத்தனை மக்களதும் கைகளில் செபமாலையும், கழுத்தில் உத்தரியமும் அல்லது வரவணிகமும் இருக்கும். அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து உள்ளம் புனிதமடைந்தவர்களாகத் தம்மை சுத்திகரித்துக் கொண்டதுடன் கெடுபிடிகள் மத்தியில் அடிக்கடி இரகசியமாகத் திருப்பலியில் பங்கு கொண்டு ஆன்மீக உற்சாகம் பெற்றனர். தினசரி தொண்டர்கள் மூலம் திரு விருந்தருந்தி ஆன்ம பெலமும், அன்பர் இயேசுவின் பாதுகாவலும், வழிகாட்டுகையும் பெற்றனர்.

குவாடலுப்பே மாதா திருத்தலம் பக்தியருட்சி மிக்க புனிதம் நிரம்பிய யாத்திரைத் தலம். மெக்சிக்கோ மக்களின் விசுவாச ஊற்றும்,

நம்பிக்கையின் நடுவிடமும் குவாடலுப்பே அன்னை பேராலயமே. அத் திருத்தலத்துக்குப் பச்சாத்தாப திருப்பயணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. திருத்தந்தை 11ஆம் பத்திநாதர், இப் பச்சாத்தாப திருப்பயணங்களை மெற்கொள்ளும் ஒவ்வொரு முறையும் ஒரு பரிபூரண பலனை அடைந்து கொள்ளலாம் என்ற தமது பிரகடனத்தால் இத்திரு யாத்திரைகளை ஊக்குவித்தார்.

## இடைவிடாத் திருப்பலிகள்

ஒக்ரோபர் 12இல் குருக்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஐம்பதினாயிரம் மெக்சிக்கோக் கத்தோலிக்கர்கள் குவாடலுப்பே திருத்தலத்து நிந்தைப் பரிகார திருப்பவனியாக நடந்து சென்றனர். இத் திருப் பவனிக்கு அங்கீகாரமும், ஆசியுமளித்த பாப்பிறை இதில் பங்குபெறும் ஒவ்வொரு குருவும் ஒருநாளில் மூன்று திருப்பலிகளைத் திருத்தலத்தில் நிறைவேற்ற விசேட உத்தரவு வழங்கினார். இதனால் இத் திருப்பவனி திருப்பலிகளின் திரு யாத்திரையாக விளங்கியது. நள்ளிரவுகளிலும் கூட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. [36]

## கிறிஸ்து அரசர் திருவிழா

மெக்சிக்கோக் கத்தோலிக்கரனைவரும் கிறிஸ்து அரசரையே தம் ஒரே தலைவராக ஏற்றுக் கொண்டவர்கள். அவருக்குப் பிரமாணிக்கமாயிருப்பதற்காகவே இப் பெரும் வேதகலாபனைக்கு அஞ்சா நெஞ்சுடன் முகங்கொடுத்தவர்கள். இப் பெரு விழாவில் மெக்சிக்கோ மக்களின் உணர்ச்சிப் பிரவாகத்தை உருக்கமான கோலாகலத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது என்று தமது மடலில் புறோ அடிகள் குறிப்பிடுகின்றார்.

மாட்சிமை மிக்கதோர் நிகழ்வு; புனித மிக்க பக்தியருட்சி நிரம்பிய ஒரு வரலாறு; ஒரு மாபெரும் சாதனை; பிரமிக்க வைத்த செயற்பாடு; ஒரு பரிசுத்தம் பரியமளித்த தெய்வீகக் காட்சி என்கிறார் புறோ அடிகள். பேராலயத்தை நோக்கி அதிகாலை நான்கு மணிக்கு தொடங்கிய திருப்பவனி மாலை 7.30 மணிக்கே வந்து சேர்ந்தது. பாடிக்கொண்டோ அல்லது செபித்துக் கொண்டோ திருப்பவனியாளர் அனைவரும் ஒருவர் தப்பாது குவாடலுப்பே அன்னையின் திருவுருவத்தை அஞ்சலி செய்து சென்றது மக்கள் மனதில் நீண்டகால நினைவில் தங்கும் ஓர் தெய்வீகக் காட்சி.

கல்லும், முள்ளும், குன்றுகளும், குழியும், பள்ளங்களும் நிரம்பிய மெக்சிக்கோ நாட்டில் காலணிகள் தரித்து நடக்காதவர் மிக அருமை. ஆயின் இத் திருப்பவனியில் வெற்றுக் கால்களால் கல்லும் முள்ளும் தாக்கி, இரத்தமொழுக ஒழுக அவர்கள் நடந்து சென்றனர். மெக்சிக்கோக் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் இத் திருப்பவனியைக் கண்ணியமாகவும், கட்டுப்பாடாகவும் நடத்தியதைக் குவாடலுப்பே நகராண்மைக் கழகம் (Municipality) வெகுவாகப் பாராட்டியது. பல திருப்பயணிகள் பாவப் பரிகாரமாக முழந்தாளில் நடந்து சென்றனர். செபமாலையை ஓதியும் பக்திப் பாடல்களை இசைத்தும் சென்ற இப்பாரிய பவனியில் வறியோரும் செல்வந்தோரும் படிப்பறி வாளரும் பாமரரும் தொழிலாளிகளும் முதலாளிகளும் கைகோர்த்துச் சென்று இரட்சகர் இயேசுவின் போதனையை சாதனையில் நிலைநாட்டினர். பிற்பகல் நான்கு மணியிலிருந்து குவாடலுப்பேயின் பேராயரும் ஆயர்களும் பவனியில் இணைந்து சென்றனர்.[37]



<u>பேரணி உருவாக்கிய தாக்கம்</u>

இப் பேரணி புறோ அடிகளின் மிகப் பெரிய சாதனையாகும். இப் பேரணியை ஆட்சியாளன் கலஸ் தொடக்கம் தொட்டு முடிவுவரை நன்கு அவதானித்தான். சில போலீசார் மட்டுமே அவனுடனிருந்ததால் அவன்மீது பழி தீர்க்க இளைஞர் குழுவுக்குத் தாராளமாக வசதிகள் இருந்தும் அவர்கள் எதுவுமே செய்யவில்லை. இளைஞர்களின் கண்ணியமும் கட்டுப்பாடும் போலீசாரை அதிர்ச்சியடையவைத்தது. எனினும் சில தினங்களின் பின் இப் பேரணியின் அமைப்பாளர்களான இருபது இளைஞர்கள் அநியாயமாக குற்றஞ்சுமத்தப்பட்டு சித்திர வதைக்குள்ளாகி இயேசுவின் இரத்த சாட்சிகளாயினர்.

நாளுக்கு நாள் கிறிஸ்தவர் மீது சிறப்பாக இளைஞர் மீது அரசின் அநியாய நடவடிக்கைகள் அதிகரித்தன. புறோ அடிகளும் அஞ்சா நெஞ்சுடன் கிறிஸ்தவப் பணிகளை நடாத்திய வண்ணமிருந்தார். இளைஞரின் பேராதரவு அவருக்கிருந்தது. அவரது மற்றொரு மடல் கூறுகிறது.

"பத்திரிகைச் சுதந்திரம் நசுக்கப்பட்டபடியால் எமது குரலும் சுதந்திர வேட்கையும் அகில உலகத்தாலும் இன்னும் சரிவர அறியப்படவில்லை. எங்கள் போராட்டத்தில் நாம் ஆரம்பத்தில் தோல்விகளைக் காணலாம். எங்கள் (கிறிஸ்தவர்களின்) எதிரிகள் படைப் பலம், பணப் பலம், ஆயுதப் பலத்துடன் பொய்ப் பிரசாரங்களிலும் வல்லவராயிருக்கலாம். இருளின் பலம் உச்ச நிலையடைந்த பின் அடங்குவதும் ஒளி மெதுவாக ஒளிரத் தொடங்கி சுடர்விட்டுப் பிரகாசிப்பதும் உலகம் கண்ட உண்மையாகும். பாடுகளின் முடிவிற்தான் உயிர்த்தெழுகை உண்டு. மெக்சிக்கோவின் எல்லாத் திக்குககளிலுமிருந்து தினமும் பலர் வேத சாட்சிகளாகத் தமதுயிரைத் தியாகம் செய்கிறார்கள். அவர்களுள் நானும் ஒருவனாகுவது எப்போது? அப்பெரும் பேற்றை ஆண்டவன் எனக்குத் தரமாட்டானா?[38]"

## ரோமையின் கரிசனை

பாப்பிறை ஏற்கனவே இந்த இளைஞர்களுக்குப் புனிதர் வரிசையில் இடமளிக்கத் தீர்மானித்து விட்டார். அவருக்கு அன்பளிப்பாக அண்மையில் ஒரு பிரமுகர் கொடுத்த கதிர்ப் பாத்திரத்தையும் குவாடலுப்பே அன்னையின் பேராலயத்துக்கே அனுப்பவிருக்கிறார். எங்கள் மக்கள் மட்டில் திருத்தந்தை கொண்டுள்ள பேரபிமானமும், அனுதாபமும் சொல்லில் அடங்காதவை.

இச் செயல்களால் ஆத்திரமும் அடங்காச் சினமும் கொண்டான் ஆட்சியாளன் கலெஸ். ஆயினும் பேராலயத்துக்கோ, அங்கு கூடியிருந்த மக்களுக்கோ ஊறு செய்ய அவனால் முடியவில்லை. அதே நாளில் ஒரு அரச வாகனத்தைத் தேவாலயத்தின் முன்னால் கூடியிருந்த கத்தோலிக்கர் நிறுத்திய போது அரச அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கத்தோலிக்கரும் சரமாரியாகச் சுட்டனர். இரு பக்கத்திலும் பலர் பிணமாகினர். நானூறு கத்தோலிக்கர் கைது செய்யப்பட்டனர். அவருள் இளம் யுவதிகள் பலர். அவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் அளவிட முடியாதவை.

## எதிர்பாராத தாக்கங்கள்

கலெசின் அரசு எதிர்பாராத இன்னல்களையும் எதிர் நோக்கியது. கத்தோலிக்க பிரமுகர்களும் செல்வந்தர்களும் அரச சார்புடைய வங்கி களுக்கு ஆதரவளிக்காது விட்டமை வங்கிகளின் பொருளாதாரத்தை நலிவடையச் செய்தது. சில வங்கிகளை மூடவேண்டிய கட்டாயமும் உண்டாகியது. வர்த்தக வங்கிகளின் தலைமைப் பீடம் இப் பரிதாப நிலையை ஆட்சியாளன் கலெசுக்கு அறிவித்தது. ஏதாவது மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

கலெஸ் நாணய மதிப்பைக் குறைத்தான். அரச உண்டியலிலிருந்து வங்கிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தான்.

தனது கத்தோலிக்க எதிர்ப்பு எதிர்பாராத விளைவுகளை உண்டாக்கியது கண்டு ஆத்திரமடைந்த கலெஸ் குருக்களில் பழி சுமத்தினான். அவர்கள் அரசுக்கு ஒத்துழைப்புத் தராவிடில் ஒரு தேசிய கிறிஸ்தவ சபையை நிறுவவும், ரோமையுடன் மெக்சிக்கோக் கத்தோலிக்க திருச்சபையின் சகல தொடர்புகளையும் துண்டிக்கப் போவதாகவும் பயமுறுத்தினான். தேசிய கிறிஸ்தவ சபைக்கு மட்டுமே அரச ஆதரவும், பண உதவியும் கிடைக்குமென ஆசை காட்டினான். கத்தோலிக்க குருக்கள், விசுவாசிகளின் இல்லங்கள் இனந்தெரியாதோரால் சூறையாடப்பட்டன. பொன்னும், பொருளும் கொள்ளையடிக்கப் பட்டன.

### புதிய திருப்பங்கள்

மெக்சிக்கோத் திருச்சபை தன் கொள்கையை விட்டுக் கொடுக்காதிருந்தது. யூலை *31* கலெசின் மூர்க்கத்தனமான கட்டளைகளைக், குருக்களுக்கெதிரான கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டன. பல குருக்கள் அநியாயமாக வதைக்கப்பட்டு உயிரிழந்தனர். எனினும் ஆயர்கள் மீது கலஸ் கை வைக்கவில்லை. குருக்களை மிகக் கேவலமாக தூஷித்துக் கையினால் வரையப்பட்ட நிந்தனைகளையும், கண்டனங்களையும் தெருத் தெருவாகப் பரப்பினான். அரச, தனியார் அச்சகங்களில் இவ்வித ஆபாச, மஞ்சட் பிரசுரங்களை அச்சடிப்பது ஆபத்தானதென்பதை கலெசின் ஆதரவாளர்கள் வற்புறுத்தியிருந்தனர்.

### குருக்கள் பற்றாக்குறை

குருக்களுக்கெதிரான வன்செயல்களும், கொலை முயற்சிகளும் மெக்சிக்கோவிற் பரவலாக இடம் பெற்றதால் கத்தோலிக்கரின் ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் இடர்பாடுகள் தோன்றின. அருட்சாதனங்களை வழங்குவதில் காலதாமதமுண்டாயிற்று. ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றவும், இறுதி அருட்சாதனங்களை வழங்கவும் குருக்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

### பலூன்களிற் பிரசாரம்

டிசம்பர் 4இல் கத்தோலிக்க இளைஞரால் மற்றொரு விதமான எதிர்ப்புப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொன்றும் 3அடி குறுக்களவுள்ள அறுநூறு பலூன்கள் ஆகாயத்தில் பறக்க விடப்பட்டன. ஒவ்வொரு பலூனிலும் ஒத்துழையாதே, சத்தியாக்கிரகம் செய்,

எதிர்ப்புக்காட்டு போன்ற சுலோகங்கள் பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தன. அச்சடிக்கப்பட்ட அரச எதிர்ப்புப் பிரசாரத் துண்டுக் காகிதங்கள் முதலில் பச்சை நிறத்திலும், பின் வெள்ளை நிறத்திலும், இறுதியாகச் சிவப்பு நிறத்திலும் மழையெனப் பொழிந்து நகரமெங்கும் விழுந்தன. இளைஞர் இயக்கச் சின்னமும் பலூன்களில் தெளிவாகத் தெரிந்தன. மக்கள் பதகளித்தனர்; அரசு உசாராகியது.

பலூன் பிரசாரத்தின் காரண கர்த்தா யாரென்பதைக் கண்டு பிடிக்க உளவுப் பொலீசார் தீவிர முயற்சி எடுத்தனர். சாதாரணமாக இவ்வித பிரச்சனைகளில் மெக்சிக்கோப் போலீசார் செய்வதெல்லாம் நூற்றுக்கணக்கில் இளைஞர்களைக் கைது செய்து அவர்களைத் துன்புறுத்தி விசாரணை செய்வதே. எனினும் யார் சூத்திரதாரி என்பது அறியப்படுவதில்லை. போலீசாரின் சந்தேகம் புறோ அடிகள் மேல் விழுந்தது.

### போலீஸ் வலையில் புறோ அடிகள்

புறோ அடிகளின் இல்லத்தைச் சுற்றிப் போலீசார் குவிக்கப் பட்டனர். பகல் பன்னிரு மணியிலிருந்து இரவு ஏழு மணி வரை அவ் இல்லத்துக்கு யார் வந்தாலும் கைது செய்யுமாறு ஆணை பிறந்தது. புறோ அடிகள் தம்மில்லத்துக்கு அந்நேரத்தில் வந்தார். கைது செய்யப்பட்டார்.

வேறு இளைஞர்கள் ஆறுவருடன் புறோ அடிகளும் சிறைச்சாலைக் குக் கொண்டு செல்லப்பட்டார். புறோவைக் கண்டவுடன் "நாளைக்கு நாம் பூசை காணலாம்" என்று தளபதி ஒருவர் பரிகாசமாக கூறினார்.

இரவு நெருங்கியது மெக்சிக்கோ நகர், கடல் மட்டத்திலிருந்து 7500 அடிகள் உயர்வில் அமைந்துள்ளது. எனவே இரவின் குளிர் பயங்க ரமானது தடித்த கம்பளிப் போர்வைகள் கனத்த ரக மெத்தைகளின்றி நித்திரை வராது. குளிருக்குத் தாக்குப் பிடிக்க அவை அவசியம் தேவை. புறோ வெறுந் தரையில் கைகளையே தலையணைகளாகக் கொண்டு படுத்தார்.

என்னுடைய பையில் மூன்று பியாஸ்ரேஸ் நாணயங்கள் மட்டுமே இருந்தன. அவைகளைக் கொண்டு ஒரு பிடி தோடை இலைகளை வாங்கி அவித்து சீனி இன்றிப் பருகினேன். இது தான் சிறையில் எனது முதல் நாளைய உணவு என்று அவரது கடிதமொன்று சொல்கிறது.

### சிறையிலிருந்து விடுதலை

அன்று பகல் நான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். என்னுடன் கைது செய்யப்பட்ட பலர் அடுத்த தினங்களிற் தான் மீட்புப் பெற்றனர். நான் சில கட்டுப்பாடுகளை ஏற்று அதன்படி நடக்கவேண்டுமென அதிகாரிகள் கூறினர்.

பலுரன் விகாரம் சம்பந்தமாக ஆட்சியாளர் கலெஸ் என்மேல் மிகுந்த கோபங் கொண்டுள்ளார் என்றும், ஆகவே இனிமேல் நான் இவ்வித விவகாரங்களில் ஈடுபட்டால் மிகப் பெரிய தொகையை அபராதமாகச் செலுத்த நேரிடும் என்றும் கூறப்பட்ட போது, பொங்கி வந்த பெருஞ் சிரிப்பை என்னால் அடக்க முடியவில்லை. எனது கேலிச் சிரிப்பால் ஆத்திரங்கொண்டு என்னை அவர்கள் சுட்டுக் கொல்லாதது ஆச்சரியம் தான்.

நான் கூறியது: "ஐயாமாரே என்னிடம் அரைப் பாதிங் (Half A Farthing) நாணயங்கள் கூட இல்லை. அது மட்டுமல்ல நான் சிறையிலிருப்பேனே தவிர, இந்தக் கேடு கெட்ட அரசாங்கத்துக்கு ஒரு சல்லி கூடக் கொடுக்க மாட்டேன்" என்றேன்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் எனது நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன; மட்டுப்படுத்தப்பட்டன. எனினும் ஒரு குருவாக நான் ஆற்றும் வழிபாடுகளுக்குத் தடை விதிக்கப்படவில்லை.

கிறிஸ்மஸ் திருநாளுக்கு என் பங்குகளின் கிறிஸ்தவர்களை நான் ஆயத்தம் செய்ததுடன் பதினாறு அகதி முகாம்களிலும் அதே பணியை நிறைவேற்றினேன்.

கிறிஸ்மஸ் திருநாளில் அதிகாலை தொடக்கம் நள்ளிரவு வரை எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வழிபாடு நடத்தித் திருவிருந்தும் வழங்கினேன். 29ஆம் திகதி எனது வீட்டுக்கு ஒரு பட்டாளம் படையெடுத்தது. எனது உறவினர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டனர். எனது தந்தையும், இரு சகோதரரும் நானும் கைது செய்யப்படவில்லை. எனினும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோம். இரு பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டன.

1ஆவது, பிரசுரங்களைத் தயாரித்ததற்கு நானே பொறுப்பானவன். 2ஆவது, பலூன்களைப் பறக்கவிட்டவர்கள் என் சகோதரர்கள். ஆயினும் இரண்டுமே உண்மையில்லை.

எனினும் புறோ அடிகளின் நலன் கருதி அவரது பகிரங்க நடமாட்டங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் கத்தோலிக்க மேலதிகாரிகள் தடை விதித்தனர். அடிகள் தனது சிறிய அறையில் முடங்கிக் கிடக்கவில்லை. தமது பண்டிதப் பரீட்சைக்காகப் பாடநூல்கள் அறிக்கைகள் படிப்பதில் செலவிட்டார். மேலதிகாரிகளுக்கு அமைவது அனைத்துக்கும் மேலானது என்பது அவர் கொள்கை.

தினசரி திரளானோர் இறுதி அருட்சாதனங்களைப் பெறாமலே மரிப்பது கேட்டு ஆறாத்துயரடைந்தார். குருக்கள் பற்றாக்குறை மிகுதியாயிருந்தது; எனது மேலதிகாரிகள் நான் வெளியே சென்று எனது குருத்துவக் கடமைகளைச் செய்வதை ஏன் தடைசெய்ய வேண்டும்? எனது உயிரைக் காப்பாற்ற எனது அதிகாரிகள் முயற்சிக்கலாம். ஆயினும் ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர் அருட்சாதனங்களின்றி மரிக்கின்றனரே. லொயலாவின் புதல்வன் இவ்விதம் இயேசுவில் இணையைத் தன் சொந்த உயிரை அடகு வைக்கலாமா என்பது புறோ அடிகளின் மிகப்பெரிய கவலை. (லொயலா என இங்கு குறிப்பிடுபவர் இயேசுசபையின் ஸ்தாபகரான புனிதர் இக்னேசியஸ் லொயலா ஆகும்.) எனினும் இரட்சகர் இயேசு தமது விண்ணரசைப் பரப்பும் உன்னத பணியாளனான புறோ அடிகளைக் கம்மியூனிஸ அரசின் பல வகையான கண்ணி வலைகளிலுமிருந்து காப்பாற்றி அவருக்கு அளிக்கப்பட்ட பாரிய பணி நிறைவேற்றப்படும்வரை காத்து வந்தார்.

அடுத்த ஜனவரியில் கத்தோலிக்கர் மீதான தமது பாரிய தாக்குதலை நாஸ்தீக அரசு முழுமையாக செயற்படுத்தத் தொடங்கியது. மெக்சிக்கோவின் பேராயர் டயஸ் முதலில் கைது செய்யப்பட்டார். பின் குற்றங்கள் பல சுமத்தப்பட்டு நாடு கடத்தப்பட்டார். தொடர்ந்து எண்பது குருக்கள் கை விலங்கிடப்பட்டுத் தலைநகருக்குக் கொண்டு வரப்பட்டனர். மேலும் 300 குருக்கள் ஜெலிஸ்கோ மாவட்டத்தில் கைதாகினர். இக் குருக்களுள் இருவர் தீவிரவாதிகள் சிலரால் ஒரு வித உலோகக் கலவையால் இரு கைகளிலும் எரி காயமூட்டப்பட்டனர். அவர்களுக்குச் சிகிச்சையளிக்க வைத்தியரெவரும் அனுமதிக்கப் படவில்லை. பக்திச் சபையாளர்களும் சிறைபிடிக்கப்பட்டுப் பலத்த

சித்திரவதைக்குள்ளாயினர். ஆகவே இயேசுவுக்கு சாட்சி சொல்வோருக்கு ஆன்ம பலம் மட்டுமல்ல அகோர தண்டனைகளைத் தாங்கிக் கொள்ளுமளவுக்கு சரீர பலமும் அவசியம் தேவையாயிற்று.

இக் காலத்தில் புறோ அடிகளுடன் பணி புரிந்த ஒரு குருவின் கடிதம் இது:- "புறோ அடிகள் ஒளிவு மறைவின்றிப் பகிரங்கமாக நற்செய்திப் பணியில் - அருட்சாதனங்களை வழங்கும் அலுவலில் முழு மூச்சாக ஈடுபட்டார்; போதித்தார்; சாதித்தார். அவரைக் கைது செய்ய அடிக்கடி வாரன்ட் விடுக்கப்பட்டது. எனினும் ஏதோ காரணங்களாற் கைது செய்யப்படவில்லை."

தமது நற்செய்திப் பணியின் மற்றொரு சாதனையாக புறோ அடிகள் தியான, ஒடுக்க வழிபாடுகளை ஊக்குவித்தார். ஒவ்வொரு வித தொழிலாளிகளுக்குமென வெவ்வேறு தியானங்கள் நடத்தப்பட்டன. தொழிலாளர்களும் பெருந்திரளாக வந்து பங்கு பற்றினர். ஆயினும் இத் தியானங்களில் விசுவாசிகள் பெருமளவில் பங்கு பற்றுவது கம்மியூனிஸ்த ஆட்சியாளரைச் சிந்திக்க வைத்தது. தொடர்ந்து இவ்வித கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

எனவே புறோ அடிகள் தமது அடுத்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். அது கத்தோலிக்க குடும்பங்களைச் சிறு சிறு குழுமங்களாகப் பிரித்தல். ஒவ்வொரு சிறு குழுமத்திலும் உள்ளவர்கள் ஒரு வீட்டில் ஒன்று கூடுவர். வெளியில் பார்ப்போருக்கு இது ஏதோ வைபவத்துக்கான ஒன்றுகூடலாகத் தோன்றும். அங்கு மறைக்கல்வி, ஞான சல்லாபம் முதலிய பல நிகழ்வுகள் இடம் பெறும். திடீரெனக் குரு வந்து சேர்வார். உடனடியாகப் பாவ சங்கீர்த்தனம், திருப்பலி முதலிய சடங்குகள் இடம்பெறும். இவை முடிந்ததும் குருவும் வெளியேறி விடுவார்.

தம்மை ஒருமுறை கைது செய்து விடுவித்த கலெஸ் ஆட்சியாளர்களைப் பழிவாங்கப் போவதாக நண்பர்களிடம் கூறினார் புறோ அடிகள்.

எப்படி பழிவாங்கப் போகிறாய்?

கத்தோலிக்கரிடையே கருத்தரங்குகளும், தியான வழிகாட்டுகைகளும், ஞான ஒடுக்கங்களும் நடாத்தி, அவர்களை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்துவதே அப் பழிவாங்குகளை என அவர் விளக்கினார்.

ஆர்வமுள்ள பெண்களை சிறு சிறு குழுமங்களாகக் கூட்டி விசுவாச விளக்கங்கள், விவிலியக் கருத்தரங்குகளால் அவர்களை உறுதிப்படுத்தினார். இப் பெண்கள் அவரிடம் பெற்ற விசுவாச வித்துக்களைத் தம் நண்பிகள்

கூட்டங்களில் விதைப்பர். இவ்விதமே குருக்களின் அலுவல்கள் பல, பெண்கள் குழுக்களால் மெக்சிக்கோவின் மூலை முடுக்குகளெங்கும் பரிமாறப்பட்டன.

அடுத்து அரச ஊழியர்களிடையே அடிகளின் கவனம் திரும்பியது. தங்கள் குடும்ப சீவனத்துக்காக அரச ஊதியத்தையே நம்பியிருந்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆட்சியாளன் கலெசைத் திருப்திப்படுத்துவதற்காகக் கத்தோலிக்க கடமைகளை உதாசீனம் செய்யத் தொடங்கினர். அவர்களின் குடும்பத்தினரும் அவ்வழியே சென்றனர்.

எனவே அரச ஊழியர், அதிகாரிகள், உத்தியோகத்தர்களையும் அவரவர் தரங்களுக்கேற்ப சிறு சிறு குழுமங்களாக்கிக் கத்தோலிக்க சிந்தனைகளை அவர்களிடையே பரவ விட்டார். திருப்பலி, திருவிருந் தருந்துகை எனத் தொடங்கிய இக் குழுமங்களில் திறமையாளர், உரையாளர், இணைப்பாளர் எனத் தகுந்தவர்களிடையே பொறுப்புக ளைத் தந்து கத்தோலிக்க விசுவாசம் அரச அதிகாரிகளிடையே அணைந்து போகாது சுடர்விடச் செய்தார்.

இவ்விதம் பல்வேறு அடக்கு முறைகள் மத்தியில் மெக்சிக்கோவில் கத்தோலிக்க விசுவாசம் ஆழமாக வேரூன்றியது மட்டுமல்ல பல்வேறு வழிகளில் ஆட்சியாளர்களையும், போலீசாரையும், ஏமாற்றி திருவருட்சாதனங்கள் அருளப்பட்டுத், திருப்பலிகள் ஒப்புக்கொடுக் கப்பட்டும் வருவது கலெசுக்கும் அவனது கூட்டத்தினருக்கும் பெருந் தலையிடியை மட்டுமல்ல அதிர்ச்சியையும் அளித்தது.

இதனால் கத்தோலிக்கர் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பெரிய வெள்ளியன்று இருபத்திமூன்று வயதுடைய மனுவல் பொனிலா கைது செய்யப்பட்டான். நகரின் பிரதான சந்தியொன்றில் நின்ற மரத்தில், சிலுவை மரணத்தைக் கேலி செய்வதுபோல் அவனது கைகளும் கால்களும் கூராணிகளால் அறையப்பட்டன. பகல் பன்னிரு மணி முதல் மூன்று மணிவரை பொனிலாவைச் சித்திரவதை செய்தனர். உடம்பெல்லாம் காயங்கள் மிகுந்து இரத்தம் ஆறாய் ஓடியது. மூன்று மணிக்குச் சிலுவையில் நின்று இறக்கித் துப்பாக்கிகளால் சுட்டுக் கொன்றனர். மெக்சிக்கோவெங்கும் இவ்விதமே சித்திரவதைகளும் கொலைகளும் கத்தோலிக்க விசுவாசத்துக்குப் பரிசாக வழங்கப்பட்டன.

புறோ அடிகளின் அயராத உற்சாகமூட்டுதலும் பரித்தியாக வாழ்வுமே இந்த விசுவாச சாட்சியங்களுக்கு உந்து கோலாக விளங்கியது. ஒரு நாளில் ஆக மொத்தம் 24 மணித்தியாலங்கள் மட்டுமே நான் இறையரசைப் பரப்புகிறேன். இயேசுவின் இரட்சணிய அலுவலில் உழைக்கிறேன். இன்னும் கூடுதலாக நேரம் தரப்படின் இன்னும் அதிக பணிகளில் உழைப்பேனே என அடிக்கடி அடிகள் கூறுவதுண்டு.

மிகுந்த ஊக்கமுடன், விசுவாச வாழ்விழந்து விலகி, அருட்சாதனங்களை வேண்டுமென்றே ஒதுக்கிவிட்ட கத்தோலிக்கர் மட்டில் புறோ அடிகள் உழைப்பார். ஏச்சுக்கள், பேச்சுகள், திட்டுகளால் மனந் தளராது தமது முயற்சி அனைத்தும் வீணாவது கண்டும் மனம் வருந்தாது மீண்டும் மீண்டும் அந்த ஆன்மாக்களை அலகையிலிருந்து மீட்டெடுத்து விசுவாச வாழ்வு வாழச் செய்ய தன்னாலியன்றவரை முயற்சிப்பார்.

ஒரு சாதாரண குரு செய்யவேண்டிய பணிகளை விட மும் மடங்குப் பணிகளை மெக்சிக்கோவில் பணியாற்றிய குருக்கள் அக்காலத்தில் செய்யவேண்டியிருந்தது. கத்தோலிக்க விசுவாசம், ஒரு குருட்டுப்பக் தியாகவே காணப்பட்டது. திருமுழுக்குப் பெறாமலே ஏனைய அருட்சாதனங்களைப் பெற்றோர், 25 வயதாகியும் திருமுழுக்கு பெறாதோர், திருமணத்துக்காகப் பாவசங்கீர்த்தனம் செய்வோர், ஏனைய அருட்சாதனங்களைப் பெறாமலே பெற்றதாகக் கூறித் திருமணம் செய்தோர் என்ற வகையில் ஏராளமான மனப் பக்குவமற்றோர் மத்தியில் பணியாற்ற வேண்டிருந்தது.

மெக்சிக்கோவின் வேத கலாபனைகளில் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்தவர்கள் 17 வயதுக்கும் 27 வயதுக்குமிடைப்பட்ட இளைஞர்களே. 180 இளைஞர்கள் கிறிஸ்து அரசர் நீடூழி வாழ்க என்ற கோஷங்களோடு துப்பாக்கி முனையில் நின்று வீரமரணம் எய்தினர். 160க்குமதிகமான மேற்றிராசனக் குருக்கள் வேத சாட்சிகளாகக் கொல்லப்பட்டனர்.

1926ஆம் அண்டு மே 1ஆந் திகதி தொடக்கம் 8ஆந் திகதி வரை சிவப்பு வாரம் என்ற சிறப்புப் பெயரைப் (மாசற்றவர்கள் இரத்தம் சிந்தியதால்) பெற்றது. 17 குருக்கள் வேதசாட்சிகளாயினர். 6 கத்தோலிக்கச் சீமாட்டிகள் தூக்கிலிடப்பட்டனர். மெக்சிக்கோவின் கத்தோலிக்கப் பெண்களும் சிறப்பாக இளம் பெண்களும் வீரத்தோடு

வீதிகளில் நடந்து கிறிஸ்துவை அறிக்கையிட்டு விசுவாச அறிக்கையால் சிறைப்பட்டோரை விடுவிக்கும்படி இராணுவத்தினரைக் கேட்டனர். அவர்களது எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத இராணுவம், பின்வாங்கி ஓட வேண்டியதாயிற்று.

எனினும் கத்தோலிக்க குருக்களுக்கும், கன்னியர்களுக்கும் எதிராகக் காடைத் தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது. 80 வயதான பிரான்சிஸ்கோ வேரா அடிகளார், திருப்பலி நிறைவேற்றியதற்காக திருப்பலி ஆடைகளுடன் கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு இயேசுவின் இரத்த சாட்சியானார். பரிசுத்த பாப்பரசர் தனது சுற்று மடலில் மெக்சிக்கோவின் முதல் 5 வேத சாட்சிகளின் பெயர்களை விசேடமாக குறிப்பிட்டிருந்தார்.

மனுவல் மெல்கறேயோ (17 வயது), யோங்கிங் சில்வா (27 வயது) இருவரும் இவர்களில் முக்கியமானவர்கள். சில்வாவைச் சுடுவதற்குமுன் அவரது செபமாலையைப் பறிக்க எத்தனித்தனர். ஆயினும் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. "என்னுடைய கண்களைக் கட்ட வேண்டாம். நான் குற்றவாளி அல்ல. கிறிஸ்து அரசரும் குவாடலுப்பெ அன்னையும் நீடூழி வாழ்கவென நான் உரக்கக் கூவிய பின் சுடுங்கள்" என்றார்.

சுடுவதற்கு நிறுத்தப்பட்ட இராணுவத்தினரில் ஒருவன் நான் சுடமாட்டேன்; ஏனெனில் நான் ஒரு கத்தோலிக்கன் என்றான். தன் துப்பாக்கியை நிலத்தில் எறிந்துவிட்டான். அடுத்த நாள் அவனும் வேதசாட்சியானான்.

1927 ஏப்ரல் 1ஆந் திகதி இரு குழந்தைகளின் தந்தையான கொன்சாவெஸ்புனோறேஸ் என்ற கத்தோலிக்க சட்டத்தரணியின் வீட்டைப் பொலீசார் சுற்றிவளைத்து அவரையும், கூடவிருந்த மூன்று இளைஞர்களையும் சாட்டையால் அடித்துப், பேராயர் மறைந்திருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்கும் படி நிர்ப்பந்தித்தனர். அவர்கள் மறுத்ததினால் நண்பர்கள் மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். புளோறேஸ், கண்கள் வாய் உட்பட உடலின் பல பகுதிகளிலும் துப்பாக்கியில் பொருந்தப்பட்டுள்ள கூர்க்கத்தியால் குத்திக் காயப்படுத்தப்பட்டு, கழுத்தில் கயிறிடப்பட்டு, அவனைக் காண வந்த அவனது இளம் மனைவியின் முன் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

உலகின் பல நாடுகளிலிருந்தும் கொடுங்கோலன் கலெசுக்கு எதிராகக் கண்டனங்கள் எழுப்பப்பட்டன. 1927ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிறிது அமைதியான நிலை ஏற்பட்டது. புறோ அடிகள் இரகசியமாகத் திருப்பலி, நிறைவேற்றித் திருவருட் சாதனங்களை வழங்கி வந்தார். பல தடவைகள் இரகசியப் பொலீசாரிடமிருந்து மயிரிழையில் உயிர்தப்பினார். அவருக்குக் கிடைத்த இந்த இடை வேளையிற் பல ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் உணவு, உடை, இல்லிடம் கொடுத்துதவினார். இப் பொருட்களைச் சாக்குப் பைகளிற் போட்டுத், தன் முதுகில் சுமந்து செல்வார். இவ்விதமே ஒருமுறை ஆறு கோழிகளையும் ஒரு வான்கோழியையும் சாக்கில் போட்டுச்சுமக்க வேண்டியிருந்தது. வீதிகளில் கை விடப்பட்ட குழந்தைகளையும் இவ்விதமே சுமந்துசென்று தமது பராமரிப்பு இல்லத்தில் சேர்ப்பார்.

இவரது அன்புச் செயல்களைக் கண்டு பரிகசிப்பவர்களும், கேலி பண்ணுபவர்களும் பலர். அவற்றையிட்டு கோபமோ, மனவருத்தமோ கொள்ளாத புறோ, அவர்களுக்கு மேலாக உரக்கச் சிரிப்பார்.

அக்டோபர் மாதத்தில் மெக்சிக்கோ நகரிலிருந்து ஐம்பது மைல் தொலைவிலுள்ள ரொலுக்கா என்ற இடத்தில் ஞான ஒடுக்கம் போதித்துவிட்டு பகிரங்க பாதையால் வீடு திரும்பினார். வழி நெடுகலும் இரகசியப் பொலீசார் மைக்கல் புறோ என்ற குற்றவாளியைத் தேடிக் காத்திருந்தனர். ஆயினும் அவர் தப்பி வீடு வந்து சேர்ந்தார்.

அக்டோபர் 30ஆந் திகதி கிறிஸ்து அரசர் திருநாளுக்கு மூன்ற நாட்களின் முன் இரகசியப் பொலீசாரின் மிரட்டல்களுக்கும் பயப்படாது அங்கு கூடியிருந்த 150 விசுவாசிகளைச் சந்தித்தார். இவர்கள் இறை வார்த்தையின் பஞ்சத்தை உணர்ந்தவர்கள். அவர் நடத்தும் ஞான ஒடுக்கங்களுக்குத் தொழிலாளிகள் பெருந்திரளாக வந்து சேர்வர். ஞான ஒடுக்கங்களால் ஏற்படும் நல்ல அறுவடையை உணர்ந்த புறோ அடிகள் சலியாத மனத்தினராய் ஒன்றன் பின் ஒன்றாக ஞான ஒடுக்கங்களை நடத்தியபடியே இருந்தார்.

நவம்பர் முதற் தேதியில் ஆளுநர் கலெசின் நண்பனான தளபதி ஒப்றேகொன் ஒரு காளை மாட்டுச் சண்டைக் காட்சியைப் பார்க்கச் செல்லும் வழியில், குண்டு வீச்சிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினான். இதைச் சாட்டாக வைத்து புறோ அடிகளையும், அவர் சகோதரர் கும்பேட்டையும் கைது செய்தனர். குண்டை வீசியவர்களில் இருவர் தப்பி விட்டனர். ஒருவர்சுட்டுக்கொல்லப்பட, ஒருவர் வைத்தியசாலையிற்

காலமானார். சிறைச்சாலைக்கு நோபோட்டோ என்ற வேறொரு சகோதரனும் வீதியில் சென்ற ரிறாடோ என்ற ஏழைத் தொழிலாளியும் அநியாயமாக இழுத்து வரப்பட்டனர்.

சிறையில் புறோ அடிகள் உரத்த சத்தமாக செபமாலையைச் செபிப்பார். இரவில் எல்லோரும் கேட்கும்படி தமது அறைக் காவலில் இருந்து கொண்டே பாவமன்னிப்புச் செபத்துடன் இராச் செபத்தையும் சொல்லி முடிப்பார்.

நவம்பர் 22இல் பத்திரிகையாளர்கள் அவரைச் சந்தித்தபோது, தங்களுக்கும் இக் குற்றங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனத் திட்டவட்டமாக அரசின் குற்றச்சாட்டுக்களை மறுத்தார். அடுத்த நாள் புறோ அடிகளும் அவருடன் சிறையிலிருந்த மூவரும் வெளியே கூட்டிச் செல்லப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டனர். அடிகளைச் சிறையிலிருந்து அழைத்து வந்த கொலையாளி அவரிடம் மன்னிப்புக் கோரினான். ‘‘நான் உமக்கு மன்னிப்பு மாத்திரமல்ல நன்றியும் கூறுகின்றேன். உமக்காகவும் செபிக்கிறேன்" என்று கூறி அவரின் தோளில் கை வைத்து அரவணைத்தார்.

புறோ அடிகள் ஒரு தோட்டத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டாார். தோட்டம் முழுவதும் இராணுவ வீரர்களால் நிறைந்திருந்தது. உயர் மேடையில் இராணுவ உயர் அதிகாரிகள் கதைத்துக் கொண்டும், புகைபிடித்துக்கொண்டும் இருந்தவர்கள் அடிகளைக் கண்டதும் அமைதியாயினர். முதலில் நால்வரும் படம் பிடிக்கப்பட்டனர்.

உயர் அதிகாரி ஒருவர் மிகுவேல் அகஸ்ரின், புறோ அடிகளை அழைத்தார். அடிகள் முன் வந்து தனக்குக் காட்டப்பட்ட பாரிய மரக்கட்டையின் முன் நின்றார். உன் கடைசி விருப்பம் என்ன என அதிகாரி கேட்டார். ‘‘நான் செபிக்க விரும்புகிறேன்" எனப் பதில் வந்தது. அனுமதி கிடைத்ததும் முழங்காலில் நின்று, கண்களை மூடி, கைகளை நெஞ்சில் வைத்து இரண்டு நிமிடங்கள் செபித்தார். பின் எழுந்த, அவரது முகத்தில் தெய்வீக ஒளிவீச உரத்ததொனியில் ‘‘இறைவன் உங்கள் மேல் இரக்கம் காட்டுவாராக! இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆண்டவரே நான் நிரபராதி என்பது உமக்குத் தெரியும். என் முழு இருதயத்தோடும் என் எதிரிகளை மன்னிக்கிறேன்," என்று கூறினார்.

அதிகாரி சுட்டிக் காட்டிய இடத்தில் நின்று, பையில் இருந்த திருச்சிலுவையை எடுத்து வலது கையிலும், திருச்செபமாலையை இடது கையிலும் தாங்கியவாறு திருச்சிலுவையின் வடிவத்தில் தமது கைகளை

விரித்தார். திருப்பலி வேளையில் யேசுவின் திருவுடலை உயர்த்தும் போது குருக்கள் கூறும் வார்த்தைகளை ஸ்பானிய மொழியில் "வீவா கிறிஸ்தோறே" (கிறிஸ்து அரசர் நீடுழி வாழ்க) என உச்சரித்த போது சுடு! என்ற கட்டளை பிறந்தது. ஐந்து துப்பாக்கிச் சன்னங்கள் அவர் இதயத்தைத் துளைத்தன. சில வினாடிகளில் அவர் உடல் இரத்த வெள்ளத்தில் மிதந்தது. இராணுவ உயர் அதிகாரி வந்து உற்று நோக்கினான். பின் தனது துப்பாக்கியால் அடிகளின் தலையில் சுட்டான். புறோ அடிகள் இயேசுவின் இரத்த சாட்சியானார். தொடர்ந்து அவரின் சகோதரர் உட்பட ஏனைய கைதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நவம்பர் 23இல் புறோ அடிகளதும் ஏனையவர்களினதும் சடலங்கள் கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டன. இப் புனிதர்களின் சடலங்களைத் தரிசிக்க மக்கள் வெள்ளம் ஆலயத்தில் அலையலையாக வந்து குவிந்தது. 24ஆந் திகதி பிற்பகல் இறதி ஊர்வலம் ஆரம்பமாகியது. இராணுவத்தினதும் போலீசினதும் கட்டுப்பாடுகளைப் பொருட் படுத்தாது, இருபதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் அணி வகுத்து அழுத வண்ணம் செபித்துக் கொண்டும் திருப் பாடல்களைப் பாடிக்கொண்டும் அணி வகுத்துச் சென்றனர். அடிக்கடி கிறிஸ்தோறே! என்று கத்தினர். எங்கள் திருச்சபை வாழ்க! எங்கள் பாப்பரசர் வாழ்க! என்ற வாழ்த்துக்களுடன் இயேசு சபைக் கோவிலுக்குப் புறோ அடிகளின் பூதவுடல் கொண்டு செல்லப்பட்டு அழுகைக் குரல்கள், கண்ணீர்த் துளிகள் மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. [39]

வாழ்க புறோ அடிகள்!
வளர்க குருத்துவத்தின் புனித பணி வாழ்வு!

இயேசுவின் இரத்த சாட்சியான மைக்கல் புறோ அடிகள் மெக்சிக்கோவின் கிறிஸ்தவ கலாபனைகளிற் சித்திரவதை செய்யப்பட்டுத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகியதை இதுவரை பார்த்தோம். அவரோடு சம காலத்தில் 150 குருக்களும் யேசுவின் சாட்சிகளாயினர். இவர்களுள் வேத சாட்சிகளான 27 விசுவாசிகளை அண்மையிற் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் ரோமையின் புனித பேதுரு பேராலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் அர்ச்சியசிஷ்டவர் களாக கௌரவித்துப் புனிதர் வரிசையிற் பதிந்து வைத்தார்.

1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் நாளில் மேற் கூறப்பட்டோருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கப்பட்டது. இப்

புனிதர்களில் 22 பேர் குருக்கள், ஏனையோர் பொது நிலையினர். இவர்கள் கிறிஸ்து வேதத்தை அனுசரித்த குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றி சிறையிலிடப்பட்டனர். இவர்கள் பயங்கர சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டும் கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்தனர். இறுதிவரை கிறிஸ்து அரசரைப் புகழ்ந்து கொண்டே வீரமரணத்தைத் தழுவினர்.



இவர்களுள் கிறிஸ் ரோபல் மகலன்ஸ் ஜாறா அடிகள் (பிறப்பு 1869 யூலை30) தமது இறுதியுரையில் எனது இரத்தம், எனது மெக்சிக்கோ சகோதரர்களை ஐக்கியப்படுத்த வேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறேன் என்று மன்றாடினார்.

அகஸ்ரின் கலோகா கோடெஸ் அடிகளும் - (பிறப்பு 1896 மே 5இல்) அதிக வேதனைப்படுத்தப்பட்டு 1897 மே 25இல் வீரமரணமடைந்தார்.

ஜோஸ்மரியா றொப்லஸ் கற்றாடோ அடிகள், (பிறப்பிடம் மஸ்கொற்ற ஜலிஸ்கோ) 1889 மே 3 தேவதாரு மரமொன்றில் 1827 யூன் 26இல் தூக்கிலிடப்பட்டார்.

டேவிற் கல்வன் பேர்முட்ஸ் அடிகள், ஜலிஸ்கோவிலுள்ள குயாட்லாஜாரா கிராமத்தில் 1881 ஜனவரி 29இல் பிறந்தார். தமது மார்பைத் திறந்து காட்டி இங்கே சுடுங்கள் எனக் கொலையாளிகளுக்கு அஞ்சா நெஞ்சுடன் கூறி 1915 ஜனவரி 30இல் வீரச்சாவைத் தழுவினார். ஜஸ்ரினோ ஒறோனோ மட்ரிகல் அடிகள், ஜலிஸ்காவிலுள்ள அற்றோயாக் என்னுமிடத்தில் பிறந்தார். 1926 யூலை 1இல் கிறிஸ்து அரசா நீடுழி வாழ்க! என முழங்கிக் கொண்டே துப்பாக்கி ரவைகள் உடலைத் துளைக்க இறைவனடி சேர்ந்தார்.





அலிலோனோ குருஸ் அல்வாராடோ அடிகள், ஜலிஸ்கோ நகரில் அகுலிற்றா பகுதியில் 1901 ஒக்ரோபர் 5இல் பிறந்தார். லஸ்குரூசெஸ் பகுதியில் 1928 யூலை 1இல் கிறிஸ்துவுக்காக உயிர் நீத்தார்.

ரோமன் அடம் ரோசலெஸ், ஜலிஸ்கோவின் ரேயோகாலிச் பிரிவில் 1859 பெப்ரவரி 27இல் பிறந்தார். 1927 எப்பிரல் 21இல் சுடப்பட்டார்.

யூலியோ அல்வாரெஸ் மென்டோஸா அடிகள், ஜலிஸ்கோ பகுதியின் குஜடாலயாராவில் 1866 டிசம்பா 20இல் பிறந்தார். ''அமைதியாக அன்பாக, இயேசுவின் அப்போஸ்தலனாக பணியாற்றியதே என் குற்றம். உங்களெல்லோரையும் மன்னிக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே உயிர் துறந்தார். (1927 மார்ச் 30)

பாத்ரோ எஸ்குவாடோ றமிரெஸ் அடிகள், ஜலிஸ்கோவின் சான்யுவான் டி லொஸ் லகாஸ் கிராமத்தில் 1887 ஏப்ரல் 29இல் பிறந்தார். 1927, நவம்பர் 22இல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

றொட்ரிக்கோ அகுவார் அலெமன் அடிகள் பிறப்பு 1875 மார்ச் 13 ஜலிஸ்கோவின் சயலாய பகுதியில் என்றும் வாழ்கின்றவர் யார்? என்ற வினாவை மும்முறை கேட்டு, கிறிஸ்து அரசரும், அவரது அன்னை

குவாடலூாப்பே மாதாவுமே என உரகக் கூவி ஒரு மா மரத்தில் தூக்குக் கயிற்றில் தொங்கப்பட்டார். 1927 ஒக்ரோபர் 28.

ரான் குபிலினோ உபியார்கோ றொபலஸ் அடிகள் ஜலிஸ்கோவின் சாபியன் கரனடா கிராமத்தில் 1899 யூலை 8இல் பிறந்தார். 1928 ஒக்ரோபர் 5இல் தூக்கிலிடப்பட்டார்.

ஜெனரோ சான்ச்செஸ் டெல்காடிஸ்லோ அடிகள் ஜலிஸ்கோவின் சபோன் பகுதியில் 1876 செப்ரம்பர் 16இல் பிறந்தார். ''உங்களை யான் மனப்பூர்வமாக மன்னிக்கிறேன். எம் தந்தையாக இறைவனும் உங்களை மன்னிப்பாராக கிறிஸ்து அரசர் நீடுழி வாழ்க!" எனத் தூக்கு மேடையில் 1927 ஜனவரி 17இல் உரக்கக் கூவிய பின் தூக்குக் கயிறு அவர் கழுத்தை நெரித்தது.

ஜொஸ் இசபெல் புளோர்ஸ் வெரேலா அடிகள் (ஜலிஸ்கோவின் கொக்குளா பகுதியில்) 1883 டிசம்பர் 5இல் பிறந்தார். மூன்று நாட்கள் பயங்கர சித்திரவதைக்குள்ளாகி 1927 ஏப்பிரல் 13இல் சுட்டுக் கொல்லப்படுகையில் ''கிறிஸ்து அரசர் நீடுழி வாழ்க!'' எனக் கூவினார். றொரிபியோ ரோமோ கொன்சலஸ் அடிகள் ஜலிஸ்கோவின் சாந்த அன்னா குவாடுலுப்பேயில் 1900 ஏப்ரல் 16இல் பிறந்தார். 1928 பெப்ரவரி 15இல் சுடப்பட்டார். லூயிஸ் பற்றிஸ் செயின்ஸ் அடிகள் சகாற்றோகாஸ் பகுதியில் சான் மிகுவேல் மெஸ்குயிற்றல் கிராமத்தில் 1870 செப்ரெம்பர் 13இல் பிறந்தார். 1920 ஆகஸ்ட் 15இல் கொல்லப்பட்டார்.

மத்தியு கொரியா மகலன்ஸ் அடிகள் சாகற்றகாஸ் பகுதியில் ரெபாசிற்றலன் கிராமத்தில் 1866 யூலை 22 இல் பிறந்தார். அதிகாரிகள், முக்கியமான தீவிரவாதிகளின் பாவசங்கீர்த்தன இரகசியத்தைக் கூறுமாறு வற்புறுத்தினார். என்ன தீமை நேர்ந்தாலும் ஒரு கத்தோலிக்க குரு, பாவ சங்கீர்த்தன இரகசியத்தை வெளியிட மாட்டார் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். 1927 பெப்ரவரி 6இல் சுடப்பட்டார்.

பீட்ரோ டீ ஜீசஸ் மல்டானோடா லுக்காரோ அடிகள் 1892 யூன் 15இல் சிகாகுவாவில் பிறந்தார். 1937 பெப்ரவரி 11இல் இயேசுவின் இரத்த சாட்சியானார்.

ஜீசஸ் மெண்டஸ் மொன்ரோயா அடிகள் 1880 யூன் 10இல் மிக்கோகான் பகுதியில் பிறந்தார். 1928 பெப்ரவரி 5இல் சுடப்பட்டார்.

டேவிட் உருபி வெலாசோ அடிகள் குறோறியோ பகுதியில் புனாவிஸ்ரா டி குலார் கிராமத்தில் 1889 டிசம்பர் 5இல் சுடப்பட்டார்.

மார்கரிற்றோ புளோர்ஸ் காரிசியா குறோறியா பகுதியில் ரெக்சோ நகரில் 1899 பெப்ரவரி 22இல் பிறந்தார். 1927 நவம்பர் 12இல் வேத சாட்சியாகக் கொல்லப்பட்டார்.

மிகுவேல் டி லா மொறா அடிகள் ஜலிஸ் கோவின் ரெகா லிற்றாவின் கிராமத்தில் 1878இல் யூன் 19இல் பிறந்தார். 1927 ஆகஸ்ட் 7இல் செபமாலை சொல்லிக் கொண்டிருக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திரு. மனுவல் மொராலெஸ் சாகாற்றகாஸ் பகுதியில் மெசலஸ் நகரில் 1898 பெப்ரவரி 8இல் பிறந்தார். அன்புக் கணவன் மூன்று குழந்தைகளின் பாசமிகு தந்தை கைது செய்யப்பட்ட குருக்களின் நலனுக்காக உழைத்தவர். 1926 ஆகஸ்ட் 15இல் கொல்லப்பட்டார்.

திரு. சல்வடோர் லாறா புயன்ரா முகான்ராவில் 1905 ஆகஸ்ட் 13இல் பிறந்தார். கத்தோலிக்க பணிகளில் அச்சபயமின்றி உழைத்தார். 1926 ஆகஸ்ட் 15இல் பாற்ரிஸ் அடிகளோடும் மனுவல் மொராலிசுடனும் இயேசுவின் இரத்த சாட்சியானார். [40]

# லத்தீன் அமெரிக்க சோலிசம் 1930 - 1960

ஸ்பானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தோடேயே 19ஆம் நூற்றாண்டு ஆரம்பமாயிற்று. 1808 தொட்டு 1824 வரை ஸ்பெயின் நாட்டிலிருந்து விடுதலை பெற நடாத்தப்பட்ட போராட்டம், விடுதலைக்குப் பின்பும், புதிதாக விடுதலை அடைந்த நாடுகள் தம்மை ஸ்திரப்படுத்த முடிந்தன. உள் நாட்டுப் போர்கள் 1870 மட்டும் நிலைபெற்றன.

1807 இல் 6ஆம் யோன் தன் அரச அவையுடன் போர்த்துக்காலின் லிஸ்பெனிருந்து வெளியேறி, பிறேசிலில் உள்ள றையோடிஜனரோ வந்தடைந்தார். 1808இல் 4ஆம் கார்லோஸ், ஸ்பெயின் நாட்டினையும், அதன் அமெரிக்கக் காலனிகளையும், நெப்போலியனுக்குக் கையளித்தான். ஸ்பானிய குடா மீதான பிரான்சியப் படையெடுப்பு, காலனித்துவக் கெடு பிடியைத் தளர வைத்துதுச் சுதந்திரப் போராட்டத்துக்கு வழிகோலியது. இவை தாராள சுதந்திர அரசுகளுக்கும், லத்தீன் அமெரிக்க மூலப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் வர்த்தக சுரண்டல் முறைகளுக்கும், கெடுபிடி முதலாளித்துவ பொருளாதாரச் சுரண்டலுக்கும் தளமிட்டது.

1865 - 70 களில் பிறேசில், ஆர்ஜன்ரீனா, உருகுவே நாடுகள் ஒருமித்து, பரகுவே நாட்டைத் தோற்கடித்தன. பரகுவே நாட்டில் மாத்திரமே, தேசிய சுய மரியாதை தனித்துவமான, அடிமைப்படாத சுதந்திரமான ஒரு பொருளாதாரத் திட்டம் வளர்ந்து வந்தது.

இக்கால கட்டத்திற் தான் (1808 - 1870) லத்தீன் அமெரிக்கக் கிறிஸ்தவம் ஆரம்பமானதும், பரவலானதுமான சர்ச்சைக்குள்ளாகியது. 1960களில் எழும் நவீன பிரச்சனைகளை விளங்கிக்கொள்ள இவ் வரலாற்றுக் கட்டம் முக்கியமானது.

இது திருச்சபைக்கும், அரசியல் தாராளத்துவத்துக்கும் இடையிலான மோதலாகும். அரசியற் தாராளப் போக்கினால் உருவான ஓர் உள் முரண்பாட்டுப் பொருளாதாரப் பலத்தைக் கொண்டிருந்த கிரேயோல் மத்திய வர்க்கத்திற்கும், அரசியற் பலத்தை வைத்திருந்த ஸ்பானிய முடியாட்சிக்கும் 19ஆம் நூற்றாண்டின் முதற் காற் பகுதியில் நடைபெற்ற அத்தனை அரசியல் சர்ச்சைகளுக்கும் இப் பொருளாதார முரண்பாட்டைத் தவிர வேறு காரணிகளும் இருந்தன.

டேவிற் ரோல்டான் லாறா, சாகரேகாஸ் பகுதியில் 1902 மார்ச் 2இல் பிறந்தார். எல்லா கத்தோலிக்க பணிகளிலும் அஞ்சா நெஞ்சுடன் ஈடுபட்டார். அவரது மைத்துனர் சல்வடோர் உடன் 1926 ஆகஸ்ட் 12இல் கொலை செய்யப்பட்டார்.

1917ஆம் ஆண்டு ஒக்ரோபர் புரட்சியின் பின் லத்தீன் அமெரிக்கர்கள் தம் பிரச்சனைகளுக்கு ஓர் சோசலிச தீர்வு உண்டு என எண்ணத் தொடங்கினர். 1945 - 1949 இடையே கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் 1948இல் செஞ்சீனாவும், 1950 - 53இல் கொரியாவும், 1959இல் கியூபாவும் 1962இல் அல்ஜீரியாவும் சோசலிஸ்த அமைப்பு முறையைக் கையாண்டன.

1929இல் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் முதலாளித்துவம் எதிர் நோக்கிய பிரச்சினைகளின் தாக்கங்களால் அவை லத்தீன் அமெரிக்கா மீது வைத்திருந்த அழுங்குப் பிடி தளர்ந்து நாட்டிற்கு உகந்த அரசியலையும், பொருளாதாரச் சூழலையும் உருவாகியது. லத்தீன் அமெரிக்காவில் வலுவுள்ள தேசிய வாதக் கொள்கையும், சுதந்திர தொழில் மயமாக்கலும் ஆரம்பமாயின.

இச் சோசலிச அமைப்பு இக் கண்டம் முழுவதும் ஏகமயமாக நடைபெறவில்லை. ஆக ஆர்ஜென்ரீனா, மெக்சிக்கோ, பிரேசில், சிலி, கொலம்பியா, உருகுவே ஆகிய நாடுகளிலேயே தொடங்கியது.

கிறேயோல் பூர்சுவாசி வர்க்கத்தின் வெளிச் சந்தைப்படுத்தும் பொருட்களின் ஆதிக்கம், உள்நாட்டு வியாபாரத்தை நன்கு திட்டமிட்ட, விரிவடைந்ததொரு அமைப்பாக மாற்றியது. வேறு சில லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசிய தொழில் நுட்ப வளர்ச்சியானது வெளிநாட்டு முதலீடுகளிலும், அவற்றின் வளர்ச்சி அபிவிருத்தியோடும்

பின்னிப் பிணைந்து கிடந்தது. விசேடமாக 1930களின் பின் இவ்விடங்களில் சர்வதேச மூலதனம் நாட்டின் மூலதனங்களை வெளிநாட்டிற்கு ஏற்றுவதில் தங்கி நின்றதென்றால் தேசிய வளங்களை வெளிச் சந்தைப்படுத்தியமை அங்கிருந்த ஒரு சில நவகாலனித்துவ சக்திகளின் நலன்களைத்தான் வளர்த்தது. பரவலாக சமூகத்திற்கும், மக்களுக்கும் பயன்படும் அளவுக்குத் தேசிய பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படவில்லை. இதனால் அந் நாடுகளை நவீனமயப்படுத்தி, வழிப்படுத்தும் தேசிய பூர்சுவாசி வர்க்கம் தோற்றம் பெற முடியவில்லை. மாறாக வெளிநாட்டு மூலதனத்திற்கு வலிந்துதவிய- ஏவல் சேவை செய்த ஒரு சிறிய ஒட்டுண்ணிச் செல்வந்தர் வர்க்கத்தையே உருவாக்கியது.

1930கள் தொடக்கம் பொருளாதார, அரசியல், கலாச்சார சிந்தனைகளில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது. இதற்கு 1914 தொட்டு 1940 களில் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட அமைப்புப் பிரச்சினைகளே காரணமாகும். முதலாளித்துவத் தலைமையகம் இங்கிலாந்தில் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு மாறியது.[41]

மேலும் புதிய பொருளாதார வர்க்க சீரமைப்பு தோன்றிற்று. புதியதொழில் நுட்பப் புரட்சி, உள்நாட்டு தேவைகள் அதிகரிப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சனத்தொகைப் பெருக்கம், உட்சந்தை விரிவு படுத்தப்படல், இதற்கு அடித்தளமாக சமூக அடிமட்ட சீர்திருத்தம், நிலச் சீர்திருத்தம், கல்விச் சீர்திருத்தம், மக்கட் பிரதிநிதித்துவச் சீர்திருத்தம் என்பன உருவாகின. முதலாளி, தொழிலாள வர்க்கத்திற்கும் வெகுஜன குழுக்களுக்குமிடையே தோழமை உருவாயிற்று.

இதனிடையே ஓர் மத்திய சக்தி தோன்றியது. ருஷிய ஒக்டோபர் புரட்சி 1917இல் வெற்றி பெற்று 1948இல் சீனாவிலும், 1945 - 1949 காலகட்டத்தில் கிழக்க ஐரோப்பிய நாடுகளிலும் 1950 - 1953களில் கொரியாவிலும் வியட்நாமிலும் 1959களில் கியூபாவிலும் 1962இல் அல்ஜீரியாவிலும் புதிய பூர்சுவாசி வர்க்கம் தேசியத் தன்மை கொண்டு அபிவிருத்தியில் இறங்கிற்று. சோசலிஸ்த அமைப்புகள் உருவாகின.

இவையெல்லாம் லத்தீன் அமெரிக்காவை 1930களிலும், அதன் பின்னும் தொடர்ந்து எவ்வளவு பாதிப்பை உண்டாக்கின என அவதானிப்பது முக்கியம்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் எழுந்த பனிப் போர் யுகத்தில் ரூசிய, சோசலிஸ்த நாடுகளின் அணி ஒரு பக்கமும், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின் அணி இன்னொரு பக்கமுமாக இரு துருவங்களாக இயங்க, இடையே வேறு சில ஆசிய அபிவிருத்தி நாடுகளும் அணிசேரா தாராண்மைவாத (Liberalism) நாடுகளாக அணிவகுத்து நின்றன.

1929ஆம் ஆண்டு, சர்வதேச முதலாளித்துவத்தில் ஏற்பட்ட பிரச்சனையால் லத்தீன் அமெரிக்காவில் புதிய தொரு அரசியல் நிலை உருவாகி முன்னொரு போதும் காணாத தேசிய அளவிலான தொழில் அபிவிருத்தி ஏற்படலாயிற்று. லத்தீன் அமெரிக்கா முழுவதும் இது ஏற்படாவிடினும், ஆர்ஜென்ரீனா, மெக்சிக்கோ, பிரேசில், சிலி, கொலம்பியா, உருகுவே, முதலிய நாடுகளில் இது ஏற்படலாயிற்று. உள் நாட்டு கிறேயோல் பூர்சுவாசி வர்க்கம், வெளிநாட்டு ஏற்றுமதியை தன் கைக்குள் வைத்துக் கொண்டு, உள் நாட்டு சந்தையையும் ஓரளவுக்கு விருத்தியடையச் செய்தது. வெளி நாட்டு சர்வதேச முதல், லத்தீன் அமெரிக்காவின் மூல வளங்களைச் சந்தைப்படுத்துவதில் பூரண கட்டுப்பாட்டை வைத்திருந்ததன் நிமித்தம் தேசிய மூல வளங்களின் விற்பனையால் முழுமையாக நாட்டுக்கும், மக்களுக்கும் பயனளிக் கவில்லை. ஒரு சில நகர்ப் புறங்களுக்கே நன்மை பயத்தது. இந் நாடுகளை நவீன மயப்படுத்தி, ஜனநாயக வழிமுறைகளில் வளர்த்தெடுத்து, மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய தேசிய பூர்சுவாசி வர்க்கம் இங்கு தோன்றவில்லை.

சர்வதேச முதலாளித்துவத்தில் பிரச்சனை என்றால் லத்தீன் அமெரிக்கா உள் நோக்கிய வளர்ச்சி பெற வாய்ப்பு இருந்தது. பின் உலக முதலாளித்துவம் சீரடைந்து வளர்ச்சியுறத் தொடங்க அது லத்தீன் அமெரிக்க மக்களை அபிவிருத்தி அடையா நிலைக்குப் பின் தள்ளிற்று. இதனால் உள்நாட்டில் இருந்த சிறுபான்மையினர் செல்வந்தராகவும், பெரும்பான்மை மக்கள் வறுமைக்கோட்டிற்குள்ளும் தள்ளப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுவே லத்தீன் அமெரிக்காவின் ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள், தங்களை ஏமாற்றி அடக்கி, ஒடுக்கித், தம் வயிற்றை வளர்த்த மேல் மட்டப், பணக்கார வர்க்கத் தேசிய பூர்சுவாசிகளுக்கு எதிரான போராட்டங்களை ஆரம்பிக்க 1950, 60களில் வழி கோலியது.

1930 - 1960க்கு இடையே பல மக்கள் மயமாக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி இயக்கங்கள் உருவாகின. பல இளம் கிறீஸ்தவ தொழிலாளர் இயக்கங்களின் குழுமங்கள் லத்தீன் அமெரிக்காவில் உருவாகின. 1957ஆம் ஆண்டின் கார்டைன் அடிகளினால் உருவாக்கப்பட்ட (YCW) இளம் கிறிஸ்தவ தொழிலாளர் உலக சம்மேளனம் ரோமாபுரியில் நடைபெற்ற போது தென் அமெரிக்க ஆயர் லரானி அங்கு ஆற்றிய பேருரை பிரபல்யமாகியது.

இவ் ஜனரஞ்சக சக்திகள், உருண்டு திரண்டு ஓர் அடிப்படைவாத வடிவத்தை 1960 - 70 களிற் பெற்று, பல கத்தோலிக்க இளைஞர் அங்கத்துவம் வகித்த வர்க்க தேசிய விடுதலை சோசலிஸ்த புரட்சிகரப் போராட்டங்களைத் தோற்றுவித்தன. இவ்வியக்கங்களின் தோற்றம் பல வகைகளில் நன்மை பயப்பனபோற் தோன்றின.

ஒன்று, 1870 - 1930 வரை திருச்சபையின் எதிர்ப்புச் சக்திகளிலிருந்து விடுபடவும், சோசலிஸ்த லௌகீக நாஸ்திக போக்குள்ள தொழிலாளிகள் கம்மியூனிஸ்த இயக்கங்களுக்கு மாற்று வழியாகவும் விளங்கிற்று.

இதுவே லத்தீன் அமெரிக்காவின் புதிய கிறிஸ்து வழி. இப்புதிய கிறிஸ்துவத்தை உருவாக்க 1930க்கு முன் இருந்த பழைய நிலையை மாற்றவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதற்காக முதலில், 1930கள் மட்டும் நிலவிய பழைய வாதத்திற்கும் புதிய தாராள வாதத்திற்குமிடையே நிற்கும் நிலையிலிருந்து தன்னை விடுவித்தது. அது தாராள வாதத்தை எதிர்த்ததினால் பிற்போக்கு சக்தியாக விஞ்ஞானம், அபிவிருத்தி, நவீனம் முதலியவற்றின் எதிரியாக இனம் கண்டு கொள்ளப்பட்டது. இத் துருவ நிலையிலிருந்து விடுபட்டு தேசிய விடுதலையின் பக்கமாகச் சாய்ந்து அந்நிய ஆதிக்க எதிரியாக மாறித் தேசிய அபிவிருத்திக்கான நிலைப்பாட்டை எடுத்தது.

இரண்டாவது, இத்தேசிய அபிவிருத்தி நிலைப்பாடு அதை அதன் முந்திய ஐரோப்பிய லத்தீன் போக்குவாக்குகளை மாற்றி, மண் மயமாக்க உதவிற்று.

மூன்றாவது, இத் தேசிய மக்கள் தேவைகளுக்கான தேர்வு, திருச்சபை தன் பக்தி முயற்சிகள், குடும்ப, கல்வித்துறை முதலியவற்றை மையாகக் கொண்டு நிலையை மாற்றி திருச்சபையை சமூகப் பொருளாதார அபிவிருத்தி அரசியற் பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தூண்டியது.[43]

இறுதியாகப் இப் புதிய ஈடுபாடு, திருச்சபை மேய்ப்பர்களை மேல்மட்ட ஆளும் வர்க்கத்திலிருந்து விடுவித்து ஏழை, கீழ், நடுத்தர மக்களிடம் திரும்பச் செய்தது.

இப்படியாகவே 1930க்கும் 1960க்கும் இடையே திருச்சபை தன்னைப் புதுப்பித்துக்கொண்டது. குறிப்பாக 1950களில் லத்தீன் அமெரிக்கத் திருச்சபையில் இப் புதுப்பித்தல் ஏற்படத் தொடங்கிற்று. இம் மாற்றம் இரண்டாம் வத்திக்கான் சங்க நிகழ்வின் போது 1962 - 1965 இடையே புதிய நம்பிக்கை, உத்வேகம், பாதுகாப்பு, உறுதியோடு வளரும் ஓர் உயர் நிலையை அடைந்திருந்தது. லத்தீன் அமெரிக்க ஆயர்களால் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் போது ஆற்றப்பட்ட உரைகளில் இருந்தும் இது தெளிவாகியது. இறுதி நாள் நிகழ்வின் போது நற்கருணை நாதர் எழுந்தேற்றம் செய்யப்பட்ட பலிப் பீடத்தில் ஆறாம் சின்னப்பர் பாப்பிறை ஏறித் தமது தங்க மும்மணிக் கிரீடத்தைக் கழற்றிக் காணிக்கையாகக் கொடுத்து ஏழைத் திருச்சபையின் வாழ்வை வளம் பெறச் செய்யும் நிதியை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பேராயர் டொம்கெல்டகமரா தமது தங்க முடி, செங்கோல், மார்புச் சிலுவைகளையும் கழற்றித் தந்து இப்பரோபகாரச் செயலுக்கு ஊக்கமும் உந்து சக்தியுமாயிருந்தார். தொடர்ந்து மரச் சிலுவையையே அவர் அணிந்தார். இவரின் முன்மாதிரிகையைப் பின்பற்றிப் பல ஆயர்கள் தங்கச் சங்கிலிகளையும் சிலுவைகளையும் காணிக்கையாகத் தந்தனர்.

### மதச்சீர் திருத்தங்கள்

லத்தீன் அமெரிக்க சமூகத்தில் சமயம் ஒரு அத்தியாவசிய அங்கம் வகித்தது. பாரம்பரியமாக கத்தோலிக்க சமயமே அங்கு வல்லமை மிக்கதாக விளங்கியது. பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் காலனித்துவ ஆட்சியமைப்புடன் அம் மதம் அதிக தொடர்பு கொண்டு விளங்கியதை வரலாறு கூறுகிறது. காலனித்துவ ஆட்சியிலிருந்து லத்தீன் அமெரிக்கா விடுதலைபெறத் தோளோடு தோள் கொடுத்து உதவிய இயக்கத்தில் கத்தோலிக்க குருகுலத்தின் சாதாரண மட்டத்தினரே பெரும்பங்கு வகித்தனர். ஆயினும் இவர்களது கரம் வலுவடைய ஸ்தாபன திருச்சபையின் ஆளும் குரு குலத்தின் மேல் மட்டத்தினர், இவர்கள் தமக்கெதிராகப் பாரம்பரிய சுயேச்சை விடுதலைக் குழுக்களுடன் சேர்ந்து எதிர்ப்புகள் காட்டுவதைச் சந்தேகக் கண்ணுடன் நோக்கினர். இந்த எதிர்ப்புகளுக்குப் பாரம்பரிய சோஸலிச இயக்கங்களும்

ஆதரவு காட்டின. புதுமைப் புரட்சிகளை விரும்பாத பாரம்பரிய சுயேச்சை விடுதலைக் குழுக்கள் கூட இந்த எதிர்ப்பியக்கத்திற் குதித்தமை ஆச்சரியத்துக்குரியதே. இதனால் ஏற்பட்ட பலாபலன்கள் கார்த்தேசிய கண்ணோட்டத்தில் சிக்கலாயிருப்பினும் வரலாற்று நிகழ்வுகளில் தர்க்கவாத பிரச்சனைகளின் ஆய்வுகள் ஆகும்.

ஏறத்தாழ 1950களிலிருந்துதான் சத்திய திருச்சபையின் மனோபாவத்தில் மாற்றம் காணப்பட்டுவருகிறது. சிற்சில தருணங்களில் இம் மாற்றங்கள் விரைவாகவும், பூரணமாகவும் நடைமுறைப்படுத் தப்படுகின்றன. மிகக் கூடுதலான கத்தோலிக்கர்கள் பழமை பேணு வோரும் பிற்போக்கு வாதிகளுமானோர் என்பதும் இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

ஆயினும் லத்தீன் அமரிக்க திருச்சபை எவ்வளவு காலத்துக்குத்தான் தனது பழமை தழுவும் கொள்கைகளைப் பேணமுடியும்? ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கத்தோலிக்க தலைவர்கள் முற்போக்குக் கொள்கைகளுக்குத் தம்மை அர்ப்பணிக்க ஆரம்பித்துள்ளனர். ஆகவே குருகுலத்துக்கு எதிரான கொள்கைகளும் தலை காட்டத் தொடங்கியுள்ளன. இது ஆட்சிப் பீடத்தின் முக்கியஸ்தர்களையும் திகிலடைய வைத்துள்ளது.

முற்போக்கு வாதிகளான பிறேசில், கொலம்பிய நாடுகளின் ஆயர்களுக்கு அடிக்கடி எதிர்ப்புகள் காட்டப்படுகின்றன. ஆர்ஜென் ரீனா, கொலம்பியா, பிறேசில் நாடுகளில் குருக்கள் பலர் அடிக்கடி கைதாகின்றனர். அதிகமான அந்நிய நாட்டுக் குருக்கள் அடிக்கடி நாட்டை விட்டு வெளியேற்றப்படுகின்றனர். பிறேசிலில் குருக்களுக்குச் சித்திரவதையும், சிறைவாசமும், இறுதியாகச் சிரச்சேதமும் அளிப்பது சர்வசாதாரணம். பொதுநிலையினரின் மீதான அடக்கு முறை அதிகரித்துவிட்டது. புரட்சிகர ஆட்சியினர் இடது சாரிகளான கத்தோலிக்கரின் ஆதரவை நாடுகின்றனர். 1968 பெப்ரவரியில் மொன்ரே விடியோவில் நடாத்தப்பட்ட முதலாவது லத்தீன் அமெரிக்கக் கிறீஸ்தவப் புரட்சியாளர்களின் கூட்டம், கமிலோ ரோறசுக்கு அர்ப்பணிக்கப்பட்டுப் புரட்சி வாதக் கொள்கைகளுக்குக் கணிசமாக ஆதரவு பெருகி வருவதை நிரூபித்தது.

வெளியேறும் ஆளும்கட்சி, கத்தோலிக்க திருச்சபையின் நடவடிக்கைகளாலும் அவற்றின் எதிரொலிகளாலும் அச்சமடைந் திருந்தது. ஆர்ஜன்ரீனாவில் ஆட்சிப் பீடத்தை ஆட்டங் காணச் செய்யுமளவுக்கும் திருச்சபையின் சக்தி காணப்பட்டது. பிறேசில் நாட்டிலோ ஒரு சில ஆயர்களின் வல்லமைக்கு ஆட்சியாளர்களே அஞ்சி நடுங்கினர்.[43]

**கிறிஸ்தவ மனோபாவம்**

சோஸலிச சீர்திருத்தங்கள் சம்பந்தமாக லத்தீன் அமெரிக்கக் கிறிஸ்தவர்களின் மனோநிலைகளையொட்டி, அவர்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்:

1. சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ஆதரவு அளிப்பவர்கள்; அக்கொள்கைகளை அனுசரிப்பவர்கள். அதனால் திருச்சபையால் ஆதரிக்கப்பட்டார்கள். ஆயினும் பொதுநிலையினர், குருக்கள், ஆயர்களில் மிகக் குறைந்த அளவினரே இவ்வகையில் அடங்குவர். இவர்கள் பழைய அரசாங்கத்தின் ஆதரவாளர். அதனால் இவர்கள் அடிக்கடி எதிர்ப்புகளுக்குள்ளாகினர்.

இவ்வகையில் புதிய கைத்தொழிற் புரட்சியின் ஆதரவாளரும் அடங்குவர். அரச ஊழியர், இராணுவத்தினர் ஆகியோரிற் பலரும் இக்கொள்கையாளருள் அடங்குவர். பாரம்பரிய ஆட்சிமுறைக்குச் சீர்திருத்தங்கள் அவசியம் என இவர்கள் கருதினர். இது ' எல் முரே' என்ற சீர்திருத்த இளைஞர் அமைப்பையும் (மெக்சிக்கோ), ' கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியம்' என்ற பிறேசிலின் அமைப்பையும் தழுவிய வகையிலிருப்பது அவர்களது கொள்கை சர்வதேச இளைஞர் அமைப்புகளின் நடவடிக் கைகளையும் இவர்கள் உன்னிப்பாக கவனித்ததுடன், தம்மால் அவற்றுள் நடைமுறைப்படுத்தக்கூடியவைகளையும் செயலாற்ற விரும்பினர்.

ஆர்ஜென்ரீனாவில் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவக் குழு, குருசில்லோ தே கிறிஸ்ரன்டாட்டு என்ற அமைப்பின் சீர்திருத்த கொள்கைகளையும் நடைமுறைகளையும் தம் நாட்டில் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டனர். இவர்களுக்கு ' வீ.வீ கத்தோலிக்கு' என்ற புரட்சிகர அமைப்பின் ஆதரவும் தொடர்புமிருந்தது. இன்று ஓய்வு பெற்றுள்ள ஒரு கொலம்பிய நாட்டு ஆயர், சிறுபான்மை பிடிவாதக் குழுவின் சார்பில் பகிரங்கமாக இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத், தீர்மானங்களுக்கு எதிர்ப்புக் காட்டினார்.

1961இல் விவசாய புரட்சியின் போது இந்த எதிர்ப்புப் பல பிரச்சனைகளுக்குள்ளாகியது. 1966இல் ஆர்ஜன்ரீனாவில் புவனஸ் அயர்ஸ் மாவட்டத்தில் ' செலாம் ' இயக்கத்தின் ஆரம்ப விழாவில் லத்தீன் அமெரிக்காவில் தாம் புகுத்தவுள்ள புரட்சிகரச் சீர்திருத்தங்கள்

பற்றிக் குறிப்பிட்டனர். இந்த விவாதங்களின் போது வாளுக்கா அல்லது சிலுவைக்கா தலைவணங்குவது என்பது பரந்த அளவில் விவாதிக்கப்பட்டது (வாள் என்பது இராணுவ ஆட்சியாளர்களையும் சிலுவை என்பது திருச்சபையையும் குறிக்கும்.)

2. சீர்திருத்தக் கொள்கைகள் நல்லவை என வரவேற்கும் இக்குழுவினர், மக்கள் நலனுக்கும் நடைமுறைக்கும் ஏற்ப சில மாறுதல்கள் புகுத்தப்படுவதை விரும்பினர். இவர்களிற் பலர் திருச்சபை ஆட்சி பீடத்தில் அனாவசியமாகத் தலையிடக் கூடாது என்று கருதினர். பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைக் கவனிப்பதுடன் திருச்சபை தன் அலுவல்களை நிறுத்திக் கொள்வதே நல்லது என்பது இவர்கள் கொள்கை. இம் மனோபாவம் பொது நிலையினரிலும் குரு குலத்தவரிலும் அதிகமானோரிற் காணப்பட்டது. இதே தருணத்தில் ஆட்சியாளரின் சில சீர்திருத்தங்கள் குருக்களுக்கோ, பொதுநிலையினருக்கோ போதிய முன்னறிவித்தல் இன்றியே புகுத்தப்பட்டதால் குழப்பநிலையும், விரும்பத்தகாத விளைவுகளும் உருவாகின.

3. சீர்திருத்த நடவடிக்கைகளுக்குத் தற்போது புகுத்தப்பட்ட புரட்சிமாறுதல்கள் போதாது என்ற கொள்கையைக் கொண்டவர்கள். அபிவிருத்தி சம்பந்தமாகவும், நீதித்துறை சம்பந்தமாகவும் புதிய, புரட்சிகர மாற்றங்கள் தேவை என இவர்கள் வற்புறுத்தினர். இம் மாறுதல்கள தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், அரசியல், சமூக, பொருளாதாரக் கலை, கலாச்சார அலுவல்களிற் திருச்சபை அரசாங்கத்துக்கு கணிசமான அளவு பங்களிப்பை வழங்கவேண்டும். இவைகளை நடைமுறைப்படுத்தத் திருச்சபை தனது மேற்பார்வையில் சில பொது நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்க வேண்டும் என வாதாடினர்.

சிலி நாட்டில் தொழிற்சங்கங்களும், அப்போஸ்தலிக்க சபைகளும் மேற்காட்டிய கொள்கைகளின் பின்னணியில் உருவாக்கப்பட்டன. இந்நாட்டில் பொதுவாக இரண்டாம் வத்திக்கான் சங்கச் சீர்திருத்தங்கள் வரவேற்கப்பட்டு, சுதந்திர, ஜனநாயக, சோஸலிச பாணியில் திருச்சபை இயங்குவதற்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது.

சுயமாக சிந்திக்கும் வாய்ப்புப் பெற்ற மக்களிடையே வெவ்வேறு கருத்துகளும், கொள்கைகளும் தோன்றுவது சர்வ சாதாரணம். சிலர்

சோஸலிச கருத்துக்களின் அவசிய தேவைகளை உணர்ந்தனர். ஆயினும் திருச்சபை தனது இலட்சியங்களை, மக்களின் ஆன்மீக தேவைகளை அலட்சியப்படுத்திச் சமூக சீர்திருத்த அலுவல்களில் முழு அளவில் தொழில்படுவதை எதிர்த்தனர். திருச்சபை தனது ஆதி காலக் கொள்கைகளிலிருந்து மாறுபடுவதையும் இவர்கள் விரும்பவில்லை. புதுவித இறையியல், மெய்யியற் கொள்கைகளுக்கும் இவர்கள் எதிர்ப்புகள் தெரிவித்தனர். இடது சாரிக் குருகுலம் ஒன்றை உருவாக்கவும் இக் கொள்கையாளர் விருப்புக் காட்டினர் (சீர்திருத்த நடவடிக்கைகளின் விளைவாக வானொலி, பாடசாலை, கூட்டுறவு, தொழிலாளர் நிலையிலும் நிர்வாகத்திலும் பல்வேறு மாறுதல்கள் காணப்பட்டன.)

மறுபக்கத்தில் சில குருக்கள், ஆயர், புத்தி ஜீவிகள் சமூக சீர்திருத்தங்கள் திருச்சபையில் புகுத்தப்படுவதுடன் நின்றுவிடாது, அதே வேகத்தில் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் கணிசமான சீர்திருத்தம் தேவை எனக் கருதினர். திருச்சபைக்கும் மக்களுக்குமிடையே மிக நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்தப்படவேண்டும்; திருச்சபை மக்களை - சிறப்பாக பொருளாதார, சமூக நலிவு பெற்றவர்களை தேடிச்சென்று, போதனையால் அல்ல சாதனையால் அவர்களது சமூக நிலையைச் சீர்திருத்த வேண்டும்; இதற்கு திருச்சபைக்கும் சமூகத்துக்குமிடையே மிக நெருங்கிய நல்லுறவும் புரிந்துணர்வும் தேவை; சமூக சீர்திருத்தம் எனப்படுவது குருகுலத்தின் (ஆயர்கள், குருக்கள்) திரு வழிபாட்டுக்கடமைகளைப் போல் மிக முக்கியமானது என இவர்கள் ஆணித்தரமாக வலியுறுத்தினர்.

இவ்வித புதிய புரட்சிகர சீர்திருத்தக் கருத்துகள், 1960களில் திருச்சபையில் பல்வேறு மாறுதல்களுக்கு காரணிகள் ஆயின. திருச்சபைக் காணிகள் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. விவசாயச் சீர்திருத் தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பிறேசில் நாட்டின் வட கீழ்ப் பகுதிகளில் தொழிலாளர் யூனியன்களும், கூட்டுறவுச் சபைகளும் சிறப்புடனியங்கின. இதைத் தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளிலும் திருச்சபையின் கொள்கைகளுக்கும், கருத்துகளுக்கும் மதிப்பளிக்கப் பட்டதுடன் ஆலோசனைகளையும் வரவேற்கும் நிலை உருவாகியது. ஆயினும் 1964இல் உருவாகிய ஒரு புரட்சியால் நிலமையில் மாற்றங் காணப்பட்டது.

லத்தீன் அமெரிக்காவின் கத்தோலிக்க ஆயர்கள் 1968இல் மெடிலின் என்ற இடத்தில் ஒன்று கூடினர். தங்கள் திருச்சபையின் தலையாய பிரச்சனைகளை நன்கு ஆராய்ந்தனர். கத்தோலிக்க மக்களின் பொருளாதாரச் சீர்கேடும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியும் இன்னல்களுமே ஆயர் அவையின் முக்கிய ஆய்வாக விளங்கியது.

இவையிரண்டுமே சமூகச் சீர்கேடுகள் அனைத்திற்கும் தலையாய காரணிகள் என இனங்காணப்பட்டது. இவற்றைச் சீர் செய்யத் திருச்சபையும், அரசும் ஒன்றிணைந்து செயலாற்றுதல் அவசியம் என்பது வற்புறுத்தப்பட்டது. இச் சீர்திருத்தம் செய்யப்படாவிடில் லத்தீன் அமெரிக்கத் திருச்சபையின் எதிர்காலம் ஆரோக்கியமாக இராது என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது.

4. இவர்கள் மாக்சிஸ இயக்கங்களுடன் இணைந்து வன் செயல்களுடனிணைந்த ஒரு புரட்சியால் மட்டுமே உண்மையான சீர்திருத்தத்தை லத்தீன் அமெரிக்காவில் உடனடியாகப் புகுத்த முடியும் என்று எண்ணியவர்கள்.ஜனநாயக முறைகளால் காலம் போக்குவதுடன் சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புக்களும் எழுந்து திட்டங்களைத் திசைதிருப் பிவிடும். இவ்வகையினர் இளைஞர், வாலிபர், கியூபா புரட்சியால் ஈர்க்கப்பட்ட புரட்சிவாதிகள், புரட்சிகரக் கொள்கைகளுடனியங்கும் சில பல்கலை மாணவர், தொழிற்சங்கப் புரட்சியாளர்கள் என ஒரு சிறு கூட்டத்தினரே. சில குருக்களும் இவர்களுக்கு ஆதரவளித்தனர். தொழிற்சங்க புரட்சிவாதி கமிலோ ரொறசின் ஆதரவும் கிடைத்தது. பெரு, வெனிசுவலா, கொலம்பியா, குவாட்டமாலா ஆகிய நாடுகளில் இவர்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டது.

பல்வேறு பாதிப்புகளுக்குள்ளாகி வறுமையால் இன்னலுற்ற மக்கள் இவர்களது வார்த்தைகளுக்குச் செவி கொடுத்தது மட்டுமன்றித், தங்களது சொந்த நலன்களுக்காக இவர்களது இயக்கங்களில் சேரவும் தொடங் கினர். திருச்சபையாலும் இப் புதிய பிரச்சனைக்கு ஆக்கபூர்வமான மாற்று நடவடிக்கைகளை முன்வைக்க முடியவில்லை. எனவே லத்தீன் அமெரிக்கத் திருச்சபையின் நிலையும் பரிதாபத்துக்குரியதாயிற்று.

எனவே மெடலியன் ஆயர் மகாநாடு அனைத்தையும் ஆய்ந்து ஒரு சமூக, சமுதாய, பொருளாதார, அரசியற் புரட்சிகர மாற்றம் லத்தீன் அமெரிக்காவின் உடனடித்தேவை என்ற ஏகோபித்த தீர்மானத்தை எடுத்து, அதன் ஆக்கபூர்வ உருவாக்க நிலையை ஆராய்ந்தது.[44]

# சில நாடுகளின் வரலாறு

## கியூபா

### கொடுங்கோலனிடமிருந்து விடுதலை


புல்ஜென்சியோ பற்றீஸ்ராவின் ஆட்சி, கொடுங்கோன்மை மிக்கதும், சர்வதிகாரத்துவம் அதிகரித்ததுமாக விளங்கியது. ஊழல்கள் நிரம்பி வழிந்தன. அரசியற் கைதுகளும், மரண தண்டனைகளும் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்தன. 1953 யூலை 26இல் பிடல் காஸ்ட்ரோ சந்தியாகோவின் மொன்காடோ தளத்தை மிகுந்த வல்லமையுடன் தாக்கினார். இத்தாக்குதலில் காஸ்ட்ரோ கைதுசெய்யப்பட்டாரெனினும், சந்தியாகோவின் ஆயர் பியர்ஸ் செர்வான்ரெஸ் ஆண்டகையின் தலையீட்டினால் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஓராண்டின் பின் சிறையிலிருந்து விடுதலை பெற்றார். உடனடியாக தலைமறைவாகி வெளிநாடு சென்றார்.

கத்தோலிக்க திருச்சபையில் பிளவுகள் ஏற்பட்டன. எப்பக்கம் சார்வதென்ற பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாது பொது நிலையினர் திண்டாடினர். ஆயர்கள் பியர்ஸ் செர்வான்ரெஸ், மற்றும் மரன்சாஸ் ஆண்டகைகள் பகிரங்கமாக பற்றிஸ்ராவின் ஆட்சியை எதிர்த்தனர். ஆயின் வயது முதிர்ந்த கர்தினாலாண்டகையோ ஆளுங்கட்சியை பலமாக ஆதரித்தார். கமாகுவேயின் ஆயர் திருச்சபை இவ்விடயத்தில் மௌனம் காப்பதொன்றே சிறந்தது என வாதித்தார். 1958 வரை கத்தோலிக்க திருச்சபை உத்தியோகபூர்வமாக எவ்வித அறிக்கையையும் வெளியிடவில்லை.

பின் இப்பிரச்சனை சிறிது சிறிதாக சூடுபிடித்துக் கொண்டே வந்தது. சியரா ம கெஸ்ராவில் உத்வேகங் கொண்ட ஒரு கத்தோலிக்க குழு ஆர்ப்பாட்டக்காரரின் நடவடிக்கைகளுக்கு கைகொடுத்தது. பல குருக்கள் சுரங்கங்களில் தலைமறைவானோருக்கு அருட்சாதனங்களை வழங்கியும் உணவு, உடை கொடுத்து ஆதரித்தும் உதவினர். 1958

பெப்ரவரி 10இல் கவானாவின் தூய ஆவியின் ஆலயப்பங்குக்குரு, மறையுரை மேடையில் நின்று பகிரங்கமாக ஆட்சியாளரின் அநீத நடவடிக்கைகளைக் கண்டித்தார். தொடர்ந்து கத்தோலிக்க ஆணை நடவடிக்கைக் குழுவினர் ஆட்சியாளருக்கெதிராக வன்செயல்களில் இறங்கினர். மிதவாத கத்தோலிக்கரும் ஆட்சியாளரின் அநீத போக்குகளைக் கண்டிக்கத் தொடங்கினர். சுருங்கக் கூறினால் சீர்திருத்த தேவையை அனைத்துக் கத்தோலிக்கருமே வலியுறுத்தினர்.

பெப்ரவரி 25இல் நடைபெற்ற ஒரு நிகழ்வு இந் நிலமைக்கு உத்வேகமளித்தது. ஆயர் பியர்ஸ் செர்வான்ரெஸ் ஏனைய ஆயர்களை ஒன்று திரட்டி, பற்றிஸ்ராவை ஆட்சியிலிருந்து நீக்கும் வழிவகைகளை ஆலோசித்தார். தம்முள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட ஆயர்களால் ஏகோபித்த தீர்வு ஒன்றை நிறைவேற்ற முடியவில்லை.



**எனினும் அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் சுருக்கமாவது:**

"இரு பக்கத்திலும் வன்செயல்களுக்கு இடமளிக்கப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எமது நாட்டுக்கு இன்று அவசியம் தேவையானது அமைதியே. கியூபா நாட்டை உண்மையாகவே நேசிப்பவர்கள் இறைவனின் திருவருளாலும், தியாகமிகு மனப்பான் மையுடனும், தேசிய ஒற்றுமையுடனும் அமைதியான வளம் நிரம்பிய வருங்காலத்தை உருவாக்கவல்ல, ஒரு பொருளாதார ஐக்கிய நாட்டை சிருஷ்டிக்கும் அரசை நிறுவுவார்களாக."

அதிபர் பற்றிஸ்ரா நெருக்கடி நிலையை முற்றிலும் உணர்ந்தவராக, முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை ஆய்வு செய்யவும், கூடுமானவரை அமுலாக்கவும் எண்ணங்கொண்டார். ஆயின் பிடல் காஸ்ட்ரோ மார்ச் 9இல் வரைந்த கடிதத்தில் ஆயர்கள் ஒரு தேசிய ஐக்கிய ஆட்சியை விரும்புகிறார்களென்றும், புல்ஜென்சியா பற்றிஸ்ராவின் அரசை எந்த ஒரு நேர்மைமிக்க கியூபா பிரசை விரும்பப்போகிறான் என்றும் ஆவேசத் துடன் வினாவினார்.

**ஆயர் பியர்ஸ் சேர்வான்ரெஸ் வெளியிட்ட அறிக்கை வருமாறு:**

"பற்றிஸ்ராவின் ராஜினாமா ஒன்றே சகல பிரச்சனைகளுக்கும் சரியான தீர்வு ஆகும்." ஆயர் மற்றன்சஸ் ஒரு படி முன்சென்று சர்வா திகாரியை நேரடியாகச் சந்தித்து பதவி விலகுமாறு வற்புறுத்தினார். பற்றிஸ்ரா சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. மாறாக கத்தோலிக்கர்மீது வன்செயல்களை ஏவிவிட்டான். தொழிலாளர் தலைவர் சேர்ஜியோ கொன்சாலஸ் உட்பட ஏராளமான கத்தோலிக்கர் இரத்த சாட் சிகளாயினர்.

குருக்கள் நேரடியாக எதிர்ப்புகள் தெரிவிக்கத் தொடங்கினர். *1958* டிசம்பரில் வண. பெலார்மினோ கார்சியா அடிகள் திருச்சபைக்கு பகிரங்கமாக விடுத்த அறிக்கையில் திருச்சபைத் தலைமைப்பீடத்தின் மௌனமும், ஒற்றுமையின்மையும், அமைதி காத்தலும் எதிரிக்கு மென்மேலும் உற்சாகமூட்டுகிறதென இடித்துரைத்தார். கத்தோலிக்க தீவிரவாதிகள் கொடுங்கோண்மைக்கு முற்றுப்புள்ளியிடுவதற்காகத்

தம்மிடையே நிலவிய சிறு சிறு பிரச்சனைகள் அனைத்தையும் முற்றாகக் கைவிட்டனர்.



*1959 ஜனவரியில் தனது வெற்றியைத் தொடர்ந்து பிடல் காஸ்ட்ரோ கியூபா வின் கத்தோலிக்கரது ஒற்று மையும், ஆதரவும், ஒத்து ழைப்புமே விடுதலைப் போ ரில் எம்மை வெற்றியீட்ட வைத்தன எனக் கூறினார்.*

ஜனவரி 2இல் மனுவல் இருயா விடுதலைக் குடியரசின் அதிபராகவும், ஜோஸ் மிரோ கார்டோனா அமைச்சரவை ஒன்றை நிறுவும் அதிகாரமுடையவராகவும் (முதலமைச்சர்) நியமிக்கப்பட்டனர். பெப்ரவரி 15இல் கார்டோனா நிர்வாகக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு காஸ்ட்ரோவுக்கு அழைப்பு விடுத்தார். எனவே காஸ்ட்ரோ கியூபா நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய அதிபராக பெப்ரவரி 17இல் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பிரச்சனைகள் மிகுந்த பொருளாதார பலமற்ற ஒரு புதிய சுதந்திரக் குடியரசை நிறுவுவதும், நிர்வகிப்பதும் இலகுவான கருமமல்ல. 1959 மார்ச் மாதத்தில் அரச ஊழியர், அதிகாரிகளிடமிருந்து முதல் எதிர்ப்புகள் உருவாகின. இவர்கள் காஸ்ட்ரோவின் விடுதலைப் போரில் முன்னின்று உழைத்தவர்கள். தங்கள் அந்தஸ்து உயர்தப்படும் என முன்பு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பி நாட்டு விடுதலைக்காகத் தோளோடு தோள் கொடுத்து உதவியவர்கள். இன்று காஸ்ட்ரோ தங்களை ஏமாற்றிவிட்டதாக உணரத் தலைப்பட்டனர். மனுவல் ஆட்டிமா தலைமையில் இவர்களின் எதிர்ப்புகள் அலையலையாக எழுந்தன.

1959 ஆகஸ்ட் மாதத்தில் நிலச்சுவாந்தாரர்கள் பிரபல வாரசஞ்சிகை "டைம்" (Time) மில் தங்கள் பகிரங்க எதிர்ப்பைத் தெரிவித் தனர். காஸ்ட்ரோ ஒரு கம்மியூனிஸவாதி என டைம் சஞ்சிகை அனைத்துலகுக்கும் தெரிவித்தது. ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் கியூபாவின் மிகப் பாரிய அறுவடைக் காலத்தில் விளைச்சல்களை

முதலாளித்துவ நாடுகளின் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து பாரிய நஷ்டங்களை வருவித்தன.

கியூபாவின் கம்யூனிஸ கட்சிப் பிரமுகர்களுக்குத் தேர்தல்களில் வாக்களிக்கக் கூடாதென திருச்சபை கத்தோலிக்கரை வற்புறுத்தியது. சமூகக் குறைபாட்டுச் சீர்திருத்தங்களைக் கம்மியூனிஸ தத்துவ ரீதியாக செயற்பட்டுத் தீர்வு காணப்படுவதைப் பொதுவாக கியூபா நாட்டு புத்திஜீவிகள் விரும்பவில்லை.

காஸ்ட்ரோ கம்மியூனிச தத்துவங்களில் நம்பிக்கையற்றவராயினும் அவரது சர்வாதிகாரப் போக்கும், ஜனநாயக அடிப்படையில் செயலாற்ற முடியாததன்மையும் அவர்மேல் கம்மியூனிஸ முத்திரையை பதித்துவிட்டன

திருச்சபை பொதுவாக தமது சர்வாதிகார அரசியல் நிர்வாகத்துக்கு ஆதரவு தரவில்லையென காஸ்ட்ரோ கருதினார். நாட்டின் நலனுக்காகத் தாம் எடுக்கும் நடவடிக்கைகளைத் திருச்சபை முற்று முழுதாக ஆதரிக்க வேண்டும் என்பது அவரது விருப்பம் ஆனால் காஸ்ட்ரோவின் கட்சி ஜனநாயக அடிப்படையில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்து அவர்கள் ஆலோசனைகளுடன் அரசியலமைப்பு சீர்திருத்தப்படல் வேண்டும் ஆட்சி நிர்வாகம் அமுல் செய்யப்படவேண்டும் என்பது திருச்சபையின் கருத்து.

'பிரான்சிஸ்கோ பார்' என்ற கத்தோலிக்க பத்திரிகையாளர் ''கம்மியூனிஸத்தின் பிரதான இலக்கு கியூபாவின் முதலாளி வர்க்கத்தை அழித்தொழிப்பதும், கிறிஸ்தவ ஜனநாயக சமூகத்தை வேரோடு களைவதுமே'' என எழுதினார். எனினும் இவ் விடயத்தில் மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட கத்தோலிக்கரும் இருந்தனர். ஏஞ்சல் டெல்கரோ என்ற பிரமுகர் திருச்சபையானது சீர்திருத்தங்களை அங்கீகரித்தால் பிரச்சனைகளுக்கே இடமில்லை என்றார். அந்திரேஸ் வல்டெஸ் பினோ என்பவர் சீர்திருத்தங்களை நாட்டின் தேசியநலக் கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தார்.

புதிய சீர்திருத்தங்கள் புகுத்தப்படும் போதெல்லாம் கத்தோலிக்க குரு குலம் அதிருப்தியடைந்தது. கல்விச் சீர்திருத்த மசோதா அறிமுகப் படுத்தப்பட்டபோது, ஆயர்கள் ''சமயக் கல்வி பகிரங்கப் பாடசாலை களின் பாடத்திட்டங்களில் கட்டாயமாக இடம்பெற வேண்டும்'' எனக்

குரல் எழுப்பினார். 1959 மே மாதத்தில் அக்ருபாசியன் கத்தொலிக்கா என்ற குழு அக்ராரியன் சீர்திருத்தத்தை எதிர்த்தது. ஆயின் கவனாவின் ஆயர் இவலியோ டயஸ் இம் மசோத கிறிஸ்தவ சமூக நீதித்திட் டங்களுக்கு இது ஒத்தமைகிறது என்றார்.

ஆண்டிறுதியில் அமெரிக்க அரசு கியூபாவின் ஆளுங்கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டாமென கம்மியூனிசத்துக்கெதிரான நாடுகளனைத் துக்கும் வேண்டுகோள் விடுத்தது. உள்நாட்டில் பலமிக்க அரசியல் எதிரிகள், வெளியே அனைத்துலகிலும் அதிகாரபலமிக்க ஐக்கிய அமெரிக்க எதிர்ப்புமாக இருபெரும் வல்லமைமிக்க எதிரிகளை சமாளிக்க வேண்டிய பயங்கரநிலைக்கு காஸ்ட்ரோ தள்ளப்பட்டார்.

1959 இலையுதிர் காலத்தில் ஆயர்கள், அரசின் வெளிநாட்டுக் கொள்கைபற்றி அதிருப்தி அடைந்தனர். கூட்டுச் சேராக் கொள்கை என்பது கிறிஸ்தவ விசுவாசத்துக்கு முரணானதும் ஒரு வித நாஸ்திக வழிக்கு இட்டுச் செல்வதுமாகும் என்றனர். அக்ராரியன் சீர்திருத்தங்கள் ஐக்கிய அமெரிக்க குடியரசின் நலன்களுக்கு குந்தகம் விளைவித்ததால் அந்தநாடு கியூபாவின் மீது கெடுபிடிகளை இறுக்கியது. நவம்பர் 28, 29 களில் தேசிய கத்தோலிக்க சம்மேளனம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்களைக் கூட்டி மாபெரும் மாநாடு ஒன்றை நடத்தியது. இந்த மாநாட்டில் கம்மியூனிஸத்துக்கு எதிராகப் பல முனைகளிலும் இருந்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. இது புதிய அபிவிருத்திகளுக்காக விடுக்கப்பட்ட முதல் எச்சரிக்கையாகும்.

1960 ஜனவரியில் ஸ்பானிய தூதரகத்தில் ஒன்றுகூடிய மதப்பிரமுகர் குழுவை, குருகுலத்தினரால் அனுப்பப்பட்ட சதித் துரோகிகள் எனக் குற்றஞ்சாட்டிய காஸ்ட்ரோ அவர்களுக்கு மரணதண்டனை விதித்தார். பெப்ரவரி 5இல் அனஸ்ராஸ் மிக்கோயன் கியூபாவுக்கு உத்தியோக பூர்வமாக வருகை தந்தபோது கத்தோலிக்க மாணவர் ஆர்ப்பாட்டங் களுடன் எதிர்ப்பினைக் காட்டினர்.

1960 இல் ஐக்கிய அமெரிக்கக் குடியரசுக்கும், கியூபாவுக்கும் இடையிலான தொடர்புகள் சீர்கெடத் தொடங்கின. ரூஷிய சோஸலிச நாட்டுடன் ஒரு நேச உடன்படிக்கையை மே மாதத்தில் கியூபா மேற்கொண்டமையும், கவானா மொஸ்கோவிலும் தூதரங்கள் நிறுவப்பட்டமையும் ஐக்கிய அமெரிக்காவின் ஆத்திரத்தை அதிகரிக்க வைத்தன. மே 1967இல் ஆயர் பியர்ஸ் செவன்ரெல் இந்த உடன்படிக்கை

நடவடிக்கைகளைப் பலமாகக் கண்டித்தார். கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி கலைக்கப்பட அதன் முக்கிய தலைவர்கள் ஐக்கிய அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தனர்.

அமெரிக்க எண்ணெய்க் குதங்கள் மூடப்பட, ரூஷிய எண்ணெய் இறக்குமதி, தேசிய மயமாக்கப்பட்டது. ஆயர் எட்டுர்டோ பொஷா மஸ்விடல் ஆண்டகை, சமூகப், பொருளாதார வளங்களும், வர்த்தகமும் அரச கட்டுப்பாட்டில் இயங்குவதைப் பலமாக எதிர்த்தார். ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் யூலை மாதத்தில் கியூபாவிலிருந்து சீனி இறக்குமதிக்குத் தடை விதித்தது. இரு தினங்களின் பின் கியூபாவிலுள்ள ஐக்கிய அமெரிக்க மூலதனங்களும், சொத்துகளும் தேசிய மயமாக் கப்பட்டன.

ஆகஸ்ட் 7இல் ஆயர்கள் குழு விடுத்த பொதுத் திருமடலில் "எங்கள் நாட்டில் கம்மியூனிஸ தீமை வளர்ந்து கொண்டே செல்வது மிகுந்த வேதனைக்குரியது" எனச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆகஸ்ட் 9இல் இது வரை பொறுமையையும், மிதவாதத்தையும் அனுசரித்த ஆயர் டயஸ் ஆண்டகை அரசின் அநியாய நடவடிக்கைகள் நாட்டில் வேத கலாபனையொன்றைத் தொடங்கி விட்டதைக் காட்டுகிறதெனக் குறிப்பிட்டு, இந்நிலை தொடருமானால் ஆலயங்களனைத்தையும் மூடி எதிர்ப்பியக்கம் நடத்துவதை தவிர்க்க முடியாது என்றார்.

காஸ்ரோவின் பதில் காத்திரமாயிருந்தது." சில குருக்கள் ஏழைகளின் நலன்களுக்காக உழைக்கிறார்கள். பல குருக்கள் பணக்காரர்களின் சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். பண முதலைகளின் பாரிய நிறுவனங்களை எதிர்த்தோ, கண்டித்தோ ஒரு திரு மடலைத் திருச்சபை விடுக்குமானால் நான் மகிழ்ச்சியடைவேன். எம் நாட்டு மக்களின் உழைப்பையும், உதிரத்தையும் உறிஞ்சும் கோடீஸ்வர ஓநாய்களைத் திருச்சபை கண்டித்து விரட்டியோட்டும் நாள் எப்போ?" எனக் கேள்விக் கணை விடுத்தார்.

ஆயர் பியர்ஸ் செவான்ரெஸ் ஆட்சியாளர்களுக்கு எதிரான தமது கண்டனத் திரு மடலில் நாம் கியூப மக்கள்; அடிமைகள்அல்ல என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார். ஆட்சியாளர்களின் அடிவருடிகளான கத்தோலிக்கரையும் அவர் சாடினார். டிசம்பர் 4ஆந் திகதி திருச்சபையின் மூத்த அதிகாரிகள் பிடல்காஸ்ட்ரோவுக்கு விடுத்த பகிரங்க அறிவிப்பில்

கம்மியூனிசத்தின் மூலம் நாத்திகத்தை பரப்ப வேண்டாம்; நமதாண்டவர் உமக்கு நல்லறிவு புகட்டுவாராக எனக் குறிப்பிட்டனர்.

டிசம்பர் 16 இல் காஸ்ட்ரோ அரசு, ஆயர்களுக்கு பதிலளிக்க விரும்பவில்லை. மாறாக சில வினாக்களை விடுக்கிறது என்றார். அவரது வினாக்களாவன:

1) கரும்புச் செய்கையில் பாதிப்புறும் ஏழை விவசாயிகளின் நலன்கருதி ஒரு திருமடல் விடுக்கப்படுமா?

2) ஏழை விவசாயிகளின் பிள்ளைகள் இலவசமாகக் கற்க வசதிகள் செய்து கொடுக்கப்படுமா?

3) தொழிலாளர்களினதும், மாணவர்களினதும் தலைவர்கள் சிலர் கொல்லப்பட்டதை கண்டித்தீர்களா?

4) பங்கு முதலீட்டு இலாபம் சம்பாதிப்பவர்களையும், உணவுப் பொருட்களை அநியாய விலைக்கு விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதிப்போரையும் கண்டித்தீர்களா?

5) அநியாய வாடகை அறவிடும் வீட்டுரிமையாளர்களையும், ஊழல், லஞ்ச ஊழியர்களையும் கண்டித்தீர்களா?

## சோசலிஸ புரட்சிக்கெதிராக ஒரு பகிரங்கப் போராட்டம்

1961 ஜனவரி 3இல் ஐக்கிய அமெரிக்க குடியரசு, கியூபாவுடனான இராஜ தந்திர உறவுகளனைத்தையும் துண்டித்துக் கொண்டது. கியூபாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்தது. கியூபாவின் சர்வாதிகார அரசு திருச்சபையின் பேச்சுரிமைக்கும் (செய்தி ஊடகங்கள், வானொலி முதலியன), எழுத்துரிமைக்கும் (பத்திரிகைகள், பிரசுரங்கள்) கடுமையான கண்காணிப்பையும், தணிக்கையையும் கொண்டு வந்தது. ஏப்பிரல் 17இல் பிக்ஸ்குடாவில் பிணக்கு, கைகலப்பாக மாறிப் போராக உருவெடுத்தது. (பற்றிஸ்ராவின் சார்புடையோருக்கும் மனுவல் ஆட்டிமா தலைமையிலான கத்தோலிக்கருக்கும்) மனுவல் ஆட்டிமாவுடன் மூன்று ஸ்பானிய துறவிகளும் தம் நிலையை விளக்கி வெளியிட்ட அறிக்கை வருமாறு:

"இறைவனின் பெயரால் நாம் வருகிறோம். இப் போராட்டக் குழுவில் கிறிஸ்தவரும், கத்தோலிக்கருமான கியூபா மக்கள் ஆயிரக்கணக்கில் உளர். எங்களது போராட்டம் இறை நம்பிக்கை உடையவருக்கும், நாத்திகருக்குமிடையிலானது. ஆன்மீகத்துக்கும்,

லௌகீகத்துக்குமிடையிலானது. ஜனநாயகத்துக்கும், கம்மியூனிசத்துக் குமிடையே உள்ள பிணக்கு. உண்மை, நீதியுடனான கொள்கைகள் கம்மியூனிஸ அபத்த தத்துவங்களையும், கொள்கைகளையும் எதிர்த்துப் போராடுகின்றன. உண்மை நீதியுடன் விளங்கும் கத்தோலிக்கக் கொள்கைகளே இறுதியில் வெல்லும். கிறிஸ்து அரசு நீடூழி வாழ்க.

மே 1ஆந் திகதி பிடல் கால்ட்ரோ விடுத்த அறிக்கையில் ஸ்பானிய பாசிஸம் குருக்கள் மூலம் வெகு தந்திரமாக நாட்டுக்குள் பரப்பப்படுகிறது. இந்நாட்டில் பணியாற்ற வெளியிலிருந்து குருத்துவ அங்கியுடன் இறக்கும்தியாகும் ஒவ்வொரு இறைபணியாளரையும் கடுமையாக கண்காணிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.



கத்தோலிக்க குருக்களின் செல்வாக்கைக் குறைக்கவும், மாணவரி டையே வேதவிசுவாசம் ஆழமாக வேரூன்றவிடாது தடுக்கவும் இலவசக் கல்வி அளித்தல் என்ற அழகிய மகுடத்தின் கீழ் அரச பாடசாலைகளைக் காஸ்ட்ரோ கியூபாவில் அறிமுகப்படுத்தினான். ஆகவே ஆலயங்களில் மட்டுமே மறைக்கல்வி போதிக்கப்பட்டது. மதமும், புரட்சியும் ஒன்றோடொன்று இணைந்து செல்லலாம். ஆயினும் புரட்சியை முறியடிக்க மதத்தை ஆயுதமாக்குவது அனுமதிக்கப்பட மாட்டாது என காஸ்ட்ரோ அறிவித்தான்.

பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டதால் பெருந் தொகையிலான ஸ்பானியக் குருக்களும், துறவிகளும் கியூபாவைவிட்டு வெளியேறினர். அவர்களில் பலர் தங்கள் மறைபரப்புப் பணியைப் பாடசாலை மட்டத்திலேயே செய்யப் பயிற்சி பெற்றிருந்தாமையால், பாடசாலைகள் பறிபோனதன் பின் எதுவுமே செய்ய முடியாதிருந்தனர். மேலும் அவர்கள் உள்நாட்டு யுத்தம் தொடங்குவதற்கு முன் (உள்நாட்டு யுத்தம் வேதகலாபனையாக மாறக்கூடும் என்ற அச்சத்தால்) வெளியேறி விட்டனர். இவ்வித நிலை பற்றி ஏற்கனவே அறிந்த வத்திக்கான் தலைமைப் பீடம் பிணக்கு நிலை உருவாகாது தடுக்கவும், கியூபா ஆட்சியாளருக்கும், திருச்சபைக்குமிடையே அன்னியோன்னிய நிலையை உருவாக்கவும், கியூபாத் திருச்சபையினரின் அச்சத்தைப் போக்கவும் வல்ல ஸ்தானதிபதி ஒருவரை உடனடியாக அனுப்பியது. ஆயினும் அக்காலத்திய அத்லாந்திக் சமுத்திரத்தைக் கடக்கும் ஆபத்துக்களும் தாமதங்களும் நிறை பயணத்தை மேற்கொண்ட ஸ்தானாதிபதி கியூபா போய்ச்சேருமுன் அங்கிருந்த குருக்களில் அரைப்பங்குக்கு மேற்பட்டோரும், துறவிகளில் முக்கால் பங்கினரும் கியூபாவை விட்டு வெளியேறிவிட்டனர்.

1961 செப்ரம்பர் 10இல் ஆயர் பொஷா ஆண்டகையின் ஆலயத்திலிருந்து பல்லாயிரம் மக்கள் கொண்ட ஊர்வலமொன்று கம்மியூனிஸ எதிர்ச் சுலோகங்களை கோஷித்துக்கொண்டு சென்றது. அரசின் தடைகள் உருவாக்கிய அல்லோல கல்லோலத்தால் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமுற்றனர். இரு தினங்களின பின் ஆயரும் உதவியாளர் பலரும் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் பின் ஆயரும், 135 குருக்களும், 45க்கு மேற்பட்ட பொது நிலையினரும் கோவாடோங்கா என்ற ஸ்பானிய கப்பலிலேற்றப்பட்டு ஸ்பெயினுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து காஸ்ட்ரோ கியூபாவில் மத ஊர்வலங்களுக்குத் தடை விதித்தார். திருவிழாக்கள் அனைத்தும் ஆலயங்களுக்குள் மட்டுமே நடத்தப்படவேண்டும் என வற்புறுத்தப்பட்டது. கிறிஸ்தவ நாகரிகத்தின் உண்மையான பெறுமதியைக் காப்பதற்கு எவ்வளவு வேகமான முன்யோசனையற்ற தீர்வுகளுக்குள் செல்ல வேண்டியிருக்கிறது என்று மேற்படி தீர்வுகளை பின்னணியாகக் கொண்டு ரோமையில் ஒரு பகிரங்க நேர்காணலில் (செப்டம்பர் 20) திருத்தந்தை 23ஆம் அருளப்ப பாப்பிறை கூறினார்.

இதுவரை நாம் கூறியதிலிருந்து கியூபாவில் கத்தோலிக்க திருச்சபைக்கும், பொது நிலையினருக்கும் சுதந்திரமாக மத வழிபாடுகளை நடத்துவதற்கு எவ்வளவு கெடுபிடிகள் இருந்திருக்கும் என்பது நன்கு தெரியவந்திருக்கும். அது போல வரலாற்று ஆசிரியர் பலா, காஸ்ட்ரோவின் அநீதச் செயல்கள் பற்றி செய்தி ஊடகங்களிலும், நூல்கள் வாயிலாகவும் வெளியிட்ட போதும் அந்த வன்செயலாளனின் நிலையில் எதுவித மாறுதலும் காணப்படவில்லை. ரூஷியாவின் சர்வாதிகாரி லெனினது தத்துவமும், சோசியலிஸமே காஸ்ட்ரோவின் வழி காட்டும் ஒளிவிளக்காயிற்று. காஸ்ட்ரோவுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க குடியரசு கையாண்ட பல்வேறு வகையான தாக்குதல்களும் காஸ்ட்ரோவை ரூஷியாவை கட்டி அணைக்க உதவியிருக்கலாம்.

மதத்தை அதன் அடித்தளத்திலிருந்து அடிபணிய வைக்கப் பாடசாலைகளைத் தேசிய மயமாக்குதலும், பின் அவ்வக் காலத்தில் ஆளும் அரசின் கொள்கைகளுக்கேற்ப கல்விக் கொள்கைகள் சின்னாபின்னப்படுத்தப்படுவதும் இன்று அனைத்துலகிலும் சர்வ சாதாரணம். கியூபாவிலும், லத்தீன் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் இவ்விதமே பாடசாலைகளும் கல்விக் கொள்கைகளும் ஆட்டி அலைக்கழிக்கப்பட்டன. 1956களிலும், 60களிலும் நம் நாட்டிலும் இந்தத் தேசிய மயமாக்கப்படல் எத்தனை பாடுபடுத் தியதென்பதை நாம் நன்கறிவோம்.

1962ஆம் ஆண்டு, கியூபாவின் கத்தோலிக்கருக்கு ஒரு துர்ப்பாக்கிய வருடம். ஆயிரக்கணக்கில் கத்தோலிக்கர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். ஏராளமானோர் சிறைச் சாலைகளிலும், மிகுதியாக இருந்தோர் ஆட்சியாளரால் சந்தேகக் கண்கொண்டும் நோக்கப்பட்டனர். 800க்கு மேற்பட்ட குருக்கள் பணிபுரிந்த அந் நாட்டில் 1962களில் 250 பேருக்கு குறையவே காணப்படடனர். ஏறத்தாழ எழுபது லட்சம் கத்தோலிக்கரின் ஆன்மீக தேவைகளைக் கவனிக்க இந்த இருநூற்றைம்பது குருக்களாலும் முடியுமா? துறவிகளின் எண்ணிக்கை 3000த்திலிருந்து 300 ஆகியது.

மத்தியதர கத்தோலிக்கர் தங்கள் பிள்ளைகளை உயர் வகுப் புகளுக்கோ அல்லது பல்கலைக்கோ அனுப்பும் போது சில பிரச்சனைகள் அவர்களது முயற்சிகளுக்கு எதிராகத் தலை தூக்கின. உத்தியோக பூர்வமாக இது வெளிக்காட்டப்படாவிடினும் சீர்திருத்த புரட்சிகளில்

முன்னின்று உழைத்தோரைப் பழிவாங்க மார்க்சியவாதிகள் எடுத்துக் கொண்ட தந்திரோபாயம் எனவும் கருதப்பட்டது.

*1963*இன் ஆரம்பத்தில் வத்திக்கான் தலைமையகத்தால் ஆயர் செசார் சக்கி. கவானாவின் வத்திக்கான் தூதரக நிர்வாக அதிகாரியாக நியமனம் பெற்றார். ஆட்சியாளருடன் அவர் பழகிய முறை புதுமை யானது. அரச உயர் அதிகாரிகளுடன் நட்புறவு கொண்டு அவர்களது நல்லெண்ணத்தைப் பெறப் பாடுபட்டார். இதன் காரணமாக கத்தோலிக்கரின் வெறுப்பையும், ஆயர்களின் அவமதிப்பையும் பெற்றார். கவானாவின் முன்னைய கசப்பான நிகழ்வுகளை இவர் தெரிந்துகொள்ளாததே அனைத்துக்கும் அடிப்படைக் காரணிகளாகும்.

இவ் வருடத்தில் அணு, ஆயுதத் தளங்கள் கியூபாவில் நிறுவப்பட்டது. உலகனைத்தையும் அதிர்ச்சியடைய வைத்தது. (மூன்றாண்டுகளுக்கு முன்னர்தான் *1960* நவம்பர் *13*இல் ஆயர் பியர்ஸ் சென்வான்ரெஸ் ஒரு திருமடலில் குறிப்பிட்டார்: கடந்த பதினைந்து ஆண்டுகளாக உலக அமைதியையும், பாதுகாப்பையும் கம்மியூனிஸ பேரழிவிலிருந்து காப்பாற்ற *365* பில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களை தந்துதவிய ஐக்கிய அமெரிக்க மக்களுக்கு அனைத்துலகும் கடமைப்பட் டுள்ளது.)

## போராட்டத்தின் எல்லையும் தரவுகளும்

புரட்சிப் பேரலையிலிருந்தும், சீர்திருத்தங்களின் தாக்கங்களிலிரு ந்தும் குணமடைந்து சுயநிலைக்கு மீளுவது கியூபாத் திருச்சபைக்கு இலகுவாய் அமையவில்லை. மிக உறுதியான தீர்மானங்களையும், திட்டங்களையும் உருவாக்கி ஒளி மிக்க ஒரு எதிர் காலத்தைக் கனவுகண்டோர் பலர். தங்கள் அயரா முயற்சிகள் வெறும் கானல் நீராகிப்போகுமோ என்று மனத் தளர்ச்சியடையத் தொடங்கினர். ஆயர்கள் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளை ஏற்று ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்க முயற்சித்தனர்.

*1961* செப்ரம்பரின் பின் *1963*களின் மத்தியில் தான் கவானாவின் குரு குலத்தினர் தங்கள் தலைமையகத்தில் ஒன்று கூடி வெளிநாட்டிலிருந்து வருகைதந்த குரவர் ஒருவர், ஏனைய லத்தீனிய அமெரிக்க நாடுகளின் முன்னேற்ற முயற்சிகளையும் அபிவிருத்தி

நிகழ்வுகளையும் விபரமாகப் பேசக் கேட்டனர். கூட்ட முடிவில் குருக்கள் பயிற்சிக் கல்லூரியிலிருந்து ஒரு அழைப்பையும் பெற்றனர். குருக்கள் பயிற்சிக்கு லத்தீனிய மொழியையே உத்தியோக மொழியாக்கும் வைபவத்துக்கான அழைப்பு அது. திருச்சபையின் திரு வழிபாட்டு மொழியாக காலாதி காலமாக இயங்கிவரும் லத்தீனிய மொழியில் ஒரு பயிற்சியாளர் அழகுற உரையாற்றியதையும் அவர்கள் செவிமடுத்தனர்.

எனினும் 1963 இறுதிவரை நிலமையில் ஸ்திரமானதொரு உறுதி காணப்படவில்லை. ஆயர் சக்தி ஆண்டகையால் சில சலுகைகளும் உரிமைகளும் பெறப்பட்டன. நாடு கடத்தப்பட்ட குருக்களில் சிலர் மீண்டும் வந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டனர். வெளிநாட்டுக் குருக்கள் வரவும் அனுமதி தரப்பட்டது. ஆயினும் பிரான்சிய, பெல்சிய நாட்டுக் குருக்களே அனுமதிக்கப்பட்டனர். மறைக்கல்வி வகுப்புகளை நடத்துவதற்குத் தேவையான காதிதாதிகள், எழுத்துபகரணங்கள், விவிலிய - மறைக்கல்வி நூல்களை அச்சிடுவிக்கும் சாதனங்களை இறக்குமதி செய்ய அனுமதி கிடைத்தது. இவைகளுக்கு சுங்கவரி யிலிருந்து விலக்கு விதிகளும் தரப்பட்டன. ஆயினும் நிலமை நிரந்தரமானதாகவோ உறுதி கொண்டதாகவோ இருக்கவில்லை. இடத்துக்கிடம் அரச அதிகாரிகளின் மனநிலைகளுக்கமையவே இச்சலுகைகள் கிடைக்கப் பெற்றன. புரட்சிகர மாற்றங்கள் தேவை என்பது பொதுவாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படினும் முன்னைய புரட்சிகளின் தலைச்சுமையும் துன்பியல் தாக்கங்களும் ஒரு புதிய சுமையை ஏற்க மக்கள் தயாராக இல்லாததால் புரட்சி இடம்பெறுவது தவிர்க்கப்பட்டது.

1963இல் பாப்பிறை 23ஆம் அருளப்பரின் புதிய திரு மடல் PACEM IN TERRIS வெளியிடப்பட்டது. கியூபா மொழியில் பத்தாயிரம் பிரதிகள் அச்சாகின. அரசியல் வல்லுநரான இராஜங்க அதிகாரிகள் குழு ஒன்றை ஆளுங்கட்சியினர் கூட்டி, இத் திரு மடலை ஆய்வு செய்து எண்ணக்கருக்களை வெளியிடப் பணித்தனர். அவ் வருட இறுதியில் அருளப்புப் பாப்பு மரித்த போது அரசாங்கம் மூன்று நாள் துக்க அனுஷ்டிப்பை பிரகடனம் செய்தது. பாப்பரசரின் ஆன்ம சாந்திக்கான உத்தியோக பூர்வ இரங்கற் திருப்பலியிலும் அரச உயர்மட்ட அதிகாரிகள் பங்குபற்றினர். ரோமையிலும் அருளப்பு பாப்பிறையின் இறுதிச்

சடங்குகளில் எல்லாக் கம்மியூனிஸ நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத் தக்கது. கியூபா தலை நகரிலும் மற்றும் அனைத்து நகர, கிராமங்களிலும் மதங்கள் துன்பியல் நிகழ்வுகளை அனுதாபத்துடன் கவனித்து செபத்தாலும், சொல்லாலும், செயலாலும் தம்முடன் ஒன்றித்த ஒரு அன்பார்ந்த குடும்பத்தலைவரின் பிரிவை எண்ணி மக்கள் மனங்கலங்கி, கண்ணீர் சொரிந்து ஆறுதலற்ற நிலையை அடைந்தனர்.

இக்கால கட்டத்தில் கியூபாவில் இளம் குருக்களையும், இளைஞர், யுவதிகளையும் கொண்ட ஒரு புதிய சமுதாயம் பிறந்தது. அவர்கள் புரட்சிகர நிகழ்வுகளை அதிகம் அறியார்கள். அவர்களது கண்ணோக்கும், திட்டங்களும் நாட்டின் நலனை மட்டுமல்ல, சமுதாய விழிப்பையும் பாமர மக்களின் ஏழ்மை, அறியாமை, மடமைகளை நீக்குவதிலும் சென்றது. 1966 பெப்ரவரியில் கொலம்பிய கொரில்லா யுத்தத்தில் கமிலோ ரோரஸ் கொல்லப்பட்டார். லத்தீனிய அமெரிக்காவின் சமூகப் புரட்சியின் பிரதான சின்னமாக அவர் மதிக்கப்பட்டார். பிடல் காஸ்ட்ரோ இத் தியாகியின் மதித்தற்கரிய நாட்டுப்பணியை வெகுவாகப் புகழ்ந்து உரைகள் நிகழ்த்தினார்.

1968களின் ஆரம்பத்தில் பிடல் காஸ்ட்ரோ விடுத்த பிரகடனத்தில், மார்க்சிய வாதிகள் சித்தாந்தங்களில் மட்டும் நம்பிக்கை வைத்து தாம் மட்டுமே புரட்சியாளரென சிந்திப்பதுடன் நிறுத்திவிடாமல் கிறிஸ்தவர்களும் சிறந்த உண்மையான புரட்சியாளர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

1969 செப்ரம்பரில் கொன்சலஸ் றூயிஸ் என்ற வேத விற்பன்னரை (இறையியலாளரை) கவானா பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவம் பற்றிய ஆய்வுத் தொகுப்புரைகள் நிகழ்த்த காஸ்ட்ரோ ஒழுங்குசெய்தார். ஏப்பிரல் 29இல் கியூபாவின் ஆயர்கள் தம் நாட்டின் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார திட்டங்களால் விளைந்த சீர் கேடுகளைக் கண்டித்து அறிக்கை விட்டனர். மெடலியன் அறிக்கையின் பின் ஒன்பதாண்டுகள் மௌனம் காத்து நாட்டு நிலையை உன்னிப்பாக அவதானித்த ஆயர்களின், நாட்டு அபிவிருத்திபற்றிய உள்ளோட்டமான ஆய்வின் தீர்வு இது:

''மனிதன் தனது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக் கடமைப்பட்டவன். அதுபோல நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலும் அவனுக்குப் பங்கு உண்டு. நம் நாட்டின் அபிவிருத்தியுடன் பாதுகாப்புப் பிரச்சனையிலும் நாம் விவேகத்துடன் நடந்துகொள்ளுதல் அவசியம். எமது நாடு அமெரிக்கக் கண்டத்தில் அங்கம் வகிக்கிறது. அமெரிக்கக் கண்டத்தில் பலம் பொருந்தியதும், செல்வம் கொழித்ததுமான நாடு ஐக்கிய அமெரிக்கா. அது ஒரு சுதந்திர ஜனநாயக மக்கள் குடியரசு. எனவே அந்த நாட்டின் தலைமைத் தானத்தை மீறி சமுத்திரத்துக்கு அப்பால் வெகு தொலைவில் உள்ள ஐரோப்பிய அல்லது ஆசிய கண்டங் களைச் சார்ந்த நாடுகளை நம்பிச் செல்வது புத்திசாலித்தனமல்ல. எனவே இவ்விடயம் நன்கு ஆராயப்பட்டு நாட்டின் உண்மையான நலன்களை மனதிற் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.''

1965இல் முடிவுக்கு வந்த வத்திக்கான் இரண்டாவது பொதுப் பேரவையில் ஏறத்தாழ எல்லாக் கியூபா ஆயர்களும் சமூகந் தந்து செயற்பட்டிருந்தார்கள். கியூபாப் பிரச்சனையில் கியூபாத் திருச்சபையின் சுதந்திரம் பாதுகாக்கப்படவும் அப்பிரச்சனையின் உள்ளாந்தரங்கள் அகிலத்துக்கும் அம்பலமாகவும், இரண்டாம் வத்திக்கான் பேரவை நல்ல பங்களிப்பைத் தந்தது.

1967இல் ரோமாபுரியில் நடந்தேறிய அனைத்துலகப் பொது நிலையினரின் அப்போஸ்தலிக்க சம்மேளனத்தில் கியூபாவின் அப்போஸ்தலிக்கத் தொண்டர் பிரதிநிதிகளும் பங்குபற்றினர். கியூபா பிரச்சனை அனைத்துலகுக்கும் இரண்டாம் வத்திக்கான் பேரவை மூலம் அம்பலப்படுத்தப்பட்ட காரணத்தால் பல முக்கிய உலக பிரமுகர்களும் வல்லமை மிக்க சம்மேளனங்களின் பிரதிநிதிகளும் கியூபாவைத் தரிசிக்க நேர்ந்தது.

ஆயின் இச் செயற்பாடுகளால் கியூபா பிரச்சனை முற்றாக தீர்வுகாணப்பட்டது என்று தீர்மானிக்க முடியாது. ஆயினும் பகிரங்கப் பிணக்குகள் நிறைந்த ஒரு கால கட்டம் முடிவடைந்துள்ளது. ஆயின் பல்வேறு மன வேதனைகளால் கியூபாவின் மக்கள் வருந்திய காலம் ஒருவாறு கழிந்து விட்டது. கியூபா அரசுக்குத், திருச்சபைக்கு அஞ்சிய நாட்கள் அகன்று விட்டன. (கியூபா அரசு தனது ஒவ்வொரு செயலையும் தீர ஆலோசித்தே அமுலாக்குகிறது) கியூபா திருச்சபையினரும்,

கத்தோலிக்கரும் ஆட்சிப்பீடத்தைச் சந்தேகக் கண்ணுடன் நோக்குவதும் குறைந்துவிட்டது.

கியூபாத் திருச்சபை ஒரு புதிய நடை முறையைக் கையாளுகிறதா? சர்வதேச ஆய்வாளர்கள் இக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்விதமாயின் சீர்திருத்தப் புரட்சிக்குள் மற்றுமொரு புரட்சிகர சீர்திருத்தம் கியூபாவின் திருச்சபைக்குள் இடம்பெற வேண்டும். ஆயினும் கியூபாத் திருச்சபை இன்று மிக நல்ல நிலையில் உள்ளது. பாடுகளின் பயனாகத் தன்னைப் புடமிட்டுப் புனிதப்படுத்திக் கொண்டது. இதுவே அனைத்துலகிலுமுள்ள நாடுகளின் கத்தோலிக்க திருச்சபைகளின் நிலையாகும்.[45]

## 2. வெனிசுவெலா

*1958*இல் சர்வாதிகாரி மார்கோஸ் பியர்ஸ் ஜிமென்சை பதவி நீக்கியபின் ஜனநாயக தீவிரவாதக் குழுவின் தலைவர் ரோமுலோ பத்தன்கோட் நாட்டுக்கு தலைமைதாங்கினார். அவரது கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட சீர்திருத்தத் திட்டங்கள் தீவிரவாத வலது சாரிக் கட்சியினதும், இடதுசாரிக் குழுவினதும் எதிர்ப்புக்குள்ளாயின.

ஒரு நீண்ட மறை முகமான ஆய்வின் பின் கம்மியூனிஸ்த கட்சி பத்தன்கோட்டுக்கு ஆதரவளிக்க முடிவு செய்தது. எனினும் அமெரிக்க நலன்கள் பாதுகாக்கப்பட்டமையையும், மிதவாத நடவடிக் கைகளையும் கண்டித்தது. *1960*இல் கம்மியூஸ்த கட்சியும் எதிர்க்கட்சியில் இணைந்துகொண்டது.

அதே வருடத்தில் ஜனநாயக தீவிரவாதிகளில் ஒரு பகுதியினர் அரச கூட்டு நிர்வாகத்திலிருந்து விலகி, இடது சாரித் தீவிரவாத இயக்கமொன்றை நிறுவினர். எனவே ஜனாதிபதி பத்தன்கோட் இருவித எதிர்ப்பியக்கங்களுக்கும் ஈடு கொடுக்க வேண்டியவரானார்.

*1961, 1962*களில் காஸ்ட்ரோவுக்கு எதிரான வன்செயல்கள் புகுத்தப்பட்டன. கம்மியூனிஸ்த கட்சியின் உத்வேகமிக்க தீவிரவாதிகள் வன்செயல்களில் ஆயுத நடவடிக்கைகளைப் புகுத்துவதில் வெற்றி கண்டனர். *1962*இல் அங்கத்தினர், மாணவர், மற்றும் தீவிரவாதிகளைக் கொண்ட ஆறு கொரில்லா நிலையங்கள், மலைகளிலும் குன்றுகளிலுமாக நிறுவப்பட்டன.

வசந்த காலத்தில் கப்ஜாவில் உள்ள நிலையத்துக்கு யுவான் வைஜென்சியும், பால்கோன் நிலையத்துக்கு டக்ளஸ் பிறோவும் தலைமை தாங்கி நடத்தினர். நிலைமை மோசமாவது கண்ட அரசு இரு இயக்கங்களுக்கும் தடை விதித்தது.

*1963*இல் தேசிய விடுதலை அணி ஒன்று உருவானது. அரசினால் அதனைத் தடுக்க முடியவில்லை. பல்வேறுபட்ட கிளர்ச்சிக்காரர், தீவிரவாதிகள், புரட்சி அமைப்புகளிடையே ஒரே தலைமையில் ஆட்சிப் பீடத்தை எதிர்க்கும் எண்ணக் கரு வலுப் பெற்றது. இந் நிலையில் ஜனாதிபதி பத்தன்கோட் பல வித அடக்கு முறைகளைக் கையாண்டும், ஏனைய அமெரிக்க நாடுகளுடன் கூட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டும், தீவிரவாதிகளைத் தேசத் துரோகிகளாகப் பிரகடனம் செய்து சிறை பிடித்தல், சித்திரவதை, சிரச்சேதங்களால் எல்லாவித பயங்கர எதிர்ப்புக்களையும் சமாளித்தார். மார்கழியில் நடைபெறவிருந்த தேர்தலுக்கு முன்கூட்டியே ஆயத்தமாகி தனது எதிர்ப்புச் சக்திகளனைத் தையும் நிர்மூலமாக்கினார்.

தேர்தலின் முடிவுகள் வன்செயலில் மக்கள் கொண்ட பெரு வெறுப்பை நன்கு தெளிவாக்கின. தொழிலாளர் இயக்கங்களதும், விவசாயிகளினதும் ஆதரவால் ராவுல்லியோனி பெரு வெற்றி ஈட்டினார். எனினும் புதிய ஆட்சி உத்தேகிகளை உள்ளடக்காததால் மந்த கதியிலேயே நடைபெறத் தொடங்கியது. இதனால் மீண்டும் ஊழல்களும், வன்செயல்களும் அடிக்கடி அலைமோதின.

இரண்டாவது தேசிய மாநாடு ஒன்று *1965*இல் கூட்டப்பட்டது. நாட்டை முன்னேற்றும் திட்டங்கள் வெகு கவனமாக ஆராயப்பட்டன. கம்மியூனிஸ்த, ரொட்ஸ்கிஸ குழுக்களின் வன்செயல் மூலம் புரட்சி கரமாற்றங்களையும், புதுமையான திட்டங்களையும் நடைமுறைப் படுத்தல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனைய அமெரிக்க நாடுகளின் விடுதலைத் திட்டங்களை ஆதரிப்பதும் சர்வாதிகார எதிரியை எதிர்க்க ஒன்றிணைதலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1965இல் கம்மியூனிஸ்த கட்சி கொரில்லாக்களின் கூட்டு முன்னணியிலிருந்து விலகியது. பொதுவாகப் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுவது வரவேற்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் புரட்சிவாத தலைவர்கள் பார்பிரிக்கோ ஒஜெடா, டக்ளஸ் பிறேவோ என்போர் கைது செய்யப்பட்டனர். கியூபாவும், வெனிசுவெலாவும் தம்மிடையே நிலவிய சிறுசிறு பிணக்குகளைத் தீர்த்து ஒன்றுபட்டு எதிரியை எதிர்க்கத் தயாராயின. ஜனாதிபதி கல்தேரா 1966 மார்ச் மாதத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் சமூக அமைதிப் பணிக்கு முன்னுரிமை கொடுத்தார். லத்தீனிய அமரிக்காவில் முப்பெரும் சக்திகளிடையே நடைபெற்ற விடுதலைப் போருக்கு வெனிசுவெலா ஒரு நல்ல எடுத்துக்காட்டு. (அரசு, பாரம்பரிய தீவிரவாத இயக்கங்கள், கொரில்லாக்கள்)[46]

## 3. பெரு

1960 வரை பெருவில் எவ்வித சமூகமுன்னேற்ற பிரச்சனைகளும் இடம்பெறவில்லை. இக்கால கட்டத்தில் விவசாயிகள், அறுவடையாளர்கள் அடங்கிய ஒரு குழுவினர் கியூகோ பிளான்கோ தலைமையில் ஒருங்கிணைந்து கொண்வென்சியன் மாநிலத்தின் ஒரு பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். 1963 முற்பகுதியில் அடக்குமுறைகளால் இந்த எழுச்சி அழித்தொழிக்கப் பட்டது. மே மாதத்தில் பிளான்கோ கைதுசெய்யப் பட்டார். இதன் காரணமாக மிதவாதிகள் நலனடைந்தனரெனினும் ஒரு மாபெரும் இயக்கத்தின் தேவை உணரப்பட்டது. இக்கால கட்டத்தில் பெருங் காணிச் சொந்தக்காரரர் மீது ஏழை விவசாயிகள்அடிக்கடி சிறு தாக்குதல்களை நடத்தினர். வட அமெரிக்க விவசாய முதலீடுகள் மீதும் முற்றுகையிடப்பட்டது. காணிகள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து தங்கள் செய்கை பொது நலன் கருதியதே எனவும் இவர்கள் வாதித்தனர். காணிகள் தேவையைக் கருதி, நேர்மையுடன் பங்கிடப்பட்டன. விவசாயிகள் அளவுக்குமேலாக ஆசைப்படவில்லை. காணிகளின் சொந்தக்காரருக்கும் அவர்களது தேவைக்களவாக வழங்கப்பட்டது.[47]

## 4. பொலிவியா

1964 நவம்பருக்குப் பின்னர், நாட்டின் நிர்வாகம் ஒரு இராணுவ புரட்சிக்குழுவால் மேற்கொள்ளப்பட்டது. விவசாய புரட்சியாளர்

குழுவும் இதற்கு ஆதரவளித்தது. தொழிலாளர் இயக்கம் வெகு கண்டிப்பான கண்காணிப்புக்குள்ளாகியது. 1967இல் நன்சுகாசா நதிப் பள்ளத்தாக்குகளிடையே ஒரு கொரில்லா இயக்கப் பயிற்சிப் பாசறை கண்டு பிடிக்கப்பட்டது. (இதற்கு கியூபா ஆதரவளித்திருந்தது) எனினும் விவசாயிகளின் ஆதரவு இப் பாசறைக்குக் கிடைக்கவில்லை. இராணுவத்துடன் சில தடவைகள் மோதித் தோல்வியடைந்த பின் பாசறை செயலிழந்தது. இத் தோல்விகளுக்கு செகுவாராவினதும், றெஜி டெபிறேயினதும் நேரடித் தலைமையிலான இராணுவ நடவடிக் கைகளே முக்கிய காரணிகளாயின. [48]

## 5. பராகுவே, ஆர்ஜென்ரீனா

லத்தீன் அமெரிக்காவின் ஏனைய நாடுகளில் புரட்சிக்கான வித்துகள் அதிகமாக ஊன்றப்படவில்லை பராகுவேயில் ஜெனரல் ஸ்ரோஸ்நரின் சர்வாதிகார ஆட்சியில் பல சதிப் புரட்சியாளர் அங்கம் வகித்துச் சீர்திருத்தத் திட்டங்களை அமுலாக்கினர்(1960).

1963களில் கம்மியூனிஸ்த கட்சி, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு புரட்சியை சட்ட வரம்புகளுக்குட்பட்ட நிலையிற் புகுத்தியது. 1968களில் அரசியற் காரணங்கள், வன்செயல்கள், சதித்திட்டங்கள் காரணமாகக் கைதாவோர் தொகை அதிகரித்தது. 1969இல் குருக்கள் சிலரும் அடக்குமுறை நிகழ்வுகளாற் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். ஆயர்களும் நடவடிக்கைகளில் இறங்கினர். ஆட்சியாளரின் அடக்குமுறை ஆட்சியை ஆட்சேபித்து ஞாயிறு திருப்பலிகளும் நிறுத்தப்பட்டன.

1963இல் ஆர்ஜென்ரீனாவில் சில சிறிய புரட்சித் தீவிரவாதக் குழுக்கள் வட பகுதிகளிற் சிதறின. ஆயினும் சில தொழிற்சங்க யூனியன்கள் செயற்பட்டன. சில சிறு வன்செயல்களுக்கு கோர்டோபா தலைமை தாங்கினார். இவற்றிற் பல்கலைக் கழக மாணவரும் பங்களிப்புச் செய்தனர். இராணுவ ஆட்சிக்கு ஆட்சேபனையா? அல்லது வன்செயல் இயக்கங்களுக்கான சுதந்திரதேவையா? எது காரணியென்பது தெளிவுறவில்லை. வெனிசுவலா, குவாட்டமாலா, கொலம்பியா ஆகிய நாடுகளின் அரசியற் பிரச்சனைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே ஆர்ஜென்ரீனாவின் நிலை காணப்பட்டது.

1970களின் ஆரம்பத்தில் ஒரு தபாற் புகை வண்டி தாக்கப்பட்டது. இத் தாக்குதல்புவனஸ் அயர்சுக்கு அண்மையில் லுஜான் என்னுமிடத்தில் இயங்கிய ஒரு சிறிய புரட்சிகர பயிற்சிப் பாசறையின் செயலென இராணுவம் கண்டு பிடித்தது. பராக்குவேயின் இராஜரீகத் தூதுவர் ஆர்ஜென்ரீனிய விடுதலை இயக்கத்தினரால் கடத்தப்பட்டார். மார்ச் மாதத்தில் லா மனோ இயக்கமும் புரட்சிகளில் இறங்கியது. சுருக்கமாகக் கூறின் ஒரு உள்நாட்டுப் போரே ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்றது.[49]



## அடொல்போ பெரேஸ் எஸ்குவிலேஸ்

இவர் லத்தீன் அமெரிக்காவின் சாத்வீக விடுதலை இயக்கத்திலே பிரபல்யமான ஒருவர். இவ்வியக்கத்திலே இவர் தம்மை அர்ப்பணித் தமைக்கு கிடைத்தது சிறை வாசமும், சித்திரவதை யுமே. சில வருடங்களுக்கு முன்பு ஆர்ஜென்டீனாவிற்கைது செய்யப்பட்டு 15 மாதங்களாகச் சிறைச்சாலையில் சித்திரவதைகளை அனுபவித்தார். உலக அபிப்பிராயம் இவர் சார்பாக இருந்தது. இந்த உலக அபிப்பிராயமும், இவருக்குக் கிடைத்த பெற்றி வில்லியம்ஸ், மெறீட் கொறிகன் ஆகியோரது நேபால் சமாதானப் பரிசுக்குரியவர் என்ற தெரிவும் இவரைச் சிறையிலிருந்து மீட்டு, வீட்டுச் சிறை வாசத்துக்குக் கொண்டு வந்தன. பின் வீட்டுச் சிறை வாசமும் நீக்கப்பட்டது. அதன் பின் அவர் இலத்தீன் அமெரிக்க சாத்வீக விடுதலைக் குழுக்களில் இருந்து நீதி, சமாதானச் சேவைக் குழுக்களின் இயக்குனரானார்.

**இவர் கண்ணோட்டத்தில் செபம்...**

சிறைச்சாலை எனக்கு வரட்சியான அனுபவமாகவும் அதேவேளை வளமுள்ள அனுபவமாகவும் இருந்தது. பரிசுத்த வாரத்தின் முதல் நாளும், மாட்டின் லூதர் கிங்கினுடைய இறப்பின் நினைவு நாளுமான அன்றே நான் சிறையில் அடைக்கப்பட்டேன். எனக்குப் பரிசுத்த வாரத்தைச் சிறையில் கழிப்பது ஒரு விசேட அர்த்தமுள்ளதாயிருந்தது.

சிறைச்சாலையில் ஆன்மீகம் சார்ந்த, அறிவு சார்ந்த ஒழுக்க நெறிகளுக்கு கட்டுப்பட்டவனாக நான் இருக்க வேண்டும் என்று

தெரிந்து கொண்டேன். என் உடல் சார்ந்த நலத்துக்காக சில உடற் பயிற்சிகளைச் செய்வது தவிர்க்க முடியாததாயிற்று.

சிறையிலே ஒருவர் நிர்வாணியாகவும், அனாதரவற்றவனாகவும் இருக்கிறான். அவனை அங்கு வரையறுப்பது சிறைச்சாலையில் கொடுக்கப்படும் இலக்கம் மட்டுமே. அப்படியானால் அங்கே எம்மை அழியவிடாது ஆளுமையுள்ள மனிதர்களாக மீட்டு வைப்பது எது? என்னைப் பொறுத்தமட்டில் செபமே முக்கியமானதாய் இருந்தது. செபம் என்றால் என்ன? தொடர்ச்சியான செபம் என்றால் என்ன? தியானம் என்றால் என்ன? என்பவற்றை ஆழமாக அறிந்துகொள்வதில் ஈடுபட்டேன். இறைவனின் நிரந்தர பிரசன்னத்தை உணர்வதிலும், இறைவனது மௌனத்துக்குச் செவிமடுப்பதிலும் நேரத்தைச் செலவிட்டேன். நாம் காணும் காலத்தின் கோலங்களினூடாக இறைவன் எமக்குரைக்கும் செய்தி என்ன? என்பதைக் கண்டறிவதே முக்கிய மானதாய் இருந்தது.

நான் வழமையாகச் செபித்து வந்த செபங்களையே, தொடர்ந்தும் செபிக்க முயற்சித்தேன். ஆனால் சில சந்தர்ப்பங்களில் என்னுள்ளே ஒரு வரட்சி நிலையை ஏற்படுத்திக்கொண்டு நான் அவருக்குச் சொல்ல வேண்டியவற்றைக் குறைத்து, அவர் எனக்குச் சொல்லுபவற்றைக் கேட்பதில் அதிக நேரத்தைச் செலவிட முயற்சித்தேன். நான் போய்க்கொண்டிருக்கும் பாதையின் நிகழ்வுக்குரிய அர்த்தங்கள் என்ன? கடவுள் என்னிடம் என்ன விரும்புகின்றார்? என்று அறிந்துகொள்ள முயன்றேன். என்னைப் பொறுத்தமட்டில் இறைவனின் மௌனத்துக்குச் செவிமடுப்பது மிக முக்கியமானதாய் இருந்தது. செபம் ஒரு இயந்திரமயமான செயலன்று. ஆனால் அது மிகப் பலம் வய்ந்த சக்தி என்று நான் அனுபவ ரீதியான கண்டுகொண்டேன்.

சார்ள்ஸ் டிஃபுக்கோவினுடைய " பிதாவே என்னை உமக்கே கையளிக் கிறேன்" என்ற செபமும், புனித பிரான்சிஸ் அசிசியின் " இறைவா உம் சாந்தியின் கருவியாக என்னை ஆக்கியருளும்" என்ற செபமும் நான் செபித்த மிக முக்கிய செபங்களாகும். சில பாடல்களையும், நான் பாடிச் செபித்து வந்தேன். அவற்றுள் மிக முக்கியமானது " மிகவும் இரக்கமுள்ள தாயே" என்ற பாடல்.

என் மன ஆரோக்கியத்துக்கு செபமே உற்ற துணையாயிருந்தது. சிறைச்சாலையில் ஒருவன் அடக்கு முறையின் முன்னிலையிலே, அதை ஆன்மீக, உள ரீதியில் எதிர்க்கும் ஒரு பூரண வேலையில் ஈடுபட வேண்டும். எனக்கு இது கடினமாயிருந்தது. ஆனால் நற்செய்தியையும், அது கூறும் அற வழியையும் துன்புறுத்தலின் கீழே புரிந்துகொள்ள ஒரு சிறந்த அனுபவமாயிருந்தது. எம்மை வதைப்போரையும் எம் சகோதரர்களாகக் காணவும், அவர்களது வாதைகளில் ஒரு கிறிஸ்தவ பிரதிபலிப்பைக் காணவும் இது சிறந்த சந்தர்ப்பமாயிருந்தது.

நற்செய்தியிலே உறுதியான அம்சம் ஒன்றுண்டு. அதையே நான் நற்செய்தியின் அடி நாதமாக நம்புகின்றேன். அது தான் அன்பின் சக்தி. வாழ்வா? சாவா? என்ற இக்கட்டான நிலையை ஒருவன் அனுபவிக்க நேரின் அவன் கிறிஸ்து சிலுவையிற் தொங்கிய வேளையிற் கூறிய, வாக்கியங்களை உணர்ந்து கொள்ள வேண்டும்: ''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று இவர்கள் அறியாதிருக்கின்றார்கள்''

ஆனால் எம்மை வதைப்பவர்களோ தாம் செய்வது இன்னதென்று அறிந்தே செய்கிறார்கள் என்று நான் எண்ணினேன். இது எனக்கு முரண்பாடாயிருந்தது. ஆழமான செபத்தாலும் தியானத்தாலும் கிறிஸ்து அந்த உச்சக்கட்டத்தில் எமக்கு என்ன சொல்ல முனைகிறார்? என்று அறிய நான் முயற்சித்தேன். அது நாம் ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு அனுபவமான கிறிஸ்தவ மன்னிப்பே.

நான் சிறிது சிறிதாக ஒரு உண்மையை அறிந்து கொண்டேன். அது என்னவெனில் எம்மை வதைப்போர் தாமும் மனிதர் என்பதையும் நாமும் மனிதர் என்பதையும் மறந்து போயிருந்தார்கள். அவர்கள் தம்மையே இனங்கண்டுகொள்ளும் தன்மையை இழந்து போயிருந்தார்கள். நான் கண்டுகொண்ட மற்றொரு உண்மைதான் நம்பிக்கை. நான் முன்பெல்லாம் இந்த நம்பிக்கையைப் பற்றி ஆழமாகச் சிந்திப்பதே கிடையாது. சிறையிலோ, எமது எதிர்ப்புக்குப் பலமாக விளங்கும் நம்பிக்கையின் நிதர்சன உருவின் தாக்கத்தைக் கண்டு கொண்டேன். எனது சகோதரக் கைதிகளுடன் இந்த நம்பிக்கையை நான் பகிர்ந்து கொண்டேன். அதன் விளைவாக வேதனைகளுக்கூடாகப் பலர் தமது

மனிததத்துவத்தையும், தம் விசுவாசத்தையும் திரும்பவும் கண்டடைந்ததை நான் அவதானித்தேன். ஒருவன் தன் உண்மை நிலையைக் கண்டுகொள்கிற தருணமே முக்கியமான தருணம் என நான் நம்புகின்றேன். ஏனெனில் அவன் முழுமையாக வெறுமையாகின்றான். அங்கே அவன் தன் சுய ஆளுமையையும், கடவுளையும் தவிர வேறெவரையும் காணமாட்டான்.

**இவர் கண்ணோட்டத்தில் அகிம்சை...**

ஒரு குண்டு வெடிக்கப்படும் போது அது பெரும் ஓசையை எழுப்புகிறது; பேரழிவை உண்டாக்குகிறதென்பதை நாம் அறிவோம். தினசரிப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தொலைக்காட்சிகளும் இதைத்தான் வெளியிட விரும்புகின்றன. ஆனால் பிரேசில் நாட்டின் வட கிழக்குப் பகுதியிலுள்ள குடியானவர்கள் நிலத்துக்காகப் புரியும் அகிம்சைப் போராட்டத்தைப் பற்றி அவை அதிகம் கூறுவதில்லை. சே குவெவராவும் அவரது கெரில்லாப் போராளிகளுமே கவிழ்க்க முடியாது போன சர்வாதிகார ஆட்சியை பொலீவிய மக்கள் தமது அகிம்சைப் போராட்த்தினால் கவிழ்த்த செய்தி பற்றி அதிகம் கூறுவதில்லை.

கடந்த பத்து வருட காலத்தில் கெரில்லாக் குழுக்களினாலும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவ ஆட்சியாளர் களினாலும் லத்தீன் அமெரிக்கப் பிரதேசம் எங்கும் வன் செயல்கள் பெருகி, பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரசியல் கொலைகள், ஆள்கடத்தல்கள், சித்திரவதைகள், அடக்கு முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளன. இரு சாராராலும் புரியப்பட்ட இந்த குற்றச் செயல்கள் நன்கு அறியப்பட்டவையே.

வன்முறை ஆயுத பலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒருவனை ஆள் எனும் நிலையிலிருந்து பொருள் எனும் நிலைக்கு மாற்றுகிறது. கொள்கைகளையும் பொருளாதார அரசியல் இலாபத்தையும் மனிதரை விட முக்கியமாகக் கருதுகிறது. ஆனால் மனித ஆளை ஒருவன் மறக்கும் போது, அவன் இறைவனையும் மறக்கிறான். மனித வாழ்வின் பெறுமதி பற்றிய உணர்வையே அவன் இழந்துவிடுகிறான். தனது குறிக்கோளையும் கையாளத் தயங்காத காரணத்தினால், வன்செயல் கட்டுப்படுத்த முடியாதபடி படிப்படியாக ஏறிக்கொண்டு போகின்றன.

இந்நிலையில் சமாதானம் என்பது ஆயுதங்களின் பயமுறுத்தலில் தங்கியிருக்கின்றது. அரசியலிலும், பொருளாதாரத்திலுமுள்ள அறநெறி நீக்கப்படுகின்றது. செல்வம், மக்களின் வாழ்வை வளம்படுத்துவதை விடுத்து, அவர்களை அடக்கியாளவும், கொடுமைப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றது. ஒருவர் எந்தப் பத்திரிகையைத் திறந்தாலும் இந்த உண்மைகளைக் கண்டு கொள்ளலாம். லத்தீன் அமெரிக்கப் பிரதேசத்திலே எமது அன்றாட வாழ்க்கை நிலையே இதுதான்.

பேரிடரும் அழிவும் நிறைந்த இந்த நிலைமையில் அகிம்சையைப் பற்றிப் பேசுவது முட்டாள் தனமானதாக, யதார்த்தத்துக்கு ஒவ்வாத இலட்சியவாதமாகத் தோன்றலாம். தற்காலப் பிரச்சினைகளின் பாரிய தன்மையையும் அவை விடுக்கும் பெரும் சவால்களையும் நோக்கும்போது அகிம்சை என்பது ஒரு பயனற்ற போராட்ட முறையாகத் தோன்றலாம்.

ஆனால் இறைவனின் வார்த்தை தெளிவாக, நேராகக் கூறுவது: கொலை செயாதிருப்பாயாக! இது விதிவிலக்கின்றி அனைத்து மக்களுக்கும், ஏன் அரசாங்கங்களுக்குமே கூறப்பட்டதாகும்.

லத்தீன் அமெரிக்காவிலே நடைபெற்றுவரும் அகிம்சைப் போராட்டமானது கிறிஸ்துவின் நற்செய்தியின் சக்தியால் உயிரூட்டம் பெறும் ஒரு போராட்டமாகும். ஏழைகளின் ஆயுதம் அகிம்சையின் சக்தியே ஆகும். அநீதியான அமைப்புகளிலே வாழும் இவர்கள் இந்த சக்தியினாலே அந்த அமைப்புக்களை எதிர்த்துப் போராடி, மாற்றியமைக்க முடியும். அகிம்சையின் நோக்கம் மானிட வரலாற்றிலே ஓர் ஆள் என்ற முறையில் மனிதனை மீட்பதுதான். இது வேதனையும், துன்பமும், சிறைவாழ்வும், சித்திரவதையும், மரணமும் நிறைந்த ஒரு செயற்பாங்காகும். அதே வேளையில், அது நம்பிக்கை நிறைந்தது. விசுவாசக் கண்ணோட்ட வழியில் ஒரு நீதியுள்ள சகோதரத்துவ சமுதாயத்தை அமைப்பதற்கு மாற்று வழிகளைக் கண்டு பிடிக்க முயலும் உண்மையின் வலிமையும் கொண்டது.

எமது பிரதேசத்தில் கத்தோலிக்க திருச்சபையினுள் நன்கு விருத்தியடைந்து வரும் அடித்தளக் குழுக்கள் (grassroots communities) பற்பல புதிய அகிம்சை முயற்சிகளுக்குப் புளிக்காரமாக, ஊக்குவிப்பாக விளங்குகின்றன. இக் குழுக்கள் தமது கிறிஸ்தவ விசுவாசத்தினால்

**வழிநடாத்தப்பட்டு, தாம் பின்பற்றக்கூடிய வழிகளையும். புதிய மாற்று வழிகளையும் கண்டுபிடிக்க முயல்கின்றன. அகிம்சையை ஒரு போராட்ட முறையாக மட்டும் நாம் கொள்ள முடியாது. அது வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் ஒரு முறையாகும். மனிதர்களின் வாழ்வையும், சமூக வாழ்வையும் புரிந்துகொள்ளும் ஒரு முறையாகும். நாம் செல்ல வேண்டிய பாதை இன்னும் வெகு தூரம் உண்டு. லத்தீன் அமெரிக்காவின் ஒவ்வொரு நாட்டிலும், அங்குள்ள உண்மை நிலையிலிருந்து ஆரம்பித்து மாற்று அரசியல் வழிமுறைகளை, தீர்வுகளைக் காணவேண்டியது அவசியமாகும்.**

லத்தீன் அமெரிக்காவிலே அகிம்சையை, அதன் வெற்றிகளைக் கொண்டு மட்டும் மதிப்பிட முடியாது. விசுவாசக் கண்ணோட்டத்தில் முழுமையான மனித விடுதலைக்கான ஒரு நீண்ட போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இது கடினமானது; நிச்சயமற்றது; இரத்தமும் வேதனையும் நிறைந்தது; ஆனாலும் எழுச்சி கொண்ட மக்களின் நம்பிக்கையும் துணிவும் நிறைந்தது.

கிறிஸ்துவின் நற்செய்தி வெளிப்படையானது; சிக்கலற்றது. எமது சிறுமை, அச்சங்கள், குறைபாடுகள் மத்தியிலும் அதை எமது முழு வாழ்விலும் நாம் வாழ வேண்டும். இவ்வுலகில் நீங்கள் துன்பம் அடைவீர்கள். ஆனால் சோர்வடைய வேண்டாம். நான் உலகை வெற்றிகொண்டுள்ளேன் என்றும், வித்து மடிந்தாலொழிய அது கனி கொடாது என்றும் ஆண்டவர் எமக்குக் கூறியுள்ளார்.

புனித சின்னப்பர் கற்பிப்பது போல, கிறிஸ்தவர்கள் சிலுவை எனும் மடமையை ஏற்க வேண்டும். அவரோடு சேர்ந்து ‘நானல்ல, கிறிஸ்துவே என்னில் செயலாற்றுகிறார்’ என்று கூறவேண்டும். எமது சகோதர சகோதரிகள் பலர் நாளுக்கு நாள் ஏற்று, மேற்கொள்ளும் அறைகூவல் இதுவே. சிறியோர், ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர், துறவற சபையினர் இவர்கள் தம் சொந்த வாழ்வில் துயரத்தையும் நம்பிக்கையையும் அறிந்தவர்கள். இறையரசைக் கட்டியெழுப்பும் பாதையிலே இவர்களை நடைபயின்று கொண்டிருக்கிறார்கள்.[50]

## 6. பிறேசில் - போர்த்துக்கேய கொலனி

1964இல் ஒரு இராணுவப் புரட்சியின் பின், ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தோர் சிக்கனம் நிரம்பிய ஒரு பொருளாதார திட்டத்தை அறிமுகம் செய்தனர். இத்திட்டத்தை அமுலாக்க, சர்வாதிகார முறைகளையே அவர்கள் கையாண்டனர். அனைத்து நிர்வாகமும் மத்திய அரசின் நேரடித் தொடர்பிலும் ஆணையின் கீழும் செயற்படுத்தப்பட்டன. எனவே ஆட்சியாளர் பெரிய நிலச் சுவாந்தார்கள், சொத்துக்கள் மிகுந்தோரைக் கொண்டு ஆட்சிப்படைக்க முனைந்தனர். ஆயினும் இச்செயல் எல்லா நிர்வாகங்களையும் கண்காணிக்க வேண்டிய தலையிடியைத் தந்தது. திருச்சபையும் இக் கெடுபிடிகளுக்குள்ளானது.

ஆட்சியாளர் தமது சொந்த சித்தாந்தங்களின்படி செயற்பட்டனர். ஜெனரல் கொல்பெரி டோ கோடோ சில்வா ஆட்சிக்குழுவின் தலைவர். சுருங்கச் சொல்லின் ஒரு இராணுவ சர்வாதிகார ஆட்சியே அங்கு நடைபெற்றது. எனினும் இவ்வரசு தனது பொருளாதார, இராணுவத் தேவைகளுக்கும் நிர்வாக ஆலோசனைகளுக்கும் ஐக்கிய அமெரிக்க குடியரசிலேயே தங்கியிருந்தது.

ஆட்சிப் பீடத்தில் வெறுப்பு கொண்டோரால் 1968, 69களில் சில சிறிய புரட்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன: சொத்துக்களை முடக்குதல், அரசவருமானங்களுக்குப் பின்னணியில் தடை செய்தல், முக்கிய நிர்வாகிகளை கடத்தி, தலை மறைவாக வைத்திருத்தல் போன்றவையே அவை.

1969இல் அமெரிக்க இராஜரீக தூதுவர் பேர்க் எல்பிரிட்ஜ் கடத்தப்பட்டார்.1970களில் ஜப்பானிய இராஜரீக தூதுவர் சாவோ பாலோவில் வைத்துக் கடத்தப்பட்டார். மார்க்சிஸவாதிகளும், கிறிஸ்தவர்களும் ஒரு பொதுநலன் கருதித் தோளோடு தோள் நின்று போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கிறிஸ்தவர்கள் ஆரம்பித்த பகிரங்க நடவடிக்கை இயக்கம், பின்னர் சதிப்புரட்சியாக உருவெடுத்து அடக்கி ஒடுக்கப்பட்டபின் பிரபல புரட்சித் தலைவர் கார்லோஸ் மாறிக்லே, கம்மியூனிஸ்த குழுவிலிருந்து விலகி தாமே ஒரு புரட்சிக்குழுவை ஆரம்பித்தார். 1969 நவம்பரில் அவர் கொலை செய்யப்பட்டார். சமகாலத்தில் கப்ரின் வார்லோஸ்லமர்கா

இராணுவத்திலிருந்து விலகி, புரட்சியாளர்களுடன் இணைந்து கொண்டார்.

பிறேசிலிய திருச்சபை தம்முள் பிளவுபட்டது. முற்போக்குவாதிகள் டொம் கெல்ட்டர் கமராவின் தலைமையில் செயற்படத் தொடங்கினர். டொம் கெல்டர் கமராவை செயலாளராகக் கொண்ட பிறேசிலிய ஆயர் பேரவையின் மத்திய ஆணைக் குழு விடுத்த அறிக்கையை மிதவாதப் பத்திரிகைகள் பிரசுரிக்கவில்லை. ஆயர்களின் அறிக்கையாவது ''நாட்டின் பரிதாபநிலையை யார் தான் மறுக்கமுடியும்? மனிதாபிமானத்துக்கொவ்வாதவை அவை. எமது முன்னேற்ற, அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மறுக்கப்பட்டும் எம்முடன் தொடர்பில்லாது துண்டிக்கப்பட்டும் கிராமப்புறங்களில் வாழும் ஆயிரக்கணக்கான எம் சகோதரர்கட்கு உதவுவார் யார், சமுதாயநலன் களை கருத்திலெடாத திருச்சபை சமூக சித்தாந்தங்களை மட்டும் கொண்டியங்குவது பயனற்றது.''

பேராயர் ஜெரால்டோ தே புறன்கா (டயமன்ரினா பேராயம்), பேராயர் ஒஸ்கார் தே ஒலிவெய்ராஸ் (மரியானா பேராயம்) என்போர் விடுத்த அறிக்கையில் தமது பகிரங்க எதிர்ப்புக்களை வெளிக்காட்டினர். இவ்வறிக்கைக்கு பெருமதிப்பும் நல்ல வரவேற்புமிருந்தது. ''விவசாய சீர்திருத்தங்கள் மனச்சாட்சியின் விடை. சொத்துக்களை வைத்திருக்க தனியார் எவருக்கும் உரிமை உண்டு. அதுபோல போதக சபைகளுக்கும் சொந்துரிமை இயற்கையாகவே உண்டு.

பொகட்ராவில் நடைபெற்ற நற்கருணை மாநாட்டில் பேராயர் சிகாட், விவசாய சீர்திருத்தப் புரட்சியாளரால் காணிகளைக் கத்தோலிக்கர் யாராவது பெற்றால் அவர்கள் திருச்சபையிலிருந்து விலக்கப்படுவர் என அறிவித்தார். இவ்வறிவித்தலால் தாக்கங்களும் ஏற்பட்டன.

இரு ஆயர்களால் வெளியிடப்பட்ட கம்மியூனிஸ எதிர்ப்பு மறையறிவு நூலில், எல்லாவித புரட்சிகளுக்கும் மூலகாரணி சாத்தானே. ஏனெனில் இறைவனது கட்டளைகளுக்கு எதிராக மக்களை (விசுவாசிகளை) தூண்டிவிடுவதில் அவன் கையாளும் மார்க்கங்கள் விசித்திரமானவை எனக் குறிப்பிட்டது பலத்த கண்டனத்துக் குள்ளாகியது. அம் மறையறிவு நூலில் இவ்வுலகத்தை இறைவன் ஒரு

இன்ப பரலோகமாக படைக்கவில்லை. துன்பங்கள் மூலம் நாம் புடமிடப்பட்டு புனிதமாகவும், எம்மை எதிர்கொள்ளும் சிலுவைகளை பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய ஒரு தலமாகவே உண்டாக்கினார் என்ற வரிகளும் சர்ச்சைகளை கிளப்பின.

மேலும் பிரச்சனையை உருவாக்கிய சில சித்தாந்தங்களில் குறிப்பிடத்தக்கவை: செல்வந்தனும் ஏழையும், கனவானும் பாமரனும் உலகில் ஏன் இறைவனால் படைக்கப்பட்டனர்? இவர்களனைவருக்கும் திருச்சபை ஏற்றத்தாழ்வின்றி நீதியை நிலை நாட்டவும், அநீதியை ஓரவஞ்சனையின்றி சாடவும், இரக்கப்பட வேண்டியவர்களை காருண்ணியத்துடன் பராமரிக்கவும், இரக்கமும் அன்பும் எங்கும் கையாளப்படவுமே ஏற்றத்தாழ்வுகள் அமைந்த மாந்தர் இறைவனால் படைக்கப்பட்டனர்.

சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டபின், புரட்சிகரச் சித்தாந்தங்களின் எதிரொலிகள் எங்கும் பரவின. ஓராண்டின் பின் சாவோபாலோவின் பேராயர் கர்தினால் றோசி ஆண்டகை, ஒரு பகிரங்க மறையுரையில் கூறியவை:- ''திருப்பீடத்தைச் சுற்றி ஒன்றிணைந்து பரஸ்பர ஐக்கியத்துடனும், நல்லெண்ணங்களுடனும் அமரச்செய்தமைக்காக, ஆண்டவனுக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். இவ்வித ஒரு புரிந்துணர்வு நிலைக்கு, பல எதிர்த் தாக்கங்கள் மத்தியில் நாம் நடத்திச் செல்லப்பட்டோம். வரலாறு கண்டிராத இறை வழி நடத்துகையால் பிறேசில் நாடு, தனது வீரத்துவமிக்க, தாய்நாட்டுக்குப் பிரமாணிக்கமுள்ள புதல்வர்களுடன் கொம்மியூனிஸ சதித்திட்டங்களை முறியடித்து, ஒரு மாபெரும் இனமாகத் துன்பியல் நிகழ்வுகளின் மத்தியில் அமைக்கப்பட் டோம்".


எனினும் றொம் கில்டர் கமராவுக்கு எண் கோணத்திலுமிருந்து எதிர்ப்புக்கள் எழுந்தன. மாணவ உலகின் பாதுகாவலர் அன்ரேனியோ கென்றிக்கு நெட்டோ அடிகள் மராசிபையில் வைத்துக் கொல்லப்பட்டார். மக்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள் ளாவது சர்வசாதாரணமாகியது. குருக்கள் கன்னியர்களே இவ்வகையில் அதிகம் பாதிக்கப்பட்டோர். 1969இல் ஒரு பயங்கர உண்மை வெளியாகியது: அது யாதெனில் பயங்கரமாகவும் நெஞ்சிரக்க மின்றியும் துடிதுடித்துக் கதறியழும் நிலையில் சித்திரவதைகள் (பலதரப்பட்ட

வகைகளில்) அளிக்கும் பயிற்சி போலீசாருக்கு இரகசியமாக அளிக்கப்பட்டு வந்தது. இதற்கென திறமைசாலிகளும் கைதேர்ந்தவர்களும் கொண்ட சித்திரவதைக் குழுக்கள் போலீஸ் படையணியில் இயங்கின. இவர்களே இந்தக் கைதிகளைச் சித்திரவதைகளின் இறுதியில் கொன்றொழிப்போராகவும் விளங்கினர். ஓர் ஆயர் எந்தவொரு போலீசாரிலாவது சித்திவதை சிரச்சேதக் குற்றங்கள் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்டால் அந்தப் போலீஸ் (எத்தரப்பினராயினும்) கத்தோலிக்க திருச்சபையிலிருந்து வெளியேற்றப் படுவர் எனப் பிரகடனம் செய்தார்.

பல்வேறு கோணங்களிலுமிருந்து வத்திக்கான் தலைமைப்பீடத்துக்கு விண்ணப்பங்களும் உடன் நடவடிக்கையெடுக்குமாறு வற்புறுத்தல்களும் வந்து குவிந்தன. குவபெக்கின் பேராயரும் நீதிக்கும், சமாதானத் துக்குமான அப்போஸ்தலிக்க ஆணைக்குழுவின் தலைவருமான கருதினால் ரோய் ஆண்டகை, இந்தவித அக்கிரமச் செயல்களை பகிரங்கமாக கண்டித்தார்.

1970 மார்ச் 25இல் திருத்தந்தை ஆறாவது சின்னப்பர் பாப்பிறை, தம்மைச் சந்திக்க வந்த பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றுகையில் பயங்கரமிக்க சித்திரவதைக் கொடூரங்களால் அல்லலுறும் எமது அன்பு நெஞ்சங்களை நாம் பரிதாபக் கண்களால் பார்க்கும் கொடுமை மிக்ககாலம் இது எனக் குறிப்பிட்டார். இப்பேட்டிக்கு சில தினங்களின் முன் ரொம் கெல்டர் கமரா,மொன்ரெக்ஸ்சில் நடைபெற்ற அனைத்துலக கிறிஸ்தவ சம்மேளனத்துக்குச் செல்லும் வழியில், வத்திக்கான் சென்று திருத்தந்தையுடன், பிறேசிலிய திரச்சபையின் பயங்கர பரிதாபகர நிலைபற்றி விபரமாக எடுத்துரைத்தது இங்கு குறிப்பிடுதற்குரியது.

அனைத்துலகிலுமிருந்து பிறேசிலிய கத்தோலிக்கர்மீது அனுதாபங் களும் ஆளுவோர் மீது கண்டனங்களும் வந்து குவிந்தன. நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுச் செயலர், மொன்சிக்னோர் கிரெமிலியன், வாய்ச்சாலகரமான உரைகளால் தங்கள் அநீதிகளை நியாயப்படுத்துவதை அரசு நிறுத்திவிட்டு பிறேசில் நாட்டுக் கத்தோலிக்கரின் குடிஉரிமைகள் மதிக்கப்பட்டு, பேச்சு, எழுத்து, வழிபாட்டு சுதந்திரம் உடனடியாக அமுல் நடத்தப்படல் வேண்டுமென்ற பிறேசிலிய கத்தோலிக்க ஆயர்களின் வேண்டுகோளைக்



கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடம் (வத்திக்கான்) முழுமனதாக உறுதியாக ஆதரிக்கிறது என அறிவித்தார்.

இவ்விடத்தில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியவை சில: பிறேசில் தென்னமரிக்காவில் உள்ள ஒரு நாடு. மிகப் பாரிய அத்லாந்திக் சமுத்திரத்தின் மறுபக்கத்தில் ஐரோப்பா அமைந்துள்ளது. ஐரோப்பாவின் தெற்குப் புறமாக இத்தாலிய நாடு அங்குதான் ரோம் நகரும் உலகின் மிகச் சிறிய நாடான வத்திக்கானும் அமைந்துள்ளது. பிறேசில் நாட்டை சாத்வீகமாகவோ, அல்லது கண்டனம் தெரிவித்தோ நிலைமைகளை சீர்செய்ய முயற்சிப்பதைத் தவிர ஒரு மதத் தலைமைப்பீடத்தால் பிறேசில் நாட்டின் ஆட்சிப் பீடத்தை அடக்கி அலுவலாற்றமுடியாதென்பது கண்கூடு.

*1970* ஏப்பிரல் முதற் தேதியில் பிறேசில் நாட்டு ஜனாதிபதி ஜெனரல் கன்னஸ்ராஸ் மெடிசி விடுத்த அறிக்கையில், ஜனநாயகத்தை நேசிக்கும் ஒரு கிறிஸ்தவ இனமாகிய நாம், எமது அழைப்பை நன்குணர்ந்து அதற்குப் பிரமாணிக்கமாகவே செயலாற்றுவோம் எனக் குறிப்பிட்டார்.[51]

## டொம் கெல்டர் காமரா

*1990* இல் பிறேசிலில் பிறந்த இவர் ஓர் எழுத்தாளர், நாடக ஆசிரியர்கள், விமர்சகர்கள் கொண்ட கலைஞர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். *13* பிள்ளைகளில் ஒருவரான இவரின் தாய் ஆசிரியை தந்தை தேவதாயின் பக்தியுள்ளவர் பிறீமேசன். (Freemason)

ஐரோப்பிய இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட இவர் பிரஞ்சு இலக்கியத்தை நன்கு கற்றவர். தன் குரு மாணவப் பருவத்தில் லயெனஸ்

பிரான்கா, கபச்சன் பிகுவேராடே முதலிய குருக்களின் கருத்துக்களால் கவரப்பட்டார். நற்செய்தியானது குறிப்பாக சமூக, அரசியல் பகிரங்க வாழ்வில் வாழப்பட வேண்டியது என்ற கருத்துடையவர். இக்கருத்துக் களால் கவரப்பட்டே பிறேசில் நாட்டு அமொரோசா லிம்மா போன்ற புத்திஜீவிகள் திருச்சபையினுள் பிரவேசித்தனர். கருதினால் டொம் லெம்மேயின் 1916 ஆம் ஆண்டு ' றெபேசி' சுற்றறிக்கை '' கத்தோலிக்கம் நம் நாட்டின் பெரும்பான்மையினரின் மதமாயிருந்தும் அதற்கு இந் நாட்டின் சமூக, அரசியல் வாழ்வில் எவ்வித இடமுமில்லை." என்று கத்தோலிக்கத்தின் உள் முரண்பாட்டைச் சுட்டிக்காட்டி ,கத்தோலிக் கரை '' எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாத பெரும்பான்மையினர்" என்று கிண்டலாகக் குறிப்பிட்டார். இவ் அறை கூவலே கத்தொலிக்க சேவையின் தோற்றத்திற்கு வழிகோலியது.

இவர் பல கிளைகளை உருவாக்கினார். 1960களில் சோசலிசக் கருத்துக்களை லத்தீன் அமரிக்க கத்தோலிக்க சேவை இயக்கம் உள்வாங்கத் தொடங்கிற்று. இவை குழப்ப நிலையை ஏற்படுத்துகின்றன என லத்தீன் அமெரிக்க ஆயர் அவை குற்றம் சாட்டிற்று. எனவே 1968ம் ஆண்டு கொலம்பியாவின் மெடலின் என்ற ஊரில் ஒன்று கூடிய ஆயர்கள் ஒரு அறிக்கையை பிரகடனப்படுத்தினர். லத்தீன் அமெரிக்காவின் வெளிநாட்டு காலனித்துவத்தை மாத்திரமல்ல உள்நாட்டு காலனித்துவத்தையும் கண்டித்தது. அம்மடலின் அறிக் கையைப்படித்த இளைஞர்கள் ஆயர்கள் அதைச் செயலில் காட்டத் தயங்கியதைக் கண்டித்து ஓர் புரட்சிகரப் பாதையில் நடக்கத் தொடங் கினர். இவ்விளைஞர்கள் செய்த துரோகம் 2ம் வத்திக்கான் ஏடுகளைப் படித்து நடைமுறைப்படுத்த முயற்சித்ததேயாகும். இதனால் இளைஞர்களை உள்ளடக்கிய இல்லற அப்போஸ்தலிக்க அமைப் புகளுக்கும் உத்தியோகபூர்வ திருச்சபை அமைப்பக்களுக்குமிடையே ஓர் இடை வெளி தோன்றலாயிற்று. முன்னையவர்களின் ஈடுபாட்டிலேயே விடுதலை இறையியல் வித்திடப்பட்டு மலர்ந்தது. இதை ஊக்குவித்தவர்களில் டொம் கெல்டர் காமராவும் ஒருவரானதில் அரசின் கண்டனத்திற்கு உள்ளாக்கி தன் உதவியாளர்கள் சிலரை பலிகொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளானார்.

1955ம் ஆண்டு பிறேசிலில் நடைபெற்ற அனைத்துலக நற்கருணை மகாநாட்டை கொண்டாட கருதினால் பரோஸ்ட் காமராவிற்கு செயலர் ஆக டொம் கெல்டர் நியமிக்கப்பட்டார்.

பிறேசிலின் அரசு தொடக்கத்தில் காட்டிய ஆர்வத்தைப் பயன்படுத்தி கெல்டர் ஓர் நூதன சாலைக்கு என அரசு ஒதுக்கிய முத்தவெளி மைதானத்தை நற்கருணை மாநாட்டு இடமாக மாற்றினார். அரசு நகர சபையை மகாநாட்டிற்கு வேண்டிய மரம் பலகை போன்ற கட்டிடப் பொருட்களை கொடுத்துதவப் பணித்தது.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஆயர்கள் குருக்கள் அரசப் பிரதிகள் குறிப்பாக செல்வந்த நடாகிய ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும் பலர் கூடினர். இம்மாகாநாட்டின் போது இவர்களின் மனச்சாட்சியைச் சுரண்டி ஏழை லத்தீன் அமெரிக்க மக்களின் வறிய நிறையையும் இதற்குக் காரணமாயிருந்த செல்வந்த நாடுகளின் சுரண்டல் போக்குகளையும் கண்டிக்க உதவினர். இதனால் ஏற்பட்ட பெரும் மாற்றங்களுக்கு டொம் கெல்டர் காரணம்.

நற்கருணையைப் பிட்டுப் பகிரப்படும் வாழ்க்கையால் அம்மகா நாடு நடத்திய, நிலப்பரப்பை வீடற்ற சேரி வாழ் ஏழை மக்களுக்கு பங்கிட்டு மகாநாட்டிற்குப் பாவிக்கப்பட்ட பொருட்கள் கொண்டு அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க புனித செபத்தியார் வீடமைப்பு “ குருஸோஸ் ” என்ற திட்டத்தை உருவாக்கினார்.

23ம் அருளப்பர் அவரைக் கண்ட போது “ ஆ! இது என்ன? ஒரு பெரிய பேராயர் பிறேசிலில் இருந்து வருகிறார் என்றனர். ஆனால் இங்கு ஒரு குட்டையான ஆள் அல்லவா வந்திருக்கிறார் ,”என்று கிண்டல் செய்தனர்.

2ம் வத்திக்கான் அமர்வுகளிலும் ஆயர்கள் மத்தியில் வெள்ளி பிற்பகல் நேரங்களில் கருதினால் சுனெனின் தலைமையில் பிரஞ்சு மொழி பேசும் ஆயர்களை ஒன்று கூட்டி நடத்திய பிரத்தியேக கருத்துப் பரிமாற்றங்களூடாக 2ம் வத்திக்கான் சங்கத்தினை திசைதிரும் பவைத்தவர் இவரே. [52]

## 7. டோமினிக்க குடியரசு

ருஜில்லோவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, அரசியல் நடவடிக்கைகளில் வியத்தகு மாற்றங்கள் இடம் பெற்றன. சோசலிஸ முன்னேற்றத்துக்காக எடுக்கப்டும் ஒவ்வொரு நடவடிக்கையும் வலதுசாரிக் குழு ஒன்றினால் ஆணித்தரமாக அமுக்கப்பட்டு மழுங்கடிக்கப்பட்டன. இதற்கு முக்கிய காரணம் ஐக்கிய அமெரிக்க குடியரசின் பெறுப்பை விலைக்கு வாங்க விரும்பாமையே. அமெரிக்க ஐக்கிய குடியரசு மற்றொரு கியூபா தலைதூக்குவதை விரும்பவில்லை. இங்கும் ஜனாதிபதி ஜோவாக்குயின் பலாகுர் தலைமையிலான ஆட்சிமுறையில் அடிக்கடி மக்கள் மாயமாக மறைவதும், விசாரணையற்ற சிறைவாசம், சிறையில் அருவருக்கத்தக்க செயல்கள், மரண தண்டனை என்பன சாதாரண நிகழ்வுகளாயின.

1970களின் ஆரம்பத்தில் கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்க இராணுவ தளபதிகளை அரசியற் கைதிகளுக்காக பரிமாற்றஞ் செய்தல் இடம்பெற்றது. பேராயர் கியூகோ பொலன்கோவினதும் வேறு இரு பிரமுகர்களினதும் சமூகத்தில்ஆலயங்களின் முன்றலில் இப்பரிமாறுதல் நிகழ்ந்தது.[53]

## 8. உருகுவே

சோசலிச அமைதியின்மை நிகழ்வுகள், அடிக்கடி இடம்பெற்றன. இந்நிகழ்வுகள் பிரசித்திபெற்ற புரட்சிகர தீவிரவாதிகள் ரூபமாறோ இயக்கத்தால் நடத்தப்பட்டன. இவர்கள் புரட்சித் திட்டங்களை வெற்றிகரமாக நடாத்தி பெயர் பெற்றவர்கள். ஏனைய நாடுகளில் அமைதியின்மை, தீவிரவாத வன்செயல் நடத்தும் குழுக்களுக்கு தாராளமாகத் தீவிரவாத நிதியுதவியும் ஆலோசனையும் அளிப்பவர்கள். இவர்களது சாதனைகளுள் சிறந்தது ; மிகப் பயங்கரவாதிகளால் தீர்ப்பிடப்பட்டு கடூழியச் சிறையும் விசேட பாதுகாப்பும் தரப்பட்ட 13 குற்றவாளிகளை விடுவித்தமையே.[54]

## 9. குவாட்டமாலா

*1960* செப்ரம்பரில் குவாட்டமாலாவில் ஜனாதிபதி ஜிடிக்கோரஸ் பன்ரீஸ்; அவர்களுக்கு எதிராக ஒரு இராணுவச் சதிப் புரட்சி முளைத்தது. புரட்சியின் ஆரம்ப கர்த்தாக்களான ஜொான் சூசா, லூயிஸ் பேர்சியஸ் அரச கெடுபிடி காரணமாகத் தலைமறைவாயிருக்க நேர்ந்தது. இப்புரட்சியின் ஆணிவேர்கள் ஆழமானவை. கொண்டுரசில் (1954) கொலோனியல் கஸ்ரிலா ஆர்மஸ் அவர்களுக்கு அமெரிக்க ஆயுத உதவியளித்தது. ஜனாதிபதி ஆர்பன்சை பதவிநீக்கம் செய்தது. இவரே விவசாயப் புரட்சியால் பல வர்த்தக நிறுவனங்களின் வெறுப்பைச் சம்பாதித்தவர். கொரில்லா இயக்கமானது ஆட்சியாளரால் மட்டுப்படுத்தப்பட்டபோதிலும்கிராமப் புறங்களிலும் நகரவட்டங் களிலும் வெகுவேகமாகப் பரவியது.

நவம்பர் *13*இல் இடம் பெற்ற சதிப் புரட்சிக்கு யொான் சோசா அடித்தளமிட்டு நன்கு வலுப்படுத்தினார். இப்புரட்சியில் மாவோறிஸ்ட்டுகளும் தென் மாவட்ட பச்சைப் பறவைகளும், வழக்கமான நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு நிர்வாகத் தடைச் சிக்கல் ஏற்பட உந்து சக்தியாய் விளங்கினர். ரேர்கியஸ் என்பவர் இத் தருணத்தில் ஆயுதபாணிகளான புரட்சியாளரைக் கொண்ட படையணி ஒன்றை ஆயத்தப்படுத்தினார். இது குவாட்டமாலாவின் தொழிற்கட்சியின் உறுப்பினரைக் கொண்ட கம்மியூனிஸ்களுக்கு உறுதுணையாயிற்று.

அவரது குழுவினர் நகர வட்டங்களில் பகிரங்கமாக செயலாற்றினர். ஒரு விபத்தில் அவர் கொல்லப்பட்ட போது தலைமைப் பதவி செசார் மொான்ரெஸ் கைகளுக்கு மாறியது.

*1962* ஏப்ரல் *24*இல் குவாட்டமாலாவில் ஆயர்கள் வெளியிட்ட பகிரங்கத் திருமடல் ஒன்றில், நாத்திக, லௌகீக, சர்வாதிகார கம்மியூனிஸ வாதிகள் பற்றி பொதுமக்கள் மிகுந்த விழிப்புணர்வுடனிருத்தல் அவசியம்; எங்கள் கிறிஸ்தவ பாரம்பரியத்தை பேணிக் காத்தல் வேண்டும் என எச்சரித்தனர். அவர்களின் அறிவுறுத்தல்களில் கம்மியூனிஸ பயமுறுத்தல்கள் லத்தீனிய அமெரிக்காவின் பல பகுதிகளில்

மிகமிக அதிகமாகிக்கொண்டு வரும் காலகட்டத்தில், விசுவாச உணர்ச்சி மிக்க கத்தோலிக்கர்கள் கட்டுபக் கோப்பாக ஒன்றிணைந்து எங்கள் கண்டத்தை பிணைத்துள்ள அடிமைத் தளைகளை அறுத்தெறிய முயற்சிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். கத்தோலிக்க திருச்சபை, அரசியலில் அனாவசியமாக தலையிடாததாலும், தலையிட்டு வேண்டத் தகாத விளைவுகள் உண்டாவதை விரும்பாததாலும், அதேதருணத்தில் கிறிஸ்தவ விசுவாசத்துக்கு பங்கம் விளையாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருப்பதாலும் இந்த அறிவுறுத்தல் விடுக்கப் படுகிறது என அவர்களது திருமடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறுதியாக ஆயர்களின் அறிக்கையில் பகிரங்க அமைதியையும், ஒற்றுமையையும் நிலைநாட்ட எல்லோரும் ஒருங்கு திரளுங்கள்; கம்மியூனிஸ பயமுறுத்தல்களை ஆணித்தரமாக எதிர்த்து நில்லுங்கள்; அரசியல் சாசனங்களுக்கு ஆதரவளியுங்கள்; அடிக்கடி மாறுதலும், சீர்திருத்தமும் ஏற்பட இடமளியாதீர்கள்; இறைவனுக்கும் அவரது திருச்சபைக்கும் சுதந்திர குவாட்டமாலாவுக்கும் விசுவாசமிக்க பிரசைகளாக நாசிஸ்த, பாசிஸ்த, கம்மியூனிஸ்த நடவடிக்கைகளை துணிவுடன் எதிர்த்து நில்லுங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவையணைத்தும் சிக்கலான ஒரு அரசியல் நிர்வாகத்தின் விளைவுகளே. நல்ல பயிற்சி பெற்ற வீரர்களைக் கொண்டிருந்த இராணுவத்துக்கு ஆலோசனை வழங்கிய அமெரிக்க குழு, பல சதிப் புரட்சிகளைக் கையாண்ட அனுபவத்தைக் கொண்டது. அக்குழுவில் சிலர் வியட்னாம் புரட்சிகளை முறியடித்தவர்கள்.

மலா மனோடு என்ற வலுதுசாரி இரகசிய சதிக்குழு, உத்தியோகபூர்வ திட்டங்களை முறியடிக்கக் கங்கணம் கட்டியது. சதியாளர்களைக் கைது செய்வதும், சித்திரவதை செய்து கொலைத் தீர்ப்பிடுவதும் ஒரு சர்வசாதாரண நிகழ்வாகியது. தொழிற்சங்க நிகழ்வுகள் அனைத்தும் சந்தேகக் கண்ணுடன் நோக்கப்பட்டது. இளம் கம்மியூனிஸ்த தொழிலாள தீவிரவாதியொருவர் கொலை செய்யப்பட்டார். இளம் கம்மியூனிஸ்ட்டுகள் பலர் தூங்கும் போதே கொல்லப்பட்டனர். பொதுவாகக் கூறின் கியூபாபுரட்சி, குவாட்டமாலாவினருக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியது.

செசார் மொன்ரேஸ், ஏழை விவசாயிகளுக்கு காணி தேவை, கொடுப்பார் யாருமிலர், அவர்களுக்கு வீடுகள் தேவை. ஆயினுமோ அரசோ இராணுவத்தினருக்கென வீடுகளை நிர்மாணிக்கிறது. எனவே காலாதி காலமாக குவாட்டமாலாவில் அடக்கி ஒடுக்கப்பட்ட பொதுமக்கள், வெகுண்டெழுந்து புரட்சி செய்வது ஆச்சரியமல்ல என்றார்.

அந் நாட்டுக் கத்தோலிக்கரிடையே பிளவுகள் காணப்பட்டன. பாரம்பரிய சிறப்பு மிக்கவர்களும், நிலச்சுவான்தர்களும் கத்தோலிக்கர். 1966இல் ஜனாதிபதியாக தெரியப்பட்ட மென்டஸ் மொன்ரெனிக்ரோ ஒரு மிதவாதக் கத்தோலிக்கர். ஆயினும் வல்லமை மிக்க இராணுவத் தலையீடு, அரச நிர்வாகத்தை பெலவீனமும், அடாவடித்தனமும் நிறைந்ததாக்கிற்று.

1970 தை 1இல் நடை பெற்ற தேர்தல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. கிறிஸ்த ஜனநாயக பேரவை, இடது சாரிக் கட்சிகளின் கூட்டமைப்புடன் ஜனாதிபதி பதவிக்கு ஒரு வேட்பாளரை நிறுத்தியது. எனினும் தீவிர வலது சாரிகளின் கூட்டமைப்பு நிறுத்திய வேட்பாளரான கொலனியல் அர்ரானா ஒசோரியா பாராளுமன்றத்தில் ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

மீண்டும் பிரச்சனைகள், உள்ளக பூசல்கள் தலைகாட்டின. பகிரங்கமதிப்புப் பெற்ற பிரமுகர்கள் கடத்தப்பட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டனர். இவர்களுள், சீன் ஹொலி, (அமெரிக்க இராஜாங்க அதிகாரி) வெளிநாட்டமைச்சர், மேற்கு ஜெர்மானிய தூதுவர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

குவாட்டமாலாவின் பேராயர் மரியோ கசாரியேஜ், ஏனைய ஆயர்களுடன் இணைந்து பொதுமக்களுக்கென ஒரு பகிரங்கத் திரு மடலை வெளியிட்டிருந்தார். எங்கள் நாட்டின் சமூக, பொருளாதார நிலைமைகள் ஆரோக்கிய நிலையில் இல்லை என்பதை எவரும் மறுத்துரைக்கமாட்டார். தேசிய வருமானம் திருப்திகரமானதல்ல. சம்பள விகிதங்களில் அதிக முரண்பாடுகள் காணப்படுகின்றன. நாட்டின் பெரும்பகுதி அபிவிருத்தியற்ற குடியேற்றப்படாத நிலங்களாக விளங்குகிறது. இவையணைத்தும் தீவிர, பொருளாதார, சமூக மூன்று

முன்னேற்றத் திட்டங்களிடப்பட்டு விரைவான செயற்பாடுகளால் நாட்டு நிலமை சீர்திருத்தப்படவேண்டும். இந்த அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து லா மனோ இயக்கத்தவரால் அவர் கடத்திச் செல்லப்பட்டார். ஒரு உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதவசியம். ஒரு நாட்டின் ஆட்சி பீடமும், அரசியல் நிலையும் மாறும்போதே, சமூக பொருளாதார நிலைகளும் மாற்றமடையும்.

மதத்தைப் பொறுத்தவரை, இவ்வித மாற்றங்களில் சில இடங்களில் மட்டுமே அதன் செல்வாக்கு உணரப்பட்டுள்ளது. இந்திய விவசாயிகளைப் பொறுத்தவரை கிறிஸ்தவத்தை இடது பகுதியினர் தழுவிக் கொண்டபின் அவர்களது வாழ்வில் வியத்தகு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. வலது பகுதியினரே முன்னர் இருந்த அதே பரிதாபகர நிலையில் அதிக மாற்றமின்றிக் காணப்பட்டனர்.

குவாட்ட மாலா நகரின் சட்டத்தரணி ஒருவர், 1968இல் மெடலின் மறைக்கல்வி மாநாட்டில் குறிப்பிட்ட நிகழ்வு இது. இறுதியில் அச்சட்டத்தரணி, அரசியல் படுகொலைகளையும் அநியாய சித்திரவதைகளையும் அம்பலப்படுத்தினார். பின்னர் கொலைக் களத்துக்கு கொண்டுபோகப்பட்ட ஒரு இளைஞனை ஆறுதற்படுத்த அவனுடன் சென்றதைக் குறிப்பிட்டார். அவ்விளைஞன் ஒரு குற்றமும் செய்யாதவன். தாழ்த்தப்பட்ட வகுப்பினன். மறையறிவு அற்றவன். அவனது சட்டைப்பையில் ஒரு பெரிய அறையப்பட்ட ஆண்டவரின் சிலுவை இருந்தது. ஒரு ஆலயத்துக்கும் வழிபாட்டுக்காக சென்றிராத அவ்விளைஞன் கத்தோலிக்க பாடசாலைகளைக் காப்பாற்றும் போராட்டத்தில் தனது உயிரைத் தியாகம் செய்தான்.

வலதுசாரித் தீவிரவாதிகளும் புரட்சிகர போராட்டங்களில் சளைத்தவர்களல்லர். இறைவன் - நாடு - சுதந்திரம் என்பதே அவர்களது கோஷங்களாகும். புதிய கம்மியூனிஸ எதிர்ப்பு முன்னணி ஒன்றும் முளைத்தெழுந்தது. இது 1967 மார்ச் மாதத்தில் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தினரால் உருவாக்கப்பட்டது. அரசமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம், கத்தோலிக்க மதம், தொழிலாளர் சம்மேளனம், வங்கிகள், கைத்தொழில் விவசாயத்தினருடன் இது இயங்கியது. கத்தோலிக்க மதத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும் எதிராக முதலாளித்துவத்தை உருவாக்கும் கம்மியூனிஸ்த நடவடிக்கைகளை இவ்வியக்கம் பலமாகச் சாடியது.

அமெரிக்க வேதபோதகர்கள் (இரு குருக்கள், ஒரு துறவி) கொரில்லா இயக்கத்தினருக்கு ஆதரவளித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு நாடுகடத்தப்பட்டனர். ஐக்கிய அமெரிக்கக் குடியரசு இதற்குப் பின்னணியிலிருந்ததாகப் பிரசாரம் செய்யப்பட்டது. ஜெர்மானிய ஸ்தானாதிபதி மீதும் இவ்வித குற்றம் சுமத்தப்பட்ட போதும், வெளிநாட்டுத் தூதுவர்களின் குழுத் தலைவரும், வத்திக்கானின் தூதுவருமான அப்போஸ்தலிக்க ஸ்தானாதிபதி, இந்த விவாகரத்தில் தலையிட்டு நல்லெண்ண உருவாக்கத்தைப் புகுத்த முயன்றார். ஆயினும் ஜேர்மானிய தூதுவரின் பாரியார் தமது கணவர் நாடு கடத்தப்பட்டது கிறிஸ்தவ மூலாதாரக் கொள்கைகளுக்கு முரணானது என வாதித்தார். இவையெல்லாம் ஒரு நாகரீக, நல்லெண்ண, ஐக்கியத்துவ மார்க்கத்துக்கு (கிறிஸ்தவம்) சவால்களாக எழுந்த நிகழ்வுகள், புரட்சிகர சீர்திருத்தம் என்ற பெயரால் லத்தீனிய அமெரிக்க நாடுகளை ஆட்டிப்படைத்த நிகழ்வுகள்.[55]

## 10. எல்சல்வடோர்

21,476 கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்நாட்டில் 5,574000 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 93 வீதமானோர் கத்தோலிக்கராகும்.

1821 இல் இந்நாடு விடுதலை பெற்றது. இதன் விவசாய உற்பத்தியைப் பெருக்க முதலாளிகள் மண்ணின் அமரிந்திய, கலப்பு இன மக்களின் நிலங்களை அபகரித்ததனால் 1872 ற்கும் 1898 ற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐந்து தடவைகள் தங்கள் நில உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டம் நடத்தினர்.

புலம்பெயர்ந்த அமரித்திய மக்கள் ஏழைக்குடிகளாக நிலச் சுவந்தர்களின் தயவில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. இம்மக்களின் அலைச்சலைக் கட்டுப்படுத்த தேசிய பொலிசார், தேசிய காவலர், திறைசோரி பொலிசார் எனப் பலவகைக் காப்பாளரை உருவாக்கினர். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் பெருந்தோட்ட முதலாளிகளின் கீழ் வாழ்ந்தமையால் அவர்கள் ஏழை மக்களை அடக்கி துன்பப் படுத்தும் நிலப்பரப்புக்களின் பிரத்தியேக இராணுவமாகவும் மாறினர். இவர்களே எல்சல்வடோரில் 1945 தொடக்கம் 1960கள் வரைக்கும் நிலவிய மக்களின் துன்ப துயர நிலைக்குக் காரணமும்

உள்நாட்டுப் புரட்சிகளுக்க உந்துதலுமாகும்.

1970களின் உணவு உற்பத்தி 40 வீத வளர்ச்சி கண்டு பிரேசிலுக்கு அடுத்ததாக நின்றது. சீர்திருத்த முனைப்புகள் தோன்ற 1972 இல் யோசே நெப்போலியன்டுஆட்டே மக்களால் நாட்டின் தலைவராகத் தெரியப் பட்டாலும் இராணுவம் அவரை ஏற்க மறுத்ததால் உள்நாட்டுப் புரட்சி ஆரம்பமாயிற்று.

1979ல் எவ்சல்வடோரின் கிராமப் புறங்களில் கொரில்லா போராளிகள் பரவி ஆழுமை செலுத்தியதைக் கண்டு, இராணுவத்தின் உள்ளிருந்தே புதிய குழு புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றியது. அதேவேளை கத்தோலிக்க திருச்சபை முன்பு முன்வைத்த நிலச் சீர்திருத்தத் திட்டங்களை அமுல்படுத்தியது. 1980 இல் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. 34 வீதம் கோப்பி செய்கை நிலங்களும் 37 வீதம் பருத்திச் செய்கை நிலமும் மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. இருந்தும் இராணுவக் கெடுபிடிகள் நீங்கவில்லை. பணந்தர மறுத்த விவசாயிகள் கொல்லப்பட்டனர். மேலும் 1989இல் புதிதாகத் தெரியப்பட்ட ஜனாதிபதி அல்பிரேடோ கிறிஸ்தியானி தனியுடமைச் சிந்தனையாளர் பொது உடமை விவசாயப் பண்ணைகளைப் பெரும் கடன்பட்டு மீளமுடியாமையும், உள் நாட்டுப் போரின் தாக்கமும், இராணுவம் - போராளிகள் மோதல்களும் பொதுவாக விவசாயிகள் உயிரையே பலிகொண்டது.

1992 வரை நீடித்த உள் நாட்டு யுத்தம், ஐக்கிய நாடுகளின் (UN) யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த முனைந்த போது இரு பக்கமும் ஒருவரை ஒருவர் பழிவாங்கும் " கொலைக் கலாச்சாரத்தை தோற்றுவித்தது". 1993 பெப்ரவரியில் தலைவர் கிறிஸ்ற்ரியானி 63000 இராணுவத்தை 31500 ஆக குறைத்தார்.

எவ்சல்வடோர் உள்நாட்டுப் போரில் மரித்த பொதுமக்கள் தொகை 70000, இதில் பேராயர் ஒஸ்கார் றோமேரோவும் 1989 ஒக்டோபர் 17 இல் கொல்லப்பட்ட வண. செகுண்டோ மொன்ரெஸ் யேசுசபைக் குருக்களும் ஊழியர்களும் அடங்குவர். அரச படைகளினா லேயே சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இவர்கள் அறவழியில் ஏழைகளுக்கு நீதியில் கட்டியெழுப்பப்பட்ட ஓர் சமாதானத்திற்காக உழைத்தவர்கள். இவ் இரத்தக்களரிக்கு ஐக்கிய

அமெரிக்கா தான் பயிற்சி கொடுத்த 55000 எல்சல்வடோர் இராணுவத்தை 3.5 பில்லியன் டொலர் செலவில் அதாவது நாளுக்கு 2 மில்லியன் டொலர்களை ஆட்களுக்கும் யுத்த தளபாடங்களுக்கும் செலவிட்டு இப்போது மக்களைக் கொன்று குவிக்க உதவியது.

## பேராயர் ஒஸ்கார் றெமேறோ

"கடவுளின் பெயரால் ஒவ்வொரு நாளும் வானக மட்டும் இன்னுமதிகமாக அழுகுரல் எழுப்புகின்ற துன்புறும் மக்களின் பெயரால் நான் கெஞ்சிக் கேட்கின்றேன்; நான் உங்களிடம் மன்றாடுகிறேன்; கடவுளின் பெயரால் கட்டளையிடுகின்றேன்; இந்த அடக்கு முறையை நிறுத்துங்கள்." - 1980ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 23ஆம் நாள் பேராயர் ஒஸ்கார் றெமேறோ ஆற்றிய இறுதி மறையுரையின் இறுதி வரிகள். அடுத்தநாள், அது தான் பங்குனி 24ஆம் திகதி அவர் சிறிய வைத்தியசாலை ஒன்றின் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றும் போது எல்சல்வடோர் அரசின் படைவீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எல்சல்வடோர் மத்திய அமெரிக்காவில் உள்ள ஒரு சிறிய வறிய நாடாகும். மேற்கத்தைய தொடர்பு சாதனங்கள் "வாழைப்பழக் குடியரசு" என்று அழைப்பதுண்டு. 1932ஆம் ஆண்டிலிருந்து எல்சல்வடோர் இராணுவ ஆட்சியின் கீழ் தொடர்ச்சியாக ஆளப்பட்டு வந்துள்ளது. பல லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ளது போலவும், அருகிலுள்ள நாடுகளிலுள்ள ஆட்சியமைப்பு போலவும், எல்சல்வடோர் ஆட்சியானது மக்கள் ஆதரவற்ற அடக்குமுறை சர்வாதிகார ஆட்சியாகும். ஐக்கிய அமெரிக்க நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையில் இந்நாடுகள் ஐக்கிய அமெரிக்க நாட்டிலிருந்தும் தொடர்ந்தும் இராணுவ பொருளாதார உதவியைப் பெற்று வருகின்றன. அரை நூற்றாண்டு தொடர்ச்சியான அடக்குமுறையும் மிலேச்சத்தனமான சமூக நிலையும் மக்களை எதிர்த்தெழச் செய்துள்ளது. இந்நாட்டின் முழுப் பொருளாதாரமும் 2% மான மக்களின் கைகளிலுள்ளது. இந்த துன்புறும் மக்களின் பேராயராக 1977ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.

பேராயர் ஏழைக் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர். 1977ஆம் ஆண்டில் தனது நண்பனான அருட்திரு. ருட்டிலே கிராண்டே படுகொலை செய்யப்பட்ட போது அவர் அநீதியை எதிர்த்துக் கொதித்தெழுந்தார். மனித உரிமை மீறல் பற்றி ஆராய ஒரு குழுவை

அமைத்தார். வழங்கும் இராணுவ உதவியைத் தடைசெய்யும்படி ஜனாதிபதி காட்டருக்கு பகிரங்கக் கடிதம் எழுதினார். லுவேன் கத்தோலிக்க பல்கலைக் கழகம் அவரது மனித உரிமைகளுக்கான பணியை ஆதரித்து அவருக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியது. பேராயர் ஒரு அரசியல் புரட்சிவாதி அல்ல. அவர் நீதிக்காகப் போராடியவர். மனித உரிமைகளுக்காக, மனித மாண்புகளுக்காகப் பணியாற்றியவர். அவரது மறையுரைகள் எப்போதும் நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

1. விவிலிய விளக்கம்
2. வழிபாட்டுக் காலம் தழுவி கிறிஸ்தவ வாழ்வுக்குள் பிரயோகித்தல்
3. கிறிஸ்தவ சமூக வாழ்விற்கு விளக்கம்.
4. நடைமுறைப் பிரச்சனைகளுக்கு கிறிஸ்தவ பங்களிப்பு.

உண்மையோடும் நேர்மையோடும் தீர்க்கதரிசன உணர்வோடும் அவர் போதித்தார்.

## இறை வார்த்தை

இறை வார்த்தையானது அது அறிவிக்கப்பட்ட வரலாற்று சூழ்நிலையில் இருந்து பிரிக்க முடியாது. அப்படிப் பிரிக்கபட முடியுமாயின் அது இறைவார்த்தையாக இருக்க முடியாது. வேதாகமம் எமது நூலகங்களிலுள்ள பக்தி வரலாற்று நூலாகும். அது இறைவார்த்தை. ஏனெனில் எமது சமூகத்தில் இன்றைய நிலையில் அது ஒளியூட்டி நிற்கின்றது. ஒப்பிட்டு நிற்கின்றது. உதிர்த்தெழுகின்றது. போற்றுகின்றது. கார்த்திகை 17-1977

### முரண்பாடுகள்

எனவே தான் திருச்சபைக்குப் பெரிய முரண்பாடுகள் உண்டு. அது பாவத்தை ஒதுக்குகின்றது. பணக்காரர்களுக்குச் சொல்கிறது: ' ' உங்கள் பணத்தைப் பாவித்துப் பாவம் செய்ய வேண்டாம். பலமிக்கவனுக்கு சொல்கின்றது: உங்கள் அரசியல் செல்வாக்கைத் தவறாகப் பாவிக்க வேண்டாம்; உங்கள் ஆயுதங்களைத் தவறாகப் பாவிக்க வேண்டாம்; உங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பாவிக்க வேண்டாம். சித்திரவதை புரிவோருக்குச் சொல்லுகிறது: வதைக்க வேண்டாம்; நீங்கள் பாவம்



புரிகின்றீர்கள்; நீங்கள் தவறு செய்கின்றீர்கள்; நரகத்தின் ஆட்சியை உலகில் கொண்டு வர நீங்கள் உழைக்கின்றீர்கள்."

**விடுதலை வீரனைப் பற்றி...**

பாவத்திற்கும், சுயநலத்திற்கும், வன்முறைக்கும், குரூரத்திற்கும், பகைமைக்கும் எவ்வளவுக்கு எவ்வளவு அடிமையாக உள்ளானோ அவன் மக்களை விடுவிக்க சரியானவனல்ல.

**விடுதலை இயக்கங்களுக்கு...**

சிந்தனைப் பாதைக்குத் திரும்பி வாருங்கள். மனித மாண்பை மதியுங்கள். நீங்கள் ஆட்களைக் கடத்துவதைத்தான், மக்களை அச்சுறுத்துவதைத்தான், பழிவாங்குவதைத்தான் நான் குறிப்பிடுகின்றேன்.

**இராணுவத்தினருக்கு...**

இராணு வீரர்க்கும் தேசிய பாதுகாப்பு படையினர்க்கும் பொலிசாருக்கும் விசேஷ வேண்டுகோள் விடுக்கின்றேன். சகோதரர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் நம்மவர்கள். நாம் ஒரே மக்கள். நீங்கள் கொல்லுபவர்கள் உங்கள் சகோதரனையும், சகோதரியையுமே. கொலை செய்யும்படி மனித வார்த்தைகள் சொல்லும். ஆனால் கடவுளின் வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள்: அது "கொலை செய்யாதிருப்பாயாக" என்று சொல்கின்றது. கடவுளின் சட்டம் நிலைபெற வேண்டும். கடவுளுடைய சட்டத்திற்கு மாறாக எந்தக் கட்டளைக்கும் இராணுவ வீரன் அமையத் தேவையில்லை.

**சாவை எதிர்நோக்கி..**

ஆயன் என்ற மட்டில் இறை சட்டத்தின் படி நான் அன்பு செய்வோர்க்காக எனது வாழ்வைக் கொடுக்க வேண்டும். எல்லா எல்சல்வடோர் மக்களுக்காகவும் என்னைப் படுகொலை செய்ய அச்சுறுத்தும் எல்சல்வடோரியருக்காகவும் கூட அச்சுறுத்தலைத் தொடர்ந்தும் செயற்படுத்த அவர்கள் முற்படுவார்களேயாகில், நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்: எல்சல்வடோரின் உயிர்ப்புக்காகவும், நீதிக்காகவும் இப்போது எனது இரத்தத்தைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

"அவர் படுகொலை செய்யப்படலாம் என நாம் பயப்பட்ட போதும் அது எமக்கு அதிர்ச்சியைத் தரவில்லை. இயேசுவுக்கு விசுவாசமாகவும், துன்பப்படும் தனது மக்களோடு உண்மையில் மனிதாவதாரமாகியும் இருந்த அவரது இம் முடிவைத் தவிர வேறாக இருந்திருக்க முடியாது" என்று அவரது அடக்க சடங்குகளில் கலந்து கொண்ட ஆயர்கள் அறிக்கை கூறுகின்றது. எல்சல்வடோரின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து அவரது இறுதி அஞ்சலிக்கு 80,000 மேற்பட்ட மக்கள் கூடி மன்றாடினார்கள்; பாடினார்கள். நம்பிக்கையோடு திரும்பி வாழச் சென்றனர்.[56]

**அப்பாடலின் சில வரிகள்:**

"எல்லாத் துன்பங்களையும் எதிர் நோக்குவோம்
எமது ஆயர் அழைக்கின்றார்
தொடர்ந்து போராடச் செல்வோம்
மிகப் பெரிய மனித சாட்சி இரத்தம் சொரிந்தார்
எல்சல்வடோரின் நம்பிக்கை."

பேராயர் ஒஸ்கார் றெமேறோ எமது காலத்தின் புனிதர்.

இறைவா, வன்முறைகள் அற்ற ஒரு கலாச்சாரத்தை கட்டியெழுப்ப எம்மை கருவிகளாக்கியருளும் .

## 11. நிக்கரகுவா...

148,000 சதுர கிலோமீற்றர்களைக் கொண்ட இந்நாடு எரிமலைகளாலும் பூகம்பங்களாலும் அடிக்கடி தாக்கப்படுவதுண்டு. இங்கே 69 வீதமானவர்கள் கலப்பினத்தவர்களாகவும் 17 வீதத்தினர் வெள்ளையர்களாகவும் 9 வீதமானோர் கறுப்பு இனத்தவர்களாகவும் வாழ்கின்றனர். இவர்களில் அதிகமானோர் கத்தோலிக்கர். இந்நாடின் கிழக்கு கரையோரக் கிறிஸ்தவர்கள் மொறாவியன் சபையைச் சேர்ந்த பிரித்தானிய சார்புள்ளவர்கள்.

இந்நாட்டை 1967 இலும் பின் 1974 இலும் ஆட்சி செய்த "அனஸ்ராசியோ சமோசா" என்ற சர்வதிகாரிக்கெதிரான புரட்சி 1979 இல் வெற்றி பெற்றது. 'சன்டனிஸ்ராஸ்' என்று அழைக்கப்பட்ட இப்புரட்சி வாதிகள் 1920, 30 களில் அமெரிக்க அடக்கு முறை இராணுவத்திற் கெதிராக போராடிய போராளி 'ஒகுஸ்ரோ சேசார் சன்டினோ'வை முன்னோடியாகக் கொண்டனர். இதே வேளை 1920, 30களில் சான்டினோவுக்கும் கிழக்கு நிக்கரகுவா கரையோர மக்களுக்குமிடையே இருந்து வந்த பிரிவினை, பிளவு, சன்டனிஸ்ரா புரட்சிக்குப் பின்னும் தொடர்ந்தது.

இதற்குப் பின், 1982 இல் இங்கு ஏற்பட்ட புரட்சி 10,000 அமெரிந்தியர்களை அவர்களின் பாரம்பரிய இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர வைத்தது. இந் நிகழ்வு அமெரிந்தியர்களை ஐக்கிய அமெரிக்க உதவி பெற்ற கொன்ராஸ் கொரில்லா பேராளிகளுடன் இணைய வைத்தது. இவற்றின் விளைவால் ஒரு வகையான மாநில சுயாட்சி இந்தியர்களுக்கு வழங்கப்பட்டு பின் அவர்களில் ஒருவர் மந்திரி பதவிக்கும் தெரிவு செய்யப்பட்டார்.

சன்டனிஸ்ரா அரசின் தலைவர், ஜனாதிபதி 'ஒரேகா' 1989 ஏப்பிரலில் நாட்டில் ஒரு புதிய யாப்பைப் பிரகடனப்படுத்தினார். இதை 1990 இல் நடைபெறவிருந்த தேசிய வாக்கெடுப்பில் நடைமுறைப்படுத்த ஆயத்தம் செய்தார்.

இதே வேளை 1990 யூன் 27இல் கொஸராறிக்காவின் ஜனாதிபதி 'ஏறியாஸ்' முன் வைத்த மத்திய அமெரிக்க சமாதானத்திட்டம்

கொன்ராசின் புரட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தது. இதன் பின் நடைபெற்ற புதிய தேர்தல் 'வயலெற்றா சோ மோரா'வின் தலைமையில் சன்டனிஸ்ராசைத் தோற்கடித்து புதிய அரசை நிறுவியது.

## திருச்சபையும் நிக்கரகுவாவும்

அனஸ்ராசியோ சொமோசாவுககு எதிரான புரட்சி 1979 இல் வெற்றி பெற்றது. இதில் திருச்சபையின் குருக்கள், பொது நிலையினர் பெரும் பங்கு வகித்தனர். கிறிஸ்தவத்திற்கும் மார்க்சிய கொள்கைளுக்கும் பாலம் அமைப்பது போல பல கத்தோலிக்கரின் சமூக அரசியல் போராட்ட உணர்வுகள் 'சிறிய கிறிஸ்தவ குழுக்கள்' என்ற அமைப்புகள் உருவாக வழிவகுத்தது. இதுவே இன்று ஆசியாவில் ''விடுதலை இறையியல்'' (Liberation Theology) என்று அழைக்கும் புதிய இறையியல் சிந்தனைக்கும் பிறப்பிடமாக விளங்கியது. நிக்கராகுவாவின் முழுத்திருச்சபையும் இப்போக்கை வரவேற்றது எனக் கூற முடியா விடினும் பல பிரபல்யமான குருக்கள், ஏனெஸ்ரோகாடினால், இவரின் சகோதரன் என்போராலும் வேறு பலரின் தலைமைத்துவத்தினாலும் பல குழுக்கள் தோன்றின.

இவற்றில் பிரபல்யமானது 'சொலன்ரீனஸ்' என்ற ஆற்றேர தீவில் ஒன்று கூடிய நற்செய்தி கத்தோலிக்க குழுமம். அவர்களின் சுவிசேஷத் தியானங்கள் நூல் வடிவம் பெற்றுள்ளன. இத்தியானங்கள் அன்பிய (Asipa) ஒன்று கூடங்களுக்கு உதவியாய் இருக்கும். என்ற நம்பிக்கையில் 'சிலுவையில் அறைபடுதல்' என்ற தியானத்தைத் தருகின்றோம்.[59]

## சிலுவையில் அறையப்படுதல்

*லூக். 23: 33-40*

''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று இவர்களுக்குத் தெரியவில்லை.''

**ஒஸ்கார்:** இன்றைய காலங்களிலும் சித்திரவதை செய்து துன்புறுத்துவோர் மட்டில் இதே செயல்தான் நடக்கிறது. ஏனெனில் அவர்கள் இயந்திரம் போன்றவர்கள் தாம் ஒருவனை சித்திரவதை செய்கிறோம் என்றுகூட அவர்கள் அறிவதில்லை அதனால் தான் இயேசு இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்ன தென்று இவர்களுக்குத்

தெரியவில்லை என்று வேண்டினார்.

**லொறேனா:** இன்று போலத்தான் அன்றும் போர்வீரர்களும் யூதர்களும் தாம் என்ன செய்கிறோம் என்று அறியாதிருந்தனர். ஆனால் பிலாத்துவும் யூதக்குருக்கள் சங்கமும் என்ன செய்கின்றோம் என்று அறிந்திருந்தனர். இயேசு சக்தி வாய்ந்தவர்களுக்கு எதிரானவர் என்றும் தம் மக்களுக்கு விடுதலையளிக்கப்போகும் மெசியா வென்றும் அறிந்திருந்தனர். இன்றும் மாற்றங்களைக் கொண்டு வருபவர்களை அடக்குமுறைக்குள்ளாக்குபவர்கள் தாம் ஏன் அதைச் செய்கிறோம் என்று அறிந்திருக்கிறார்கள். சொமோசாவுக்குத் தன் செயல்களின் காரணங்கள் புாரியும். ஐக்கிய அமெரிக்காவுக்கும் தன் செயல்களின் காரணங்கள் புரியும்.

"குற்றவாளிகளில் ஒருவன் இயேசு தன் அரசை ஆரம்பிக்கும் போது தன்னையும் நினைவு கூரும்படி கேட்டுக் கொள்கிறான். இயேசுவும் இன்றே நீ என்னோடு பரகதியில் இருப்பாய் என்று கூறுகிறார்."

**ஏனெஸ்றா:** அந்த மனிதன் அவருடன் அவர் அரசைப்பற்றிக் கதைத்தான். இயேசுவோ அவனுடன் மோட்சத்தைப்பற்றிக் கதைக்கிறார். ஆதி ஆகமம் நமக்கு மோட்சத்தை மனுக்குல ஆரம்பத்தில் இருந்ததொன்றாகவே காட்டுகிறது. வேதாகம ஆசிரியரின் நோக்கம் நாம் இழந்து விட்டதோர் இறந்தகால நிகழ்வுக்காக வீண் நம்பிக்கையுடன் ஏங்க வேண்டும் என்பதல்ல (வேதாகமம் பின்னோக்கிப் பார்ப்பது கிடையாது) ஆனால் மானிடத்தின் இலட்சிய எதிர்கால மொன்றைச் சுட்டிக் காண்பிப்பதே அதன் நோக்கம். இறைவாக்கினர்களும் மோட்சத்தை எதிர்காலத்துக்குரியதொன்றாகவே கூறி அதை மெசியா வின் காலத்திலே கண்டிருக்கிறார்கள் இயேசுவும் மோட்ச இராட்சியம் அப்பொழுதே அந்த மதிய வேளையிலேயே தமது மரணத்துடனேயே ஆரம்பிப்பதாகக் கூறுகிறார். முழு ஜெருசலேமும் பரிசுத்த வாரத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் போது அவர் இறந்தார். எனவே அவர் சிலுவையில் இறக்கும் போது பாஸ்காச் செம்மறியின் விழாவுணவை ஒவ்வொரு வீட்டிலும் அருந்திக் கொண்டிருந்தார்கள். இதைப்போலவே டேவிட் ரெஜாடா என்பவனும் பெரிய வெள்ளிக் கிழமையன்று மனாகுவா வீதிகளில் சிலுவைப்பாதை சுற்றிக் கொண்டிருக்கும் போது அடித்துக் கொல்லப்பட்டான். அவனது உடல் மகாயா என்ற வாவியிலே பின்பு வீசப்பட்டது.

**வில்லியம்:**

எமது முந்திய கிறிஸ்தவ மதம்பொய்யானது. நாம் முன்பு கிறிஸ்துவின் பாடுகளைப்பற்றிக் கேள்விப்பட்டபோது இன்று பெரிய வெள்ளிக்கிழமை என்றால் என்ன வென்று நாம் புரிந்து கொள்வது போல அன்றுபுரிந்து கொள்ளவில்லை. இன்று அதைப் படிப்படியாகப் புரிந்து வாழ்வின் நிலைக்கு படிப்படியாக வீரத்துடன் எழுந்து நிற்கிறோம்.

**ஏனெஸ்ரோ:**

இந்த வலயங்கள் அழிந்து வரண்டிருக்குமாப் போல ஒரு நாள் உலகின் முழு உயிர்களும் இறக்கப்போகின்றன. பூமி ஒரு இறந்த கோளமே இந்தப் பிரபஞ்சத்திலே இருக்கும். அதனுள் எமது எலும்புகள் புதைக்கப்பட்டிருக்கும். ஆனால் யேசுவைப்போல தமது ஆன்மாவான அன்பிலே தமது வாழ்வைக் காப்பாற்றிய மானிடவர்க்கத்தின் பகுதிகள் இந்தப் பிரபஞ்சத்திலே கல்லறையில் இருந்து வெளிவந்த இயேசுவைப் போல உயிரோடிருப்பார்கள். திரு வெளிப்பாட்டு நூலின்படி உயிர்த்தெழுந்த மானிடவர்க்கத்தின் தலைப்பேறானவரே இயேசு.

அம்மா என்று வரண்ட வயல்களில் இருந்து கதறும் பசுக்களின் ஒலியால் மட்டும் கலைக்கப்பட்ட நீண்ட அமைதி அங்கே நிலவுகிறது.

# இன்றைய லத்தீன் அமெரிக்கா

லத்தீன் அமெரிக்க ஆயர் அவையின் ஐந்தாவது பொது அவையின் Celam அமர்வு 2007 மே 9 - 13ம் திகதி வரை பிறேசிலின் தலைநகர் சான்பவுலோவில் நடைபெற்ற பொழுது 16ம் பெனடிக்ற் பாப்பிறை அங்கு சென்றார் உலகின் கத்தோலிக்கர் சனத்தொகையின் அரைப்பகுதி அங்கு வாழ்வதால் அங்கு திருச்சபை எதிர் கொள்ளும் நான்கு பாரிய பிரச்சனைகளுக்கு அவர் முகம் கொடுக்கிறார். 4 P's : Poverty, Pentecostals, Priests, Politics. வறுமை, சுதந்திர சபைகள், குருக்கள், அரசியல்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெருவாரியான மக்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையே உள்ள இடைவெளி பெரும் இடைவெளியாகும். இவ்விடைவெளி இலத்தீன் அமெரிக்க நாடுகளிடையே பிரேசிலில் தான் அதிகளவில் காணப்படுகின்றது. இதனால் இங்கு ஊழல்கள், கொலைகள், கொள்கைள், போதைவஸ்து பாவனை, மதுப்பழக்கம், பலாத்கார செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

சுதந்திர சபைகளின் பெருக்கம் ஒரு மில்லியனை பிரேசிலில் தாண்டிவிட்டது. பெருவாரியான CIA அமெரிக்க நிறுவனப் பணங்கள் சுதந்திர சபைகளின் ஊழியத்திறகென ஒதுக்கப்படுகின்றன. விடுதலை இறையியல் சிந்தனைகள் பரவி அமெரிக்க முதலாளித்துவ நலன்களைப் பாதிக்காது தடைசெய்ய, உணர்வு எழிச்சிநிறை அமெரிக்க பைபிள் உத்வேகக் குழுக்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் சபைகளில் பல வகைப்பட்ட உதவிகள் வந்து குவிந்தகொண்டிருப்பதால் 93% பேரளவில் கத்தோலிக்கரான மக்களுக்கு வார்த்தையைப் பகிர்ந்து ஆன்ம பசியைத் தீர்த்து, அருட்சாதனங்களைத் தந்து வாழவைக்க போதிய வசதிகள் இல்லாதிருப்பதே பெரும் காரணம்.

கத்தோலிக்கர் மத்தியில் ஏற்பட்ட இவ்வெட்ட வெளியை நிரப்ப சுதந்திர சபைகள் இலகுவாக உள்ளிடுகின்றன.

## குருக்கள் பற்றாக்குறை

8,604 மக்களுக்கு ஒரு குரு வென்ற அளவில் தான் லத்தீன் அமெரிக்க கத்தோலிக்கம் திண்டாடுகிறது. குருத்துவ அழைத்தல் குறைவே, இந்நிலையில் இல்லற அப்போஸ்தலர்களின் பங்கு வேண்டப்படுகிறது. அதுவும் ஆன்மீகப் பணியா? சமூக அரசியல் பணியா? எனக் கேள்வியெழும் பொழுது உருவாக்கப்பட்ட இல்லறத்தார் பங்களிப்பு??? பிளவு பட்டுத்தான் நிற்கிறது. விசுவாசப் புதுப்பித்தல் வார்த்தையூடாக ஒரு புறம், நீதி, சமாதான முயற்சி சமூக அரசியல் ஈடுபாட்டினூடாக (விடுதலை இறையியல்) மறுபுறம்.

### அரசியல்

பல நாடுகளில் அரசியல் இடது சாரிப்போக்கே காணப் படுகிறது. வாக்களிப்பில் வெற்றியீட்டி ஆட்சிக்கு வரும் சோசலிஸ வாதிகளுக்குப் பின் திருச்சபையின் ஆதரவு இருந்தது. இருந்தும் ஆட்சிக்கு வந்த பின் ஆட்சியிலிருப்பவர்களுக்கும் திருச்சபைக்கும் இழுபறிகள் ஏற்படுகின்றன. இவை நேரடியாகவோ, மனித உரிமை மீறல்களாகவோ வெளிவருகின்றன.[60]

வணபிதா.

# நிகால் ஜிம்பிறவுண்

## 20 - 08 - 2006



### செபம்:

"அனைவர்க்கும் இறைவனே! உமது பிள்ளைகளாகிய நாம் அனைவரும் உமது ஆவியால் இணைக்கப்பட்டவர்களாக ஒரு வரை ஒருவர் பரஸ்பரம் ஏற்று அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டுமென்ற உமது சித்தம், எமது காலத்தில் நிறைவேற்றப்படுவதை எமது சுயநலப் போக்கும், பேராசையும் தடைசெய்கின்றன என்பதை நாம் அறிவோம். இதை நினைக்கையில் எங்களது உள்ளங்களில் நாம் பெருந் துயரை அனுபவிக்கின்றோம்.

சமாதானம் என்பது உம்மிடமிருந்து வரும் ஒரு கொடை என்பதை நாம் நன்கறிவோம். அதே வேளை அனைத்து மக்களின் உண்மையான முன்னேற்றத்திற்காக உலகின் வளங்கள் அத்தனையும் சிறந்த முறையிற் பாவிக்கப்பட வேண்டும். இதனைச் செவ்வனே நடத்தும் பொறுப்பும், பங்கும் உமது கருவிகளாகிய எம்மைச் சார்ந்துள்ளது என்பதையும் நாம் அறிவோம். இப் பொறுப்புச் சிறந்த முறையில் செயல் வடிவம் காணும் போது மனித உயிருக்கு ஆழ்ந்த மதிப்பு அளிக்கப்படுகின்றது. மானுடத்தின் மாண்பும், தனி மனிதத்துவத்தின் தூய்மையும் உணரப்படுகின்றது. அதே வேளை, சட்டத்தாலோ அல்லது நடைமுறை வாழ்க்கையிலோ புறம்பாக்கப்படும் அனைவருக்காகவும் தொடர்ந்து பாடுபட அழைப்பு விடுக்கின்றீர்.

எமது வரலாற்றில் உமது பிரசன்னத்தையும், செயற்பாட்டையும் ஆழமாகக் கண்டுணரும் தன்மையை எம்மில் வளர்த்தெடுக்க, எமது வாழ்வில் உண்மைக்கு என்றும் சான்று பகர, எமது அயலவர் மட்டில் பொறுப்பு வாய்ந்த மக்களாக வாழஎல்லாவித அடக்கு முறைகளையும் அறுத்தெறிந்து, சுதந்திரத்தை என்றும் நாடி நிற்பவர்களாக மாற, அனைத்து தடைகளையும் கடந்த ஒரு அன்புறவில் வாழும் மக்களாக மாற, நீதியோடு கூடிய முழுமையான விடுதலை வாழ்வை அனைவரும்

அடையும்பொருட்டு எம்மை எமது சகோதர சகோதரிகள் அனைவரோடும் உமக்கு அர்ப்பணமாக்குகின்றோம்.

இறைவா, வன்முறைகள் அற்ற ஒரு கலாச்சாரத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு, உம்முடனும் எமது அயலவருடனும் சேர்ந்து கடுமையாக உழைக்கும் வரத்தை எமக்குத் தந்தருளுவாய். பயங்கர ஆயுத உற்பத்தியில் நம்பிக்கை வைக்காது, பரஸ்பரம் ஒருவரை நம்பி, மனித எதிர்காலத்தை மேம்படுத்தும் நடைமுறை நிகழ்வுகளிற் கரிசனை கொண்ட மக்களாக எம்மை ஆக்கியருளும். இதன் மூலம் உண்மை, அன்பு, சமாதானம் போன்ற விழுமியங்களால் கட்டப்பட்ட ஒரு உலகளாவிய நாகரீகத்தை உருவாக்கி, எமது பிள்ளைகளுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும் மக்களாக நாம் மிளிர வரம் அருளும்."

**மகாத்மா காந்தியின் நினைவுத் தூபியின் முன்பாக 2ம் யோன்போல் திருத்தந்தையின் செபம்.**

## பின் உரை

# லத்தீன் அமெரிக்க புனிதர்களும் புரட்சிகளும்.

என்ற நூல் 500 வருடநற்செய்தி யூபிலி கொண்டாடும் ஆசிய அமெரிக்க நாடுகளின் பட்டியலின் ஒரு கண்டத்தின் கதையாகும். அமெரிந்தியர் அழிந்து போகாது மாண்புடன் வாழ்வது இக்கண்டத்தில் தான். மெக்சிக்கோவை உள்ளடக்கி அதை தென் அமெரிக்காவை இணைக்கும் மத்திய அமெரிக்கா, அருகேயுள்ள தீவுகள் கியூபா போன்றவற்றின் வரலாறு தம் சமகால 500 ஆண்டுகளின் கதையோடு தொடர்புள்ளது, ஐபீரிய குடாவின் சமய கலாச்சார பொருளாதார பாதிப்புடன் தொடர்பு படுத்துவது.

எனவே தான் இதைப் படிப்பது நம் வேர்களுக்கு நீர் சார்ப்பதுபோன்று அமையலாம். ஆசிய நாடுகள் பிலிப்பைன்சைத் தவிர கிறிஸ்தவ மக்கள் தொகை சிறுபான்மையே, இருந்தும் ஆசியாவின் பின் கலனித்துவ வரலாறு குழப்பங்களும் புரட்சிகளும் நிறைந்து காணப்படுகின்றன.இவற்றின் சமூக அரசியல் இராணுவ குளறுபடிகள் நீதி சமூக சமநிலை அடைந்து அமைதி பெறுவதாயில்லை.

இதன் மத்தியில் அடிப்படை இந்துத்துவ, இஸ்லாம், பௌத்தத்தின் எழுச்சியினால் ஏற்படும் அச்சுறுத்தல் நிலைகள் கீழ் வாழும் கிறிஸ்தவர்கள், மெக்சிக்கோ, கியூபா, பிரேசில் நாட்டு அனுபவங்களில் இருந்து பலவற்றை கற்கலாம். அங்கு முன் மாதிரிகளாக திகழ்ந்த பீற்றர் கிளேவர், புறோ அடிகள் முதலிய புனிதர்களின் சாட்சிய வாழ்வை பின்பற்றலாம்.

இறுதியாக கிறிஸ்தவர்கள் சமூகநீதி பொருளாதரா சமத்தவம் அன்புத் தோழமையை கட்டியெழுப்ப பிறேசில், எல்சல்வடோர், நிக்கரகுவா முதலிய நாடுகளில் நீதிக்கும், சமாதானத்துக்குமான குழுமங்கள் , அன்பியங்களின் உதாரணங்களினால் ஊன்றப்பட்டு நம் அசிப்பாக்கள் உருவாகலாம். நம் அன்பியங்களில் உள்ளடங்கிக் கிடக்கும் அபாரவலு நம்மண்ணுக்கு தீட்டப்பட்ட ஐந்த ஆண்டு புதுப்பித்தல் திட்டத்திற்கு உறுதுணையாகலாம் என்ற நம்பிக்கையில் நாம் இதை உங்கள் முன் வைக்கின்றோம்.

# அடிக்குறிப்புகள்

இயல் 1


1. New American Desk Encyclopedia, Signet Mentor USA 1984 P. 668
2. New American Desk Encyclopedia, Signet Mentor USA 1984 P. 227
3. Times Atlas of World History, guild publishing London 1986 P. 148
4. Church History II Christopher O' Mahony,
   Pontifical Institute Publications Kerala, India. P. 172-174
5. New Catholic Encyclopedia Vol. VI USA
6. Catholic Church in Sri Lanka. Portuguese period I
   V. Perniola, Prakasakayo Ltd. Dehiwala 1989. P. 367
7. Church History C.O' Mahony P. 173
8. Encyclopedia of Church History Mathew Bunson,
   Sunday Visitor USA 1995 P. 734
9. Catholic mission history J. Schmidlin USA 1933. 257 -258
10. Church History II C.O' Mahony P.175
11. A History of Expansion of Xtianity III K.S. Latourette . 93-97
12. A History of Expansion of Xtianity III
13. A History of Expansion of Xtianity III
14. A History of Expansion of Xtianity III


இயல் 2


15. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 61-63
16. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 90-91
17. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 92
18. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 94,96
19. 18. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 94,97,103
20. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 100
21. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 99
22. A Saint in The Slave Trade. Arnold Lunn
    Catholic book Club. London 1947 104

23. A Saint in The Slave Trade. Arnold Lunn Catholic book Club. London 1947 10924.
24. A Saint in The Slave Trade. Arnold Lunn Catholic book Club. London 1947 117
25. A Saint in The Slave Trade. Arnold Lunn Catholic book Club. London 1947 135
26. Karl marx to Pavil Vasilevich 28-12 1846
27. Death of Christion doms, Birth of the Church Pablo Richard Orbis BKS N. York. US. 1987. 30
28. Death of Christion doms, Birth of the Church Pablo Richard Orbis BKS N. York. US. 1987. 30-31
29. Death of Christion doms, Birth of the Church Pablo Richard Orbis BKS N. York. US. 1987. 25

**இயல் 3**

30. Pablo Richard P. 40
31. Pablo Richard P. 41, 42
32. Pablo Richard P. 43-47
33. Pablo Richard P. 53

**இயல் 4**

34. Life of Fr. Pro. M.D. Forrest Melbourne 1944. P. 15
35. Life of Fr. Pro. M.D. Forrest Melbourne 1944. P. 30
36. Life of Fr. Pro. M.D. Forrest Melbourne 1944.
37. Life of Fr. Pro. M.D. Forrest Melbourne 1944.
38. Life of Fr. Pro. M.D. Forrest Melbourne 1944. P. 15
39. Life of Fr. Pro. M.D. Forrest Melbourne 1944.
40. Osservatore Romano N21- 24 May 2000 Rome


**இயல் 5**

41. Pablo Richard P. 73
42. Pablo Richard 74, 75
43. Pablo Richard 76,77
44. Pablo Richard 78

45. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 1971, 113-126
46. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 1971, 172
47. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 1971, 179
48. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 1971, 180
49. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 1971, 180
50. Pax XT1. யாழ்ப்பாணம்,Fr. Paul Rohan மணி அச்சகம்
51. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 181
52. Don Helder Camara. Jose de Broucker Collins UK 1979
53. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 184
54. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 184
55. The Church and Revolution F. Houtart + A. Rousseau
EAV. Orbis Books, New York 174
56. Global Studies Latin America P. Goodwin. Conneeiact 1994 31
57. அற வழிவீரர் பர்கஸ் கிறிஸ்ரி மணி அச்சகம் யாழ்ப்பாணம். 1995
(Fr. S. Gerard , Kirupakaran)
58. Global StudiesLatin America P. 42
59. The Gospel in Solent- iname Ernesto Cardinal Orbis BKS N. York 1985
60. Ceylon Catholic Messenger. Colombo 07.05.2007 P. 2







கலாநிதி சுவாமி ஜெ.இ. ஜெயசீலன்
அடிகளார், கலைமாணிப் பரீட்சைக்கு ஆசிய
வரலாற்றை ஓர் அலகாக்கிப் பட்டம் பெற்றவர்.
இவர் மைசூரில் முதுமாணிப் பரீட்சைக்கு ஆங்கில
இலக்கியத்தையும் மெய்யியல் முதுமாணி
ஆய்வுக்கு ஈழத்து தாந்திரிக மரபையும் ஆய்வு செய்தார்.

இவர் ஆங்கில இலக்கியத்தில் கலாநிதிப் பட்டத்தைப்
பெற்றாலும் வரலாற்றுத் துறையில் கொண்ட ஈடுபாடும்,
ஆய்வுப் புலமையும் இவரை பல வரலாற்றுக்
கட்டுரைகளையும், வரலாற்று நூல்களையும்
எழுத வைத்துள்ளது.

இவர் எழுதிய வரலாற்று நூல்கள்
'யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு' (1997),
'ஆசியத் திருச்சபை வரலாறு' (2007)
'இலத்தீன் அமெரிக்க புனிதர்களும் புரட்சிகளும்'
என்பனவாகும். இவையெல்லாம் விசுவாச
ஆழப்படுத்தலையே நோக்கமாகக் கொண்டவை.

மேலும் பல தொகுப்புக்களையும், துண்டுப்
பிரசுரங்களையும் வெளியிட்ட இவர்;
'தேவதாயின் குரல்' எனும் இதழை
1997 முதல் வெளியிட்டு வருகின்றார்.